874

தமிழ்நாடு

சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

தொகுதி 23 எண்-3

8 ஏப்ரல்-1992

வெளியீடு 1-2-1993

Issued 1-2-1993

824/93

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES

## OFFICIAL REPORT

புதன்கிழமை, ஏப்ரல் 8, 1992-தொகுதி 23 எண். 3

Wednesday, the 8th April 1992 - Volume 23 No. 3

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat,**
**Madras-600 009**

விலை ரூ. 3-00]

Price Rs. 3-00

## உள்ளடக்கம்

8—4—1992


பக்கங்கள்

1. வினாக்கள்—விடைகள் :

உடுக்குறியிட்ட வினாக்கள். 353—390

2. ஆஸ்கார் விருதுபெற்ற திரைப்படத் தயாரிப்பாளர், இயக்குநர், திரு. சத்தியஜித்ரேக்கு அவையின் சார்பில் முதலமைச்சர் பாராட்டுரைகள். 391—393

3. உரிமைப் பிரச்சினை—

பெண் உறுப்பினர்கள், பேரவைத் தலைவர் ஆகியோரின் அவை நடவடிக்கைகள் பற்றி அருவருக்கத்தக்க தரக்குறைவான வகையிலும், பேரவை நிகழ்ச்சிகளைக் கொச்சைப்படுத்தும் வகையிலும் தி.மு.க. பேச்சாளர் வெற்றிகொண்டான் வெளியே பேசியுள்ளது குறித்து. 394—401

4. கவன ஈர்ப்பு—

(அ) இராசிபுரம் தொகுதியில் மின் அழுத்தம் குறைந்திருப்பது குறித்து. 401—404

(ஆ) அரவக்குறிச்சி, கரூர் பகுதிகளில் விசைத்தறி தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் குறித்து. 404—406

5. அறிக்கைகள் அளித்தல்—

(அ) உரிமைக் குழு 406

(ஆ) பொது நிறுவனங்கள் குழு 407

(இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு. 407

6. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)—

கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்ட முன்வடிவு, 1992. 407—408


டி-2 53-98 A

164977




| | பக்கங்கள் |
|---|---|
| மானியக் கோரிக்கைகள், 1992-93— | |
| விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி)— | 408—497 |
| (அ) கோரிக்கை எண் 23 – கூட்டுறவு. | |
| (ஆ) கோரிக்கை எண் 35 நுகர் பொருள் வழங்கல் | |
| * மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் | 409, 410, 426, 433, 447, 473—496 |
| *திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் | 411, 422 |
| *திரு. எம். தங்கவேல் | 422—425 |
| திரு. வே. தம்புசாமி | 426—433 |
| திரு. பே. தர்மலிங்கம் | 434—437 |
| திரு. இரா. பழனிசாமி | 438—440 |
| திரு. நா. சா. பழனிசாமி | 441—443 |
| திரு. கே. கே. சின்னப்பன் | 444—447 |
| *திரு. ப. ரங்கநாதன் | 448—451 |
| *திரு. எஸ். வி. சண்முகம் | 452—455 |
| திரு. வி. கே. லட்சுமணன் | 456—458 |
| திரு. சி. கிருஷ்ணன் | 459—460 |
| திரு. எஸ். எஸ். ராமசுப்பு | 460—465 |
| 8. அறிவிப்பு— | |
| பேரவை அலுவல்கள் குறித்து | 498 |
| 9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள். | 498—499 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பங்குனி 26, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2023.
1992 ஏப்ரல் 8, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. இரா. முத்தையா அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பாத்தூண் மரீஇ யவனைப் பசியென்னும்
தீப்பிணி தீண்டல் அரிது."

தான் பெற்ற உணவைப் பலரோடும் பகுத்து உண்ணும் பழக்கம் உடையவனைப் பசி என்று கூறப்படும் தீய நோய் அணுகுவது இல்லை.

### 1. வினாக்கள்—விடைகள்.

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் வினா எண் 494, திரு. மா. சுந்தரதாஸ், இருக்கையில் இல்லை. டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை, மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

494—

**Construction of Law Chambers for Advocates Near Courts**

*183 THIRU M. SUNDARADOSS:
Will the Hon. the Minister for Law be pleased to stated ;

The details of the steps taken to provide Law Chambers to the Aadvccates in Madras near and around the High Court and other Mtropolitan Magistrate Courts in Madras City at concessional Ares?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு விடை அளிப்பதற்கு முன்பாக, அமைச்சர் என்ற பொறுப்பில், உங்களிடத்திலே நான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் கேள்விகளைக் கேட்கிறார்கள். அதற்காக, துறை பல நிலையிலே தகவல்களையெல்லாம் தேடி அதற்காக பல நூறு ரூபாய்களைச் செலவு செய்து, அமைச்சர்களிடத்திலே விளக்கம் அளிக்கிறார்கள். நாங்கள் அதை இரண்டு நாட்கள் ஆய்ந்து ஆய்ந்து இதற்கு உறுப்பினர்கள் என்ன கேட்பார்கள் என்று ஆய்ந்து பார்க்

கிறோம். ஆனால் சட்ட மன்றத்திற்கு வந்த பிறகு, கேள்வி என்று நீங்கள் ஆரம்பித்தால், இருக்கையில் இல்லை என்று தொடர்ந்து இதுபோல இருப்பது, அமைச்சர்களாகிய எங்களுக்கு ஒரு உற்சாகக் குறைவை ஏற்படுத்துகிறது. எனவே மாண்புமிகு உறுப்பினர்கள் முடிந்த அளவுக்கு, கேள்வி கேட்கிற நண்பர்கள வந்தால் எங்களுடைய உழைப்பிற்கும் ஒரு மதிப்பு இருக்கும் என்று சொல்லி....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆகவேதான் உங்களை ஊக்கப்படுத்துகிற அளவில் கேள்வி கேட்ட உறுப்பினர் இல்லாவிட்டாலும் இன்னொரு உறுப்பினர் நான் கேட்கிறேன் என்று ஆர்வத்தோடு முன் வருகிறார்.

மாண்புமிகு திரு. கே. ஏ கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி கேட்ட உறுப்பினர் ஒரு நோக்கததோடு கேட்டிருப்பார். சில விபரத்திற்காகக் கேட்டிருப்பார். அவர் இருந்தால் அவரிடம் அதற்குத் தகுந்த விளக்கத்தைச் சொன்னால் அவருக்கும் உறுதுணையாக இருக்கும். எங்களுக்கும் உறுதுணையாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களை ஊக்கப் படுத்துகிற வகையில் சில உறுப்பினர்களே ஆர்வத்தோடு இருக்கிறார்கள்.

மாண்புமிகு கே. ஏ. கிருஷ்ணசாமி : அது சடங்கே தவிர அது உண்மையானது அல்ல என்று கருதுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்குரைஞர்கள் உபயோகத்திற்கென சலுகை வாடகையில் சென்னை உயர்நீதி மன்றத்திலும், பெருநகர் மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களிலும் அறைகள் கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்புகள் எதுவும் தற்பொழுது இல்லை.

டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழக்கறிஞர்கள் இடம் இல்லாததால் மிகுந்த கஷ்டத்தோடு இருக்கிறார்கள். எனவே தாங்கள் இதை மறுபரிசீலனை செய்து, ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற இரண்டு ஆண்டு தி.மு.க. ஆட்சியில் சென்னை உயர்நீதிமன்றத்தில் எந்த 'சேம்பரும்' அட்வகேட்டுகளுக்காக கட்டப்படவில்லை, ஆனால் போற்றுதலுக்குறிய மாண்புமிகு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஏறத்தாழ 60க்கு மேற்பட்ட சேம்பர்கள் கட்டப்பட்டு அது தகுன்றைகுப் பயன்பட்டு வருகிறது. தி.மு.க. ஆட்சிக் காலத்தில் எழும்பூர் போன்ற மாஜிஸ்டிரேட் கோர்ட்டுகளில் சேம்பர் கட்டவேண்டுமென்று உயர்நீதிமன்றம் கேட்டுக்கொள்ள, அதை அரசு பரிசீலனை செய்து 20 லட்சம் ரூபாய்க்கு அதற்கு புரபோசலும் அனுப்பி, பிறகு அதை தி.மு.க. அரசு கைவிட்டு விட்டது, அதுபோன்ற பரிந்துரைகளை மீண்டும் உயர்நீதி மன்றம் அனுப்புமேயானால் போற்றுதற்குரிய டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் அரசு அனுதாபத்தோடு நிச்சயமாகப் பரிசீலிக்கும்.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே குறிப்பிடுகிற முகத்தான், ஹைகோர்ட்டிலிருந்து தங்களுக்கு தாக்கீது வந்தால் அதைச் செயல்படுத்துகிறோம் என்று சொன்னார்கள். நன்றி. இருந்தாலும் ஹைகோர்ட்டின் செயல்பாடுகள் பற்றி அமைச்சா அவர்களுக்கு நன்றாகவே தெரியும். இன்று நாம் இந்த புரபோசலைக் கொடுத்தாலும் உடனடியாக அவர்கள் அதை ஏற்பதில்லை. ஆகவே அரசே முனைப்போடு செயல்பட வேண்டும். இன்றைக்கு வழக்கறிஞர்கள் ஏராளமாக இருக்கிற சென்னை மாநகரத்தில் இப்படி சேம்பர்கள் இல்லாமல் எத்தனையோ வழக்கறிஞர்கள் தம்புச் செட்டித் தெரு போன்ற இடங்களில் அறைகளை எடுத்துக்கொண்டு அங்கலாய்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கும், மாவட்டத் தலைநகரங்களில் உள்ள கோர்ட்டுகளிலும், இங்கே எழும்பூர், சைதாப்பேட்டை போன்ற பகுதிகளில் உள்ள இடங்களிலும் உள்ள வழக்கறிஞர்கள் எல்லோருக்குமே இடத்தை கையகப் படுத்தி அறைகளைக்கட்டித் தந்தால் வழக்கறிஞர்கள் சமுதாயம், வழக்கறிஞராக உள்ள சட்டத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றிக் கடன் பட்டதாக நிச்சயமாக இருக்கும். ஆகவே ஹைகோர்ட்டுக்கு அறிவுறுத்தி, எப்படியாவது அந்த திட்டத்தை வாங்கி, அதை செயல்படுத்துவதற்கு இந்த ஆண்டு முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9–35

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதி மன்றத்திலிருந்து பரிந்துரை வராமல் நிச்சயமாக அரசு எந்தவிதமான நடவடிக்கையையும் எடுப்பதற்கு அரசியல் சட்டத்திலே முகாந்திரம் இல்லை என்பதனை மாண்புமிகு உறுப்பினர், வழக்கறிஞர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எச். எம். ராஜா (குறுக்கீடு) கேள்வியை எழுப்புகிற நேரத்தில் நீங்கள் இருக்கையில் இல்லை. இன்னும் ஓர் உறுப்பினர் கேட்டிருக்கிறார். பொறுமையாக அமைச்சருடைய பதில் முழுவதையும் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். ஏனென்றால் மூலக் கேள்விக்கு அவர் பதில் அளித்தபோது தாங்கள் இல்லை. (குறுக்கீடு) அப்போது நீங்கள் இருக்கையில் இல்லை, அதுபற்றியே ஒரு விவாதம் நடந்திருக்கிறது. என்ன நடந்தது என்று தெரியாமல் பேசக்கூடாது. உட்காருங்கள்.

திரு. எச். எம். ராஜா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுந்தரதாஸ் அவர்கள் ஒரு நல்ல கேள்வியை கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒரு நல்ல பதிலை அளித்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட, சமீப காலங்களில் சிலமாவட்டங்களில் மாவட்ட நீதிமன்றங்கள்—செஷன்ஸ் கோர்ட் எல்லாம் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன. அந்த மாதிரி மாவட்டங்களிலே வழக்கறிஞர்கள் எல்லாம் அவர்களுக்கென்று தனியாக அறை இல்லாமல் மிகவும் துன்பத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள், ஆகவே அந்த மாதிரி புதிதாக ஆரம்பிக்கப்பட்ட மாவட்டங்களிலாவது நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு சிறிய முறையிலே ஆரம்பித்து அவர்களுக்கு வாடகைக்கு அறைகளை கட்டித் தருவாரா என்பதை மாவட்ட மக்கள் சார்பாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய யோசனை சிறந்த யோசனை. நிச்சயமாக எதிர்காலத்தில் நீதிமன்றங்களுக்கு கட்டிடங்கள் கட்டப்படுகிறபோது அதிலே வழக்கறிஞர்களுக்கு என்று ஒரு பகுதி, பத்திரிகையாளர்களுக்கு என்று ஒரு பகுதி என எல்லா பகுதியினர்களுக்கும் நிறைவு உண்டாக்குகிற வகையில் அந்த டிசைன்'' அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்திற்கு சொந்தமான இடம் இருக்கின்ற பகுதியிலாவது — குறிப்பாக எழும்பூர் கோர்ட்டில் ஏறத்தாழ ஐந்தாயிரம் வழக்கறிஞர்கள் பணியாற்றுகிறார்கள், அங்கே அரசாங்கத்திற்கு சொந்தமான இடம் இருக்கிறது — எங்கள் பகுதியில் ஐந்நூறுக்குக் குறைவில்லாமல் வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். கிரிமினல் கோர்ட் என்று சொன்னால், குற்றவாளி



களை நாங்கள் சந்தித்து பேசுகின்ற ஒரு கோர்ட். ஆகவே வழக்கறிஞர்கள் ஒரு இடம் இல்லாமல் மிகவும் அவதிப் படுகிறார்கள். பெயில் ஆபீசில் உட்கார இடம் இல்லாத நிலையில் வழக்கறிஞர்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பது அரசுக்குத் தெரியுமா? — ஆகவே அரசுக்குச் சொந்தமான இடங்களிலேயாவது — வழக்கறிஞர்கள் காசு கொடுக்கத் தயாராக இருக்கிறார்கள்; இதிலே நிதிப் பிரச்சனை வரவில்லை ஏனென்றால் வழக்கறிஞர்கள் தேவையான பணத்தை அளிக்கத் தயாராக இருக்கிறார்கள்; அவர்களிடம் வாங்கியாவது — வாடகை பேசிசில் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; போற்றுதலுக்குரிய மாண்புமிகு உறுப்பினர் எக்மோர் கோர்ட்டைப் பற்றி சொன்னார்கள். நான் மூலக் கேள்விக்கே பதில் சொல்லியிருக்கிறேன். அவர் இருந்திருந்தால் சரியாக இருந்திருக்கும். ஏற்கெனவே 20 இலட்சம் ரூபாய், தி.மு.க. ஆட்சிக் காலத்திலே ஒதுக்கப்பட்டு, புரொபோசல் அனுப்பப்பட்டு, பிறகு என்ன காரணத்தாலோ தி.மு.க. அரசு அதை கைவிட்டுவிட்டது. எனவே பார் அசோசியேஷனை அணுகி, உயர்நீதிமன்றத்திற்கு மீண்டும் ஏற்கெனவே ஒதுக்கிய அந்த திட்டத்தை பரிசீலிக்கச் சொல்வார்களேயானால், அரசு அதற்கு உறுதுணையாக இருந்து நிச்சயமாக அந்தப் பணியை முடிக்க போற்றுதலுக்குரிய மாண்புமிகு புரட்சித் தலைவி அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஓ.எஸ். அமர்நாத்:

திரு, ஓ, எஸ், அமர்நநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே சென்னைஉயர்நீதி மன்றத்தில் உள்ள வழக்கறிஞர்கள் பணியாற்றும் பணி அறைகள் சலுகை வாடகையில் இருப்பது போல ஒவ்வொரு மாவட்டத்திற்கும், குறிப்பாக பெரிய மாவட்ட நீதிமன்றம் உள்ள மதுரை மாவட்ட நீதிமன்றத்தில் பணிபுரியும் வழக்கறிஞர்களுக்கும் அதே மாதிரி வழக்கறிஞர்கள் பணி அறையை சலுகை வாடகையில் அமைத்துத் தர இந்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே.ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னிடத்திலே தற்போது விளக்கம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் மதுரைநீதிமன்றம் பற்றி தனியாக கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 495. திரு. வே. பெரியசாமி, இருக்கையில் இல்லை. * வினா எண் 496, திரு. ஏ.எம். முனிரத்தினம், மாண்புமிகு வருவாய்த்துறைஅமைச்சர்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க 10–4–92 அன்று இவ்வினா எடுத்துக்கொள்ளப்பட்டது

496—

சோளிங்கர் தாலுகா ஏற்படுத்துதல்

* 4721 திரு ஏ. எம். முனிரத்தினம்:

மாண்புமிகு வருவாய்த்துறைஅமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சோளிங்கரை மையமாகக் கொண்டு தாலுகா ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

*திரு. ஏ.எம். முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் பிர்கா, வானவரம் பிர்கா, காவேரிப்பாக்கம் பிர்கா ஆகிய 3 பிர்காக்களை இணைத்து, சோளிங்கரை மையமாக வைத்து ஒரு தாலுகா ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பதிலை முன்பே சொல்லிவிட்டேன்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 497, டாக்டர் க.கோபால், மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர்.

முற்பகல் 9.40

497—

நன்னிலத்தில் மாணவர் விடுதி

*3288—டாக்டர் க. கோபால்:

மாண்புமிகு பிற்பட்டோர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

நன்னிலத்தில் பிற்பட்டோர் மாணவர் விடுதி ஏற்படுத்தித்தர அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



நன்னிலத்தில் ஏற்கெனவே பிருஹற்படுத்தப்பட்டோர் நல மாணவியர் விடுதி இயங்கி வருகிறது. எனவே, மேலும் ஒரு விடுதி தொடங்குவதற்கு தற்பொழுது திட்டம் ஏதும் இல்லை.

டாக்டர் க. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலம் அரசு மேல்நிலைப்பள்ளியில் சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்கள் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து கல்வி பயிலுகின்றார்கள். அவர்கள் நலனைக் கருத்தில்கொண்டு வரும் நிதியாண்டிலேயாவது, அடுத்த நிதியாண்டிலேயாவது விடுதி ஆரம்பிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாணவர்களில் சுமார் 200 பேர் தான் விடுதிகளிலே தங்கிப் படிப்பதற்குரிய அந்தத் தகுதிகளைப் பெற்றவர்கள் என்று குறிப்பு இருக்கிறது. என்றாலும், ஏற்கனவே அங்கே ஒரு மாணவியர் விடுதி இயங்கிக் கொண்டு இருக்கிறது.மேலும் அரிசன நலத் துறையிலும் ஒரு விடுதி இயங்கிக் கொண்டு இருக்கிறது, ஆகவே, விடுதிகளே இல்லாத ஊர்கள் பள்ளிகளையொட்டிய பகுதி நிறைய இருக்கின்ற சூழ்நிலையில் இந்த வேண்டுகோளை உடனடியாகப் பரிசீலிக்க இயலாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள். இது நன்னிலம் குறித்த கேள்வி.

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்: பொதுவான கேள்விதான். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நன்னிலம் பற்றிய கேள்வி என்பது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சொன்னதைப் போல் எனக்குத் தெரிகின்றது. இருந்தாலும் இந்த நடப்பு ஆண்டில் பிற்படுத்தப்பட்ட மாணவர் மாணவிகளுக்காக நாம் எத்தனை ஹாஸ்டல்கள் திறக்க இருக்கின்றோம்? அது குறித்து ஜில்லா வாரியாக ஏதாவது குறிப்புகள் இருந்தால், அதை அறிவிக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம வீரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர் நல மானியக் கோரிக்கை விவாதத்திலேயும் மிகத் தெளிவாக கொள்கை விளக்கக் குறிப்பிலேயும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. நானும் பேசி இருக்கிறேன். இந்த ஆண்டுக்கு 13 மாணவியர் விடுதி திறப்பதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. அது எந்தெந்தப் பகுதிகள் என்பது இனிமேல் தான் தீர்மானிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 498, திரு. டி. வேலையா, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

[1992 ஏப்ரல் 8

498—

## உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப்பள்ளியாக மாற்றுதல்

* 5217—திரு.டி.வேலையா :

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், திருநெல்வேலி பேட்டை நகரமன்ற பெண்கள் உயர்நிலைப்பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் செ.அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1991—92-ம் கல்வி ஆண்டு முடியும் தருவாயில் உள்ளதால் இப்பள்ளியை தற்போது மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த இயலாது.

திரு.டி.வேலையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பகுதியில் இதுவரை 10-வது வகுப்பு வரை உள்ள பள்ளிதான் இருக்கிறது. திருநெல்வேலி நகராட்சியில் உள்ள 7 வார்டுகள் இங்கு இருக்கின்றன. அங்கே 25 ஆயிரம் மக்கள் தொகை உள்ளது. மேலும், பிற்பட்ட பகுதியான மானூர் யூனியன் பகுதியில் உள்ள மாணவர்களும் இந்தப் பள்ளிக்குத் தான் வரவேண்டி இருக்கிறது. மேலும் டவுன் பஸ் நெருக்கடி உள்ள நேரங்களில் அங்கே இருக்கிற குழந்தைகள் திருநெல்வேலி டவுனுக்கு வர முடிவதில்லை. ஆகவே இந்த இடத்தினுடைய முக்கியத்துவத்தைக் கருதி உடனடியாக மேல்நிலைப் பள்ளியாக ஆரம்பிக்க அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக கருத்துருக்கள் அனுப்பப்பட வேண்டும். அதை, இதற்கென அமைக்கப்படுகிற உயர்மட்டக் குழுவானது பரிசீலித்து பரிந்துரைக்க வேண்டும். அந்த அடிப்படையிலேதான் எந்த ஒரு பள்ளியானாலும் மேல்நிலைப் பள்ளியாக உயர்த்த முடியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 499, திரு. வி.கே. லட்சுமணன் மாண்புமிகு கல்வி அமைச்சர்.



1992 ஏப்ரல் 8]

499—

## தொழிற்கல்வி கல்லூரியிலும் துவங்குதல்

*5786—திரு. வி.கே. லட்சுமணன்:

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பள்ளியில் தொழிற்கல்வி ( Vocational Scheme ) பயிலும் மாணவர்கள் அதே கல்வியை கல்லூரி அளவில் செங்குத்தாக ( vertocle ) மேலும் தொடர வாய்ப்பளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு.வி.கே. லட்சுமணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது உயர்நிலைப்பள்ளிகளில் வேலை வாய்ப்பு கல்வி என்று சொல்லப்படுகிற வொக்கேஷனல் ஸ்கீமில் படிக்கிற மாணவர்கள் அவர்களுடைய கல்வியை மேலும் தொடர்வதற்கு, பாலிடெக்னிக்கிலே மட்டும் 10 சதவீதம் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இதை உயர்த்துவதற்கும், அதேபோல் கலை அறிவியல் கல்லூரிகளிலே அந்த மாணவர்கள் தங்களுடைய படிப்பைத் தொடர்வதற்கும், தகுந்த பாடத் திட்டங்களை வகுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழிற்பாடம் பயின்ற மாணவர்கள் தொழில் நுட்பக் கல்லூரியில் அதாவது பாலிடெக்னிக் இரண்டாம் வருடத்தில் சேரவும், அவர்களுக்காக 10 சதவீத இட ஒதுக்கீடு வழங்கவும் பி.எஸ்ஸி நர்சிங் வகுப்பு தொழிற் பாடம் எடுத்தவர்கள் இரண்டாம் ஆண்டு வகுப்பில் சேரவும் ஆணையிடப்பட்டுள்ளது. பிளஸ்—2, மேல்நிலைக் கல்வியில் வேலை வாய்ப்பு கல்வி பாடப் பிரிவில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு அவர்கள் கல்லூரியில் பி.காம்., பி.ஏ., கார்ப்பரேட் செக்ரட்டரிஷிப், பி.பி.ஏ., பாட வகுப்பில் சேர்ந்து பயில்வதற்கும் வாய்ப்பு உள்ளது. அவர்களுக்கு இப்பாட பிரிவில் மாணவர்கள் சேர்க்கையில் 10 சதவீதம் இட ஒதுக்கீடு நடைமுறையில் உள்ளது. ரிலேட்டட் சப்ஜெக்ட்ஸ் எடுத்து படித்தவர்கள் அந்த சப்ஜெக்ட்சை தொடரவும் வாய்ப்பு இருக்கிறது. பள்ளியில் வேலை வாய்ப்பு கல்வி பயிலும் மாண

வர்கள் அதே கல்வியை கல்லூரியில் மேலே தொடர வாய்ப்பளித்து புதிய பாடப் பிரிவை துவக்குவது பல்கலைக் கழகத்தின் வரையறைக்கு உட்பட்டதாகும்.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் அ. ஸ்ரீதரன்.

டாக்டர் அ. ஸ்ரீதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி இறுதியாண்டில் படிக்கும் மாணவர்களுடைய தகுதியை கண்டறிந்து அவர்களுடைய திறமைக்கேற்ப கல்லூரிகளில் படிப்பதற்கும், அந்த துறையில், கோர்சில் படிப்பதற்கும் ஆசிரியர்கள் முன்னுதாரணமாக இருந்து செயல்படும் வகையில் அரசிடம் ஏதேனும் செயல்குறிப்பு உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களும் அவர்களுடைய பெற்றோர்களும் அவர்கள் விரும்புகிற கல்வியைத் தொடர்வதற்குத் தான் முயற்சி யெடுக்கிறார்களே தவிர, நாம் சொல்லி அவர்கள் அதை ஏற்றுக் கொள்கிற நிலையில் இன்றைக்கு நாடு இல்லை. அதுமட்டுமல்ல, அப்படி ஒரு முயற்சியையும் அரசு எடுக்கவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜெ. பாலகங்காதரன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது கொடுக்கும் கல்வி திட்டத்தில் பி.ஏ., பி.எஸ்.ஸி., என்று படித்து அவர்கள் கிளரிக்கல் சைடில் தான் வேலைக்கு சேர முடியும் என்ற நிலைமை இருக்கிறது. அதை மாற்றி, இந்தத் தொழில் கல்வியை அப்படியே வோகேஷனல் கோர்சை மேல் படிப்பாக படிக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாம் பி.ஏ., படிப்பு, பி.எஸ்ஸி., படிப்பு போன்ற அந்த கல்வியறிவைத் தான் கல்லூரிகளில் தந்து கொண்டிருக்கிறோம். அதற்கும் கிளரிக்கல் வேலைக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை. அது அதற்கான பயிற்சியும் அல்ல. இருந்தாலும் இப்படிப் படித்தவர்கள் இருக்கிற மொழியறிவை வைத்துக் கொண்டு கிளரிக்கல் வேலையில் தான் போய்ச் சேர்கிறார்கள். அந்தப் பாடத் திட்டத்திற்கும்,



அந்த வேலைக்கும் எந்த சம்பந்தமும் கிடையாது. இதைப் படிக்கிறவர்கள் இதைப் படிக்கலாம். வேறு தொழில் கல்லூரியில் சேர்ந்து படிக்க விரும்புகிற மாணவர்கள் அதிலே சேர்ந்து படிக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 500—டாக்டர் ச. சுந்தரராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்.

500—

## கிராமங்களில் சேவை செய்யும் மருத்துவர்களுக்கு ஊக்குவிப்புப்படி

*476—டாக்டர் எஸ். சுந்தரராஜ் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கிராமங்களில் சேவை செய்யும் மருத்துவர்களுக்கு கிராமப்புற ஊக்குவிப்புப்படி (Rural Insenive allow-wance ) ரூ. 400- மாதந்தோறும் அளிப்பதாக மத்திய அரசு அறிவித்தது அமல் செய்யப்படுகிறதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணிபுரியும் மருத்துவர்களுக்கு மாதம் ரூ. 150 சிறப்பூதியத்திற்குப் பதிலாக ரூ.400 ஊக்கப்படியாக மாதந்தோறும் வழங்கப்பட்டுவருகிறது. இந்த ஊக்கப்படி அரசு குடியிருப்பு வசதி இல்லாத இடங்களில் பணிபுரியும் டாக்டர்களுக்கு ரூ. 400-லிருந்து ரூ. 500-ஆக உயர்த்தப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் அதிகப்படியான கிராமங்களில் மருத்துவ சேவை கிடைப்பதில்லை. அதற்கு மருத்துவர்கள் அங்கே வேலை செய்வதற்கு தங்களுக்குரிய வசதிகள் இல்லாத காரணத்தால் போய் வேலை செய்ய மறுக்கிறார்கள். ஆகவே அந்த மருத்துவர்களுக்கு அரசு தக்க இன்செனடிவ் அலவன்ஸை கொடுப்பதன் மூலம் அந்த மருத்துவர்கள் அங்கே வேலை செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. மாநில அரசு, அரசு குவார்ட்டர்ஸ் இருக்கிற இடங்களுக்கு 400 ரூபாயும், குவார்ட்டர்ஸ் இல்லாத இடங்களுக்கு 500 ரூபாயும் இப்போது கொடுத்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு மாநில அரசு

கொடுப்பதைப் போல மத்திய அரசும் கொடுத்து, அந்த மருத்துவர்கள் அங்கே வேலை செய்ய தகுந்த நடவடிக்கையெடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் மத்திய அரசு கொடுக்குமா என்று கேட்டிருக்கிறார்கள். அதற்கு நான் இப்போது எதுவும் சொல்ல முடியாது. ஆனால் முதலில் இந்த சிறப்பூதியமே இல்லை. புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி. ஆர். அவர்கள் அன்றைக்கு முதலமைச்சராக இருந்தபோது. இதைப்பற்றி அழைத்துப் பேசி 150 ரூபாய் முதலில் கொடுக்கலாம் என்று முடிவெடுக்கப்பட்டது. அதற்கு பின்னாலே அந்தத் தொகை உயர்த்தப்பட்டு, இன்றைக்கு 400 ரூபாயாகவும், குடியிருப்பு இல்லாத இடங்களில் 500 ரூபாயாகவும் கொடுக்கப்படுகிறது. அநேகமாக இந்த சிறப்பூதியத்திற்கே அவர்கள் சென்று பணியாற்ற வேண்டுமென்று தான் நாம் எதிர்பார்க்கிறோம். அவர்கள் பணியாற்ற முடியும். அவர்கள் எதிர்பார்த்த வகையில் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது. வசதிகள் இல்லையென்று தெரிவித்தார்கள். எங்களுக்கு இருக்கிற எண்ணம எல்லாம் வசதிகள் இருக்கிற இடங்களில் அவர்கள் ஒழுங்காக இருந்து பணியாற்றி விட்டாலே மிகப் பெரிய பிரச்சினை தீர்ந்து விடும். அடிப்படை வசதிகள் இல்லாத இடங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. எனவே, நிச்சயமாக இந்தச் சூழ்நிலையில் அவர்கள் இருந்து பணியாற்றுவது நியாயம். அவர்கள் இருந்து பணியாற்ற வேண்டும். அதற்கான உரிய நடவடிக்கைகளை நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

முற்பகல் 9-50

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உதவி மருத்துவர் சங்கத்திலிருந்து பேசிக் பேயில், 30% உயர்த்திக் கொடுக்க வேண்டும், கிராமப்புற மருத்துவமனைகளிலே வேலை செய்கின்ற மருத்துவர்களுக்கு என்று அரசுக்கு பரிந்துரைகள் வந்துள்ளனவா? அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்திலே அப்படிப் பட்ட பரிந்துரை ஏதும் வரவில்லை. ஏற்கனவே பேச்சுவார்த் தையின் மூலமாகத்தான் முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் என்ன கேட்கிறார்களோ, அதை அப்படியே கொடுக்க வேண்டும் என்பது எங்கேயும் அனேகமாக இருப்பதில்லை,





கோரிக்கைகளை வைக்கிறபோது அதிலே பேசி, ஏதாவதுஇடையிலே ஒருமுடிவிற்கு வருகிறார்கள். இப்போது இருப்பது நியாயமாக இருக்கிறது என்று கருதுகிறோம். எனவே நிச்சயமாக மருத்துவர்கள் இந்த ஊதியத்தை ஏற்றுக் கொண்டு அவர்கள் அங்கேயிருந்து பணியாற்றுவது தான் முறையாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ. எம். முனிரத்தினம்.

திரு. ஏ.எம்.முனிரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் நகரில் உள்ள மருத்துவமனையில், ஆம்புலன்ஸ் வண்டி வாங்கி, சுமார் 3 மாத காலமாக இயங்கவில்லை. அதை இயக்க அமைச்சர் அவர்கள் ஏதாவது நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. முனிரத்தினம், கேள்வி டாக்டர்களுடைய ரூரல் இன்சென்டிவ் அலவன்ஸ் பற்றியது. இதற்கு தனிக் கேள்வி போடவும். திரு. எஸ்.எஸ் ராமசுப்பு.

திரு.எஸ்.எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் உள்ள டாக்டர்களுக்கு எல்லாம் பல்வேறு சலுகைகள் அளித்த போதிலும் கூட,—சில இடங்களில் வீடுகள் கூட கொடுக்கப்பட்டு இருக்கின்றன—அவர்கள் நகர்ப்புறங்களிலே வாழ்ந்து கொண்டு, கிராமப்புறங்களுக்கு வருவதற்கு மிகவும் அஞ்சுகிறார்கள். என்னவென்றே தெரியவில்லை. கிராமங்களில் இதுமாதிரியான நிலைமை இருப்பதால், காலையிலே 9 மணிக்கு வரவேண்டும் என்று டைம் இருந்தால், 11 மணிக்கு வருகிறார்கள். இதுபோன்ற நிலைமையைத் தவிர்ப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது. இதனால் கிராமப்புறத்து மக்கள் பெரிதும் கவலை கொண்டுள்ளார்கள். வருகின்ற நோயாளிகளுக்கு சரியான பராமரிப்பு கொடுக்காத நிலை பல கிராமங்களிலே இருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலிலே மருத்துவர்களுக்கு இருக்கின்ற அடிப்படை வசதிகளை அதிகப்படுத்திக் கொடுப்பது, அந்த அடிப்படையிலேதான், சிறப்பு ஊதியத்தை வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு, தற்போது வழங்கப்பட்டு வருகிறது. அதேபோல், உயர் கல்விக்கு அவர்கள் போகிறபோது,

அதற்காக தனி சிறப்பு மதிப்பெண் கொடுக்கவேண்டும் என்று சொல்லி, ஓர் ஆண்டு அவர்கள் கிராமப்புறத்திலே உள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களிலே பணியாற்றியிருந்தால், அதற்காக ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு மார்க் கூடுதலாகக் கொடுக்கிறார்கள். அதுவும் இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறது. எங்கெங்கே அடிப்படை வசதிகள் வேண்டும் என்று சொன்னார்களோ அதையும் ஓரளவுக்கு செய்து கொடுத்திருக்கிறோம். எனவே, இதற்கு மேலே, அவர்கள் அங்கேயிருந்து பணியாற்றவில்லை என்று சொன்னால், அதற்குப் பின்னாலே, அரசாங்கம் நடவடிக்கையிலேதான் இறங்கவேண்டியதாக இருக்கும். கடந்த கூட்டத் தொடரிலே கூட நான் தெரிவித்தேன். ஏறத்தாழ, நடவடிக்கை எடுப்பது என்பதற்கு 185 நாட்கள் ஆகின்றன. எனவேதான் இதிலே ஒரு சிறப்பான நடவடிக்கையை வேகமாக நம்மால் எடுக்க முடியவில்லை. சட்ட ரீதியாகச் செய்ய வேண்டியிருக்கிற காரணத்தால், மற்றவர்களை சஸ்பென்ட் செய்தால் பயப்படுவார்கள். ஆனால் டாக்டர்களைப் பொறுத்தவரையில், சஸ்பென்ட் செய்தால், அவர்களுக்குத்தான் லாபம். காரணம், அவர்கள் டிஸ்பென்சரியிலே போய், முழு நேரமாக கவனிக்கலாம். எனவே, இப்டிப்பட்ட பல சிக்கல்கள் இந்தத் துறையிலே மட்டும் இருந்து கொண்டிருக்கின்றன. ஆனால், இதற்கு கடுமையான நடவடிக்கை எடுப்பதற்காக ஏற்பாட்டைச் செய்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 6 அதிகாரிகள் சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்சனுக்காக இன்றைக்குப் போகிறார்கள். அதை நேரடியாக எனக்கு அனுப்பவேண்டும் என்று கேட்டு இருக்கிறேன். ஏறத்தாழ 700 மருத்துவமனைகளிலே இன்றைக்கு சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்சன் நடந்து, எனக்கு ரிப்போர்ட் வந்திருக்கிறது. அதைப் பிரித்து எடுத்து, யார் யார் மீது என்ன நடவடிக்கை எடுப்பது என்பதைப் பற்றி நாங்கள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம். எனவே, தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். டாக்டர்களுக்கு என்னவெல்லாம் தேவையோ, அதையெல்லாம் செய்வதற்கு முழுமையாக, இந்த அரசாங்கம் செய்வதற்கு தன்னைத் தயார் படுத்திக் கொண்டிருக்கிறது. ஆனால் பொதுமக்கள் என்ன எதிர்பார்க்கிறார்களோ, அப்படி மருத்துவர்கள் பணியாற்ற வேண்டும் என்ற உணர்வை நாங்கள் தெரிவித்திருக்கிறோம். 4-ஆம் தேதி, எல்லா மாவட்டங்களிலிருந்தும், மாவட்ட அசிஸ்டன்ட் சர்ஜன்ஸ் அசோசியேசனிலிருந்து சங்கத்திலிருந்து-எல்லோரையும் வரச்சொல்லி, நாங்கள் பேசியிருக்கிறோம். நிலைமைகள் சீர்படும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. அப்படி இல்லை என்று சொன்னால், உரிய நடவடிக்கையை இந்த அரசாங்கம் எடுக்கும்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> டாக்டர் வெ. சரோஜா.

<u>டாக்டர் வெ. சரோஜா:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில்மருத்துவர்கள் சரிவர பணி செய்வதில்லை என்ற குற்றச்சாட்டுக்கு, அவர்களுடைய அடிப்படைத் தேவைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்படவில்லை என்பதை மருத்துவர்கள் சங்கம் பலமுறை சொல்லி, கோரிக்கை வைத்திருக்கிறது அதைக் கண்டறிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மருத்துவர்களை அழைத்துப் பேசும்போது, சட்டமன்ற உறுப்பினர்களையும் அழைத்துப் பேசினால், சில சஜஷன்களைக் கொடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்





<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் 234 பேர், அதிலே 600,700 பேர்கள் வருவார்கள், இவ்வளவு பேரையும் வைத்துக் கொண்டு, ஒரு முடிவுக்கு வருவது என்பது கொஞ்சம் கடினமான காரியம். நீங்கள் இங்கே எல்லாம் சொல்வதை வைத்துத்தான் அவர்களிடத்திலே நாங்கள் பேசிக் கொண்டு இருக்கிறோம். அதோடு அடிப்படை வசதிகள் இல்லை என்று சொல்வதாக இங்கே குறிப்பிட்டார்கள். சில இடங்களிலே அப்படி இருக்கலாம். நிதி நிலைமையின் காரணமாக நமக்கு சில இடங்களிலே அப்படி இருக்கலாம். ஆனால், வசதி இருக்கிற இடத்திலே என்ன நிலை என்பதுதான் இப்போது என்னுடைய கேள்வி. எனவே, அந்த இடத்திலேகூட சிலபேர்கள் வராமல் இருக்கிறார்கள். நான் மானியக் கோரிக்கையிலே பேசுகிறபோது கூட சொல்லியிருக்கிறேன். காலையிலே 7 மணிக்கு வந்து மாலை 4 மணி வரை பணியாற்றி விட்டுப் போகிற டாக்டர்களும் இருக்கிறார்கள். எனவே, இப்படியும் இருக்கிறார்கள், அப்படியும் இருக்கிறார்கள். எனவே, அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து, அவர்கள் பணியாற்றுவதற்கான ஏற்பாடு செய்யப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 9-55

<u>டாக்டர் எம்.மோசஸ்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மருத்துவர்களுக்கான அடிப்படை வசதிகளை அரசு ஓரளவிற்கு நல்ல முறையில் செய்து கொடுத்திருக்கிறது. அதைப் பாராட்டுகிறேன். ஆனால் அந்த மருத்துவர்களின் மிகப் பெரிய குறை என்னவென்றால், இப்போது மருத்துவமனைகளிலே தேவையான மருந்துகள் இல்லை. ஒரு இன்வெஸ்டிகேஷன் செய்வதற்கான லெபோரட்டரி வசதிகள் இல்லை. அதற்கு ஏதாவது செய்வதற்கு அரசு முன்வருமா? ஏனென்றால் அங்கே போகின்றவர்கள் எல்லாம் புதியதாக படித்துவிட்டு, அதிக அனுபவம் இல்லாத இளைய தலைமுறையிலுள்ள மருத்துவர்கள். அவர்களுக்கு இந்த வசதிகள் இருக்குமேயானால் நல்லமுறையில் அவர்கள் செயல்படமுடியும். அதற்காகத்தான் அவர்கள் அங்கே போக மறுக்கிறார்கள் என்பதை நான் இந்த அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

[1992 ஏப்ரல் 8

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போன்று அந்த நிலைமைகள் இல்லை. எனவே அந்த வசதிகள் இல்லாத காரணத்தால்தான் அவர்கள் அங்கே போவதற்கு மறுக்கிறார்கள் என்பதை என்னால் கொஞ்சம்கூட ஏற்றுக் கொள்ள முடியாது. காரணம், கடந்த 7, 8 மாத காலமாக அதில் நாங்கள் ரொம்ப தெளிவாகப் பேசி பேசி பார்த்துவிட்டோம். எனவே அதுவே காரணமல்ல. காரணம் அவர்கள் நகரத்தைச் சுற்றியே இருக்க வேண்டும். அதுவும் பெரு நகரங்களில். சென்னையைச் சுற்றியே இருக்கவேண்டுமென்று கருதுகிறார்கள். சென்னையிலிருந்து போய்வர வேண்டுமென்று கருதுகின்றார்கள். அதெல்லாம் வேதனைக்குரிய விஷயம். அதற்கு மேலே சொன்னால், வேறு பிரச்சினை வரும் என்ற காரணத்தால் முழுமையாக எனக்கு இருக்கின்ற அந்த உணர்வுகளை, எனக்கிருக்கின்ற அந்த வேதனைகளை அந்த அளவில் தான் சொல்ல முடியும். ஆனால் மருந்துகளைப் பொறுத்தவரையில் பல முறை இதே கூட்டத்தில், இதே மன்றத்திலே சொல்லியிருக்கிறேன். இடையிலே ஒரு சுணக்கம் ஏற்பட்டது உண்மை. காரணம் உங்களுக்குத் தெரியும். நம்முடைய ரூபாயின் மதிப்புக் குறைந்த காரணத்தினால் விலை உயர்ந்து விட்டது. எனவே நாம் என்ன டெண்டர் பெற்றிருந்தோமோ, அந்த டெண்டருக்கு அவர்களால் சப்ளை செய்ய முடியவில்லை என்ற பிரச்சினை வந்தது. இந்த நிலைமையை உணர்ந்த உடனேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ரூ. 6 கோடி கூடுதலாக இடைக் காலத்திலே ஒதுக்கிக்கொடுத்து அந்த நிலைமை இப்போது சீராகிவிட்டது. எல்லா இடங்களிலும் இப்போது மருந்துகள் போய்க் கொண்டிருக்கின்றன. அவர்கள் கேட்டதற்கு மேலேயே சில இடங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. அடுத்த ஆண்டு மருந்துகள் பிரச்சினையே வரக் கூடாது என்று மிகப் பெரிய ஒரு தீவிரமான ஆய்வு செய்து, மிகப் பெரிய ஒரு மாற்றத்தையே இதிலே நாங்கள் செய்து கொண்டிருக்கிறோம். இங்கே சென்னையிலே 1,703 மருத்துவமனைகள் நமக்கு மொத்தமாக இருக்கின்றன. ஒவ்வொரு மருத்துவமனைக்கும் எவ்வளவு மருந்து தேவை, எவ்வளவு மருந்து போகிறது, ஒரு தனி உள் நோயாளிக்கு எவ்வளவு மருந்து தேவை, வெளி நோயாளிக்கு எவ்வளவு மருந்து தேவை என்று எல்லா கணக்குகளையும் நாங்கள் எடுத்து இப்போது சரி செய்திருக்கிறோம். எனவே அடுத்த ஆண்டிலிருந்து இந்தப் பிரச்சினை நமக்கு வரவே வராது. ஆனால் மருத்துவர்களைப் பொறுத்தவரையில் காரணம் அது அல்ல. அவர்கள் போய் பணியாற்ற வேண்டுமென்ற வேண்டுகோளை இந்த மன்றத்தின் வாயிலாக நான் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ச. காந்திராஜன்.

திரு. ச. காந்திராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களிலே வேலை செய்யும் மருத்துவர்களுக்கு இந்த இன்செண்டிவ் கொடுப்பதை நாங்கள் எல்லோரும் வரவேற்கிறோம். இருந்தாலும்கூட நகர்ப்புறங்களை ஒட்டியே இந்த மருத்துவர்கள் வேலை பார்க்க வேண்டுமென்று விரும்புவதால் குறிப்பிட்ட தூரத்திற்கு, குறிப்பாக 20 கிலோ மீட்டருக்கு உள்ளாக இருந்தால், அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றுகின்ற மருத்துவர்களுக்கு இந்த இன்செண்டிவ் கொடுப்பதை நிறுத்துவதைப் பற்றி அரசு ஆலோசிக்குமா என்பதையும் அதே நேரத்தில் இன்னொரு சிறிய கருத்தையும் தெரிவிக்க விரும்புகிறேன். அதாவது ½ மணி அல்லது ஒரு மணி நேரத்திற்கு அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் அந்த மருத்துவர்கள் வேலை செய்துவிட்டு, கேம்ப் செல்கிறோம் என்று சொல்லிவிட்டு, தொடர்ந்து ஒரு மணி நேரத்திற்குமேல் அந்த ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணியாற்றாமல் இருக்கும் டாக்டர் மீது, அரசு மருத்துவர்கள் மீது, நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.



1992 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இன்செண்டிவ் கொடுத்ததே அவர்கள் இருந்து பணியாற்ற வேண்டுமென்பதற்காகத்தான். எனவே இன்செண்டிவ் நிறுத்துவது என்ற பேச்சுக்கே இடமில்லை. காரணம் அவர்கள் அதை வாங்கிக் கொண்டு சரியாகப் பணியாற்றினால் போதும் என்று நாங்கள் கருதுகின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பெருநகரங்களிலிருந்து 20 கிலோ மீட்டர் வரையில் இருக்கக் கூடிய இடங்களுக்கு இந்த இன்செண்டிவ் கொடுப்பதை நிறுத்தி விடுவீர்களா என்று தான் கேட்கிறார்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: 20 கிலோ மீட்டர் என்று சொன்னாலும்கூட, அதுவும் கிராமம் தான். அவர்கள் பெருநகரத்திலிருந்து போகக் கூடாது. பெரு நகரத்திலேயிருந்து போய்க் கொண்டிருந்தால், அவர்களுக்கு அந்த இன்செண்டிவ் கிடைக்காது. விடுமுறை காலத்தில் அந்த இன்செண்டிவ் கிடைக்காது. எனவே அந்த கிராமத்திலிருந்து கொண்டு அவர்கள் பணியாற்றினால் அவர்களுக்கு அந்த இன்செண்டிவ் இருக்கும். இதை நிறுத்துவதற்கு நாங்கள் தயாராக இல்லை. இன்னொன்று. டாக்டர்கள் கேம்ப் போய்விடுகிறார்கள் என்று சொன்னார். கேம்ப் போவதற்கு என்று ஒரு காலவரையறை அவர்களுக்கு குறித்து வைக்கப்பட்டிருக்கிறது. 1 மணி, 2 மணி நேரத்திற்கு பணியாற்றி விட்டுப் போய்விடுகிறார்கள் என்பதையும் தெரிவித்தார். காலதாமதமாக வரக் கூடியவர்கள் மீதே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். அதைத்தான் சொன்னேன். 1703 மருத்துவமனைகள் இருக்கின்றன. கடந்த 2 மாத காலத்திலே மட்டும் 700 மருத்துவமனைகளிலே போய் அவர்கள் ஆய்வு செய்துவிட்டு, 'சர்ப்ரைஸ் இன்ஸ்பெக்ஷன்' போய்விட்டு எங்களுக்கு ரிப்

போர்ட் அனுப்பியிருக்கிறார்கள். அநேகமாக, 2, 3 மாத காலத்தில் முழுமையாக அவர்களை பணிக்கு அனுப்பிவைக்க முடியும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. பல இடங்களிலே சிறப்பாகச் செய்தாலும், சில இடங்களில் அந்தக் குறைபாடு இருக்கத்தான் செய்கிறது. அதை சீர்செய்து விட முடியும் என்று நம்புகிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 501 மற்றும் 502. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்படுகின்றன.

வினா எண் 503, திரு. மெ. ஆண்டி அம்பலம், இருக்கையில் இல்லை. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்.

503—

ஜனதா ரக சேலை நெசவாளர்களுக்கு கூலி உயர்வு

* 5432 திரு. மெ. ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஜனதா ரக சேலை ஒன்றுக்கு தற்போது தரப்படும் நெசவுக் கூலியை உயர்த்தித்தர வேண்டுமென்று நெசவாளர் சங்கத்தினர் முறையீடு செய்தனரா?

(ஆ) ஆம் எனில், அரசு அதன் மீது எடுத்துள்ள முடிவு என்ன?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூலி என்பது மிகவும் குறைவாக இருக்கிறது. விலைவாசி ஏற்றம் அதிகமாக இருக்கின்றது. இந்த விலைவாசி ஏற்றம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால், கூலி நெசவு வேலை செய்தே பிழைக்கக் கூடிய அந்தக் குடும்பங்களுக்கு மீண்டும் இதைப் பற்றி மறுபரிசீலனை செய்து, இதைக் கட்டாயம் சற்றாவது உயர்த்திக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சதுர மீட்டருக்கு 2.75 என்று இருந்த ஊதியத்தை 3.40 ஆக இப்போதுதான் உயர்த்தப்



பட்டுள்ளது. 1-7-90 அன்று. குறிப்பாக ஜனதா ரக சேலைகளை யாரும் விரும்புவது இல்லை. அதனால் மைய அரசினுடைய ஆணையாளர் அவர்கள் ஒரு குழுவை நியமித்துள்ளார்கள். தற்போது அது குறித்து மனுக்கள் எதுவுமே வரவில்லை. ஊதிய உயர்வு கோரி ஜனதா ரக துணிகளை நெய்யும் அந்த நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களைச் சார்ந்த உறுப்பினர்கள் யாரும் கூலி உயர்வு தேவை என்று மனு கொடுக்கவில்லை. கன்சர்ன்ட் ஏ.டி.டி. யாருமே ரெப்பரசன்டேஷன் தரவில்லை. ஆதலால் இப்பிரச்சினைக்கு இடமே இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லுகிறபோது ஜனதா ரக சேலையை யாருமே விரும்புவது இல்லை என்று சொன்னார்கள். அந்த ஜனதாவை யாருமே விரும்பாத காரணத்தால் அந்தப் பெயரை மாற்றி வேறு பெயர் வைக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதாவை யாரும் விரும்பவில்லை என்பது நாடு அறிந்த உண்மை தான். (மேசையைத் தட்டும் ஒலி) ஜனங்களுக்குத் தேவையானவைகளை உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு தான் புரட்சித் தலைவி அவர்கள் தறிகளை நவீனப்படுத்தி ** கைத்தறிகளை விசைத் தறிகளாக மாற்றுகிற திட்டம் இப்படி பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை நேற்றையதினம் அறிவித்துள்ளார்கள். ஒவ்வொரு நெசவாளியினுடைய பொருளாதாரத்தையும் வளர்ப்பதற்காக ஜனதா ரக சேலைகளில் 2.75 ரூபாயாக இருந்ததை 3.40 ரூபாயாக கொடுக்கிற நேரத்தில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள், கைத்தறியை விசைத்தறியாக மாற்றுவதாகச் சொன்னீர்கள். பிறகு ** என்று சொன்னீர்கள்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மன்னிக்கவும் தவறுதலாக வந்து விட்டது. கைத்தறியைத்தான் விசைத் தறியாக மாற்றும் திட்டம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 504, டாக்டர் பெ. வீரபாண்டியன், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

504—

தரைப்பாலம் அமைத்தல்

*4164—டாக்டர் பெ. வீரபாண்டியன்:

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கம் தொகுதியில் வாசுதேவன்பட்டுக்கும், அல்லியந்தல் படிஅக்ரகாரம் முதலிய இடங்களை இணைத்த வாசுதேவன்பட்டு பாலம் வெள்ளத்தால் சேதமடைந்துவிட்டதால் தரைப்பாலம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி தொடங்கப்படும்;

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) போளூர்—செங்கம் சாலையிலிருந்து பனை ஓலைப்பாடி வாசுதேவன்பட்டு வழியாக பாண்டி—கிருஷ்ணகிரி சாலையை இணைக்கும் சாலையில் உள்ள தரைப் பாலத்தை திரும்பக் கட்டும் செயற்குறிப்பு தற்போது அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசின் அனுமதி வழங்கப்பட்டவுடன் பணி துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாசுதேவன்பட்டு ஆற்றின் குறுக்கே பாலம் கட்டுவது அரசின் பரிசீலனையில் உள்ளதாகவும் அரசு ஒப்புதல் கொடுத்தவுடன் பணி துவங்கப்படும் என்று அமைச்சர் அவர்களின உறுதி மொழி கலந்த பதிலுரைக்கு நன்றி. எதிர் வரும் மழைக் காலத்திற்கு முன் இப்பாலம் கட்டி முடிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்காக மதிப்பீடு ஏறத்தாழ 34 லட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக ஒப்புதல் கோரி அரசுக்கு சி.இ.—ஆர்.ஆர்.,ரூரல் ரோட்ஸ், அனுப்பி இருந்தார்கள். சில கூடுதல் விவரங்களை அரசு அவர்களிடம் கேட்டு, அந்தக் கூடுதல் விவரங்களும் அரசுக்கு வந்திருக்கின்றன. ஆகவே அதைப் பரிசீலித்து அரசின் நிதியைப் பொறுத்து இந்த ஆண்டு அதை எடுக்கலாமா என்பதைப் பற்றி அரசு ஆய்ந்து கொண்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் பெ. வீரபாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையிலிருந்து வாசுதேவன்பட்டு வழியாக வரும் பேருந்துகள் இந்தப் பாலத்தின் மீது சென்று படி—அக்ரஹாரம், அல்லியந்தல், பனைவோலைப்பாடி, நந்திமங்கலம், காரப்பட்டு வழியாக சென்றால் கிட்டத்தட்ட



14 கிலோ மீட்டர் தூரம் ஆகிறது. ஆனால் இப்போது திருவண்ணாமலையிலிருந்து காஞ்சி வழியாக 40 கிலோ மீட்டரும், செங்கம்வழியாகச்சென்றால்காரப்பட்டுக்கு 45 கிலோ மீட்டர்ரும் ஆகிறது. எனவே அந்தப் பாலத்தை விரைவில் கட்டி முடித்தால் பொது மக்களுக்கு நன்மையாக இருக்கும் என்பதால் அது சீக்கிரம் கட்டி முடிக்கப்படுமா என்று கேட்க விழைகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளத்தால் ஏற்பட்ட சேதத்தால் தான் அந்தப் பாலம் பழுதடைந்திருக்கிறது. அதற்கான ஆய்வுகளை செய்துதான் இன்றைக்கு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு அதற்கான ஆய்வுப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. விரைவில் அந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 505, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

505—

பாலம் கட்டுதல்

* 4421 திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநிலத்தில் நூறு பாலங்கள் கட்டும் திட்டத்தின் கீழ் நிலக்கோட்டை தொகுதியில் உள்ள பாலங்களையும் சேர்த்துக் கொள்ள அரசு முன்வருமா?

(ஆ) வத்தலக்குண்டு நகரத்தையும் ஆடுசாபட்டியையும் இணைக்கும் அளவில் மஞ்சளாறு கால்வாயில் பாலம் கட்டவும், வத்தலக்குண்டு ஒன்றியம் இளநீ கரையிலிருந்து பிரிந்து செல்லும் ரோட்டில் குறுப்பப்பட்டி அருகில் பாலம் கட்டவும் அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இல்லை.

திருமதி ஏ. எஸ் பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பாலம்—அதாவது ஆடுசாபட்டி வத்தலகுண்டு டவுன் பஞ்சாயத்தை சேர்ந்த ஊராகும். அந்த ஊர் தனியாக இருக்கிறது. அதற்கு இடையே மஞ்சளாறு வாய்க்கால் சென்று கொண்டிருக்கிறது. மழைக்காலங்

களில் மட்டுமல்ல. சாதாரணக் காலங்களில் கூட அந்தக் குழந்தைகள் பள்ளிக்கு வரமுடிவதில்லை. ஜனங்களும் இங்கே. வந்து சாமான்கள் வாங்கிக் கொண்டு போகமுடியவில்லை. ஆகையினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை மீண்டும் மறு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். நாங்கள் நன்றியோடு இருப்போம். ஏற்கனவே எனக்குப் பாலம் சாங்ஷன் செய்து கொடுத்திருக்கிறீர்கள். நாங்கள் நன்றியோடு இருப்போம். ஆகையினால் இந்தப் பாலத்தையும் இந்த ஆண்டே எடுத்து இதற்கு சாங்ஷன் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அம்மைநாயக்கன் —டு- வத்தலக்குண்டு என்ற அந்த ரோட்டிலே இளநீகரை இருக்கிறது. அங்கேயிருந்து தென்புறமாகச் செல்லும் போது பெரிய ஓடை, பெரிய பள்ளம் இருக்கிறது. அதிலே தண்ணீர் வரும்போது யாருமே நடக்க முடியாது. ஆகையினால் இந்த இரண்டு பாலங்களுக்கும் மறுபரிசீலனை செய்து இதை இந்த ஆண்டிலேயே சாங்ஷன் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற பாலம் ஒரு பேரூராட்சியின் சாலையில் இருக்கின்ற பாலம். இதை நெடுஞ்சாலைத் துறையின் கீழே கட்டுவதற்குத் திட்டங்கள் ஏதும் இல்லை. பகுதி 2 திட்டத்தின் கீழே எடுத்துச் செய்யப்படுகின்ற திட்டத்திலும் இது இல்லை. ஆகவே இந்தப் பாலம் கட்டுவதற்கு ஏறத்தாழ 25 இலட்சம் ரூபாய் என்ற மதிப்பீடு இருக்கிறது. ஆகவே தற்போது இருக்கின்ற நிலைமையில் இப்போது அதை எடுத்துச் செய்வதற்கு வாய்ப்பு இல்லை என்று அரசு கருதுகிறது. இரண்டாவதாகச் சொல்லப்படுகின்ற இளநீகரையிலிருந்து பிரிந்து செல்லுகின்ற பாலத்தை செல்ஃப் ஆஃப் ப்ராஜெக்ட்டிலே சேர்த்திருக்கிறோம். அதற்குரிய நிதியாதாரம் கிடைக்கப் பெற்றவுடன் அதைப் பற்றி பரிசீலிக்கலாம் என்றும் இந்த அரசு கருதுகிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டாவது பாலத்தை செல்ஃப் ஆஃப் ப்ராஜெக்ட்லே சேர்க்கப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியென்றால் அதனுடைய எஸ்டிபேட் என்ன? எப்போதிலிருந்து இந்தத் திட்டம் எடுத்துக் சொள்ளப்படும்? முதலிலே சொல்லக்கூடிய ஆடுசாபட்டி பாலம்—அந்த பேரூராட்சியிலே பணம் இல்லை. பணம் இல்லாத இடங்களில் எல்லாம்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே அமர்ந்து கொண்டிருக்கிறார்கள்—பணமே இல்லாத பகுதியில் இருக்கின்ற பாலங்களுக்கெல்லாம் ஸ்பெஷல் சாங்ஷன் பண்ணி தனிக் கவனம் செலுத்தி அரசுப் பணத்திலிருந்து சாங்ஷன் செய்து கட்டுவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரும்பாலும் பேரூராட்சி மற்றும் ஊராட்சி சாலைகளை இன்றைக்குத் தன்னிறைவுத் திட்டத்தின் மூலம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். பெரிய பாலங்களை எடுக்கின்ற நேரத்தில் 25 இலட்சம் ரூபாய் செலவாகின்ற நேரத்திலே, அனைத்து தொகுதிகளையும் கணக்கிடுகின்ற நேரத்திலே, அதற்கான நிதியாதாரங்களை அரசு கொடுப்பது என்பது இயலாத நிலை ஆகும். ஆகவே தான் மிகப் பெரிய மதிப்பீடு இருக்கின்ற பாலங்களை தன்னிறைவுத் திட்டத்தின் கீழே எடுத்துச் செய்வதற்கு சிறிய ஊராட்சிகளுக்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது என்ற காரணத்தினாலே தான் மேலே சொல்லப்பட்ட அந்த ஆடுசாபட்டியை இணைக்கின்ற பாலத்திற்கு இப்போது வாய்ப்பு இல்லை என்று சொன்னேன். அதற்கு அடுத்ததாக இளநீகரையிலிருந்து செல்லுகின்ற அந்த பாலத்தினுடைய விவரம் என்ன என்று கேட்டார்கள். அதனுடைய நீளம் ஏறத்தாழ 12 மீட்டர் மதிப்பீடு 8 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டிருக்கிறது. நிதியாதாரத்தைப் பொறுத்து, அந்தப் பாலத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று இந்த அரசு கருதுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 506, திரு எஸ். எஸ். ராமசுப்பு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.

506—

சாலை பழுதுபார்த்தல்

*4922 திரு. எஸ். எஸ். ராமசுப்பு:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆலங்குளம் தொகுதி அகரம் கிராமத்திலிருந்து நாராணம்மாள்புரம் வழியாக மாயமான்குறிச்சி செல்லும் சாலை பழுதடைந்து இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், சாலையை உடனடியாகப் பழுதுபார்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இச்சாலை மேம்பாட்டுப் பணிகள் விரைவில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

[1992 ஏப்ரல் 8

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சாலையை எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னதால் எங்களுடைய பகுதி மக்கள் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள். ஏனென்றால் அந்தச் சாலையானது இரண்டு கிராமங்களுக்குச் செல்லக்கூடிய சாலை: நாராணம்மாள், மாயமான்குறிச்சி என்ற இரண்டு கிராமங்கள் அதில் அடங்கியிருக்கின்றன. அந்த கிராமத்திற்கு செல்லும் சாலையை சரியாகப் போடாததால், பழுதடைந்திருப்பதால், பஸ்கள் எல்லாம் நிறுத்தப்பட்டிருக்கின்றது. இன்றைக்கு அந்தச் சாலை போடப்படும் என்று சொன்னதால் மிக்க மகிழ்ச்சி அடைகிறோம். அதே சமயத்தில் இரண்டு பகுதிகளிலும் வயல்கள் இருக்கின்றன. அந்த வயல் பகுதியில் உள்ளவர்கள் அந்த ரோட்டை ஆக்கிரமிப்பு செய்து கொள்கின்றார்கள். அவ்வாறு ஆக்கிரமிப்பு செய்வதை தடுப்பதற்கு அந்தச் சாலையை கொஞ்சம் அகலப்படுத்தி போட்டு, அந்த ஆக்கிரமிப்பு செய்பவர்கள் மீதும் நடவடிக்கை எடுப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் அந்தச் சாலையை சீக்கிரமாகப் போடுவதற்கு அரசு முன்வருமா என்ற கேள்வியையும் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கண்ட வினாவிலே குறிப்பிடப்படுகின்ற சாலை 1991—92 ஆம் ஆண்டு சிறப்பு தன்னிறைவுத் திட்டத்தில் பேருந்து தடச்சாலைகள் பட்டியலில் சேர்க்கப்பட்டு உத்திரவிடப்பட்டிருக்கிறது. 18—3—1992 அன்று டெண்டர் கோரப்பட்டு இன்றைக்கு வொர்க் ஆர்டர்—அந்த வேலையைச் சீக்கிரமாக எடுத்துச் செய்வதற்காக அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆக்கிரமிப்புகளை பொறுத்த மட்டிலே இன்றைக்கு வயல்களின் ஊடே சாலை செல்லுகின்ற நேரத்திலே சில இடங்களிலே அந்தப் பிரச்சினை ஏற்படுகிறது. ஆகவே, எந்த அளவிற்கு ஏற்கனவே இடங்களை எடுத்திருக்கிறோம் என்பதை கணக்கிலே வைத்து போக்குவரத்துக்கு இடையூறு இல்லாத வகையில் அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டு இந்தச் சாலையினுடைய பணி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 507, திரு. பே. தர்மலிங்கம், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.



1992 ஏப்ரல் 8]

507—

திருநெல்வேலி மத்திய பேருந்து நிலையத்தை மாற்றுதல்.

*1319 திரு. பே. தர்மலிங்கம்:

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி நகர போக்குவரத்து நெரிசலை சீர் செய்யவும், பயணிகளின் நலனைக் கருதியும் திருநெல்வேலி மத்திய பேருந்து நிலையத்தை பாளையங்கோட்டைக்கு மாற்ற அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா

(ஆ) ஆம் எனில், எப்போதிலிருந்து மாற்றப்படும்?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): திருநெல்வேலி நகர பேருந்து நிலையத்தை மாற்றுவது சம்பந்தமாக அரசு ஆய்வு செய்து தற்போது உள்ள இடத்திலிருந்து மாற்றத் தேவையில்லை என அரசு முடிவெடுத்துள்ளது.

திரு. பே. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான பாளையங்கோட்டை மேலப்பாளையம் மக்களின் நீண்ட நாள் எண்ணத்தை நிறைவேற்றும் வகையில் திருநெல்வேலியோடு இணைந்த எனது தொகுதிக்கு நடப்பு ஆண்டிலே மாநகராட்சி அந்தஸ்தை வழங்கிய பாரி வள்ளல் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது சார்பிலும் தொகுதி மக்கள் சார்பிலும் நன்றியை அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பித்து தற்போது நெல்லை சந்திப்பு பஸ் நிலையத்திற்கு 820 பஸ்கள் வந்து போவதாலும், குறிப்பாக டவுன் பஸ்கள், வெளியூர் பஸ்கள், வெகுதூரம் செல்லும் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பஸ்கள் எல்லாம் ஒரே இடத்திலே வந்து செல்வதாலும் பஸ் நிலையத்தை விரிவுபடுத்திட போதிய இட வசதி இல்லாத காரணத்தாலும் கடந்த தி.மு.க. ஆட்சி நடந்த போது நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் பாளையங்கோட்டையிலுள்ள வேந்தன்குளம் என்ற இடத்தில் பேருந்து நிலையம் அமைப்பதற்கு பரிந்துரை செய்து நிதி ஒதுக்கீடு செய்து அன்றைய தி.மு.க. ஆட்சியால் கிடப்பில் போடப்பட்டது. ஆகவே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள் பாளையங்கோட்டை வேந்தன்குளம் என்ற இடத்திலே புதிய பஸ் நிலையம் அமைத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் பாளையங்கோட்டை வேந்தன்குளம் என்ற இடத்திலே ஒரு புதிய பேருந்து நிலையம் அமைப்பது பற்றி அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைக் கூறி, வேலைப் பளு காரணமாக நகராட்சிப் பணியாளர்கள் பஸ் நிலையங்களை சரியாக பராமரிக்க இயலவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா ? எனவே, அதை சரியாகப் பராமரிக்கும் வகையில் இதற்காக தனியாக அதிகாரிகளைப் போட்டு பராமரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்ற பேருந்து நிலையங்களை நிர்வகிக்கின்ற முறைகளில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் வந்து இருக்கின்ற காரணத்தால் பேருந்து நிலையங்களை நிர்வகிக்கின்ற பொறுப்புகளை பொறியாளர்கள் அல்லது மருத்துவ பட்டதாரிகளைக் கொண்டு புதிய முறையில் பேருந்து நிலையங்களை நிர்வகிக்கின்ற பொறுப்புகளுக்கு தனி அதிகாரிகளை நியமிப்பது பற்றி தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. வேலையா.

திரு. டி. வேலையா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளையும் தன்னுடைய தொகுதி என்று சொல்லி ஒவ்வொரு தொகுதிக்கும் ஏதாவது புதிய நன்மைகளைச் செய்துகொண்டு வருகிறார்கள். இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன திருநெல்வேலி மத்திய பேருந்து நிலையம் என்னுடைய தொகுதியில் இருக்கிறது. இதை இந்தத் தொகுதியிலிருந்து மற்ற தொகுதிக்கு மாற்றினால் நான் அந்தத் தொகுதியிலிருந்த பேருந்து நிலையத்தை கோட்டைவிட்டு விட்டேன் என்று மக்கள் என்னை பழி சுற்றுவார்கள். வளர்ந்து வருகிற காலத்தில் புதிய பேருந்து நிலையம் தேவையென்றால் பாளையங்கோட்டைப் பகுதியில் தனியாக ஒரு பேருந்து நிலையத்தை அமைத்துக்கொள்ளலாம். ஆகவே, வருகின்ற காலத்தில் எல்லா தொகுதிக்கும் எல்லாம் செய்து கொடுக்க வேண்டு



மென்று எண்ணுகின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் ஒரு இடத்தில் இருப்பதை இன்னொரு இடத்திற்கு மாற்றவேண்டாம் என்ற கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மனதில் கொள்வார்களா என்று கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலியில் இருக்கின்ற பேருந்து நிலையத்தை எக்காரணத்தைக் கொண்டும் இந்த அரசு மாற்றாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். புதிதாக வளர்ந்து வருகின்ற நிலைமைக்கு ஏற்ப பாளையங்கோட்டை வேந்தன்குளம் என்ற இடத்தில் புதியதாக ஒரு பேருந்து நிலையம் அமைப்பது பற்றிதான் அரசு பரிசீலிக்கும் என்று சொல்லியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 508, டாக்டர் ஜி. ஆர். மாலா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சா.

508—

தானாகவே முன்வந்து பணி ஓய்வு பெறும் அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு.

*2468 டாக்டர் ஜி. ஆர். மாலா :

மாண்புமிகுதொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மாநில அரசு ஊழியர்கள் பணியிலிருக்கும்போது இறந்து போனால் அவர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதைப் போல், தானாகவே முன வந்து பணி ஓய்வு பெறும் Vo untary retirement) அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கும் வேலைவாய்ப்பு அளிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில அரசு ஊழியர்கள் பணியிலிருக்கும்போது இறந்து போனால் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதைப் போல் தானாகவே முன் வந்து பணி ஓய்வு பெறும் அரசு ஊழியர்களின் வாரிசுகளுக்கும் வேலைவாய்ப்பு அளிக்கும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் பல்வேறு காரணங்களால் வாலண்டரி ரிடையர்மெண்ட் பெறுகிறார்கள். என்ன காரணம் என்பதை அறிந்து உடல் நலம் பாதிக்கப்படுவதால் காரணமாக Ischaemic Heart Disease, Cancer, Renal problem

[1992 ஏப்ரல் 8

Psychosis' போன்ற நோய்களினால் மேற்கொண்டு பணியைத் தொடர முடியாத நிலையில் தானாகவே முன்வந்து ஓய்வு பெறும் அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்பில் சிறப்பு சலுகை வழங்குவதை நமது அரசு மறு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டு முதல் அமுலில் உள்ள கருணை அடிப்படையில் பணி நியமனத் திட்டத்தின் கீழ் பணியிலிருக்கும்போது மரணமடைந்து குடும்பத்தை நிராதரவாக விட்டுச் செல்லும் அரசு அலுவலர்களின் வாரிசுதாரர்களாக கருதப்படும் மனைவி (அல்லது) கணவன், மகன், திருமணமாகாத மகள் ஆகியோர்களுக்கு அவரவர்களின் கல்வித் தகுதிக்கேற்றவாறு வாரிசு உரிமை அடிப்படையில் பணியளிக்கப்படுகிறது. இச்சலுகை, இயலாமை காரணமாக மருத்துவச் சான்றின் பேரில் 50 வயதிற்கு முன் ஓய்வளிக்கப்படும் அரசு அலுவலர்களின் வாரிசுதாரர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-15

டாக்டர் ஜி. ஆர். மாலா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலண்டரி ரிடையர்மெண்ட் பெறும் அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு புதிதாக தொழில் தொடங்க அரசு கடன் உதவி வழங்குவதில் முன்னுரிமை வழங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, மாவட்டத் தொழில் மையங்களுக்கு உரிய விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து கடன் கேட்டு அவர்கள் மனு செய்தால் நிச்சயமாக அவர்களுடைய மனு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு ஊழியர்கள் பணியில் இருக்கின்றபோதே இறந்தால், அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க அரசு முன்வரும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறினார்கள். போக்குவரத்துத் துறையில் அரசு ஊழியர்களாக பணியில் இருந்து இறக்கின்றவர்கள் [illegible] பேர்களுடைய வாரிசுதாரர்களுக்கு வேலை [illegible] நாளும் கடிதம் கொடுத்து இதுவரையில் எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே அவர்களுக்கு வேலை கிடைக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.



1992 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணியிடங்களில் ஏற்படுகிற காலியிடங்களைப் பொறுத்து, முன்னுரிமை அடிப்படையில் வாரிசுதாரர்களுக்கு வேலை வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கே. முனிவெங்கடப்பன்.

திரு. கே. முனிவெங்கடப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வகையில் அரசு ஊழியர்களின் ரிடையர்மெண்ட் ஏஜ் 58-லிருந்து 55-ஆகக் குறைக்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி தனிக் கேள்வி போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் எம். கருப்புசாமி.

டாக்டர் எம். கருப்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலண்டரி ரிடையர்மெண்ட் ஆகிறவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை கொடுக்கும்போது, அவர்களுக்கு வழங்கப் பட்டு வரும் பென்சன் கொடுக்கப்படுமா அல்லது வாரிசுதாரர்களுக்கு வேலை கொடுத்தவுடன் அந்தப் பென்சன் நிறுத்தப் படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாலண்டரி ரிடையர்மெண்ட் கொடுப்பவர்கள் யாருக்கும் வாரிசு உரிமை அடிப்படையில் வேலை கொடுக்கப்படவில்லை என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கியசாமி.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்டத் தொழில் மையங்களை அணுகினால், வேலையில்லாதவர்களுக்கு கடன் கொடுக்கப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால் நான் பல முறை பல இளைஞர்களுக்கு, அவ்வாறான கடன் வழங்கக் கடிதம் கொடுத்தும், இது வரையில் அவர்களுக்கு கடனே கொடுக்கவில்லை. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு ஒரு தனியான சுற்றறிக்கை அனுப்புவாரா என்று கேட்டுக் கொள்கிறேன்.

[1992 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ச. ஆரோக்கிய
சாமி. இதற்குத் தனிக் கேள்வி போட வேண்டும். இந்தக்
கேள்வி, வாலண்டரி ரிடையர்மெண்ட் கொடுத்து இருப்பவர்
களுடைய வாரிசுதாரர்களுக்குக் கருணை அடிப்படையில் வேலை
கொடுப்பது பற்றிய பிரச்சினை. அப்படிப்பட்டவர்களுக்கு
வேறு ஏதாவது வாய்ப்புக் கொடுப்பீர்களா என்று கேள்வி
கேட்டபோது அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில்
சொல்லியிருக்கிறார்கள்.

டாக்டர் ச. ஆரோக்கியசாமி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாவட்டத் தொழில் மையங்களில் கடன்
தருகிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரி
வித்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி கேட்ட
மாண்புமிகு உறுப்பினர் ஒரு துணைக் கேள்வி கேட்டார்,
அப்போது பதில் சொல்லியிருக்கிறார்.

வினா என். 509, திரு. கு லாரன்ஸ், மாண்புமிகு
வேளாண்மைத் துறை அமைச்சர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறப்பு அரிசி
உற்பத்தித்திட்டம் செயல்படுத்துதல்.

509—

*2058 திரு. கு. லாரன்ஸ் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா :

நெல் சாகுபடியை மட்டுமே நம்பியிருக்கும் கன்னியாகுமரி
மாவட்ட விவசாயிகளின் வாட்டம் போக்க மத்திய அரசு
மானியத்துடன் செயல்படும் சிறப்பு அரிசி உற்பத்தித் திட்டம்
கன்னியாகுமரி மாவட்டத்திலும் செயல்படுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே :

1991-92 ஆம் ஆண்டில் கன்னியாகுமரி மாவட்டத்
தினையும் மத்திய அரசு மானியத்துடன் செயல்படுத்தப்
படும் "சிறப்பு அரிசி உற்பத்தித் திட்டத்தில்" சேர்க்கும்படி
மத்திய அரசிடம் கேட்கப் பட்டது. மத்திய அரசு இத் திட்
டத்தினை செயல்படுத்த 50,000 ஹெக்டேர் நிலத்திற்கு
மேல் அரிசி சாகுபடியாகும் மாவட்டங்களையே சேர்த்துக்
கொள்ள முடிவெடுத்திருப்பதாகவும், கன்னியாகுமரி மாவட்
டத்தில் 43,903 ஹெக்டேர் நிலத்தில் மட்டுமே நெல் சாகுபடி
செய்யப்பட்டு வருவதாலும் இத் திட்டத்தினை கன்னியா
குமரி மாவட்டத்தில் செயல்படுத்த சாத்தியக்கூறு இல்லை
என தெரிவித்துள்ளது.





திரு. கு. லாரன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, குமரி மாவட்டத்தில் பேச்சிப்பாறை, பெருஞ்
சாணி, சிற்றாறு போன்ற அணைகள் இருக்கின்றன. அங்கே
யிருந்து வருகிற நீரை ஒட்டு மொத்தமாக நெல் பயிருக்காக
அந்த மக்கள் பயன்படுத்துகிறார்கள். மேலும், அங்கேயிருக்
கிற விவசாயிகள் படித்தவர்கள். அரிசி உற்பத்தியில் நஷ்டம்
இருக்கிற சூழ்நிலையில் அரிசி உற்பத்தியை மாற்றி, அந்த
மக்கள் வேறு பயிர்களைப் பயிரிடுகின்ற ஒரு சூழ்நிலை
அங்கே ஏற்படுகிற சாத்தியக்கூறுகள் இருக்கின்றன. நமது
மாநிலத்தில் அரிசி உற்பத்தியை இன்னும் அதிகமாக செய்ய
வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிற காரணத்தால் இந்தக்
கருத்தினை ஏற்றுக் கொண்டு, இந்த அரசு சிறப்பு அரிசி உற்
பத்தித் திட்டத்தை குமரி மாவட்டத்திலேயும் அமுல் படுத்த
தகுந்த நடவடிக்கையை மேற்கொள்ளுமா என்று நான் அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேர
வைத் தலைவர் அவர்களே, 1991-92 ஆம் ஆண்டிற்குரிய
திட்டத்தில் மத்திய அரசு அனுமதி தர மறுத்துவிட்டது.
மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை கனிவுடன் செயல்
படுத்துகின்ற வகையிலே, இதய தெய்வம் புரட்சித் தலைவி
யினுடைய அரசு, இந்த ஆண்டு மத்திய அரசை தொடர்ந்து
வற்புறுத்தி வெற்றியைப் பெறும் என்பதனை இங்கே தெரி
வித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 510,
திரு. வி. பி. சந்திரசேகர், மாண்புமிகு வேளாண்மைத் துறை
அமைச்சர்.

510—

ஆழ்குழாய்க் கிணறு அமைக்க கடனுதவி அளித்தல்

*6134 திரு. வி.பி. சந்திரசேகர் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாயிகள் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க கடனுதவி
அளிக்க அரசு முன்வருமா ?

முற்பகல் 10—20

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே,

விவசாயிகள் ஆழ்குழாய்க் கிணறு அமைக்க கடனுதவி
அளிக்கும் திட்டம் ஏதுமில்லை.

<u>திரு. வி. பி. சந்திரசேகர்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, கோவை மாவட்டத்திலுடைய விவசாயிகள் இன்றைக்கு வறட்சி பிணியுடைய கோரப் பிடியிலே சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய விளை பொருட்களைக் காப்பாற்றுவதற்காக விவசாயிகள் அங்கே ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்க வேண்டியது இன்றைக்கு அத்தியாவசியமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. விவசாயிகளுடைய ஏரோட்டம் இருந்தால்தான் நாட்டிலே காரோட்டம் நடக்கும் என்று சொல்வார்கள். ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையிலே விவசாயிகளுடைய குறை தீர்க்கும் இந்த அரசு விவசாயிகள் ஆழ் குழாய்களை அமைக்க கடன்கள் அளிக்க மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு
அரசு கடனுதவி வழங்க இயலாது என்று குறிப்பிட்டேன்.
ஆனால் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் அந்த ஆழ்குழாய்
அமைப்பதற்குக் கடனுதவி சில இடங்களிலே வழங்கிக்
கொண்டு வந்திருக்கிறது. அதோடு மட்டுமல்லாது, வறட்சி
யின் காரணமாக நீரற்றுப் போன கிணறுகளில் பக்கவாட்டி
லும், செங்குத்தாகவும் குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு
அரசு வாடகை அடிப்படையில் மானியம் வழங்கி அங்க
யுள்ள விவசாயிகளுக்குப் பயன் தருகிற வகையில் திட்டங்
களைத் தீட்டி செயல்படுத்தி வருகிறது.

<u>திரு. வி.பி. சந்திரசேகர்:</u> மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இப்படிப்பட்ட நிலையிலே விவசாயிகள் தாமே
வந்து தங்களுடைய சொந்தச் செலவிலே ஆழ் குழாய் அமைக்
கின்ற நேரத்திலே அந்த ஆழ் குழாய்கள் அமைக்கின்ற இயந்
திரங்களைக் குறைந்த வாடகைக்கு அரசு கொடுக்க முன்
வருமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்</u> ; மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தனியாக விவசாயிகள் முன் வருகிறார்
கள் என்று சொன்னால் அவர்கள் சிறு விவசாயிகளாக இருந்
தால் அவர்களுக்கு இயந்திரங்கள் வாடகையில் 25 சத மானிய
மும், குறு விவசாயிகளுக்கு 33.93 என்ற சதவீத மானிய
விலையில் வாடகைக்கும் இந்து ஆதி திராவிட விவசாயி
களுக்கு 50 சதவீத மானியத்தில் வாடகை வழங்க அரசு முன்
வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : திரு.நா.சா. பழனி
சாமி.

<u>திரு.நா.சா. பழனிசாமி</u> : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, ஆழ் குழாய்க் கிணறுகள் அமைப்பதிலே
பிளாக், கிரே, கிரீன் என்று தண்ணீர்—நிலத்தடி நீர் அதிகமாக
இருக்கின்ற இடம்; குறைவாக இருக்கின்ற இடம், இல்லாத

இடம் என்று பிரித்து, அதன்அடிப்படையிலே ஆழ் குழாய்க் கிணறுகளுக்கு தண்ணீர் அதிகமாக இருக்கின்ற இடங்களிலே ஆழ் குழாய்க் கிணறுகள் அமைக்கக் கடன் வசதி செய்யப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலத்தடியிலே உள்ள நீர் மட்டம் மேல்போக்காக இருக்கும் என்று சொன்னால் அந்தப் பகுதியிலே ஆழ்குழாய்க் கிணறுகள் அமைப்பதற்கு அரசு அனுமதி தராது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்:</u> திருமதி அ. தி. சரஸ்வதி.

<u>திருமதி அ.தி. சரஸ்வதி</u> ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கக் கூடாது என மத்திய அரசு அறிவித்தது உண்மையா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்</u> ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்ந்து வறட்சிக்கு இலக்காகும் பகுதிகளில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கக் கூடாது என மத்திய அரசு தடை விதித்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கு உதாரணமாக, புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆழ்குழாய்க் கிணறுகள் அமைக்கக் கூடாது என்று மத்திய அரசு வலியுறுத்தி வருகிறது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> ; டாக்டர் மு. சீனியம்மாள்.

<u>டாக்டர் மு. சீனியம்மாள்</u> : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவிநாசி தொகுதியை மிகவும் பின் தங்கிய மாவட்டமாக அறிவித்த தமிழகத்தின் தீர்க்கதரிசி எங்களின் இதய தெய்வம் ......

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> ; பின் தங்கிய வட்டம் மாவட்டம் என்கிறீர்கள்.

<u>டாக்டர் மு. சீனியம்மாள்</u> : பின் தங்கிய வட்டமாக அறிவித்த மூன்று இலட்சம் மக்களின் இதய தெய்வம் டாக்டர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி கலந்த வணக்கங்களைப் பாதங்களிலே சமர்ப்பித்து, நிலத்தடி நீர் சுமார் 500 அடி ஆழத்திற்குப் போய் விட்டது. மிகவும் வறட்சியாகவுள்ள, அந்த விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற அவிநாசி தொகுதி மக்களுக்குக் கடன்

கொடுக்கின்ற வகையிலே, இந்த சைடு கிணறுகளுக்கும், மேல் நோக்கி வளைகின்ற அந்தக் குழாய்களுக்கும் மீண்டும் பரிசீலனை செய்து கடனுதவி வழங்க அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே இதற்கு பதில் குறிப்பிட்டிருக்கிறேன். ஏற்கனவே கட்டப்பட்டு வறண்டு போன கிணறுகளில் பக்க வாட்டிலும், செங்குத்தாவும துளை போட்டு கிணறுகளில் நீரூற்று பெருக்குவதற்கு கிணறுகளை வெடி வைத்து ஆழப்படுத்துவது போன்ற பணிகளுக்கு வாடகையில் இயந்திரங்களை வேளாண்மை பொறியியல்துறை வழங்குகிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10—25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 511, திருமதி ப. சரஸ்வதி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

511—

ஆடைகள் தயாரித்து வெளிநாட்டுக்கு அனுப்பும் அரசு நிறுவனம் உருவாக்குதல்.

*3789 திருமதி ப. சரஸ்வதி :

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தில் தையற் கலையை பயன்படுத்தி ஆடைகள் தயாரித்து வெளிநாட்டுக்கு அனுப்பும் அரசு நிறுவனம் உருவாக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தற்சமயம் இல்லை.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கேள், தனியார் நிறுவனங்கள் பல, எக்ஸ்போர்ட் குவாலிடி துணியில் ஆடைகளைத் தயாரித்து, வெளி நாடுகளுக்கு அனுப்பி, கொள்ளை லாபம் சம்பாதித்துக் கொண்டிருக்கின்றன. ஆயத்த ஆடைகளைத் தயாரிக்கும் நிறுவனத்தில் தற்போது மகளிர் சங்கத்தில், பள்ளிக் குழந்தைகளுக்கு மிகவும் அழகாக ஆடைகள் தைக்கும் திறமையான





பெண்களைப் பயன்படுத்தி, வெளிநாடுகளுக்கு 'எக்ஸ்போர்ட் குவாலிட்டி' துணிகளை வைத்து தைத்து அனுப்பினால், பெண்களுக்கு அதிக ஊதியம் கிடைக்கும் ; அன்னியச் செலாவணியும் நமக்குக் கிடைக்கும். பெண்களின் நலனுக்காகவே கால தேவனால் படைக்கப் பட்ட நமது இதய தெய்வம் புரட்சித் தலைவியின் அரசு கருணையுடன் இதைப் பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் மேம்பாட்டுத் திட்டங்களை மகளிர் மேம்பாட்டுக் கழகம் கவனிக்கிறது. மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தில் நம்முடைய தமிழகத்தில் மகளிரை முன்னேற்ற வேண்டும் என்கிற அடிப்படையில்' இந்த தையற் பயிற்சிகளை அரசு உதவித் தொகை கொடுத்து இலவசமாக அளிக்கிறது. அப்படி பயிற்சி அளிக்கப் பட்ட பெண்கள், கூட்டுறவு முறையில் வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யக் கூடிய வகையில் தொழில் நிறுவனங்களைத் தனியாகத் துவக்குவார்கள் என்று சொன்னால், அதற்கு மகளிர் மேம்பாட்டுக் கழகம் நிதியுதவி செய்யுமேயொழிய, வியாபார நோக்கோடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் நேரடியாக இதில் தலையிடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மகளிர் கூட்டுறவு நிறுவனம் உருவாக்கும் அனைத்துத் திறமைகளும், நம்முடைய பெண்களிடத்திலே இருந்தாலும், வெளிநாடுகளிலே 'ஏஜெண்ட்' பிடிப்பது, 'மார்க்கெட்டிங்' செய்வது, போன்ற உதவிகளை அரசு முன்நின்று செய்ய முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கான அனைத்து உதவிகளையும் செய்வதற்கு அரசு நிச்சயமாக பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா. எண். 512 திரு கே. செல்வராஜ், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

512—

கோயம்புத்தூரில் பால் தட்டுப்பாட்டைப் போக்க நடவடிக்கை.

*4346 திரு. கே. செல்வராஜ் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கோயம்புத்தூரில் இப்போது பால் தட்டுப்பாடு அதிகம் உள்ள காரணத்தால் பால் முறையாக விநியோகிக்க உடனே நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஆ) எப்போது முதல் தட்டுப்பாடு போக்கப்படும் ?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கோயம்புத்தூரில் பால் விநியோகம் முறையாக நடைபெற அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வரு கின்றன. கண்காணிப்புக் குழுக்களை அமைத்துப் பகலிலும் இரவிலும் பால் விநியோகம் செய்வது கண்காணிக்கப் பட்டு வருகிறது.

(ஆ) தற்பொழுது கோவை மாவட்டத்தில் நிலவி வரும் வறட்சி நீங்கி, பாலுற்பத்தி மற்றும் கொள்முதல் பெருகி யதும் இந்தத் தட்டுப்பாடு போக்கப்படும்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டப் பால் வழங்கும் ஒன்றியத் திற்கு, பால் வழங்கும் விவசாயிகளுக்கு முறையாக பணம் வழங்குவதில்லை. அதன் காரணமாக, விவசாயிகள் பாலைக் கொடுத்து, ஒருமாதம் அல்லது ஒன்றரை மாதங்கள் ஆகியும் கூட, பணம் தராததால், தனியாருடைய பால் பூத்களுக்கு விற்று விடுகிறார்கள். ஆதலால் பால் தட்டுப்பாடு ஏற்படு கிறது. இரண்டாவதாக, பால் விநியோகிக்கும் மையங்களில் பணியாற்றுகிறவர்கள், முந்தைய தி.மு.க. ஆட்சியில் நிய மிக்கப் பட்டவர்கள். அவர்கள் அங்கு வாங்கும் பாலை, தனியாருக்கும். மோட்டல்களுக்கும் ஒரு லிட்டருக்கு ஒரு ரூபாய், 2 ரூபாய் என அதிகப்படுத்தி விற்றுவிடுவதாலும், பால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதை அரசு அறியுமா ? நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நான் பொறுப்பேற்ற போது, 10 கோடி ரூபாய் கொடுத்து, விவசாயிகளுக்கு அது பட்டுவாடா செய்யப் பட்டிருக்கிறது. இது போன்ற குறை இதுவரையில் இல்லை என்று நினைக்கிறேன். இப்படிப்பட்ட குறை இருக்குமானால், உறுப்பினர் அவர்கள், என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தால் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. செல்வராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு மூன்று முறை கடிதங்களாகக் கொடுத்தும் நான் அந்தப் பால் வழங்கும் ஒன்றியத்தினுடைய நிர்வாக இயக்குநரைச் சந்தித்துப் பேசியும்கூட, இதுவரை எந்த



விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே துரிதமான நடவடிக்கை எடுக்க, நான் நேரில் வந்து அந்தப் பெயர்களைக் கொடுக்க உறுதியாக இருக்கிறேன். நட வடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன் : மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே, உறுதியாக நடவடிக்கை எடுக்கப் படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 513, திரு. ஆர். சிங்காரம்—மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

513—

## குத்து விளக்கு உற்பத்தி செய்வோருக்கு நியாயவிலை கிடைக்க நடவடிக்கை

*668 திரு. ஆர். சிங்காரம் :

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் ஒன்றியம் நாச்சியார் கோவிலில் குத்து விளக்கு உற்பத்தி செய்வோர்க்கு நியாய விலை கிடைக்கவும் கொள்முதல் வசதி செய்து கொடுத்து, அவர்களை நலிவடையாமல் பாதுகாத்திடவும் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம், கோடிக் கணக்கான ஏழை, எளிய மக்களின் வாழ் வில் ஒளியேற்ற வேண்டுமென்ற கருணையுள்ளம் கொண்ட தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் அரசு, குத்து விளக்குத் தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டிருக் கும் தொழிலாளர்களுக்கு நியாயமான விலையில் மூலப் பொருட்களைக் கொடுத்து அவர்கள் தயாரிக்கிற அந்தக் குத்துவிளக்குகளை நியாயமான விலையில் வாங்கி, விற்பனை செய்து வருகிறது.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் அளித்த விடைக்கு என்னுடைய இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் அதேநேரத்தில் அதற்கான விளக்கங்களையும் அமைச்சர் அவர்கள் அளிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன். எந்த ஒரு திறப்பு விழாவானாலும் கிரஹப் பிரவேசமானாலும்,

[1992 எப்ரல் 8

முதலிலே பயன்படுத்துவது குத்து விளக்குத்தான். அதை
ஏற்றி வைத்துதான் விழா தொடங்கப்படுகிறது. மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, தமிழகத்தையே ஒளி
யூட்ட, குத்து விளக்கு ஏற்றி வைத்து, ஒளி விளக்காய்ப் பிரகா
சித்துக் கொண்டிருக்கும் டாக்டர் புரட்சித் தலைவி அவர்
களுடைய ஆட்சிக் காலந்தில் (மேசையத் தட்டும் ஒலி) நமது
அரசு நாச்சியாராக புரட்சிகரமாகச் செயல்படுகிற டாக்டர்
புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில், குத்து
விளக்கு உற்பத்தியாளர்களின் வாழ்க்கையில் குத்து விளக்கு
ஏற்றி வைப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்
அதனுடய முழு விளக்கத்தையும் அமைச்சர் அவர்கள்
அறிவிப்பாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விடுத்த
வினாவின்படி, தஞ்சை மாவட்டம் திருவிடைமருதூர்
ஒன்றியம் நாச்சியார்கோவில் என்ற பகுதியில் தமிழக அரசின்
பொது நிறுவனமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின்
குத்துவிளக்கு தயாரிக்கும் தொழிற்கூடம் ஏழை எளிய
தொழிளாளர்களுக்காக அவர்கள் தயாரிக்கின்ற குத்து
விளக்கிற்கான மூலப்பொருள்களை.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள்
நேரம் இந்த விடை முடியும்வரை நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: நியாயமான விலையில்
மூலப் பொருள்களை அவர்களுக்கு உரிய நேரத்தில் கொடுத்து,
தமிழகத்தில் உள்ள ஏழை எளியவர்களின் இல்லங்களில் ஒளி
ஏற்றுகின்ற வகையில் அந்த குத்துவிளக்குகளை நியாயமான
விலையில் பெற்று அந்த நிறுவனமே விற்பனை செய்து
வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள்
நேரம் முடிவுற்றது.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி
இடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்
பெற்றது என்பதைக் குறிக்கும்.)



1992 எப்ரல் 8]

## 2. ஆஸ்கார் விருதுபெற்ற திரைப்படத் தயாரிப்பாளர், இயக்குநர், திரு. சத்யஜித் ரேக்கு அவையின் சார்பில் முதலமைச்சர் பாராட்டுரைகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தியத் திருநாட்டிற்
குப் புகழும் பெருமையும் சேர்க்கிற வகையில் திரைப்பட
இயக்குநர் திரு. சத்தியஜித் ரே அவர்களுக்கு உலகப் புகழ்
மிக்க விருது கிடைத்தமை பற்றி இப்பேரவையில் தன்
னுடைய வாழ்த்துக்களை, பாராட்டுக்களைத் தெரிவிக்க வேண்டு
மென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே விருப்பம் தெரி
வித்திருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி). அத்தகைய
சிறப்புக்குரிய பெருமகனைப் பாராட்டுவதற்குரிய எல்லாச் சிறப்பு
களையும் புகழையும் பெற்ற புரட்சித் தலைவி அவர்களே இதை
அவையில் விளக்கவேண்டுமென்று அனுமதி கோரியிருக்கிறார்கள்.
அவர்கள் இப்போது தன்னுடைய பாராட்டுக்களை அவையின்
சார்பில் அவர்களுக்குத் தெரிவிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10–30

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திரைப்பட மறு
மலர்ச்சிக்கு வித்திட்டு தான் வாழும் காலத்திலேயே ஒரு
சகாப்தத்தை உருவாக்கிய பெருமை திரைப்படத் தயாரிப்
பாளர், இயக்குநர், திரு. சத்தியஜித் ரே அவர்களேயே சாரும்.
தன்னுடைய 40 ஆண்டு காலத் திரைப்பட அனுபவத்தின்
மூலம், இந்தியத் திரைப்படச் சரித்திரத்தில் ஒரு இமாலய
சாதனையைப் படைத்தவர் அவர். பழமையிலே ஊறிப்
போயிருந்த இந்தியத் திரைப்படத் துறைக்கு தனது புரட்சி
கரமான திரைப்படங்களால் புத்துணர்வையும் புதிய எழுச்
சியையும் கொடுத்து, நம் நாட்டில் திரைப்படத் துறையின்
வளர்ச்சிக்குப் புதிய பரிமாணங்களை வழங்கியவர். வாழ்க்
கையில் நடைபெறும் சாதாரண நிகழ்ச்சிகளைக்கூட, கலை
நுட்பத்தோடு சித்தரித்து திரை உலகில் தனக்கென ஒரு
உயர்ந்த இடத்தைப் பிடித்தவர். திரைத் துறையைச்
சார்ந்த பல்வேறு பிரிவுகளில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு
வெற்றியின் எல்லைக்குள் நிகழ்த்திய சாதனைகள் திரைப்
பட உலகினர் என்றென்றும் கற்று உணர வேண்டிய கலைக்
களஞ்சியம் ஆகும். தன்னுடைய முதல் படமான 'பதர்'
பாஞ்சாலி' முதல், விரைவில் வெளியிடப்படவுள்ள அகாண்
டக்' படம் வரை, பல்வேறு திரைக்காவியங்களை உருவாக்கி
தனது தனித் தன்மையை அனைத்திலும் பதித்து, திரைத்
துறையின் திறனாய்வாளர்களின் கற்பனைக்கும் எட்டாத
அளவுக்கு வெற்றி வாகை சூடிய விற்பன்னர் அவர். திரைப்

[டாக்டர் ஜெ. ஜெயலலிதா] [1992 ஏப்ரல் 8

பட உலகில் அவர் புரிந்துள்ள மகத்தான சாதனைகளால்
இன்று திரைப்படத் துறையின் வளர்ச்சியைத் திறனாய்வு
செய்பவர்கள், சத்யஜித் ரே-வுக்கு முன், பின், என்று இரு
கால கட்டங்களாக பிரித்து ஆய்வு செய்யும் அளவுக்கு அவர்
உயர்ந்து விளங்குகிறார். திரை உலகில் நம்பிக்கையோடு
நுழையும் ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு இவரது அனு
பவம் ஒரு அகராதி. இந்திய நாட்டின் கலை உலகப் பெருமை
களை முதன்முதலாக உலக அளவில் அறிமுகப்படுத்திய
பெருமையும், சிறப்பும் திரு. சத்தியஜித் ரே அவர்களையே
சாரும். தனது திரை உலக அனுபவத்தால் விரிந்து, பரந்து
ஆலமரமாக வியாபித்து புதியவர்களுக்குப் புகலிடம் கொடுக்கும்
நிழலாகவும், திரை உலகில் ஏற்கெனவே தன்னை ஈடுபடுத்திக்
கொண்டவர்களுக்கு வழிகாட்டியாகவும் வாழ்ந்து வருகிறார்.
திரு. சத்யஜித் ரே அவர்கள் திரைப்படத் துறைக்கு மட்டுமே
சொந்தமானவர் அல்லர். தான் ஈடுபட்ட துறைகளில் எல்லாம்
தலைசிறந்து விளங்கியதோடு மட்டுமல்லாமல், தனக்கே உரித்
தான முத்திரையையும் அவற்றில் அவர் பதித்தார். அவர்
குழந்தைகளுக்காக எழுதிய வங்க மொழி நூல்கள் மேற்கு
வங்கத்தில் மிகவும் பிரசித்திபெற்றவை. அவர் ஓவியத்திலும்,
இசையிலும், சிற்பக் கலையிலும் தனது புகழ் முத்திரையைப்
பதித்தவர். இவ்வாறு பல்வேறு சிறப்புகளைப் பெற்று பல்துறை
விற்பன்னராகத் திகழும் திரு. சத்யஜித் ரே அவர்களுக்கு அண்
மையில் இந்திய அரசு, நமது நாட்டின் மிகப் பெரிய விரு
தான பாரத ரத்னா விருதினை வழங்கிச் சிறப்பித்துள்ளது.
தற்போது American Academy of Motion Pictures Arts and Sciences
என்ற அமைப்பு, திரை உலகின் மிக உயர்ந்த அரிய விருதான
ஆஸ்கார் அவார்டை திரைப்படத் துறையில் அவர் வாழ்
நாள் முழுவதும் புரிந்த சாதனைகளுக்காக திரு. சத்யஜித் ரே
அவர்களுக்கு வழங்கிச் சிறப்பித்துள்ளது. இந்த விருதினைப்
பெறும் முதல் இந்தியரும் இவரே. இந்த விருது தொடங்கப்
பட்ட நாள் முதல், கடந்த 80 ஆண்டுக்கால வரலாற்றில்
உலகிலேயே இவரையும் சேர்த்து 6 சான்றோர்களுக்குத்தான்
இந்த உயர்ந்த விருதினைப் பெறுகிற பெருமை கிடைத்துள்
ளது. இந்த வரிசையில் திரு. சத்யஜித் ரே அவர்கள் இடம்
பெற்று நமது நாட்டின் பெயரையும், புகழையும் உலக அள
வில் உயர்த்தி உள்ளார். இந்த விருதினைப் பெற்றமைக்காக
அவரைப் பாராட்டிப் பெருமை அடைவது ஒவ்வொரு இந்தி
யரின் கடமையாகும்.

முற்பகல் 10-35

திரு. சத்யஜித் ரே அவர்களுக்குக் கிடைத்துள்ள இந்த அரிய
பெருமையினைப் பாராட்ட நமது மாமன்றமும் மகிழ்ச்சி
யோடு முன்வந்துள்ளது. அந்த வகையில் இந்த மாமன்றத்தின்



1992 ஏப்ரல் 8] [டாக்டர் ஜெ. ஜெயலலிதா]

அனைத்து உறுப்பினர்களும் தங்களது வாழ்த்துரைகளையும்,
பாராட்டுதல்களையும் திரு. சத்யஜித் ரே அவர்களுக்குத் தெரி
வித்துக் கொள்வதுடன், தற்போது உடல்நலம் குன்றி இருக்
கும் அவர் விரைவில் பூரண குணம் அடைந்து இன்னும் பல்
லாண்டு காலம் வாழ்ந்து மென்மேலும் பல பெருமைகளைப்
பெற்று இந்தியத் திரை உலகிற்கும், இந்தியத் திருநாட்டிற்
கும் பல சிறப்புகளைச் சேர்க்கவேண்டுமென்று உளமார
வாழ்த்துகிறது, என்ற செய்தி பேரவையின் சார்பாக
திரு சத்யஜித் ரே அவர்களுக்குத் தெரிவிக்கப்படவேண்டுமென்று
கேட்டுக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி),

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்
சர் அவர்களுடைய உணர்வுகளோடு இந்தப் பேரவையும்
தன்னை இணைத்துக்கொள்வதில் உண்மையிலேயே பெரு
மகிழ்ச்சி அடைகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு இந்தியனும் தலைநிமிர்ந்து நிற்கக்கூடிய சாத
னையைப் புரிந்து ஆஸ்கார் விருது பெறுகிற முதல் இந்தியர்
என்கிற பெருமையைப் பெற்றிருக்கிற பெருமைக்குரிய திரு.
சத்யஜித் ரே அவர்களைப் பாராட்டுவதில், இந்தப் பேரவை
யின் ஒவ்வொரு உறுப்பினரும் மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் தெரிவித்ததைப் போல் ஒவ்வொரு இந்தியனும் பெரு
மைப்படுகிற அந்த சகாப்த நாயகனைப் பாராட்டுவதில் தங்
களையும் இணைத்துக்கொள்கிற வகையில் மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் கோரியபடி இந்தப் பேரவை தன்னு
டைய பாராட்டுக்களை, வாழ்த்துக்களை மகிழ்ச்சியுடன் புகழ்
பெற்ற இயக்குநர் திரு. சத்யஜித் ரே அவர்களுக்குத் தெரிவிக்
கிறது என்பதைத் தெரிவித்து அவர் விரைவில் பூரண குணம்
அடைந்து இன்னும் பல்வேறு சாதனைகளை இந்தியத் திரு
நாட்டில் நிகழ்த்திட வேண்டும் என்ற வாழ்த்துக்களையும் தெரி
வித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்த அந்
தப் பாராட்டுரை அவையின் சார்பில் திருமிகு சத்யஜித் ரே
அவர்களுக்குத் தெரிவிக்கப்படுகிறது என்பதை மகிழ்ச்சியோடு
தெரிவித்துக்கொள்கிறேன்.

[1992 ஏப்ரல் 8

## 3. உரிமைப் பிரச்சினை

பெண் உறுப்பினர்கள், பேரவைத் தலைவர் ஆகியோரின் அவை நடவடிக்கைகள் பற்றி அருவருக்கத்தக்க தரக் குறைவான வகையிலும், பேரவை நிகழ்ச்சிகளைக் கொச்சைப்படுத்தும் வகையிலும் தி.மு.க. பேச்சாளர் வெற்றிகொண்டான் வெளியே பேசியுள்ளது குறித்து :

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்து அவை உரிமை
மீறல் பிரச்சினை. மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி. ஏ.
எஸ். பொன்னம்மாள் மற்றும் திரு. பி.வி. சந்திரசேகர் ஆகி
யோர் அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்து அவையில்
எழுப்ப அனுமதி கோரி அறிவிப்புக்களைக் கொடுத்துள்ளார்
கள். இந்த அவையின் மாண்புமிகு பெண் உறுப்பினர்கள்
பற்றி வெளியில் ஒருவர் தெரிவித்திருக்கிற தகாத கருத்துகள்
உரிமைக் குழுவுக்கு அனுப்பப்பட்டு, கண்டிக்கப்பட வேண்டும்
என்று அவையின் மூத்த பெண் உறுப்பினரான திருமதி. ஏ.
எஸ். பொன்னம்மாள் அவர்களும், பேரவைத் தலைவரையே
இழிவுபடுத்தி, கொச்சைப்படுத்துகிற வகையில் வெளியிடு
கிற அத்தகைய பேச்சுக்களை ஒருவர் பகிரங்கமாகப் பேசி
இருக்கிறார்; அதன்மீது தக்க நடவடிக்கை எடுத்திட உரிமைக்
குழுவிற்கு அனுப்ப வேண்டும் என்று திரு. வி.பி. சந்திரசேகர்
அவர்களும் இந்தப் பேரவையில் எழுப்புவதற்கு என்னுடைய
அனுமதியை கோரியுள்ளார்கள். இந்தப் பிரச்சினையை எழுப்பு
வதற்கு அவர்களுக்கு அனுமதி அளிக்கிறேன். இந்தப் பிரச்
சினை எவ்வாறு அவை உரிமையை மீறியதாகும் என்று மிகச்
சுருக்கமாக விளக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். திருமதி
ஏ.எஸ். பொன்னம்மாள்.

முற்பகல் 10—40

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை விதி 220-ன்கீழ் கீழ்க்கண்ட உரிமை மீறல் பிரச்சினையை அவையில் எழுப்ப அனுமதி கோருகிறேன்.

சமீபத்தில் நடைபெற்ற திராவிட முன்னேற்றக் கழகப் பொதுக்கூட்டம் ஒன்றில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முக்கிய பேச்சாளரான வெற்றிகொண்டான், பேரவைக்கு மாசு கற்பிக்கும் வகையில் பேரவை பெண் உறுப்பினர்களின் அவை நடவடிக்கைகளுக்கு களங்கம் கற்பிக்கும் வகையிலே கொச்சை யாகவும் அருவருக்கத் தக்க வகையிலே பேசியது பற்றி இம்மாமன்றத்திற்கு நான் விளக்க விரும்புகிறேன்.

இந்த விஷயத்திலே சொல்வதற்கு முன்பாகக் கூட— மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி அளிக்க வேண்டும்—அன்றைய தினம் இந்த பேப்பர் கையிலே இல்லாத காரணத்தினாலே சொல்கிறேன். நான் அன்றைக்கு



*1992 ஏப்ரல் 8]* *[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]*

1989-ஆம் ஆண்டு, 25-ஆந் தேதி ஒரு பெண் உறுப்பினர் இந்த எதிர்க்கட்சியினுடைய தலைவராக இந்த மன்றத்திற்கு வந்தார்கள். முதன் முதலாக ஒரு பெண் உறுப்பினர் எதிர்க்கட்சித் தலைவராக வந்து அமர்ந்து இருக்கின்ற அந்த நேரத்திலே, முன்னாள் முதல்வர் கருணாநிதி பட்ஜெட் உரையை ஆரம்பித்தார்கள். அப்போது ஒரு உரிமைப் பிரச்சினை. அதைத் தான் எழுப்பினார். வேறு ஒன்றுமே இல்லை. அவர் என்ன சொல்லியிருக்க வேண்டும். இதை நாளை மறுநாள் எடுத்துக் கொள்ளலாம் என்று சொல்லியிருக்கலாம். அதை விட்டுவிட்டு இப்படி திரும்பினார்கள். அங்கே நின்று இப்படி திரும்பிய உடனே அன்றைக்கு ஒரு 30 பேர்களுக்கு மேல் இருக்கும், ஒருவர் இருவர் அல்ல. 30 பேர்களுக்கு மேல் இருக்கும். அந்த அமைச்சர்கள் எல்லாம், வேஷ்டியைத் தூக்கிக் கட்டிக் கொண்டு வந்து, ஏறிக் குதித்து வந்து, இதையெல்லாம் பிடுங்கி, மேஜைமேல் உள்ள மைக்கை பிடுங்கி, ஓடி வந்து ஒரு பெண்ணை மானபங்கப்படுத்தினார்கள். இந்த சேலை இருக்கிறதே, இப்படிப் பிடித்து இழுத்து சின்னாபின்னம் ஆக்கினார்கள். இந்த முடி இருக்கிறதே, நல்ல வேளை, சொந்த முடி, இந்த முடியைப் பிடித்து பிய்த்தார்கள். அது மாத்திரம் அல்ல. இந்தக் கன்னத்தைப் பிடித்துக் கிள்ளி, அதெல்லாம் ரத்தக் காயம் ஏற்பட்டது. இங்கேயெல்லாம் காயம், இங்கேயெல்லாம் காயம். இப்படிப்பட்ட கொடுமையைச் செய்யும் போதுதான் இங்கே இருந்த நம்முடைய செங்கோட்டையன் அவர்கள், நம்முடைய இராமச்சந்திரன் அவர்கள், நம்முடைய திருநாவுக்கரசு அவர்கள்—அடி அவர்கள் மீது நிறைய விழுந்தது.

இதற்கெல்லாம் மேலாக மூப்பனார் அன்றைய தினம் இல்லாவிட்டால் — கருணாநிதி மூப்பனாரைப் பார்த்து கும்பிட்டார், 'நீங்கள் வெளியிலே போய்விடுங்கள்' நீங்கள் வெளியிலே போய்விடுங்கள், என்று இப்படி கும்பிட்டு கும்பிட்டு, கையெடுத்துக் கும்பிட்டு, நீங்கள் வெளியிலே போங்கள் என்று மிகவும் அவர்களிடத்திலே மன்றாடிக் கேட்டுக் கொண்டார். அன்றைக்கு அவர் இல்லாமல் இருந்திருப்பார்களானால், இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இன்றைக்கு மக்களாலே வியக்கக்கூடிய அளவிலே பல காரியங்களைத் தன்னுடைய ஆற்றல் திறமையால் செய்து கொண்டு வருகிறார்களே, அதை மாற்றி, அன்றைக்கே இந்த சட்டமன்றத்திலே கொன்று, — மருந்தைச் சாப்பிட்டுவிட்டு வந்து எங்கள் மீது பழிபோட இந்த அம்மாள் வந்துவிட்டார்கள்—என்று மிகப்பெரிய பழியைச் சுமத்தியிருப்பார்கள். அந்த அளவிற்கு கொலை செய்வதற்கு எத்தனித்து, அன்றைய தினம் நாம் மத்திய அரசிடம் சொல்லி அந்த கட்சியையே 'பேன்' பண்ணி இருக்க வேண்டும். அதைச் செய்யாததன் விளைவாகத்தான் இன்றைக்கு இவையெல்லாம் நடந்திருக்கிறது. எனக்கு 25 வயது முடியவில்லை, நான் பள்ளிக்கூடத்திலே

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1992 ஏப்ரல் 8

மாணவியாக இருக்கின்றபோதே சட்டமன்றத்திற்கு வந்திருக்கி
றேன். இன்றைக்கு இங்கே வந்திருக்கின்றவர்கள் எல்லாம்,
சட்டமன்றத்திலே வந்து இருக்கின்றார்களே பெண்கள்,  அவர்
கள் எல்லாம் தெருவிலே திரிந்தவர்களா? அவர்களைப் பற்றி
அருவருக்கத்தக்க அளவிலே மிகவும் கன்னா பின்னா என்
றெல்லாம் எழுதி, அசிங்கப்படுத்தக் கூடிய அளவிலே அவர்கள்
மேடையிலே பேசி — இங்கே வந்திருப்பவர்கள் பல பேர்கள்
டாக்டர்களாக இருக்கின்றார்கள். இங்கே வந்திருக்கின்ற
எம்.எல்.ஏக்கள் பலபேர் பேராசிரியர்களாக இருந்திருக்கின்றார்
கள். பலபேர்கள் இங்கே வக்கீல்களாக பணியாற்றக் கூடிய
அந்த திறமை வாய்ந்த இளம் பெண்கள் இருக்கின்றார்கள்,
அவர்களை அவதூறாக, ஒரு வெற்றிகொண்டான், திரா
விட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒரு உறுப்பினர்,
திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த ஒரு
அங்கத்தினர், எம்.எல்.ஏ. இல்லை, வெளியிலே அருவருக்கத்
தக்க அளவிலே கொச்சையாக பேசியிருக்கின்றார்கள். நான்
பட்டிக்காட்டிலே பிறந்தவள். பட்டிக்காட்டிலே கூட இவ்வ
ளவு அருவருக்கத்தக்க வார்த்தைகளை சொல்லி யாருமே பேசி
யதை நான் கேட்டதில்லை. அன்றைய தினம் இங்கே சட்ட
மன்றத்திலே 25-ஆம் தேதி நடந்ததே, முன்னாள் முதல்வர்
கருணாநிதி வாயிலே இருந்து வந்த வார்த்தைகளை எல்லாம்
கேட்டு நான் அழுதேன். அவ்வளவு கொடூரமாக கேவலமாக,
கெட்ட வார்த்தைகளை பேசிய இவர்கள், இன்றைக்கு
'எப்படியடா, இந்த அம்மாள் வந்து முதல்வராக இங்கே
வேலை செய்கிறார்களே, இவர்களுக்கு இந்த திறமை
எப்படி வந்தது? இப்படி பிறரால் பாராட்டக்கூடிய
அளவிலே எல்லா விஷயத்திலும் செய்கின்றார்கள். இந்த
அமைச்சர்களை எல்லாம் அழைத்து இந்த சப்ஜெக்ட் என்ன?
இதை எப்படி ...ல் செய்வது? இதிலே உள்ள குறைபாடுகள்
என்ன? இதை எப்படி நிவர்த்தி செய்வது, என்று மனு கொடுப்
பது போன்று அவர்கள் அந்த அதிகாரிகளை வைத்து, அவர்
களையெல்லாம் அழைத்து வைத்து பேசிய காரணத்தினா
லேயே இன்று ஒவ்வொரு துறையிலும், ஒவ்வொரு அமைச்சரும்
இன்றைக்கு சிறப்பான முறையிலே பணியாற்றக்கூடிய ஒரு
நிலைமை ஏற்பட்ட காரணத்தினாலே தமிழகத்து மக்கள்
இப்படிக்கூட ஒரு முதல்வர் இருக்கிறார்களா என்று வியக்கக்
கூடிய அளவிலே இருக்கக்கூடிய இந்த சூழ்நிலையிலே இதை
மாற்றியாக வேண்டும், இவர்களை எப்படியாவது அவமானப்
படுத்தவேண்டும் என்று இந்தப் பெண்களைப் பற்றி ஆபாச
மான வார்த்தைகளிலே — இங்கே இதைப் படிக்க நான்
விரும்பவில்லை — ஏனென்றால் எங்களுக்கெல்லாம் நாகூசு
கின்றது. எனக்கெல்லாம் இதைப் பார்க்கின்றபோது கண்ணே
தெரியாமல்கூட போய்விடும். இவ்வளவு கேவலமான முறை
யிலே பொதுக்கூட்டத்திலே பேசுவார்கள். ஆனால், இதை
வெளியிலே தானே பேசுகிறார்கள் என்று தயவு செய்து மாண்பு
மிகு தலைவர் அவர்கள் விட்டுவிடக் கூடாது.



1992 ஏப்ரல் 8] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

முற்பகல் 10-45

இதை உரிமைக் குழுவுக்கு அனுப்ப முடிந்தால் நல்லது.
இப்பேர்ப்பட்ட பெண்கள் எல்லாம் ஒரு காலத்திலே மகாத்மா
காந்தி அவர்களுடைய தலைமையிலே நவகாளியில் சுதந்திரப்
போராட்டத்திற்கு முன்பு பெண்களை எல்லாம் வெட்டித்
தள்ளினார்கள், பிணக்குவியலின் மத்தியில் செல்வதற்கு காந்தி
யாரை அனுப்பினார்? சுசீலா நய்யார் என்ற ஒரு பெண்மணியை
அனுப்பினார். அவர்கள் அந்தப் பிணங்களின் மேலே தாண்டித்
தாண்டிப் போனார்கள். நான் அந்தப் புத்தகத்தைப் படித்
திருக்கிறேன். பிணக் குவியலை இழுத்துப் போட்டுவிட்டு
தாண்டித் தாண்டி போய் அந்தக் கலவரத்தை அடக்கக்கூடிய
ஒரு மிகப் பெரிய தைரியசாலி என்று பெயர் பெற்றார்கள்.
அப்பேர்ப்பட்ட இந்திய நாட்டிலே மகாத்மா காந்தி வாங்கிக்
கொடுத்த சுதந்திர நாட்டிலே நாம் வெள்ளையனை வெளி
யேற்றிய பிறகு பெண்களுக்கும் சம உரிமை வேண்டுமென்று
காங்கிரசிலே தீர்மானம் போட்டார்கள். அதாவது 15 சத
விகிதம் வேண்டுமென்று. ஆதலால்தான் என்னைப் போன்ற
வர்கள் எல்லாம், டைப்ரைட்டிங் படித்துக் கொண்டிருக்கும்
போதே, தேடிப் பிடித்துக் கொண்டு வந்து சட்டமன்றத்
தேர்தலில் என்னை நிறுத்தினார்கள். எங்கெங்கோ தேடினார்கள்
நான் மாட்டேன் என்றேன், பயந்து போனேன். சபையை
பார்க்கும்போது பயமாக இருந்தது, நான் மாட்டேன் என்று
சொன்னேன். எங்களைப் போன்றவர்கள் எல்லாம் வந்த
தால் மக்களுக்குத் தொண்டு செய்ய வாய்ப்பு கிடைத்திருக்
கிறது. பெருமையோடு நான் பணியாற்றிக் கொண்டிருக்கி
றேன். அந்த அளவுக்கு இருக்கிற பெண்களைப் பற்றி இவ்வ
ளவு கீழ்த்தரமாகவும், மட்டமாகவும் பேசிய அந்த நப
ருக்கு எவ்வளவு கடுமையான தண்டனை கொடுக்க முடி
யுமோ அந்த அளவுக்குக் கொடுக்க இந்த உரிமைக் குழுவுக்கு
அனுப்ப வேண்டும். கடுமையாக தண்டனைக் கொடுப்பதோடு
முடிந்தால் இந்த திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கிறதே
பெண்களைக் கேவலமாக நடத்தக் கூடிய திராவிட முன்னேற்
றக் கழகத்தை 'பேன்' பண்ணுவதற்கு வழி இருக்கிறதா என்
பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) ஆராய வேண்டுமென்று
நான் கூறிக் கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, எனக்கு வந்த அந்த கேசட்டை போட்டுப் பாருங்
கள். எனக்கு அதைப் பற்றித் தெரியாது, ஆனால் அங்கே
இருந்த மக்கள், பெண்கள் மீது அக்கறைக் கொண்டவர்கள்
எனக்கு அனுப்பிய குறிப்பை இதோ எடுத்து வந்திருக்கிறேன்.
என்னிடத்தில் கொண்டு வந்து கொடுத்தார்கள். அதுபோல
அந்த ரெக்கார்டட் கேசட் இருக்கிறதே, அதன் கடைசியில்
என்ன இருக்கிறது என்று 3, 4 ஆம் பக்கங்களில் இருக்கிறது.
இப்படிப் பேசுவதற்கு அனுமதிப்போமானால் இந்த நாட்டி
னுடைய நிலைமை எங்கே போகும் என்பதை மாண்புமிகு
உறுப்பினர்கள் அனைவரும் யோசனை செய்து பார்க்க
வேண்டும்.

[1992 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்
அதில் என்ன வாசகங்கள் இருக்கின்றன என்று என்னிடம்
கொடுத்திருக்கிறார்கள். நான் அவர்களைக் கேட்டுக் கொண்
டேன், இந்த அவையினுடைய கண்ணியத்தை அவர்கள்
கெடுத்ததுபோல நாம் கெடுத்துவிட வேண்டாம், அந்த வார்த்
தைகளை மட்டும் சொல்ல வேண்டாம், அவ்வளவு மோசமான
வார்த்தைகள் இருக்கின்றன. கேசட் இருக்கிறது என்பதை
நீங்கள் காண்பித்தநாலே அவை உறுப்பினர்கள் புரிந்து கொள்
வார்கள் என்று கேட்டுக் கொண்டதற்கு இணங்க அந்த வார்த்
தைகளை எல்லாம் அவர் சொல்லவில்லை. அந்த வார்த்தை
களை எல்லாம் சொன்னால் இந்த அவையினுடைய கண்ணி
யத்தை நாமே குறைத்து மதிப்பிடுகிறோமோ என்பதுபோல
இருக்கும். அந்த அளவுக்கு மோசமான வார்த்தைகள்
என்பதையும் அவை உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக் கொள்கி
றேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, தாங்கள் பெண்களுக்குப் பாதுகாப்புக்
கொடுக்க வேண்டும். பெண்கள் இல்லையென்றால் ஆண்கள்
இல்லை. பெண்கள் இல்லையென்றால் இந்த உலகம் இல்லை.
(மேசையைத் தட்டும் ஒலி) இதை ஞாபகத்தில் வைத்து பெண்
களுக்கு முழுமையான பாதுகாப்பைக் கொடுத்து, இன்றைக்கு
அதற்கு என்ன தண்டனை வழங்க வேண்டுமோ அதற்கு
வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்த
பெண்களின் சார்பிலே கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: 31 பேர் இருக்கி
றோம் என்ற ஒரு எரிச்சல். முன்பு இவ்வளவு பேர் வந்தது
இல்லை.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்: அதோடு இப்போது என்ன
ஒரு பொறாமை. முன்பு ஒன்றிரண்டு பேர் இருந்தோம்.
காங்கிரசிலே 13 பேர். அந்த சைடிலே உட்கார்ந்திருந்தோம்.
இன்றைய முதல்வரையே, ஜெயலலிதா என்ற பெண்மணி
இந்த சட்டமன்றத்தில் இருக்கக் கூடாது என்று செய்த கொடு
மையின் காரணமாக அவர்கள் 25 பேரை நிறுத்தினார்கள்.
25 பேரும் வெற்றி பெற்றார்கள். இன்றைக்கு நீங்கள் 25
பேர், நாங்கள் 5 பேர் மற்றும் நாமினேசன் ஒருவர், ஆக
31 பெண் அங்கத்தினர்கள் இங்கே உட்கார்ந்திருக்கிறோம்.
அடுத்தாற்போலும், இந்தத் தலைவி வந்து மீண்டும்
ஈக்வலாக (மேசையைத் தட்டும் ஒலி) வந்து விடுவார்
கள் என்று இங்கே இருந்த முன்னாள் முதல்வர் ராஜிநாமா
செய்துவிட்டு போய்விட்டார். அதற்குக் காரணம் என்ன? அன்
றைய தினம் ஒரு பெண்ணை 30 ஆண்கள் அடித்து சின்னா
பின்னமாக்கி, சீரழித்தோமே, இன்றைய தினம் அதற்காகத்



1992 ஏப்ரல் 8] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

தானோ என்னமோ இப்படி இத்தனை பெண்கள் வந்திருக்கிறார்கள், இந்தப் பெண்கள் எல்லாம் சேர்ந்தால் என்ன ஆகுமோ என்று பயந்து அவர்கள் ராஜிநாமா செய்திருக்கிறார்கள் என்று கருதுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகையினால் இன்றைக்கு இந்த 31 பெண்கள் மட்டுமல்ல, பொது வாழ்வில் வரக்கூடிய பெண்களுக்கு மாசு கற்பிக்கக் கூடிய அளவிலே, தொண்டு செய்யக்கூடிய பெண்களுக்கு ஒரு இழுக்கு ஏற்படக் கூடிய அளவிலே இன்றைக்கு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த தொண்டன் பேசியிருக்கிறான் என்றால் அதற்கு கடுமையான தண்டனை என்ன வேண்டுமோ அதை அளிப்பதற்கு இதை உரிமைக் குழுவுக்கு அனுப்ப வேண்டுமென்று நான் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டு எனக்கு வந்த கேசட்டையும், பேப்பரையும் அவர்களிடம் கொடுக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. பி. சந்திரசேகர்.

முற்பகல் 10-50

திரு. வி.பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 220-ன் கீழ் உரிமை மீறல் பிரச்சினை எழுப்ப அனுமதி வேண்டுகிறேன். கடந்த 30—3—92 திங்கட்கிழமை இரவு என்னுடைய நண்பர் ஒருவரைப் பார்ப்பதற்காக அடையாறு பகுதிக்குச் சென்றிருந்தபோது அங்கே காமராஜ் அவென்யூ என்கின்ற இடத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய பொதுக் கூட்டம் நடந்து கொண்டிருந்தது. கூட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முக்கிய மேடைப் பேச்சாளர்களிலே ஒருவராகிய வெற்றிகொண்டான் என்பவர் பேசிக் கொண்டிருந்தார். அவருடைய பேச்சு நம்முடைய சட்டமன்றத்தைப் பற்றி இருந்த காரணத்தாலே நானும் அது என்ன என்று அறிவதற்காக அந்தக் கூட்டத்திலே நின்று கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது அவர் நம் சட்டப் பேரவை நிகழ்ச்சிகளைப் பற்றியும், நம்முடைய சட்டப் பேரவைத் தலைவர் அவர்களைப் பற்றியும் மிகத் தகாத வார்த்தைகளால் கேவலான முறையிலே பேசிக் கொண்டிருந்தார். 1972ஆம் ஆண்டு நம்முடைய இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இயக்கம் கண்ட காலத்திலிருந்து இந்த இயக்கத்திலே என்னை இணைத்துக் கொண்டவன் என்ற காரணத்தாலே, 20 ஆண்டுக்காலமாக பேரவைத் தலைவர் அவர்களைப் பற்றி நன்கு அறிந்தவன் என்ற காரணத்தாலே, பேரவைத் தலைவர் அவர்கள் இந்த 20 ஆண்டுக்கால அரசியல் வரலாற்றிலே படித்தவராகவும், பண்பாளராகவும், நல்லவராகவும், வல்லவராகவும் இருந்து கொண்டிருக்கிறார் என்பது எனக்குத் தெரியும். அப்படிப்பட்ட நல்லவரைத்தான் இன்றைக்கு புரட்சித் தலைவி அவர்கள் இந்தச் சட்டப் பேரவையினுடைய தலைவராக அமர்த்தி, பணியாற்றச் செய்திருக்

கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மேடைப்
பேச்சாளர் வெற்றிகொண்டான் பேரவைத் தலைவரைப்
பற்றிக் குறிப்பிடுகிறபோது, நான் இங்கே சொல்லக்கூடாத
வார்த்தைகளாக இருந்தாலும், ஒருசிலவற்றை சொல்ல வேண்
டிய சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறேன். அவை சொல்
லக்கூடாத வார்த்தைகளாக இருந்தால் பேரவைத் தலைவர்
அவர்கள் அதை சபைக் குறிப்பிலிருந்து எடுத்துவிடலாம்.
''இந்த மதுரைக்காரனுக்கு என்ன தெரியும்? அவனுக்குத் தெரிந்
தது எல்லாம் மூன்றே மூன்றுதான், ஒன்று, நேரமாகின்றது,
இன்னும் ஒன்று, முடித்துவிடுங்கள். இது எல்லோருக்கும்
வாய்ப்பு தர வேண்டும் என்கின்ற மூன்றே மூன்று வார்த்தை
கள்தான் இவனுக்குத் தெரியும்; இவன் சபை நடத்துகின்ற
அழகு இதுதான்'' என்று கூறி, அந்த 3 வார்த்தைகளுக்கும்
அவர்களுடைய அகராதியில் இருக்கின்ற அசிங்கமான விளக்கத்
தைக் கூறி, அந்த விளக்கத்தில் இந்தச் சபையிலே இருக்கிற,
மாண்புமிகு பெண் உறுப்பினர்களையும் இணைத்துப் பேசி
யதை என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. அரசிய
லிலே நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை நேரடி
யாகச் சந்திக்க முடியாத இவர்கள், இப்படி மேடைகளிலே
மிக மோசமான முறையிலே விமர்சனம் செய்து கொண்டிருக்
கிறார்கள்.

கடந்த மாதம் லண்டன் மாநகரத்திலே நடைபெற்ற
பாராளுமன்றக் கருத்தரங்கிற்கு புரட்சித் தலைவி அவர்களின்
ஆணைப்படி என்னை அனுப்பி வைத்தார்கள். அதற்கு 2, 3
மாதங்களுக்கு முன்பாக இங்கிலாந்து பாராளுமன்றத்திலே
இருந்து பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இங்கே வந்து,
தமிழகத்தினுடைய சட்டப் பேரவையினுடைய நிகழ்ச்சிக
ளைப் பார்த்ததற்குப் பின்னர், நான் அங்கே சென்று, அந்தப்
பாராளுமன்ற நிகழ்ச்சிகளைக் கண்டு கொண்டிருந்த நேரத்
திலே, இந்தச் சபையினுடைய பெருமைகளைப் பற்றியும்,
இங்கே அமர்ந்திருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்
களைப் பற்றியும் மிகப் பெருமையாகக் கூறியது இன்றைக்கும்
நினைவில் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

அப்படி சரித்திரப் பிரசித்திபெற்ற இந்த தமிழகச் சட்டப்
பேரவையை இழிவுபடுத்த வேண்டுமென்ற வகையிலே, இங்கே
இருக்கின்ற சட்டப் பேரவைத் தலைவர் அவர்களை இழிவு
படுத்த வேண்டுமென்ற வகையிலே, இங்கே இருக்கின்ற சட்ட
மன்ற உறுப்பினர்களை இழிவு படுத்த வேண்டுமென்ற வகை
யிலே திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மேடைப் பேச்
சாளர் வெற்றிகொண்டான் அவர்கள் இன்றைக்கு மேடைக
ளிலே பேசிக் கொண்டு வருகிறார்கள். இத்தகைய சூழ்நிலை
யிலே அவர் மீதுள்ள புகாரை உரிமைக் குழுவிற்கு அனுப்பி
அவருக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டுமாய் இந்த
நேரத்திலே கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.





முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களும், திரு. வி.பி. சந்திரசேகர் அவர்களும் இங்கே தெரிவித்திருக்கிற கருத்துக்கள் அகில உலகிலும் இன்றைக்குப் பாராட்டுப் பெறுகிற அளவுக்கு, சிறப்புப் பெற்றிருக்கிற இந்த அவையைக் கொச்சைப் படுத்தும் வகையில் வெளியில் ஒருவர் பகிரங்கமாகக் கருத்துத் தெரிவித்திருக்கிற பிரச்சினையை உள்ளடக்கியதாக இருக்கிறதென்ற காரணத்தால், இதேபோன்ற உரிமை மீறல் பிரச்சினையை இங்கே இருக்கிற இன்னும் பல்வேறு உறுப்பினர்களும் எழுப்ப வேண்டுமென்று என்னிடத்திலே அனுமதி கேட்டார்கள். இருந்தாலும் அதிலே தெரிவிக்கப்பட்டிருக்கின்ற கருத்துக்கள் இந்த அவையில் கூறக் கூடாத அளவுக்கு உள்ள கருத்துக்களாக இருக்கிற காரணத்தாலே, மிகக் குறிப்பாக கொச்சையான வார்த்தைகள் எல்லாம் அடங்கியதாக உள்ளதால் அதன் பொருள் தெரிகிற அளவுக்கு குறிப்பாக கூறினால் போதும் எனக் கூறி அவர்கள் இதை எழுப்ப அனுமதித்தேன். அந்த அளவுக்கு அவர்கள் பிரச்சினைகளைத் அனைவருக்கும் புரிகிற அளவுக்கு எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அவர்கள் கொடுத்திருக்கிற ஆதாரங்களில் இருந்தும், மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. சந்திரசேகர் அவர்கள் தாமே அந்தக் கூட்டம் நடந்த அந்தப் பகுதியில் செல்ல நேர்ந்த நேரத்தில் அதைக் கேட்க நேர்ந்தது என்பதையும் ஆதாரப் பூர்வமாக தெரிவித்து இருக்கிற அந்த அடிப்படையையும் வைத்து மேலெழுந்தவாரியாகப் பார்க்கிறபோதே, இது அவையின் உரிமை மீறல் பிரச்சினைதான் என்று முடிவெடுக்க வேண்டியுள்ளது. இருந்தாலும் மேலும் சில அதிகாரப்பூர்வமான தகவல்களைத் தெரிந்து அதன்மீது நடவடிக்கை எடுப்பதுதான் பொருத்தமாக இருக்கும் என்று கருதி, இவர்கள் எழுப்பிய இந்தப் பிரச்சினையைக் காவல் துறையினருக்கும் அனுப்பி, வைத்து அவர்கள் கருத்தையும் பெற விரும்புகிறேன் அவர்களும் ஆங்காங்கே நடைபெறுகின்ற இந்தக் கூட்டங்களின் கருத்துக்களை அதிகாரப் பூர்வமாக சில குறிப்புகள் எடுத்துப் பாதுகாத்து வைக்கிறார்கள். அவர்களிடத்தில் இந்தத் தகவலைப் பற்றிய உண்மை நிலையை அறிந்து என்னுடைய முடிவை நாளை தெரிவிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## 4. கவன ஈர்ப்பு

### (அ) இராசிபுரம் தொகுதியில் மின் அழுத்தம் குறைந்திருப்பது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு. திருமதி க. பழனியம்மாள் அவர்கள். அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திருமதி. க. பழனியம்மாள்.

திருமதி க. பழனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராசிபுரம் வட்டத்தை தொழிலிலே பின்தங்கிய வட்டமாக அறிவிப்பு செய்து சரித்திரம் படைத்துக் கொண்டிருக்கிற நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் சார்பாகவும், என்னுடைய தொகுதி மக்களின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து "இராசிபுரம் தொகுதியில் மின் அழுத்தம் குறைவாக இருப்பது குறித்து" மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அறிக்கை

3.3.1992 அன்று ஏற்பட்ட உயர் மின் அழுத்த கூட்டமைப்பில் ஏற்பட்ட பிரிவு (Grid Separation) காரணமாக இராசிபுரம் பகுதியில் தற்காலிக மின் அழுத்தக் குறைவு ஏற்பட்டது.

இராசிபுரம் பகுதியில் மின் அழுத்தம் சீராக அமைக்கும் வகையில் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன:—

(அ) இராசிபுர்ம் துணை மின்நிலையத்திலுள்ள 22×5 எம். வி. ஏ. மின் மாற்றியில் மின் அழுத்த விகித மாற்றி (Tap Changer) +6 எண்ணிக்கையிலிருந்து +9 எண்ணிக்கைக்கு உயர்த்தப்பட்டுள்ளது. இதனால், பகிர்மான மின் அழுத்தம் கணிசமான அளவில் உயர்ந்துள்ளது.

(ஆ) இராசிபுரம்- முள்ளுக்குறிச்சி 22 கே.வி. மின்பாதை நீளம் அதிகமாக உள்ளதால் ஏற்படும் மின்னழுத்த குறைவினை தீர்க்கும் வகையில் இந்த மின் பாதையில் உள்ள பளுக்களை தம்மம்பட்டி 110 கே. வி. துணை மின்நிலையத்திலிருந்து வரும் 22 கே. வி. மின்பாதைக்கு மாற்றுவதற்காக இணைப்புப்பாதை Link line) பணிகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன.

மேலும் நாமகிரிப்பேட்டையில் 110 கே.வி. துணைமின் நிலையம் அமைப்பதற்கான நிலம் கையப்படுத்தப்பட்டுள்ளது.

மேலும், இராசிபுரம் துணை மின்நிலையம் புகளூரில் உள்ள 230/110 கிலோ வோ. துணை மின்நிலையத்துடன் வலையப்பட்டி, நாமக்கல் வழியாக இணைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மேம்பாட்டுப் பணிகள் மூலம் இராசிபுரம் பகுதியில் மின் அழுத்தம் உயர் மட்டத்தில் நிலவும்.





திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த குறைந்த மின் அழுத்தம் காரணமாக ராசிபுரம் தொகுதி முழுவதும் விளக்குகள் சரியாக எரிவதில்லை. மின் மோட்டார்கள மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றன. இங்கே கொடுத்திருக்கிற அறிக்கையிலே மின் அழுத்த விகித மாற்றிகள் எண்ணிக்கையை அதிகப்படுத்தியிருப்பதால், ஓரளவு நிலைமை சரியாக இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இந்தக் குறையை நிரந்தரமாகப் போக்குவதற்கும் சில நடவடிக்கைகளை மேற்கொண்டிருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. ராசிபுரம் - முள்ளுக்குறிச்சி மின் பாதையில் உள்ள பழுதுகளை தம்மம்பட்டி துணை மின் நிலையத்திலுள்ள மின் பாதைக்கு மாற்றுவதற்கு இணைப்புப் பாதை வேலை நடைபெற்றுக்கொண்டிருப்பதாகவும் கூறப்பட்டுள்ளது. அந்த வேலைகள் எப்போது முடிவடையும் என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காணுகிற விதத்திலே அந்தப் பகுதியிலே என்னென்ன நடவடிக்கைகளை மின்வாரியம் மேற்கொண்டு வருகிறது என்பதை அறிக்கையின் மூலம் தெளிவாகக் கொடுத்து இருக்கிறேன். புதிதாக நாமகிரிப்பேட்டையிலே ஒரு 110 கே. வி. துணை மின் நிலையம் அமைப்பதற்காக நிலம் கையகப்படுத்தப் பட்டுள்ளது. அதற்குப் பின்னாலே ராசிபுரம் துணை மின் நிலையம் புகளூரில் உள்ள 230/110 கே. வி. உள்ள துணை மின் நிலையத்துடன் வலையப்பட்டி, நாமக்கல் வழியாக இணைக்கப்பட்டுள்ளது. இது போன்ற பல்வேறு நடவடிக்கைகள் அந்தப் பகுதியின் மின் அழுத்தக் குறைவைப் போக்குவதற்காக மின் வாரியம் மேற்கொண்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பணிகள் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இந்தப் பணிகள் வெகு விரைவில் முடிப்பதற்காக அறிவுரைகளை மின்வாரியத்திற்கு வழங்கியிருக்கிறோம். ஆகவே வெகுவிரைவில் இந்தப் பணிகள் முடிக்கப்பட்டு ராசிபுரம் பகுதியில் இருக்கிற லோ-வோல்டேஜ் ப்ராப்ளம் என்று சொல்லப்படுகிற மின் அழுத்தக் குறைவு தீர்க்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமகிரிப்பேட்டையிலே அமைக்கப்பட இருக்கின்ற துணை மின் நிலையத்திற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டிருப்பதாக கூறியிருக்கிறார்கள். அது எந்தக் காலத்திற்குள் கட்டி முடிக்கப்படும் என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

[1992 ஏப்ரல் 8

முற்பகல் 11–00

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை மின் நிலையங்களை அமைக்கும் நேரத்தில் ஒவ்வொரு ஆண்டுக்கும் எத்தனை துணை மின் நிலையங்கள் என்பதை மின்சார வாரியத்திலே இருக்கின்ற நிதிநிலையைப் பொறுத்துத்தான் இன்றைக்கு வரையறுத்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே நிலம் கையகப்படுத்தப்பட்டுவிட்டாலே அதற்கு ஆவன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பதுதான் பொருள். ஆகவே வெகு விரைவிலே அதற்கான பணிகள் துவங்கப்படும். அதற்குரிய அனுமதியும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(ஆ) அரவக்குறிச்சி, கரூர் பகுதிகளில் விசைத்தறி தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கவன ஈர்ப்புத் திருமதி கே. மரியம் உல் ஆசியா, திரு. ம. சின்னசாமி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திருமதி மரியம் உல் ஆசியா.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரவக்குறிச்சி மற்றும் கரூர் பகுதிகளில் விசைத்தறி தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளது குறித்து" மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றிய விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது:

அறிக்கை

கரூர் தாலுக்காவில் அரவக்குறிச்சி தொகுதியில் பரமத்தி, தென்னிலை மற்றும் சின்னதாராபுரம் ஆகிய பகுதிகளில் சுமார் 1,500 விசைத்தறிகளும் அவற்றிற்கு சுமார் 500 விசைத்தறி உரிமையாளர்களும் உள்ளனர். இவர்களிடம் சுமார் 6000 தொழிலாளர்கள் பணிபுரிகின்றனர். விசைத்தறி உரிமையாளர்களுக்கும் பஞ்சாலை உரிமையாளர்களுக்கும் இடையில் விசைத்தறி உரிமையாளர்களின் தயாரிப்புகளுக்கு வழங்கப்படும் தொகை ஒப்பந்த அடிப்படையில் (contract basis) நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அண்மையில் ஏற்பட்ட மின்கட்டண உயர்வினை அடுத்து விசைத்தறி உரிமையாளர்கள் 'சிறு விசைத்தறி நெசவாளர்களின் கூட்டுக்



குழு' என்ற அமைப்பில் தங்களுக்கு வழங்கப்படும் ஒப்பந்த தொகையில் 20 சதவீதம்உயர்த்திஅளிக்கக் கோரி 2.3.1992 முதல் அரவக்குறிச்சி தொகுதியைச் சேர்ந்த மேற்கண்ட இடங்களில் தறிகளை ஓட்டவில்லை. இதனால் இவர்களிடம் பணிபுரிந்த தொழிலாளர்களுக்கு வேலை இல்லாத நிலை ஏற்பட்டது. இப்பிரச்னை சம்பந்தமாக கரூர் வட்டாட்சியர் (தாசில்தார்) முன்னிலையில் 17.3.1992 அன்று நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் பஞ்சாலை உரிமையாளர்கள், விசைத்தறி உரிமையாளர்கள் கோரிய 20 சதவீதம்உயர்வைஅளிக்க வாய்மூலமாக ஒப்புக்கொண்டதையடுத்து 20.3.1992 முதல் தறிகள் ஓடத் துவங்கின. தற்போது அரவக்குறிச்சி பகுதியில் சகஜ நிலைமை ஏற்பட்டுள்ளதெனவும் கரூர் பகுதியில் இதுபோன்ற ஏதும் பிரச்னை ஏற்படவில்லை எனவும் தெரியவருகிறது.

திருமதி கே. மரியம் உல் ஆசியா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் கட்டண உயர்வு, டீசல் விலை உயர்வு மற்றும் விசைத் தறி உதிரி பாகங்களின் விலை உயர்வு காரணமாக அரவக்குறிச்சி தொகுதியில் பரமத்தி, தென்னிலை மற்றும் சின்ன தாராபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள விசைத்தறி உரிமையாளர்களும், அதை போன்ற பெரியார் மற்றும் சேலம் மாவட்டத்தில் உள்ள விசைத்தறி உரிமையாளர்களும், சிறு விசைத் தறி நெசவாளர்களின் கூட்டுக் குழு என்ற அமைப்பில் தங்களுக்கு வழங்கப்படும் ஒப்பந்தம் தொகையில் 20 சதவீதம் உயர்த்தி அளிக்கக் கோரி 2.3.1992 முதல் விசைத்தறிகளை ஓட்டவில்லை. இதனால் அதிலே பணிபுரிகின்ற தொழிலாளர்கள் வேலையின்றி சிரமப்பட்டார்கள். இங்கே தரப்பட்டுள்ள விவர அறிக்கையில் 17.3.92 அன்று கரூர் வட்டாட்சியர் முன்னிலையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் விசைத்தறி உரிமையாளர்கள் கோரிய 20 சதவீதம் உயர்வை அளிக்க பஞ்சாலை உரிமையாளர்கள் வாய்மூலமாக ஒப்புக் கொண்டதாகவும், அதனையடுத்து 20.3.1992 முதல் தறிகள் ஓடத் துவங்கின என்றும் தரப்பட்டுள்ளது. நன்றி. விசைத்தறிகள் ஓடாமல் இருந்த நாட்களாக 18 நாட்களுக்கும் வேலையின்றி பாதிக்கப்பட்ட நெசவுத் தொழிலாளர்களுக்கு நஷ்டஈடு வழங்க விசைத்தறி உரிமையாளர்களிடம் பேசி, நஷ்ட ஈட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் புரட்சியினுடைய நாயகியாக விளங்கிக் கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்திலேதான் தமிழகத்திலே தொழில் அமைதி நிலவிக்கொண்டிருக்கிறது; தொழிலாளர்களுடைய நலன் பாதுகாக்கப்பட்டு வருகிறது. எனவே இரண்டாம் தேதி ஏற்பட்ட பிரச்சினையை உடனடியாக பேசித் தீர்த்து 20-ஆம் தேதி முதல் அந்த தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இது குறித்து தொழிலாளர்கள் நல

துணை ஆணையாளர் முன்னிலையில் ஒரு பிரச்சினையைக் கொண்டு வந்தால் இது குறித்து அரசு முடிவு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சின்னசாமி : இந்த விவர அறிக்கையில் 17.3.1992 ஆம் தேதி கரூர் வட்டாட்சியர் முன்னிலையில் நடந்த பேச்சு வார்த்தையில் விசைத் தறி உரிமையாளர், பஞ்சாலை உரிமையாளர்கள் மட்டும் கலந்து கொண்டு ஒரு முடிவுக்கு வந்து இருப்பதாக அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. அதிலே விசைத்தறி தொழிலாளர்கள் பங்கேற்றார்களா என்பது இங்கே குறிப்பிட்டுச் சொல்லவில்லை. இனிமேல் எதிர்காலத்திலேயாவது இதுபோன்ற பிரச்சினைகள் எழுகின்றபோது, பஞ்சாலை உரிமையாளர்கள், விசைத் தறி உரிமையாளர்கள், அத்தோடு தொழிலாளர்களையும் சேர்த்து பேசினால்தான் நல்ல முடிவு ஏற்படும். மேலும் போடுகிற ஒப்பந்தம் வாய்மொழியாக போடப்பட்டிருப்பதாக அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. முத்தரப்பினரை அழைத்து ஒரு ஒப்பந்தத்தை எழுத்து மூலம் போட்டால்தான் எதிர்காலத்திலே இதற்கு ஒரு நல்ல தீர்வாக இருக்கும் என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து, எதிர்காலத்திலேயாவது இதுபோன்ற முடிவை எடுக்க அரசு முன் வருமா என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. ரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்மொழியாக போடப்பட்ட அந்த ஒப்பந்தத்தை முத்தரப்பினரும் ஏற்று 2.3.1992 ஆம் தேதி முதல் விசைத் தறிகள் இயங்கிக் கொண்டிருக்கிற காரணத்தினாலே எந்தப் பிரச்சினைகளும் அங்கே எழுப்பப்படவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினருடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) உரிமைக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குழுக்களின் அறிக்கைகளை அளித்தல். உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல், மாண்புமிகு பேராசிரியர் க. பொன்னுசாமி, பேரவைத் துணைத் தலைவர் மற்றும் உரிமைக் குழுவின் தலைவர்.

முற்பகல் 11-05

பேராசிரியர் க. பொன்னுசாமி (மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. இல்லஸ்ட்ரேட்டட் வீக்லி ஆப் இந்தியா மீதான அவை உரிமை மீறல் பிரச்சினை பற்றிய உரிமைக் குழுவின் அறிக்கையை பேரவைக்கு அளிக்கிறேன்.



### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கி. தர்மலிங்கம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கி. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1974-75 மற்றும் 1975-76 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் வணிகம் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் 1989-90 ஆம் ஆண்டு இரண்டாவது அறிக்கையில்கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கை பற்றிய 37-வது அறிக்கை;

இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளின் வணிகம், செய்தி மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழு 1986-87 அளித்த 53-வது அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகள் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 38-வது அறிக்கை;

1969-70 ஆம் ஆண்டு முதல் 1975-76 ஆம் ஆண்டு வரையிலான தமிழ்நாடு வீட்டுவசதித் தலைவரின் கணக்குகள் குறித்த தணிக்கை அறிக்கைகளின் மீது பொது நிறுவனங்கள் குழுவின் 1986-87 45-ஆம் அறிக்கையில் கண்டுள்ள பரிந்துரைகளின் மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய குழுவின் 39-வது அறிக்கை ஆகியவற்றை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

### (இ) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கைகளை அளித்தல், திரு. எ. ஏகாம்பரரெட்டி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர்.

திரு. எ. ஏகாம்பரரெட்டி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் 1991-92 ஆம் ஆண்டுக்கான 7-வது மற்றும் 8-வது அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

## 6. சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

### கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம் மற்றும் தனி-வகைமுறைகள்) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரசினர் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்தல். 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டு

[பேரவைத் துணைத் தலைவர்] [1992 ஏப்ரல் 8

றவுச் சங்கங்கள் (திருத்தம் மற்றும் தனி வகை முறைகள்) சட்ட முன்வடிவு. இதனைப் பேரவையுன் அறிமுகம் செய்ய மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருகிறார்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தம் மற்றும் தனி வகைமுறைகள்) சட்டமுன்வடிவைப் பேரவை அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. மானியக் கோரிக்கைகள் 1992-93, விவாதமும் வாக்கெடுப்பும்—(தொடர்ச்சி)

(அ) கோரிக்கை எண் 23—கூட்டுறவு.

(ஆ) கோரிக்கை எண் 35—நுகர்பொருள் வழங்கல்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 23 கூட்டுறவு. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.



1992 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கூட்டுறவு பற்றிய 23 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 89,53,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1854, திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'To discuss the need to direct the co-operative rural banks to issue loans to the Agriculturists in Kanyakumari district, I move.

"that the sum of Rs. 89,53,27,000 under demand No.23. Co-operation, be reduced by Rs. 100".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1888, திரு. வி. பழனிசாமி. இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1853, டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி விவாதிக்க' நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

"கூட்டுறவு பற்றிய 23-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 89,53,27,000-ல் ரூ. 100-குறைக்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கை எண் 35—நுகர் பொருள் வழங்கல். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நுகர் பொருள் வழங்கல் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 517,46,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1910. திரு. எச். எம். ராஜு

[1992 ஏப்ரல் 8

திரு. எச். எம். ராஜூ : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் உள்ள மளிகைக் கடைகளில் விலைப்பட்டியல்கள் தெளிவான முறையில் ஒழுங்காக வைப்பது குறித்து' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''நுகர் பொருள் வழங்கல் பற்றிய 35 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 517,46,50,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானம் எண் 1909, டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'கொள்கை பற்றி' விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''நுகர் பொருள் வழங்கல் பற்றிய 35-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 517,46,50,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.''

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வெட்டுத் தீர்மானங்களும், மானியக் கோரிக்கைகளும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

*மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு மானியக் கோரிக்கைகள் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிட்டு வைக்கப்பட்டிருக்கின்றன@ அதிலே தமிழில் உள்ளதை நான் படித்ததாக தாங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். உறுப்பினர்கள் சொல்கிற கருத்துகளுக்கு முடிவில் என்னுடைய பதிலைத் தருகிறேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, ஒரே ஒரு திருத்தம், உணவு, நுகர் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பில் பக்கம் 17-ல் கடைசி பத்திக்கு முந்தைய பத்தியில் மண்ணெண்ணெய் என்ற தலைப்பின் கீழ் வருவதில் , '54, 612 கிலோ லிட்டர்' என்பதற்கு பதிலாக '70, 176 கிலோ லிட்டர்' என்று திருத்திக் கொள்ள வேண்டும். அடுத்த வரியில் '625 கிலோ லிட்டர்' என்ற இடத்தில் '643 கிலோ லிட்டர்' என்று திருத்திக் கொள்ளுமாறும், கடைசி வரியில்

@ 501 முதல் 583 வரையிலான ஆம் பக்கங்களில் I மற்றும் II இணைப்புகளாக அச்சிடப்பட்டுள்ளன.



55, 237 கிலோ லிட்டர்' என்பதற்குப் பதிலாக '70, 819 கிலோ லிட்டர்' என்று திருத்திக் கொள்ளுமாறும் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மிக முக்கியமான மானியக் கோரிக்கைகளாக இருக்கிற காரணத்தால் நிறைய உறுப்பினர்கள் பேச வேண்டுமென்று தங்களுடைய ஆர்வத்தை வெளிக்காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அந்த ஆர்வத்திற்கும் நாம் ஓரளவு இடம் கொடுக்க வேண்டியிருக்கிற காரணத்தால், பேசுகிற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் குறைந்த அளவு நேரம் எடுத்துக்கொண்டு, எல்லா உறுப்பினர்களுக்கும் வாய்ப்பளிக்க கேட்டுக் கொள்கிறேன். திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

*திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1992-93-ஆம் ஆண்டிற்கான உணவு மற்றும் கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கைகள் மீது நடக்கிற விவாதத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக கலந்து கொண்டு என் கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு தந்தமைக்கு தங்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் தென்பாண்டி சீமையில் தூத்துக்குடியில் முத்து குளிக்கிற தொழில் நடத்துவார்கள். இந்த முத்து குளிக்கிற தொழிலில் முத்து குளிக்க கடலுக்குள் மூழ்குபவர்கள் தங்களுடைய உயிர் கயிறு என்று சொல்லக்கூடியதை படகில் இருக்கிற தங்களுக்கு நம்பிக்கையானவரிடம் கொடுத்து வைப்பார்கள். அதைப்போல இந்த அரசு முத்து எடுக்க மூழ்கி இருக்கிறது என்று சொன்னால் அதனுடைய உயிர் கயிற்றை இன்றைய தினம் நம்முடைய அன்பிற்கும், மரியாதைக்குரிய அமைச்சர் திரு. விசுவநாதன் அவர்கள் கையில் கொடுத்திருக்கிறது என்று சொன்னால் அது மிகையாகாது. ஏனென்றால், தமிழகத்தினுடைய அரசியல் சரித்திரத்தை, ஒரு 40 ஆண்டுகள் அரசியல் பாடத்தை படிக்கிறவர்கள் தமிழகத்தினுடைய அரசியலே இந்த அரிசியில் தான் இருக்கிறது என்பதை அனுபவப்பூர்வமாக, பரிசோதனைகள் மூலமாக உணர்ந்து இருக்கிறார்கள். ஏழை எளிய மக்களுக்கு குடிமைப் பொருட்களை மலிவான விலையில், தரமான நிலையில, அவர்கள் வேண்டி விரும்பி பெற்றுக்கொள்கிற இடங்களில் வழங்குகிற பணி எவ்வளவு சிறப்பாக நடக்க முடியுமோ அல்லது எவ்வளவு சிறப்பாக நடக்கிறதோ, அதைப் பொறுத்து தான், இந்த ஆட்சியினுடைய எதிர்காலம் அமையும் என்பதில் அந்தப் பக்கத்தில் இருக்கிற நண்பர்களுக்கும், எங்களுக்கும் எந்தவிதமான மாறுபாடான கருத்தும் இருக்க முடியாது. அந்த அடிப்படையில் பார்க்கிறபோது, இந்தப் பணி எவ்வளவு சிறப்பாக இதுவரை நடைபெற்று இருக்கிறது, இனிமேல் இன்னும் எவ்வளவு சிறப்பாக நடைபெற வேண்டுமென்ற கருத்துக்களை காங்கிரஸ் கட்சியின் சார்பாக சொல்வதற்கு முன்னால் நான் சில பாராட்டுக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1992 ஏப்ரல் 8

மத்திய அரசு புதிய பொருளாதார கொள்கையை அறிவித்த பிறகு நாடெங்கிலும் ஒரு புதிய சிந்தனை, ஒரு புதிய கருத் தோட்டம், ஒரு புதிய எண்ணம் மலர்ந்திருக்கிறது என்பதை நாம் எல்லோரும் அறிவோம். அந்த புதிய சிந்தனையும், கருத்து தோட்டமும் சமூகத்தில் மேல்தட்டில் வாழ்கிற மக்களிடத்தில் மட்டுமல்லாமல், படித்தவர்களிடம் மட்டுமல்லாமல், கிராமங் களில் இருக்கக்கூடியவர்களுக்கு கூட, இந்த புதிய பொருளாதார சிந்தனையைப் பற்றிய தாக்குதல் கிடைத்து இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

உணவுப் பொருள்கள் வழங்கும் துறையைப் பற்றி நேற்றைய தினம் மத்திய பிரதேசத்தில் பேசிய பாரத பிரதமர் திரு. நரசிம்மராவ் அவர்கள் 'நானே ரேஷன் கடைகளுக்கு சென்று சோதனை நடத்துவேன்' என்ற வார்த்தைகளை சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், ரேஷன் கடைகள் அல்லது பொது விநியோகத் திட்டத்தில் இருக் கிற சில அமைப்புகள் எவ்வளவு தூரம் முக்கியமான இடத்தை இன்றைய தினம் இந்திய சமூகப் பொருளாதார அமைப்பில் பெற்றிருக்கிறது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். ஒரு நாட்டினுடைய பிரதமர் நானே சென்று ரேஷன் கடைகளை சோதனை செய்வேன் என்று சொல்கிற வார்த்தைகள் சாதாரண வார்த்தைகள் அல்ல. அந்த வார்த்தைகளினுடைய கனாகனத்தை இந்த மாமன்றத்திலே இருக்கின்ற ஒவ்வொரு உறுப்பினர்களும் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் நான் அந்த வார்த்தைகளை மேற்கோள் காட்டினேன். இன்றைய தினம் அந்தப் பணியை நமது அரசு நல்ல முறையிலேயே செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் சொல்லித்தான் ஆகவேண்டும், நான் சொல்லக் கடமைப்பட்டவனாகவும் இருக்கிறேன். அடித் தளத்திலே சில புகார்கள் இருந்தாலும் கூட, நடைமுறையில் சில மாறுபாடுகள் இருந்தாலும் கூட, நீங்கள் ஒரு 4 வரைமுறைகளை வைத்திருக்கிறீர்களே, availability, acceptability, accessibility and affordability அதிலே நீங்கள் ஒரு குறியீட்டிலே வெற்றி பெற்றிருக்கிறீர்கள் என்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். அதற்காக, அமைச்சர் அவர்களையும், இந்தத் துறையிலே இருக்கிற அத்துணை அதிகாரிகளையும், அது வும் குறிப்பாக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன், அதனுடைய தலைவர், நிர்வாகிகள், மற்றும் அவர்களுக்குத் துணையாக இருக்கிற போலீஸ் அமைப்புகள், எல்லோரையும் நான் மனதார முதலிலே பாராட்டிக் கொள்கிறேன். இந்தப் பணி இன்னும் தொடர்ந்து வெற்றிகரமாக நடைபெற வேண்டும் என்று நான் வாழ்த்துகிறேன்.

முற்பகல் 11–15

ஆனால், அதே நேரத்தில், கீழே இருக்கிற நடைமுறைச் சிக்கல்களை முறைப்படுத்துவதிலே என்னென்ன முயற்சிகளை ஏற்றுக் கொள்ளவேண்டும் அல்லது ( ) கொள்ளவேண்டும் என



1992 ஏப்ரல் 8] [திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்]

பதைப் பற்றியும் நீங்கள் சிந்திக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கிறீர்கள். ஒன்று, இன்றைய தினம் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொள்கை விளக்கத்திலே பல்வேறு புள்ளிவிவரங்களைக் கொடுத்து இருக்கிறார்கள். 1961 ஆம் ஆண்டு ஏறக்குறைய இந்த உணவு மானியம் ஒரு கோடியாக இருந்தது. இன்றைய தினம் 10 ஆண்டுகளிலே, 1992-93 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது வைக்கப்பட்டு இருக்கிற கொள்கைக் குறிப்பை பார்க்கிறபோது, 500 கோடியாக உயர்ந்திருக்கிறது. 1961-லே ஒரு கோடியாக இருந்த மானியம், 1992-லே 500 கோடியாக மாறியிருக்கிறது என்று சொன்னால், இந்தப் பணம் யாருடைய கைகளுக்குப் போகிறது என்பதைப் நாம் சிந்திக்க கடமைப்பட்ட வர்களாக இருக்கிறோம்.

இதிலே காங்கிரஸ் கட்சியின் சார்பாக நான் ஒரு கருத்தைத் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அரசினுடைய உதவி அல்லது அரசு தருகிற மானியம் அல்லது அரசு காட்டுகின்ற சலுகை ஏழை எளிய மக்களைத்தான் சென்று அடையவேண்டுமே யொழிய சமூகத்திலே மேல் தட்டில் இருப்பவர்கள் அதை அப கரித்துக் கொள்வதை காங்கிரஸ் கட்சி ஒருநாளும் அனுமதிக்காது. கடந்த காலத்திலே நீங்கள் அரிசி விலையைக் கூட்டினீர்கள். அரிசி விலையைக் கூட்டுவதற்கான ஒரு நியாயத்தைச் சொன் னீர்கள். அது என்ன நியாயம் என்றால், மத்திய அரசு விலையை கூட்டியிருக்கிறது, ஆகவே நாங்கள் விலையைக் கூட்டியிருக்கி றோம் என்ற நியாயத்தைச் சொன்னீர்கள். இது பொருளாதாரம் தான். அதிலே எனக்கு மாறுபாடான கருத்து அல்ல. ஆனால், இதிலே அரசு கொடுக்கிற மானியம் இருக்கிறதே, அது யாருக்குப் போய்ச் சேர வேண்டும் என்று சொன்னால், ஏழை எளிய மக்களுக்குப் போய்ச் சேரவேண்டும். அதாவது there can be a justification if the rich man is robbed to pay the poor; but, now, the poor man is robbed to pay the rich நமது அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்திலே பல ஆண்டு காலம் பணியாற்றிய அனுபவம் மிக்கவர்கள். நான் சொல்லு கின்ற கருத்துக்களைப் புரிந்துகொள்வார்கள் என்று கருதுகிறேன். இப்போது 'சேப்டி நெட்' என்றெல்லாம், இன்றைய தினம் புதிய பொருளாதார சிந்தனையிலே ஏராளமான விளக்கங்களைத் தந் திருக்கிறார்கள். நமது மாண்புமிகு மத்திய நிதியமைச்சர் அவர்கள் வரக்கூடிய காலங்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய காலம் என்று எல்லா மாநில அரசுகளுக்கும் எச்சரிக்கை விடுத் திருக்கிறார்கள். புதிய பொருளாதாரக் கொள்கையிலே அரசு ஏற்படுத்தியிருக்கிற மாற்றத்தினுடைய விளைவுகள் கீழ்மட்டத் திலே வந்து, விலைவாசியைக் கட்டுப்படுத்துவதற்கு இன்னும் ஏறக்குறைய இரண்டு ஆண்டுகள் ஆகும் என்கிற எச்சரிக்கையைத் தந்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரத்திலே ஏழை எளிய மக்களைப் பாதுகாப்பதற்கு இந்த அரசு என்ன திட்டம் வைத் திருக்கிறது என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன். ஏன் என்றால், ஒரு மனிதனுக்கு வீடு கட்டிக் கொடுக்கவில்லை என்று சொன்னால் கூட, பக்கத்திலே இருக்கிற வீடுகளிலே அவன் படுத்துக் கொள்

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1992 ஏப்ரல் 8

வான். தன்னுடைய கிராமத்திலே தண்ணீர் இல்லை என்று சொன்னால், பக்கத்து கிராமத்திலே போய், தண்ணீரை எடுத்துக் கொள்வான். ஆனால், அவன் வயிறு பசிக்கிறது என்று சொன்னால் வேறு ஒரு வாயால் அவன் சாப்பிட முடியாது. ஆகவே, இதை நீங்கள் கவனத்திலே கொள்ளவேண்டும். ஏழை எளியவர்களை பாதுகாப்பதற்காக, அல்லது ஏழை எளியவர்களுடைய தோள் களிலே ஏறக்காத்து இருக்கிற விலைவாசி ஏற்றத்தினைத் தடுத்து நிறுத்துவதற்காக நீங்கள் நடவடிக்கை எடுப்பதற்கு தைரியம் இல்லை என்று சொன்னால், நிச்சயமாக சரித்திரம் உங்களை மன்னிக்காது என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். அதற்கான அரசியல் தைரியத்தோடு நீங்கள் முன்வர வேண்டும். இன்றைக்கு திரு நரசிம்மராவ் அவர்களுக்கு இருக்கிற அரசியல் தைரியம், இன்றைய தினம் திரு மன்மோகன் சிங் அவர்களுக்கு இருக்கிற அரசியல் தைரியம் உங்களுக்கும் வரவேண்டும். அதை நீங்கள் பெற்றுக் கொண்டால், ஒழிய, நீங்கள் எதிர்காலத்தை நிச்சயமாக எதிர்கொள்ள முடியாது என்பதை நான் ஒரு எதிர்க் கட்சி உறுப்பினர் என்ற முறையிலே, பொறுப்புள்ள எதிர்க்கட்சி என்ற முறையிலே உங்களை எச்சரிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தீவிரமாக பேசிக் கொண்டிருக்கிற போது, குறுக்கிடுவதற்காக மன்னிக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். முதலிலே, பணக்காரர்களிடத்திலே வரியைப் பெற்று, ஏழைகளுக்காக செலவழிக்க வேண்டும் என்று சொல்லி விட்டு, இப்போது ஏழைகளிடத்திலே பணத்தைப் பெற்று, பணக் காரர்களுக்கு வசதி செய்வதைப் போல இருக்கிறது என்று ஒரு கருத்துத் தொனியிலே சொன்னார்கள். அதிலே எப்படி அவர்கள் சொல்கிறார்கள் என்று எனக்குப் புரியவில்லை. திரு. நரசிம்மராவ் அவர்கள் போல துணிச்சலோடு செய்யவேண்டும் என்று சொன் னார்கள். என்ன துணிச்சல் என்றும் அதைக் கொஞ்சம் விளக்க மாகச் சொன்னால், சரியாக இருக்கும்.

முற்பகல் 11-20

அடுத்து மற்றொன்று. ஏழைகளுக்கு உணவு கொடுப்பதிலே என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள் என்று தெரிவித்திருக்கிறார். மாநில அரசு மட்டும் செய்தால் போதாது. மத்திய அரசும் செய்திருக்க வேண்டும். எனவே மத்திய அரசு இதை உணர்ந்து, கொடுக்கின்ற அந்த அரிசியை ஏழைகளுக்குத்தான் கொடுக்கி றார்கள். எனவே அதிலே அவர்கள் கை வைத்திருக்கக் கூடாது என்பது எங்களுடைய திடமான கருத்து. எனவே அதை உயர்த் தியது தவறு என்று நாங்கள் கருதுகிறோம். நீங்கள் என்ன கருது கிறீர்கள் என்று சொல்ல வேண்டும்.



1992 ஏப்ரல் 8]

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சருடைய விளக்கத்திற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். மத்திய அரசு என்ன செய் திருக்கிறது என்று கேட்டார்கள். மத்திய அரசு இந்த ஆண்டு 25 விழுக்காடு உங்களுக்கு அரிசியை கூட்டிக் கொடுத்திருக்கிறது. கடந்த ஆண்டு 1990-ஆம் ஆண்டு 7.36 இலட்சம் டன் அரிசியைத் தான் கொடுத்திருக்கிறது. ஆனால் இந்த ஆண்டு உங்களுக்கு 9.14 இலட்சம் டன் அரிசியை வழங்கியிருக்கிறது. 25 பர்சென்ட் இன்கிரீஸ். மத்திய அரசு ஒன்றும் செய்யாமல் நாங்கள் வந்து இங்கே சொல்லவில்லை. மத்திய அரசு தன்னால் இயன்ற அவ்வளவு உதவிகளையும் செய்திருக்கிறது. நான் என்ன சொல் கிறேன் என்று சொன்னால், அரிசி விலையை கூட்டியிருக்கிறது, அது பொருளாதாரம். ஆனால் இதை பணக்காரர்களுக்குக் கூட் டுங்கள். ஐந்து ரூபாய்க்கு வேலைக்குப் போகின்றவர்களுக்கும் அரிசி விலையைக் கூட்டி, ஐயாயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிற வனுக்கும் அதே அளவில் அரிசியின் விலையைக் கூட்டினால் அது என்ன நியாயம், அது எந்த விதத்தில் நியாயமாக இருக்க முடியும். நீங்கள் கேட்கின்ற அரிசியை மத்திய அரசு தரத் தயாராக இருக் கிறது. 75000 டன் அரிசி கேட்கிறீர்கள். கடந்த மூன்று மாதங் களில் 93000 டன் அரிசி கேட்டு, கொடுத்திருக்கிறோம். ஆகவே மத்திய அரசின் மேலே குறை சொல்வதில் அர்த்தமில்லை. மத்திய அரசு தமிழகத்திற்கு மட்டும் என்ன தனி விலையிலா தருகிறது? நான் என்ன சொல்கிறேன் என்றால், நீங்கள் இதிலே தைரியமாக வரவேண்டும். நான் கடந்த அரசு இலவச அரிசி வழங்குகின்றபோது நான் இதே சபையிலே சொன்னேன். 5 கிலோ அரிசி அல்ல, 5 கிலோ தங்கம் வழங்கினால் கூட மக்கள் உங்களுக்கு ஓட்டுப் போடமாட்டார்கள் என்று நான் அப்போது அன்றைய முதலமைச்சரை வைத்துக்கொண்டு சொன்னேன். இன்னும் அதைத்தான் சொல்கிறேன். ஏதோ ரேஷன் கார்டுகளை வைத்துக்கொண்டு, ரேஷன் கடைகளில் எல்லோருக்கும் இலவச அரிசி போடவேண்டும். சப்சிடைஸ்டு அரிசி போடவேண்டுமென்று நீங்கள் தொடர்ந்து செய்து கொண்டிருப்பீர்கள் என்று சொன் னால், அது ஓட்டு வாங்கத்தான் முடியுமே ஒழிய, ஆட்சி நடத்த முடியாது. 5 கிலோ அரிசி கொடுப்பது என்றால், மக்கள் ஓட்டு போடலாம். வீடுவீடாகச் சென்று நாங்களே சமையல் செய்து தருகிறோம் என்று சொன்னால் இன்னும் மக்கள் அதிகமாக ஓட்டு போடுவார்கள். ஆனால், ஆட்சி செய்வதற்கு நாடு இருக்கவேண்டுமல்லவா ஆகவே, நீங்கள் தைரியமாக முன் வர வேண்டும். ஒரு புதிய சிந்தனை உலகம் முழுவதும் ஆரம்பித் திருக்கிறது. உதவி செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்த வருமானம் உள்ளவர்

களுக்குத்தான் ரேஷனில் அரிசி போடவேண்டுமென்ற கொள்கையைத்தான் புரட்சித் தலைவியினுடைய அரசு பின்பற்றி வருகிறது. ஆகவேதான் தவறான முறையில் ரேஷன் கார்டுகளை வாங்கியிருப்பவர்களை அடையாளம் கண்டு, அந்த கார்டுகளை எல்லாம் கைப்பற்றி வருகிறார்கள்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : என்னிடத்திலிருக்கின்ற புள்ளிவிவரம். ஒரு ரேஷன் கார்டுக்கு ஆண்டு ஒன்றுக்கு அரசுக்கு ஏற்படுகின்ற செலவு ரூ. 250. ஏறக்குறைய நீங்கள் தந்திருக்கிற புள்ளி விவரம் 125 இலட்சம் கார்டுகள் வழங்கியிருப்பதாகத் தந்திருக்கிறீர்கள். ஒரு கார்டுக்கு அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ஏற்படும் செலவு ரூ 250. Now-a-days the ration card is more valuable than a degree Certificate ஒரு குடும்பத்தில் 4 பட்டங்கள் பெற்றிருக்கின்ற பட்டதாரி வைத்திருக்கும் டிப்ளமோ சர்டிபிகேட்டிற்கு இருக்கின்ற மதிப்பை விட, ஒரு குடும்பத்தில் இருக்கின்ற ரேஷன் கார்டுக்குத்தான் அதிக மரியாதை.

அடுத்து நான் சொல்ல விரும்புவது, 25 விழுக்காடிற்கு போகஸ் கார்டுகள். நான் நேற்றுகூட பேசிக் கொண்டிருந்தேன். ஒரு சமூகத்திலே இருக்கின்ற மேல் தட்டிலே வாழ்கின்ற மக்கள் அந்த ரேஷன் கார்டுகளைப் பயன்படுத்துவதில்லை விவசாயப் பெருங்குடி மக்கள் விவசாயத்திலே உழைத்து, நெல் வாங்கக் கூடியவர்கள் அல்லது விவசாய நிலங்களை வைத்துக் கொள்ள கூடியவர்கள் அந்த ரேஷன் கார்டுகளைப் பயன்படுத்துவதில்லை அப்போது அந்த ரேஷன் கார்டுகளை யார் பயன்படுத்துகின்றார்கள்? அந்த ரேஷன் கார்டுகளைக் கண்டுபிடிப்பதில் உங்களுக்கு என்ன தயக்கம்? நடவடிக்கை எடுக்க ஏன் பயப்படுகிறீர்கள்? அந்த தைரியமான நடவடிக்கை ஏன் உங்களுக்கு வரமாட்டேன் என்று சொல்லுகிறது நீங்கள் அடுத்த தேர்தலைப்பற்றி தயவு செய்து சிந்திக்காதீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதைப்பற்றி நிறைய தடவை பேசியிருக்கிறீர்கள். கடுமையான நடவடிக்கை மேற்கொள்வதற்காக இது பேசப்பட்டிருக்கிறது. ஆனால் இதற்கு முன்னால் ஏதோ ஒரு கோரிக்கையிலே, அல்லது வேறு ஒரு கருத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவிக்கின்றபோது என்னிடத்திலே நிறைய பேர் ரேஷன் கார்டுகளைக் கேட்கிறார்கள். அதையெல்லாம் கொடுப்பீர்களா என்று அவர்களே கேட்கிறார்கள். எனவே அன்றைக்கு பேசியதற்கும் இன்றைக்கும் கொஞ்சம் முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது. எனவே அதை விளக்க வேண்டும்.



அடுத்து இன்னொன்று. மத்திய அரசு அரிசியைக் கூட்டிக் கொடுக்கிறது என்று சொன்னார்கள். நம்முடைய தேவைக்கேற்ப அவர்கள் கூட்டிக் கொடுப்பதில்லை. ஆனால் ஏதோ கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஏன் உயர்த்தினார்கள் என்பதைப் பற்றி அவர் சொல்ல வேண்டும். நீங்கள் சொன்னீர்கள் ஏழைகளுக்கு என்று நாம் செய்தாக வேண்டும், துணிச்சலாகச் செய்தாக வேண்டும் என்றெல்லாம் சொன்னீர்கள். நாம் இனாமாகக் கூட கொடுக்கலாம். அதற்கு மத்திய அரசாங்கம் ஒத்துழைக்குமா? அவர்கள் கொடுப்பார்களா என்றுதான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

முற்பகல் 11-25

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தைரியமாக செய்ய வேண்டும் என்று எங்களுக்கு சொன்னாரே தவிர என்ன செய்வது என்ற யோசனையை இன்னமும் அவர் சொல்லவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அரிசிக்கு இரண்டு விதமான விலை போட வேண்டுமென்று சொல்லுகிறாரா அல்லது மேல் தளத்திலே இருப்பவர்களுக்கு அரிசி கொடுக்காமல் நிறுத்தி மற்றவர்களுக்கு மட்டும் கொடுக்க வேண்டுமென்று விரும்புகிறாரா என்பதைத்தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, இதையெல்லாம் நீங்கள் தயவுசெய்து என் டைமிலே கழித்துக் கொள்ளக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இல்லை; இல்லை நீங்கள் இது மாதிரி குறுக்கீடு வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் he asked the most pertinent Question நீங்கள்தானே ரேஷன் கார்டுகளை வழங்கவேண்டும் என்று சொன்னீர்கள் என்று கேட்டார். I owe every word I have spoken in this House. I owe my word தான் இது வரையில் ரேஷன் கார்டுகள் கிடைக்காதவர்களுக்கு கொடுக்கப் பட வேண்டும் என்று சொன்னேன். நியாயமாக உண்மையிலேயே தேவைப்படுகிறவர்களுக்கு கொடுக்கவேண்டும், இங்கேதான் நீங்கள் சொல்லுகிற பிராப்ளமே வருகிறது. யாருக்கு ரேஷன் கார்டுகள் போய்ச் சேரவேண்டுமோ அவர்களுக்கு போய்ச் சேரவில்லை. யாருடைய கையிலே இந்த ரேஷன் கார்டுகள் இருக்கக் கூடாதோ அவர்களுடைய கையிலே இருக்கிறது. அதுதான் என்னுடைய பதில். ஆகவே நீங்கள் சரியான

[திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்] [1992 ஏப்ரல் 8

நபர்களைக் கண்டு பிடித்து ரேஷன் கார்டுகள் கொடுங்கள். போகஸ் கார்டுகளை எடுங்கள். அதைப்போல மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இன்னொரு கேள்வியை வைத்தார்கள். நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார். நீங்கள் கொஞ்சம் ஜோதிபாசுவைப் பற்றி திங்க் பண்ணிப்பாருங்கள். பெரிய கம்யூனிஸ்ட் இயக்கத்தினுடைய வடித்து எடுத்த வாரிசு என்று சொல்லி மேற்கு வங்கத்திலே இவ்வளவு நாட்கள் முதலமைச்சராக இருக்கிற ஜோதிபாசு ஒரு பைசா கூட சப்சிடி கொடுப்பது இல்லை. எப்படி நடக்கிறது அந்த கவர்ன்மென்ட்? How is it possible to run the Government ? How that amount is utilised for various development programmes

அதைதான் நான் சொல்லுகிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. சு. முத்துசாமி :</u> இங்கேதான் பிரச்சினை உருவாகிறது. தலைவர் அவர்களே, அவர் சொல்லுகிறபோது ஏழைகளுக்கு நீங்கள் அரிசி விலையை உயர்த்தியிருக்கிறீர்கள். அது தவறு என்பது போல முதலிலே சொன்னார். இப்போது ஜோதிபாசு செய்திருப்பது சரியானது என்பதைப் போல சொல்லுகிறார்கள். சப்சிடி அவர்கள் கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார். இதிலே எதை நாம் செய்யலாம் என்பதைத்தான் உங்களிடத்திலே இருந்து நான் எதிர்பார்க்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

<u>மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மரியாதைக்குரிய உறுப்பினர் அல்போன்ஸ் அவர்கள் மேற்கு வங்க அரசைப் பற்றி சொன்னார்கள். அவர்கள் நிரம்ப பத்திரிகை படிக்கின்றவர்கள். கடந்த ஞாயிறு அன்று வந்த 'சன்டே' என்ற வார இதழில் மேற்கு வங்கத்தில் கடந்த 15 ஆண்டுகளாக, அந்த அரசு வந்த பிறகு தொழில் துறையில் ஒரு துளி அளவுகூட எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. எந்த முதலீடும் வைக்கப்படவில்லை. தேக்கம் அடைந்திருக்கிறது என்று எழுதியிருக்கிறார்களே அதற்கு அவர்கள் என்ன விளக்கத்தை அளிக்கிறார்கள் என்பதை உங்கள் மூலமாக தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

<u>திரு. ஜி. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> திரு. வே. தம்புசாமி அவர்கள் பேசுகிறபோது இதற்கெல்லாம் விளக்கம் ஆணித்தரமாக சொல்லுவார். திரு. ஜி. பழனிசாமி.



1992 ஏப்ரல் 8]

<u>திரு. ஜி. பழனிசாமி:</u> பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் சொல்லுகிறபோது அந்த தொழில் துறையிலே மேற்கு வங்கம் முன்னேறவில்லை என்று சொல்லுகிறார்கள். பத்திரிகையில் வந்திருக்கிற செய்திகளை ஆதாரமாக வைத்து சொல்ல முடியாது. ஆனால் அவர்கள் நல்ல ஆட்சி நடத்துகிறார்கள் என்ற காரணத்தினால் அங்கே மார்க்சிஸ்ட் கட்சியும் இடது சாரி கட்சியினுடைய கூட்டணியும் தொடர்ந்து ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது என்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். (குறுக்கீடு)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> விவாதம் எங்கோ போய்க் கொண்டிருக்கிறது. மாண்புமிகு கல்வி அமைச்சர்.

<u>மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அல்போன்ஸ் அவர்கள் மேற்கு வங்கத்தில் நீண்ட காலமாக முதல்வராக இருக்கிற ஜோதிபாசு அவர்கள் சப்சிடி கொடுக்காமல் அரிசி விநியோகம் செய்து கொண்டிருப்பதைச் சொன்னார்கள். அதைப்போல தமிழக அரசும் செய்ய வேண்டும் என்பது போல பேசிக் கொண்டிருக்கிறார்கள். அதை நல்ல தெளிவாக விளக்கமாக சொன்னால் பரவாயில்லை.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> ஏற்கனவே நிறையப் பேசியாகி விட்டது. இப்படி எல்லோரும் பேச ஆரம்பிப்பது சரியல்ல. பத்து நிமிடம் ஆகிவிட்டது. அமைச்சர்களும் குறுக்கீடுகளைக் கடைசி நேரத்தில் செய்தால் நன்றாக இருக்கும்.

<u>திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :</u> அதாவது நான் என்ன சொல்லுகிறேன் என்று சொன்னால் I don't want to be an escapist.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> அமைச்சர் அவர்கள் கேட்டார்கள். தைரியமாகச் செய்யுங்கள் என்று சொன்னீர்கள். தைரியமாக என்றால் இனிமேல் அரிசியைக் கொடுக்காதீர்கள் என்று சொல்லுகிறீர்களா, ஏழைகளுக்கு மட்டும் கொடுங்கள் என்று சொல்லுகிறீர்களா என்பதை அவர் கேட்டார். அதற்கு மட்டும் பதில் சொன்னால் போதும்.

<u>திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் :</u> தைரியமாக செய்யுங்கள் என்று சொன்னதன் அர்த்தம் ரேஷன் கார்டுகளிலே போய் கை வைப்பதற்கு நீங்கள் பயப்படுகிறீர்கள். அதை ரீ சர்வே பண்ணுங்கள் என்று நான் சொல்லுகிறேன். ரீ சர்வே பண்ணி ரீ கிளாசிபை பண்ணிஎங்கெங்கே உண்மையானரேஷன்கார்டுகள் இருக்கின்றன. எங்கெங்கே போகஸ் கார்டுகள் இருக்கின்றன, எங்கெங்கே சமூக விரோதிகள் கையிலே ரேஷன் கார்டுகள் சிக்கிக் கொண்டிருக்கின்றன என்பதைக் கண்டு பிடியுங்கள். அதிலே கை வைத்தால் ஓட்டு போய்விடும் என்று நினைக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் கேட்டது அரிசி வழங்குவதைப் பற்றி, நீங்கள் பேசுவது ரேஷன் கார்டுகள் பற்றி மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு உறுப்பினர் தவறான கருத்துக்களை அவைக்குத் தரக்கூடாது. எவ்வளவு வேகமாக நடவடிக்கை எடுக்க முடியுமோ அவ்வளவு வேகமாக நடவடிக்கை எடுத்து – இதுவரை இந்த ஓராண்டுக் காலத்தில், 5,65,000 போலிக் கார்டுகளை ஒழித்திருக்கிறோம் என்பதை இந்த அவைக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதிலே தயவு தாட்சண்யம் பார்க்காமல், யார் எந்தக் கட்சி என்று பார்க்காமல் யார் தவறு செய்தாலும் நடவடிக்கை எடுப்பதற்கு அரசு முடிவு செய்து அரசாங்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே அவருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11-30

திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்னுடைய ஆலோசனையைச் சொல்லிவிடுகிறேன். அதாவது ஒரு ஏழை - சமூகத்திலே அடித்தளத்திலே வாழ்கின்ற ஒரு ஏழைத் தமிழனை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு உங்களுக்கு இருக்கிறது. மேல் மட்டத்திலே வாழ்கின்றவர்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்வதற்கான தகுதிகளைப் பெற்றிருக்கிறார்கள். வலிமையினை பெற்றிருக்கிறார்கள். ஆனால் அரசினுடைய கடமை வரக்கூடிய ஆண்டுகளிலே ஏழையை பாதுகாக்க வேண்டும். ஒரு ஏழைக்கு மிகவும் அத்தியாவசியமாக வேண்டியது அரிசி, பருப்பு, எண்ணெய், இந்த அரிசி, பருப்பு, எண்ணெய் மூன்றையும் சமூகத்திலே இருக்கின்ற அடித்தளத்திலே வாழ்கின்ற மக்களுக்கு சப்ஸிடைஸ்டு ரேட்டில் நீங்கள் - அரசு வழங்கித்தான் ஆகவேண்டும். அதனால் ஏற்படுகின்ற சுமையினை சமூகத்திலே மேல்மட்டத்திலே இருக்கின்றவர்கள் பங்கிட்டுக் கொள்ள வேண்டும். அதிலே எங்களுக்கு எந்தவிதமான கருத்து வேறுபாடும் இல்லை. நேற்றைய தினம் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி நடத்திய செயற்குழு கூட்டத்திலே கூட இந்தக் கருத்தைத் தான் வலியுறுத்தி இருக்கிறார்கள். பாமாயில் சமூகத்திலே மேல் தட்டிலே இருக்கின்றவர்களுக்கு வழங்கப்பட வேண்டாம். ஆனால் ஏழைகளுக்கு மட்டும் அந்த பாமாயில் வழங்கினால் போதும். ஏழைக்கு மட்டும் அந்த பாமாயில் வழங்குகின்றபோது அதனால் நிதிச்சுமை ஏற்படும் என்று சொன்னால் சமூகத்திலே வசதியாக இருக்கின்றவர்கள், பணக்காரர்கள் அந்தச் சுமையினை இந்த சமூகத்திலே கீழே வாழுகின்ற மக்களுக்காக பங்கிட்டுக்கொள்ள வேண்டும் என்பதிலே காங்கிரஸ் கட்சி மிகவும் தைரியமாக இருக்கிறது; மிகவும் ஆணித்தரமாக இருக்கிறது. நான் சொல்கிறேன், ஒரு கோல்டன் கார்டு கிரெடிட் கார்டிலே கூட கோல்டன் கார்டு வந்திருக்கிறது.



அந்த கோல்டன் கார்டு என்று சொல்லக்கூடிய கார்டு -சமூகத்திலே இருக்கின்ற அடித்தள மக்களுக்கு விநியோகம் செய்யப்பட வேண்டும். அந்த கார்டில் சப்சிடைஸ்டு டால், சப்சிடைஸ்டு ரைஸ் அண்டு சப்சிடைஸ்டு ஆயில் என்ற மூன்றும் வழங்கப்பட வேண்டும். அதைப்போல் சர்க்கரைக்கு தனியாக ரேஷன் கார்டு, மண்ணெண்ணெய்க்கு தனியாக ரேஷன் கார்டு அரிசிக்கு தனியாக ரேஷன் கார்டு வழங்கப்பட வேண்டும் ஏனென்றால் சில பேர் அரிசியே வாங்குவதில்லை. சில பேர் மண்ணெண்ணெயே வாங்குவதில்லை சில பேர் சர்க்கரையே வாங்குவதில்லை. மண்ணெண்ணெய் வழங்குவதிலே கூட ஒரு அநியாயம் கண்ணெதிரே நடந்துகொண்டிருக்கிறது. சென்னையிலே இருப்பவர்களுக்கு 10 லிட்டர். எங்கள் ஊரிலே இருக்கின்ற கிராமத்திலே வாழ்கின்றவனுக்கு 3 லிட்டர். ஆனால் கிராமத்திலே வாழ்கின்றவனுக்குத்தான் மண்ணெண்ணெய் வேண்டும். சென்னையிலே எல்.பி.ஜி. கேஸ் போன்ற பல வசதிகள் இருக்கின்றன. ஆனால் கிராமத்திலே மின்சாரம் கூட எட்டிப் பார்க்காத சில கிராமங்களிலே மண்ணெண்ணெயை மட்டும் நம்பி வாழக்கூடிய மக்களுக்கு 3 லிட்டர் மண்ணெண்ணெய் கொடுப்பது என்பது பெரிய அநியாயம். அரசே இந்த அநியாயத்தை செய்யக் கூடாது என்று நான் மிகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். கிராமத்திலே வாழ்கின்ற மக்களுக்கு ஒரு ஓட்டு தான். சென்னையிலே வாழ்கின்றவர்களுக்கும் ஒரு ஓட்டு தான். ஆகவே மண்ணெண்ணெய் விநியோகத்திலே ஈக்குவல் டிஸ்ட்ரிபியூஷன் த்ரூ-அவுட் தி ஸ்டேட் வேண்டும் என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வேன்.

கூட்டுறவு ரேஷன் கடையிலே வேலை பார்க்கக்கூடிய தொழிலாளர்களுக்கு 500 ரூபாய் சம்பளம் கூட்டி கொடுத்து இருக்கிறீர்கள், நான் பாராட்டுகிறேன். அதைப்போல அந்த அசிஸ்டெண்ட் சேல்ஸ்மேன், பேக்கர் ஆகியவர்களுக்கும் சம்பளத்தை கூட்டிக் கொடுக்க வேண்டும். நான் கூட்டுறவைப் பற்றி ஒரு வார்த்தை சொல்லி முடித்து விடுகிறேன். ஒரு பழமொழி சொல்வார்கள். water water everywhere but no water to drink என்று கடலுக்கு நடுவிலே நின்று கவிதை பாடியதாகச் சொல்வார்கள். அதைப்போல எங்கே பார்த்தாலும் கூட்டுறவு நிறுவனங்கள் இருக்கின்றன. ஆனால் கூட்டுறவு இயக்கம் என்பது இல்லை. Co-operative institutions are every where, but there is no Co-operative movement. அந்த பாதகத்தை, அந்தப் பழியை நீங்களாவது துடைக்க வேண்டும் என்று உங்களிடத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். பழைய ஆட்சியாளர்கள் செய்த தவறுகள், பழைய ஆட்சியாளர்கள் அந்த கூட்டுறவு இயக்கத்திலே செய்தகொடுமைகள் மீண்டும் தொடராவண்ணம் பாதுகாப்பது உங்களுடைய பொறுப்பு, உங்களுடைய கடமை. அதை எதிர்பார்த்துத் தான் மக்கள் உங்களுக்கு வாக்களித்திருக்கிறார்கள். அந்த மக்களுடைய

[திரு. பீட்டர் அல்போன்ஸ்] [1992 ஏப்ரல் 8

எதிர்பார்ப்புகளை நீங்கள் நிச்சயம் நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. அப்படி நீங்கள் நிறைவேற்றுகின்றபோது உங்களுக்குத் துணையாக இருப்போம் என்று சொல்லி, பேரவைத் தலைவர் தந்த இந்த பெருமையான வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் த</u>லைவர் : திரு. எம். தங்கவேல்.

<u>*திரு. எம். தங்கவேல் : பேரவைத்</u> தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு மற்றும் நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மீது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எனது கருத்துக்களை வழங்குவதற்கு வாய்ப்பு அளித்த பேரவைத் தலைவருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த கூட்டுறவுத் துறை என்பது நீண்ட பழமையான துறையாகும். இந்தக் கூட்டுறவுத் துறை ஏழை எளிய மக்களுக்கு பயன்பட்டு வருகின்ற துறையாகும். 1955 ஆம் ஆண்டு முதல் அனைத்து கூட்டுறவுத் துறையும் ஒரே பதிவாளர் கீழ் செயல்பட்டு வந்தது. அதற்குப் பின்னாலே இந்தத் துறை வெவ்வேறு துறைகளாக பிரிக்கப்பட்டு பொதுமக்களுக்கு பலவேறு கூட்டுறவு அமைப்புகளின் கீழ் பல நன்மைகளைச் செய்து வருகின்றது.

முற்பகல் 11-35

இந்தக் கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையில் பிரதம கூட்டுறவு விவசாய சங்கங்கள் மூலம் குறுகிய கால கடன், நீண்ட கால கடன் என்று அளித்து ஆண்டுக்கு 10 லட்சத்திற்கு மேல் கடன் உதவி அளித்து வருகிறது.

விவசாயிகளுக்கு கூட்டுறவு வங்கி மூலம் ஒரு பவுனுக்கு ஒரு பவுன் தங்கத்திற்கு ரூபாய் 2,200 வரை கடன் உதவி அளித்து வருகிறது. இன்றைக்கு அந்த தங்கத்தின் விலை வீழ்ச்சி அடைந்து விட்ட காரணத்தால் விவசாயிகள் தனியார் கடைகளில் தங்கத்தை அடகு வைக்கப் போனால் அந்த தனியார் கடைக்காரர்கள் அந்த நகையை வாங்க மறுக்கிறார்கள். ஆகவே, கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் அந்த நகைக் கடன வழங்குவதை நிறுத்தாமல் மீண்டும் வழங்கிட வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். இதற்குக்குறைந்த பட்ச கடன் தொகையாக 10 ஆயிரம் வழங்கி வந்ததை இன்றைக்கு நமது மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 25 ஆயிரமாக அதை உயர்த்தி இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, சிறு தொழில் செய்யும் தனி நபருக்கு குறிப்பாக ஆதரவற்ற பெண்கள், விதவைகள் ஆகியோருக்கு ரூபாய் 500 வரை கடன் தரப்படுகிறது. இந்தத் தொகையை



1992 ஏப்ரல் 8] [திரு. எம். தங்கவேல்]

மேலும் 2 ஆயிரம் வரை உயர்ந்தி வழங்கிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

விவசாயப் பயிர்களுக்கு கூட்டுறவுத் துறையின் மூலம் பயிர் இன்சூரன்ஸ் திட்டத்தை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் 1979 ஆம் ஆண்டு கொண்டு வந்தார்கள். இந்தத் திட்டத்தின் கீழ் ரூபாய் 10 ஆயிரமாக இருப்பதை ரூபாய் 25 ஆயிரமாக உயர்த்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இன்றைக்கு கூடடுறவுத் துறைக் கடைகளில் பணியாற்றும் கூட்டுறவு ஊழியர்களின் ஊதியத்தை ரூபாய் 350-லிருந்து ரூ.500 ஆக நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அளித்து இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, இந்த நுகர்பொருள் வாணிபக் கழகத்தைப் பொறுத்தவரையில் தமிழகத்தின் முதலமைச்சராக இருக்கின்ற டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பின்னால்தான் இந்த மாநிலத்தில் பொது வினியோக முறை சீராக, சிறப்பாக நடந்து வருகிறது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தேர்தல் நேரத்தில் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் வகையில் பாமாயில் எண்ணெயை துரிதமாக நேரடியாக இறக்குமதி செய்து மாவட்டங்கள் முழுவதும் பண்டிகைக் காலங்களில் சீராக வினியோகிக்கப்படுகிறது.

கடந்த தி. மு. க. ஆட்சிக் காலத்தில் அதிகப்படியான போலி குடும்ப அட்டைகளைக் கொண்டுவந்த-இங்கே உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொன்னார்கள் - போலி குடும்ப அட்டைகளை இந்த அரசு ஒழிப்பதற்கு பயந்து கொண்டு இருப்பதாகச் சொன்னார்கள். நான் ஒன்றை மட்டும் தெளிவாகக் கூறிக்கொள்கிறேன். மாண்புமிகு நம்முடைய உணவுத்துறை அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாவட்ட வாரியாக சுற்றுப் பயணம் செய்து அங்கே மாவட்டத்தில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களையும், உணவுத் துறை அதிகாரிகளையும் அழைத்து கூட்டத்தை நடத்தி போலி குடும்ப அட்டைகளை விலக்கி புதிய குடும்ப அட்டைகளை வழங்குவதற்கு சட்டமன்ற உறுப்பினர்கள் பரிந்துரை செய்தால்தான் புதிய அட்டைகள் வழங்கப்படும் என்று நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆணையிட்டு அந்தத் திட்டம் இன்றைக்கு நல்லபடியாக நடந்து வருகிறது.

(மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, இந்த போலி குடும்ப அட்டைகள் இன்றைக்கு ஒழிக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் சொல்லும்போது ஒவ்வொன்றுக்கும்

அரிசிக்கு ஒரு அட்டையும், மண்ணெண்ணைக்கு ஒரு அட்டையும், என்று ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனியாக அட்டைகள் வழங்கவேண்டுமென்று சொன்னார்கள். நாம் எல்லா பொருட்களுக்கும் சேர்த்து ஒரு அட்டை வழங்குகின்ற நேரத்திலேயே போலி குடும்ப அட்டைகள் அதிகமாகவந்துவிடுகின்றன. ஆகவே, ஒவ்வொரு பொருளுக்கும் தனித்தனியாக குடும்ப அட்டை வழங்கினால் அந்த போலி அட்டைகள் அதிகமாவதற்கு வாய்ப்புகள் அதிகமாகிறது. இதையெல்லாம்கருத்தில் கொண்டுதான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாக சட்டமன்ற உறுப்பினர் பரிந்துரை செய்தால் தான் குடும்ப அட்டைகள் வழங்க வேண்டுமென்று ஆணையிட்டு இருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, எங்களுடைய திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில் மலைவாழ் பகுதியில் இருக்கின்ற மக்களுக்காக ஒரு நடமாடும் நியாய விலைக் கடையை ஏற்பாடு செய்து இன்றைக்கு சிறப்பாக அதுவும் நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

அதுமட்டுமல்ல, கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற ஒரு உண்மையை இந்த சபைக்கு சொல்லவேண்டும். அப்போதிருந்த ஆளுங் கட்சியின் துணையோடு தமிழகத்தில் பெருமளவில் பெரும்பாலான மாவட்டங்களில் குறிப்பாக திருச்சி மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம் போன்ற பகுதிகளில் நெல், அரிசி கடத்தல் அதிகமான அளவில் நடைபெற்று வந்தது. மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி வந்த பின்னால் தான் அந்த கடத்தலில் ஈடுபட்டு வந்த சமூக விரோதிகள் மீது துணிச்சலான நடவடிக்கை எடுத்து மதுரையைச் சேர்ந்த சைதுமீரான், நாகர்கோவிலைச் சேர்ந்த ஸ்டீபன்போன்றவர்களை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்து, அது மட்டுமல்ல இன்றைக்கு காலையில் நான் பத்திரிகையில் பார்த்தேன். திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த நல்லுசாமி என்பவர் இதுவரையில் போலீஸ் பிடியில் சிக்காமல் இருந்தார். அவரை நேற்றைக்கு காலை நம்முடைய சிவில் சப்ளைஸ் போலீசார் கைது செய்து தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் அடைத்து இருக்கிறார்கள். இவ்வளவு பெரிய சாதனையை நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இன்றைக்கு செய்து இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி). இந்த மாதிரி சமூக விரோதிகள் இன்றைக்கு தலைவிரித்து ஆடமுடியாத சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. இதற்கெல்லாம் காரணம் நம்முடைய டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் துணிச்சலான நடவடிக்கைகளில் இது ஒன்று ஆகும்.

முற்பகல் 11-40

அதுமட்டுமல்ல, இந்த சிவில் சப்ளைஸ் சி.ஐ.டி. பிரிவினருக்கு புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் முழு அதிகாரம் வழங்கப்பட்டு, அவர்கள் தன்னிச்சையாக செயல்படுகிற அதிகாரத்தை



கொடுத்திருந்தார்கள். அதன் பலனாக பதுக்கல்காரர்களு கடத்தல்காரர்களும் குறைந்து இருந்தார்கள். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னாலே அந்த நிலைமை மாறி, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு இருந்த அதிகாரம்பிடுங்கப்பட்டு, அன்றைக்குக் கடத்தல்காரர்கள் மத்தியிலேயும், பதுக்கல்காரர்களிடமும் அன்றைக்கு இருந்த அரசாங்கம் பேரம்பேசி, அவர்கள், சி.ஐ.டி. பிரிவினருக்கு இருந்த முழு அதிகாரத்தைப் பிடுங்கி, அதற்குப் பின்னாலே அவர்களுடைய கைகள் கட்டப்பட்ட சூழ்நிலை ஏற்பட்ட பின்னாலேதான் தமிழகத்திலே நெல் கடத்தல்கள் அதிகமாக ஏற்பட்டன. அதிலும் குறிப்பாக, எங்கள் மாவட்டத்தில் அதிகமாக நெல் கடத்தல் நடைபெற்றது. எனவே, பிடுங்கப்பட்ட அந்த அதிகாரத்தை மீண்டும் நம்முடைய புரட்சித் தலைவியினுடைய ஆட்சிக் காலத்தில் கொடுக்கவேண்டும். குடியுரிமைப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறையிடமிருந்து பறித்த அதிகாரத்தை, மீண்டும் அவர்களுக்கு வழங்கி, மூன்று மாவட்டத்திற்கு ஒரு டி.எஸ்.பி. வீதம் ஒதுக்கி, அவர்களுக்கு மீண்டும் அந்த அதிகாரத்தை வழங்கினால் அந்தப் பதுக்கல்காரர்களையும் கடத்தல்காரர்களையும் தடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்று கூறி, இந்தக் கூட்டுறவுத் துறை மானியத்தில் பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, விடை பெறுகிறேன். வணக்கம். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. குமரி அனந்தன்.

Thiru Kumari Anandhan : Honourable Speaker, Sir on a point of clarification.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிற போது, அமைச்சர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய பரிந்துரையின்மீது உணவு பங்கீட்டு அட்டைகள் கொடுக்கப்படவேண்டுமென்று சொன்னபிறகு, எல்லாம் சிறப்பாக நடைபெறுகிறது என்று சொல்லுகிறார்கள். அமைச்சர் அவர்களுடைய நோக்கம் மிக நல்ல நோக்கம்தான். நாங்கள் பரிந்துரை செய்கின்றபொழுது சில பொறுப்புகளை எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாகவும் இருக்கின்றோம். இந்த அறிவிப்பு வெளியே வந்தவுடனேயே என்னுடைய சாத்தான்குளம் தொகுதியிலே இருந்து பலர், நீங்கள் அங்கே இருக்கிறீர்களே நாங்கள் எப்படி உணவு பங்கீட்டு அட்டை வாங்குவது என்று சொன்னவுடனேயே நான் அங்கே போய், மனு கொடுக்கிறவர்களிடமெல்லாம் வாங்கிவிடாமல் அட்டை இல்லை என்று எங்களிடம் சொல்கின்றவர்களிடம் மனுவை வாங்கி, அவர்கள் வேறு ஆட்களுடைய வீடுகளிலே குடியிருந்தால் யாருடைய வீட்டிலே அவர்கள் குடியிருக்கிறார்களோ, அந்தக் குடியிருப்புச்சான்றையும் வாங்கி அல்லது சொந்த வீட்டிலே குடியிருந்தால், வீட்டுக்கு வரி கட்டிய ரசீதையும் வாங்கி இணைத்து நான் பரிந்துரை செய்து அனுப்பியிருக்கிறேன். அதிலே ஏதாவது தவறு இருந்தால் அங்கேயிருக்கின்ற அதிகாரிகள் பிறகு

பரிசோதனை செய்வதற்குக்கூட வாய்ப்பு இருக்கிறது. எனவே இந்த அளவுக்கு நான் பரிந்துரை செய்து, மிகுந்த எச்சரிக்கையோடு, அரசாங்கத்திற்கும் நமக்கும் கெட்ட பெயர் வந்துவிடக்கூடாது என்பதற்காகவும், அதே நேரத்திலே ஏழை மக்களுக்கு, குடும்ப அட்டை வேண்டுமென்பதற்காகவும் நான் பரிந்துரை செய்திருக்கிறேன். அவைகளிலெல்லாம் சில அதிகாரிகள் மட்டுமே உணவு அட்டை வழங்குவதற்குத் தயங்குவதாகத் தெரிகிறது. ஒன்றிரண்டு பேருக்குக் கொடுத்திருப்பதாகவும் கேள்விப்படுகிறேன். இவ்வளவு தூரத்திற்கு எச்சரிக்கையாக கொடுக்கப்படுகின்ற கடிதங்களுக்கு மதிப்பளித்து, தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள், உணவு அட்டைகளை வழங்கவேண்டுமென்று ஆணையிடுவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய காலையிலே வந்த செய்தியைக்கூட நான் பார்த்தேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பதில் சொல்வதற்கு முன்னால், சட்டமன்ற உறுப்பினர்கள் கையெழுத்துப் போட்டால்தான் குடும்ப அட்டைகள் வழங்க முடியும் என்பதை கண்டித்துக்கூட ஒரு கட்சி தீர்மானம் போட்டிருக்கிறது. அப்படி எதுவும் உத்தரவு இடப்படவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுடைய கையெழுத்து இல்லாமலும் குடும்ப அட்டைக்கு விண்ணப்பம் செய்யலாம். அடுத்து சட்டமன்ற உறுப்பினர்கள் சிலவற்றை, நேரடியாகத் தெரிந்தவர்களுக்கு, அவர்கள் உறுதிமொழி எடுத்துக்கொள்வதைப் போல் கிட்டத்தட்ட இருக்கும். அப்படி கொடுப்பவர்களுக்கு விசாரணை இல்லாமல் உடனடியாகக் கொடுக்கலாம் என்று சொல்லி இருக்கிறோம். மற்ற குடும்ப அட்டைகளினுடைய பரிந்துரையோடு அனுப்பப்படும்பொழுது மற்றவைகளைவிட இவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படவேண்டுமென்றும் அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரிஅனந்தன் அவர்கள் அன்றைக்குச் சொல்லியதை நான் எடுத்துச் சொல்லி, உடனடியாக, அவர் கொடுத்த அட்டைகளுக்கு, கொடுத்த பரிந்துரைகளை பரிசீலனை செய்து முன்னுரிமை கொடுக்கவேண்டுமென்று உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையின்மீது ஒரு சில கருத்துக்களைக் கூறுவதற்கு அனுமதித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



164977

பொதுவாக, இந்தக் கூட்டுறவுத் துறை மானி[illegible] நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில் வி[illegible] கூட்டுறவுத் தேர்தலை நடத்தி, தனி அதிகாரிகளி[illegible] காலத்தை முடிவுக்குக் கொண்டுவரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறன். தொடர்ந்து தனி அதிகாரிகள்காலங்களிலே நடைபெற்றிருக்கக்கூடிய அந்த நிர்வாகத்திலே ஏற்பட்டிருக்கக்கூடிய பாதிப்புகளையெல்லாம் அனுபவரீதியாக அமைச்சர்களும் மற்றவர்களும் அறிவார்கள். எனவே, அப்படிப்பட்ட நிர்வாகம் சிறப்பாக நடைபெறுவதற்கு அந்த உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படக்கூடிய அந்த நிர்வாகம் சிறந்த முறையிலே பணியாற்றி, எந்த நோக்கத்திற்காக அந்தக் கூட்டுறவுத் துறை செயல்பட்டுக் கொண்டிருக்கிறதோ அந்த நோக்கத்தை எதிர்காலத்திலே நிறைவேற்றுவதற்காக ஒரு ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-45

அடுத்து, அந்தக் கூட்டுறவுத் துறையில் பல்வேறு கூட்டுறவுத் துறைகள் இருந்தாலும் மொத்தமாக ஏறத்தாழ பத்து இலட்சம் பணியாளர்கள் அதிலே பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களை எதிர் காலத்திலே அரசு அங்கீகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுடைய ஊதியம் என்பது ஒரு போதாமையான ஊதியமாக இன்றைய தினம் இருக்கிறது. அப்படி அவர்களுக்கும் அரசு அங்கீகரித்து, அரசு ஊழியர்களுக்கு வழங்கக்கூடிய அனைத்துச் சலுகைகளும் அவர்களுக்கும் கிடைப்பதற்கான ஒரு வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். காரணம், இன்றைய தினம் அந்த நிர்வாகம் ஒரு சமூக அமைப்போடு ஏறத்தாழ அந்தச் சமூகம் பெற்றுள்ள வளர்ச்சிக்கு இருக்கக்கூடிய விவசாயத் தொழிலை ஊக்குவிப்பதற்கு, முன்னேற்றுவதற்கு, அதைச் செயல்படுத்துவதற்கு எதிர்காலத்திலே அந்தத் துறையை நம்பியிருக்கக்கூடிய கோடிக்கணக்கான மக்கள் வாழ்வதற்கு இணைந்திருக்கக்கூடியது அந்த நிர்வாகம். எனவே, அந்த நிர்வாகத்தைச் சீரமைக்கின்ற முறையிலே எதிர்காலத்திலே சிறப்பாகச் செயல்படுகின்ற முறையில் அவர்களை அரசு ஊழியர்களாக ஆக்கி, அரசு ஊழியர்களுக்கு வழங்கக் கூடிய அந்தச் சலுகைகள் முழுமையும் அவர்களுக்கு அளிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

கூட்டுறவுத் துறை மூலம் பல்வேறு உற்பத்தித் தொழில்களுக்குக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடன் பல்வேறு காலகட்டங்களிலே ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஒத்தி வைக்கப்பட்டிருப்பது, விவசாயிகள் கட்டவில்லை என்பதற்காக அல்ல; விவசாயத் தொழில் என்பது ஒரு சாதாரண தொழில் அல்ல

D
V2ll,31'N92 N92-23-2

என்பதை நாம் அனைவரும் அறிவோம். ஒரு புறத்திலே இயற்கை பாதிப்பு கடுமையாகத் தாக்குகிறது; ஒருபுறத்திலே புயல், வெள்ளம், வறட்சி இவைகளுக்கு மத்தியிலேதான் விவசாயத்தை உற்பத்தி செய்ய வேண்டியிருக்கிறது. அதை நம்பியிருக் கக்கூடிய கோடிக்கணக்கான மக்கள் வாழ வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட ஒரு தொழிலுக்குப் பாதிப்பு வருகிறபொழுது அரசால் கூட்டுறவுத் துறை மூலம் வழங்கப்பட்டிருக்கக்கூடிய கடன் அவ்வப்பொழுது இந்த நிலைமைகளை உணர்ந்து ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அப்படி ஒத்தி வைத்திருக்கிற கடன்கள் முழுமையையும் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படித் தள்ளுபடி செய்வதன்மூலம் தான் விவசாயிகளுக்கு எதிர்காலத்திலே ஒரு குறைந்த பட்சப் பாதுகாப்பு, எதிர்காலத்திலே அவர்கள் நம்பியிருக்கக்கூடிய இந்தத் தொழிலை சிறப்பாகச் செய்வதற்கு அது உதவிகரமாக இருக்கும். ஆகவே, தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாலே பேசியவர்கள்கூட, வட்டியைத் தள்ளுபடி செய் வதற்கு அரசு பரிசீலிக்க வேண்டுமென்ற ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கப்பட்டிருக்கிறது. அப்படி வருகிறபொழுது அந்த வட்டி கட்டியிருப்பது அசலில் வரவு வைத்துக்கொள்ளப்படவேண்டும். கணக்குப் பார்ப்போமேயானால் கட்டியிருக்கிற தொகைக்கும், அசலுக்கும் கூடுதலாகவே கட்டப்பட்டிருக்கிறது. அது முழுமை: ஆண்டுதோறும் வட்டியிலே வரவு வைக்கப்பட்டு, அந்த வட்டிக்கு அபராதம் விதிக்கப்பட்டு, அந்த அபராத வட்டியை முழுமையும் சேர்த்து, செலவுத் தொகையாகக் கணக்கு எழுதப்பட்டு, இது முழுமையும் கூட்டிப் பார்த்தாலே அசலை விடக் கூடுதலாகக் கட்ட வேண்டிய நிலைமை இப்பொழுது இருக்கிறது. ஆகவே, அந்தத் தொகை முழுமையும் அசலிலே வரவு வைக்கப்பட்டால் நிச்சயமாகத் தள்ளுபடிக்கு அவசியமே கிடையாது. அது முழுமையும் தள்ளுபடிஆகிவிடும். விவசாயிகளுக்குஒரு விமோசனம் கிடைக்கும். அந்த வகையிலே எதிர்காலத்திலே அரசு ரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போன்று கூட்டுறவு. அந்தத் துறைகளிலே உரங்கள் வழங்கப்படுகின்றபொழுது, உரத்திலே வித்தியாசம் வருகிறது. தனியார் விற்பனை செய்யக்கூடிய உரம் குறைந்த விலையாக இருக்கிறது; கூட்டுறவுத் துறையிலே விற்கக்கூடிய உரம் என்பது அதிக விலையாக இருக்கிறது. ஏறத்தாழ ஒரு மூட்டைக்கு 10 ரூபாய் அல்லது 15 ரூபாய் வித்தியாசமான நிலைமைகள் இருந்து கொண்டிருக்கிறது. இது ஏன் வருகிறது, எப்படி வருகிறது என்று தெரியவில்லை. ஆகவே, ஒரு குறைந்தபட்சம், தனியார் கடையிலே விற்கக் கூடிய அளவிற்கு நம் கூட்டுறவுத் துறையிலும் அந்த உரங்கள் விற்கப்பட வேண்டும். அதேநேரத்தில் விவசாயி களுக்குத் தேவையான உரங்கள் வழங்கப்படவேண்டும். அதே நேரத்தில் விவசாயிகள் கேட்கின்ற உரங்கள்வழங்கப்படவேண்டும்.



ஏனென்றால் மண்ணுக்கு மண் - நேற்றுகூட ஒரு கேள்விக்குப் பதில் அளிக்கின்றபொழுது மண்ணுக்கு மண்ணானது - மாவட்டத் திற்கு மாவட்டம் மண்ணினுடைய தரம் வித்தியாசப்படுகிறது. அதனுடைய உரத் தேவைகளும் வித்தியாசப்படுகிறது. ஒரு மண்ணுக்கு 'சூப்பர்' அதிகம் தேவை; ஒரு மண்ணுக்கு 'பொட் டாசியம்' அதிகம் தேவை. ஒரு மண்ணுக்கு 'யூரியா' அதிகம் தேவை. அப்படிக் கோருகிறபோது, விவசாயி விரும்புகிற உரம் வழங்கப்படவேண்டும். அதற்கு மாறாக, கூட்டுறவுத் துறையிலே இந்த உரச் சத்துதான் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று நிர்ப்பந்திக்கக் கூடாது என்பதைக் கேட்டுக் கொள்கிறேன். எதிர் காலத்திலே இந்த பலஹீனம் போக்கப்பட வேண்டும்.

முற்பகல் 11-50

அதேபோல், இன்றைக்கு தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், விவசாயம் மழையை நம்பித்தான் சாகுபடி செய்யக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அப்படி மழையை நம்பி சாகுபடி செய்யக்கூடிய அந்த நிலங்களுக்கு முதலில் பயன்படுத்தக் கூடிய உரம் 'சூப்பர்'. அதை அதிகம் வரவழைத்துத் தர வேண்டும். மேலும், கூட்டுறவுத் துறையிலே, தனியார் கிரயத் திற்குக் கேட்டால்கூட, அந்த விவசாயிகளுக்குத் தேவையான உரங்கள் முழுமையும் விற்கப்பட வேண்டும்.

அதேபோல், பூச்சி மருந்துகள், பூச்சி மருந்துகள் விற்கிறபோது நிர்ப்பந்தமாக ஒரு பூச்சி மருந்து வாங்கினால்தான் அது கொடுக்கப்படும் என்ற நிலைமையை மாற்றி, விவசாயக் கடன் முழுமையும் அவர்களுக்கு அளிப்பதற்கான ஒரு சூழ்நிலை இருக்கவேண்டும். அதேபோல், நீண்டதூரம் இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களை எல்லாம், விவசாயிகளுக்குப் பயன் அளிக்கக்கூடிய வகையிலே, அருகிலே, அருகிலே கூட்டுறவுச் சங் கங்களை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி அந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் ஒருங்கிணைக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். பொதுவாக, சில இடங்களில் ஒரு கூட்டுறவுச் சங்கம் நீண்ட தூரத்திற்கு அப்பால்கூட இருக் கிறது. உதாரணத்திற்குச் சொன்னால், கீழையூரில் இருக்கக் கூடிய கூட்டுறவு வங்கிக்கு எட்டுக்குடியிலிருந்து செல்ல வேண்டி யிருக்கிறது. அதேமாதிரி எட்டுக்குடிக்கு அருகாமையில் இருக்கக் கூடிய திருவாய்மொழி கூட்டுறவு வங்கிக்கு திருக்குவளையிலிருந்து செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே, 8 கிலோ மீட்டர் தூரம் தாண்டி செல்ல வேண்டியிருக்கிறது. அந்த மாதிரி இருக்கக்கூடிய அந்தச் சிக்கல்களைப் போக்குகிற வகையிலே, அருகாமையில் இருக்கக்கூடிய பகுதிகளோடு இணைத்துச் செயல்பட வைக்க வேண்டும். அதுபோல, கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான கட்டிடங்களைக் கட்டுவதற்கான, விரைவான நடவடிக்கையை எடுத்து, ஒரு சொந்த அலுவலகம் செயல்படக்கூடிய வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. வே. தம்புசாமி] [1992 ஏப்ரல் 8

வீடு கட்டும் கூட்டுறவுத் துறையில், முன்பு திராவிட முன்னேற்றக் கழக அரசு இருந்த நேரத்தில், 25 சதவிகிதம் கொடுத்தால், மீதம் இருக்கிற அவ்வளவும் தள்ளுபடி என்று அறிவிக்கப்பட்டது. அப்படி அறிவிக்கப்பட்டு, அப்படி தள்ளுபடி செய்யப்பட்டிருக்கக்கூடிய அந்தத் தொகைக்கு அரசு, ஈடாக பணம் கொடுக்க வேண்டும். அப்படி, ஈடாகப் பணம் கொடுத்த காரணத்தினால், அது இன்றும் தள்ளுபடியாகாமல், வீடு கட்டி, வீட்டுக்கு வாங்கியிருக்கக்கூடிய அந்தக் கடன் மீது இப்போது ஜப்தி நடவடிக்கை எடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலைமை என்பது இருக்கிறது. அதை அரசு பரிசீலித்து அந்தக் கடனைத் தள்ளுபடி செய்து அதற்கான ஈட்டு மானியத்தை வரவு வைத்து, அவர்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

அதேபோல், நிலவள கூட்டுறவு வங்கிகளிலே முன்பு கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. இப்போது அந்தக் கடன் ஈட்டு மானியம் வரவு வைக்காதக் காரணத்தினால் அது தள்ளுபடி செய்யாமல், இன்றும் கடனாகக் காண்பிக்கப்பட்டு, வட்டி, அசல், அபராத வட்டி முழுமையும் சேர்த்து, வாங்கியக் கடனை விட அதிகத் தொகைக்கு இன்றைக்கு ஜப்தி நடவடிக்கை என்ற அளவுக்குப் போகக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அதையும் அரசு பரிசீலித்து, எதிர்காலத்திலே அந்தக் கடனைத் தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

அதேநேரத்தில், நெல் கொள்முதல் நிலையங்களில் நேரடியாக அரசு கொள்முதல் செய்கிறது. நேரடியாக அரசு கொள்முதலு செய்வதிலே பல்வேறு பிரச்சினைகள் அரசினுடைய கவனத்திற் கும் வந்திருக்குமென்று நினைக்கிறேன். காலத்தே அதற்கு ளாரிகளை அனுப்புவது, அப்படி கொள்முதல் செய்வதில், அந்த ளாரிகளுக்கும், அவர்களுக்கும் இருக்கக்கூடிய பல்வேறுவிதமான பிரச்சினைகள் முழுவதும் இருக்கிறது. இதைத் தவிர்ப்பதற்கு ஒரு புதியத் திட்டத்தை உருவாக்க வேண்டும். அதேநேரத்தில், 'மேக்ஸன்' என்ற பெயரால், ஈரப்பதத்தைக் காட்டக்கூடிய கருவி வித்தியாசப்படுகிறது. சில இடங்களிலே போட்டுப் பார்த்தால் 20 இருக்கிறது. சில இடங்களில் போட்டால், 22, 25 என்றிருக்கிறது. இப்படி அந்தக் கருவிக்குக் கருவி வித்தியாசப் படுகிறது. அப்படி வித்தியாசம் இல்லாமல் - விவசாயிகள் தங்களிடம் கொள்ளை லாபம் அடிப்பதாகக் கருதிக் கொண்டி ருக்கிறார்கள் - அப்படி வித்தியாசம் இல்லாமல், பழுதில்லாதக் கருவியாகப் பயன்படுத்த வேண்டும். கிட்டத்தட்ட அந்த ஈரப் பதத்தைக் கணக்கிடுவது, குறுவை நெல்லுக்கு மட்டுமே கணக் கிட வேண்டுமே தவிர, சம்பா நெல்லுக்கு கணக்கிடக் கூடாது என்பதைக் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) ஏனென்றால், சம்பா அறுவடை காலம் என்பது கிட்டத்தட்ட கோடைக் காலப் பருவத்திலேதான் அது முழுமையும் நடக்கிறது.



1992 ஏப்ரல் 8] [திரு. வே. தம்புசாமி]

அப்போதுகூட 20 ஈரப்பதம் இருப்பதாகக் காட்டப்படுகிறது. அப்போதும், அதற்கானப் பிடித்தம் செய்யப்படுகிறது. இது தவிர்க்கப்பட வேண்டும். எப்படி அரசு கூடுதல் தொகை அளித்தாலும், இப்படிப்பட்ட தன்மைகள் மூலம், அந்த தொகைகள் முழுவதும் விவசாயிகளுக்குக் கிடைக்காமல் போகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அது தவிர்க்கப்பட வேண்டும். எதிர்காலத்தில் சில கிராமங்களில் நீண்ட தூரம் இருக்கக்கூடிய அந்தப்பகுதிகளையெல்லாம் ஆய்வு செய்து, அவைகளைப் பாதுகாப்பதற்கு உரிய கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும். குறிப்பாக, தஞ்சை மாவட்டத்தில் அத்தகைய கட்டிடங்கள் வேகமாக கட்டப்பட வேண்டும். ஏனென்றால், மழைக் காலம் வருகிறது. இந்த ஆண்டு தண்ணீர் ஜூன் மாதமே வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருக்கிற சூழ்நிலைமையில் குறுவை சாகுபடி வருமேயானால் அதைக் கொள்முதல் செய்து அதை பாதுகாப்பதற்குக்கட்டிட வசதிகள் எந்தக் கிராமத்திலும் கிடையாது. ஆகவே, இந்தக் குறுவை சாகுபடி செய்யக்கூடிய ஒவ்வொரு நிலையங்களிலும் விரைவாகக் கட்டிடத்தைக் கட்டி அந்த நெல்லைப் பாதுகாப்பதற்கான நிலையை ஏற்படுத்த வேண்டும். காரணம் என்னவென்றால், ஒரு மழை, தூறல் தூறினாலே ஆயிரக்கணக்கான மூட்டை நெல் முளைத்துவிடும். அது முழுமையும் அரசுக்கு நஷ்டக் கணக்கில் வருமே தவிர, அதில் எந்தவிதமான பிரதிபிரயோசனமும் இல்லாமல் போய் விடும். (மணியடிக்கப் பெற்றது) ஆகவே அதற்கான கட்டிடங்கள் கட்ட ஏற்பாடு செய்யவேண்டும்.

முற்பகல் 11—55

அடுத்து, அதிலே பணியாற்றக்கூடிய ஊழியர்களை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்குவதற்கு அரசு முன்வர வேண்டும். அப்படி அமர்த்தும்போது அவர்களுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட வேண்டும். அது ஒரு நிரந்தரத் தொழிலாக இன்றைய தினம் இருக்கிறது. அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, நெல் கொள்முதல் செய்வதைப் போல பயறு, உளுந்தையும் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்ய வேண்டும். நெல் இருக்கும் இடம் பூராவும் என்று சொல்லவில்லை. குறிப்பாக 10 கிராமம், 4 கிராமம், 5 கிராமம் இருக்கக்கூடிய பகுதிகளை மையப்படுத்தி இன்றைக்கு புஞ்சை தானியமாக பயறு, உளுந்து அதிகமாக மகசூல் ஏற்படுகிறது. அதையும் கொள்முதல் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். உதாரணத்திற்கு, கிட்டத்தட்ட 30, 35 கி. மீட்டர் தூரத்திற்கு உளுந்து, பயறு இவைகளை எடுத்து நகரத்திற்குச் சென்று அங்கு விற்க முடியாமல், சில சமயம் குறைந்த விலைக்கு விற்கக் கூடிய சூழ்நிலையைப் பார்க்கிறோம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை கவனத்தில் கொண்டு அதற்கான நிரந்தர ஏற்பாடுகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

[1992 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முடியுங்கள்.

திரு. வே. தம்புசாமி : அதுபோன்று, கூட்டுறவு கரும்பு ஆலைகளில், கரும்பு விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய 'டிவிடெண்டு' இன்றுவரை வழங்கப்படவில்லை. அதை விரைவாக வழங்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். அது மாதிரி கூட்டுறவுத் துறையைத் பொறுத்தவரையில் சிறப்பாக எதிர்காலத்தில் செயலாற்ற வேண்டும். அதுபற்றிச் சொன்ன போது கூட அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மேற்கு வங்காளத்தில் தொழில் முன்னேற்றம் இல்லை என்று சொன்னார்கள். ஏற்கனவே மேற்கு வங்காளத்தில் இருக்கிற தொழில் பாதுகாக்கப்படுகிறது, சிறப்பாக நடைபெறுகிறது. அது ஒரு நலிந்த தொழிலாக அறிவிக்கப்படவில்லை. கூட்டுறவு அங்காடிகளில் ஏறத்தாழ 14 அத்தியாவசியப் பண்டங்கள் மக்களுக்கு வழங்கப்படுகிறது. அதையே இங்கேயும் பின்பற்றி அந்த 14 அத்தியாவசியப் பண்டங்களை வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எம். எல். ஏ-க்களைப் பற்றி...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தொடர்புடைய அமைச்சர் இருக்கிறார். அவர் பதில் சொல்லுவார். தயவு செய்து நீங்கள் அமருங்கள். திரு. பே. தர்மலிங்கம்.

திரு. பே. தர்மலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான பாளையங்கோட்டைத் தாலூக்காவில்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ம. சின்னசாமி.

திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி சார்ந்திருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கூட்டத்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் குடும்ப அட்டைகள் வழங்குவதற்கு சரியான நபர்கள் அல்லர் என்ற ஒரு பொருள் படும்படி தீர்மானம் போட்டிருக்கிறார்கள். அதில் அவர்களுடைய கருத்து என்ன? அவர் அந்தக் கருத்துக்கு உடன்பாடா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவா : திரு. வே. தம்புசாமி.



1992 ஏப்ரல் 8]

திரு. வே. தம்புசாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மாநிலக் குழு தூத்துக்குடியில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கிறது. தகுதியுள்ளவர்கள் அல்லர் என்பது அல்ல பிரச்சினை. சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பல்வேறு விதமான வேலைகள் இருக்கின்றன. அது ஒன்று. இரண்டாவது, தொகுதி முழுமையிலிருந்தும் வரக்கூடியவர்கள், எந்த வீட்டில் குடியிருக்கிறார்கள். எப்படி இருக்கிறார்கள். வீட்டு வரி கட்டியிருக்கிறார்களா? கட்டாமல் இருக்கிறார்களா? யார், எப்படி என்று முழு விவரங்களையும் தெரிந்து கொள்ள முடியாது. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அது சரிபார்க்கப்பட்டுத்தான் தரப்படுகிறது.

திரு. வே. தம்புசாமி : இரண்டாவது என்னவென்றால், சட்டமன்ற உறுப்பினர்களை நீண்ட தூரத்தில் உள்ள மக்கள் தேடி வரவேண்டியிருக்கிறது. ஆகவே, அந்த அந்தப் பகுதிகளில் இருக்கிற வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து அவர்கள பெற்றுக் கொள்ளலாம். அதைத்தான் சொன்னேனே தவிர தகுதி அற்றவர்கள் அல்லர் என்ற நிலையில் அல்ல. சாதாரண மக்கள் நீண்ட தூரம் போக வேண்டிய நிலை இருக்கிறது. (குறுக்கீடு)

நண்பகல் 12-00

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் ; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பாக அதிகமான சட்டமன்ற உறுப்பினர்கள் இருந்தால் இப்படிப்பட்ட தீர்மானத்தை அவர்கள் நிறைவேற்றியிருப்பார்களா என்பதை யோசித்துப் பார்க்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுத்த கடிதத்திற்கு குடும்பக் கார்டுகள் வழங்கப்பட்டாலும் அதற்குப் பிறகும் அது அதிகாரிகளால் சரிபார்க்கப்படும் என்பதுதான் உண்மை.

திரு. ஜி. பழனிசாமி ; மாண்புமிகு பேரவைத் துணை தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ; அமைச்சர் அவர்கள் விளக்கம் தந்து விட்டார்கள். எனவே திரு. ஜி. பழனி சாமி அவர்கள் அமரவும். திரு. பே. தர்மலிங்கம், பேசுங்கள்.

[1992 ஏப்ரல் 8

<u>திரு. பே. தர்மலிங்கம்</u> ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியான பாளையங்கோட்டை தாலூகாவை தொழில் வளத் துறையில் முன்னேற்றும் எண்ணத்தோடு வேலைவாய்ப்பு பெருகும் வகையிலும் பாளையங்கோட்டைத் தாலூகாவைத் தொழில் வளர்ச்சியில் பின்தங்கிய தாலூகாவாக அறிவித்து பாளை தொகுதி மக்களின் காவல் தெய்வமாக விளங்கும் எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக பொற்கால முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என்னுடைய தொகுதி மக்கள் சார்பாக நன்றியை அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன்.

கூட்டுறவே நாட்டுயர்வு என்பதற்கிணங்க கூட்டுறவு அமைப்புகள் நாட்டிலே உருவாக்கப்பட்டன. இந்த அமைப்புகள வேளாண்மைத் துறையிலே உள்ளவர்கள் மிகுந்த பயனடையவும் அவர்களுக்குத் தேவையான உரக் கடன்கள், நகைக் கடன்கள், இந்தத் துறையின் மூலம் பெற்று வந்த நிலைமை மாறி இரண்டு ஆண்டுகள் நடைபெற்ற கருணாநிதியின் ஆட்சியில் தி.மு.க.வின் வியாபாரக் கூடமாக மாறியதை மாற்றி உண்மையில் விவசாய மக்களுக்கு உதவும் வகையில் துறையாகச் செயல்பட வைத்த இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு உணவு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் பாராட்டுதலைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

மக்களவையில் அறிவிக்கப்பட்ட தேசிய கொள்கைக்கு ஏற்ப, தேசிய வீட்டுவசதி வங்கியின் மறுநிதி உதவியுடன் கிராமப் புறங்களில் வீடுகள் கட்ட கடன்கள் வழங்க, தொடக்க நிலவள வங்கிகள் மூலம் அனுமதிக்கப்பட்டு தனி நபர் ஒருவருக்கு ஒரு இலட்சம் கடன் கொடுக்க வகை செய்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களைப் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

இந்தியாவிலேயே பொது விநியோகத் திட்டத்தின் கீழ் சில்லரை வியாபாரம் செய்யும் அமைப்பைப் பெருமளவில் கூட்டுறவு சங்கங்கள் மூலம் செயல்படுத்தும் ஒரே மாநிலமாக இதய தெய்வம் டாக்டர் புரட்சித்தலைவி அரசு நடத்தும் தமிழகம் திகழ்கிறது என்பதை பெருமையுடன் கூறிக் கொள்ளக் கடமைப் பட்டுள்ளேன்.

இதய தெய்வம் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சியில்தான் ரேஷன் கடைகளில் உணவுப் பொருட்கள் தட்டுப்பாடு இல்லாமல் வழங்கப்பட்டு வருகிறது. மத்திய அரசு விலையை உயர்த்தினாலும் ஏழை, எளிய மக்கள் பாதிக்காத வகையில் அதிகபட்சமாக விலையை உயர்த்தாமல் நியாயமான விலையில் உணவு பொருட்கள் விநியோகம் செய்வது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.



1992 ஏப்ரல் 8] [திரு. பே. தர்மலிங்கம்]

இரண்டு ஆண்டு ஆட்சி செய்த கருணாநிதியின் மக்கள் விரோத ஆட்சியில் நிறுத்தி வைக்கப்பட்ட பாமாயில் விநியோகத்தை மாற்றி வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்து மக்களுக்கு வழங்கி இது மக்களாட்சி என நிரூபித்த பெருமை எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையே சாரும். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாட்சிக்குக் களங்கம் ஏற்படுத்தும் வண்ணம் சமூக விரோத கும்பலால் நெல்லை கட்டபொம்மன் மாவட்டத்தில் இருந்து கேரளாவிற்குப் பெருமளவில் அரிசி கடத்தி வந்ததைத் தடுக்கும் வகையில் சோதனைச் சாவடிகளில் இரும்பு தடுப்புக் கட்டைகளைப் பொருத்தி, காவல் துறையனரை நிறுத்தி, லாரிப் போக்குவரத்தைக் கட்டுப்படுத்தி உயர் அதிகாரிகளை அடிக்கடி திடீர் தணிக்கை மேற்கொள்ளச் செய்து தவறு செய்தவர்கள் மேல் கடும் நடவடிக்கை எடுத்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப் பட்டுள்ளேன்.

நெல், அரிசி வியாபாரத்தில் லெவி முறையை ரத்துச் செய்ததின் மூலம் அந்தத் துறையில் நிலவி வந்த லஞ்ச ஊழலை ஒழித்து லெவி முறையை ரத்துச் செய்ததன்மூலம் கள்ளக்கடத்தலைத் தடுத்ததன்மூலமும், கடத்தல்காரர்களைக் கைது செய்ததின் மூலமும் சமூக விரோதிகளின் செயலால் ஏற்பட்ட அரிசி விலையைப் பெருமளவில் குறைத்த இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு உணவ அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

பல மாதங்களாகத் தேங்கிக் கிடந்த அரிசி ஆலை விண்ணப்பங்களை விரைவாக ஆராய்ந்து உத்தரவுகள் பிறப்பித்தும், அமைச்சரே நேரடியாக கடைகள், கிடங்குகள், சோதனைச் சாவடிகள், ஆகியவற்றைத் தணிக்கை செய்து தவறு செய்த அலுவலர்கள், மேல் நடவடிக்கை எடுத்து உண்மையாக உழைக்கின்ற அலுவலர்களுக்கு ஊக்கம் கொடுத்த பெருமை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையே சாரும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள ஆசைப் படுகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களின் கோரிக்கைகளைக் கேட்டு புதிய அட்டைகள் கொடுத்தல், பகுதி நேரக் கடைகள் திறத்தல் போன்ற கோரிக்கைகளை ஏற்று உடனடி ஆணை பிறப்பித்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களையும் மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்களையும் பாராட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

[திரு. பே. தர்மலிங்கம்] [1992 ஏப்ரல் 8

ரேஷன் கடையில் குடும்பக் கார்டுக்கு வழங்கும் மண்ணென் ணெய் தவிர நகராட்சிப் பகுதிகளில் ஒவ்வொரு வார்டுக்கும் ஒரு மண்ணெண்ணெய் வண்டி என்கிற வகையில் தனியாருக்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் மூலம் அனுமதி வழங்கும் முறையில் கருணாநிதியின் ஆட்சியில் பல முறைகேடுகள் நடைபெற்றுள்ளன. குறிப்பாக நெல்லை, பாளை பகுதிகளில் இறந்து போனவர்களின் பெயரிலும் அனுமதி கொடுத்துள்ளனர். அப்படி விநியோகம் செய்து வரும் வியாபாரிகள் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு ஆங்காங்கே அதிக விலைக்கு விற்று வருகிறார்கள். ஆகவே இப்போது நடைமுறையில் உள்ள அனுமதியை உடனடி யாக ரத்துச் செய்து உண்மையில் மக்களுக்கு விநியோகம் செய் பவர்களுக்கு அனுமதி வழங்கிட மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், உணவு அமைச்சர் அவர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களால் நடப்பாண்டில் அறிவிக்கப்பட்டுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலை திட்டத்தில், நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தைச் சேர்த்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கு நெல்லை மாவட்ட மக்களின் சார்பில் நன்றியை தெரிவித்து அப்படி அறிவிக்கப்பட்டுள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலையை தொழில் வளத்தில் பின் தங்கிய பகுதியாக மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ள எனது தொகுதியான பாளையங்கோட்டைத் தாலுக்காவில் அமைத்திட பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவு வங்கிகளின் மூலம் பெரும்பாலும் பெரிய தொகை களே கடன்களாக வழங்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் வசதி படைத்தவர்களே பயன் அடைகிறார்கள். இந்நிலையை மாற்றி தாயுள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அவர்கள், ஏழை தாய் மார்கள் பயன் பெறும் வகையில் பீடி சுற்றும் தாய்மார்களும் ரோட்டோரங்களில் இட்லி, தோசை வியாபாரம் செய்யும் ஏழை எளிய தாய்மார்களும் பயன் பெறும் வகையில் ரூ. 1,000 அல்லது ரூ. 2,000 என்ற வகையில் கடன்கள் வழங்கி ஏழைக் குடும்பங்களின் வறுமையை போக்கிட இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் நடவடிக்கை எடுத்திட பணிவுடன் வேண்டுகிறேன்.

கூட்டுறவு துறையின் மூலம் குறிப்பிட்ட நகரங்களில் ஏழை யெளிய மக்கள் பயன்பெறும் வகையில் கேண்டீன்கள் அமைத்து குறைந்த விலையில் இட்லி, வடை, பொங்கல் வழங்கிட ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக சட்டமன்ற உறுப்பினர் தங்கும் விடுதியில் ஒரு பொங்கல் வடை சாப்பிடு வதற்கு 6 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. அதே பொங்கல் வடை



1992 ஏப்ரல் 8] [திரு. பே. தர்மலிங்கம்]

தலைமை செயலகத்தில் கூட்டுறவு கேண்டீன் மூலம் ரூ. 3.75-க்கு ருசியுடன் வழங்கப்படுகின்றன. ஆகவே வேலையில்லா பட்ட தாரிகள் பயன்பெறும் வகையில் கூட்டுறவு மூலம் கேண்டீன் வழங்க மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர் களைக் கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதியான பாளையங்கோட்டை தொகுதியில் உள்ள மடத்துப்பட்டி, அடமிதிப்பான்குளம், குத்துக்கல் ஆகிய மூன்று கிராம பகுதிகளுக்கும் ரேஷன் கடைகள் அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : திரு. இரா. பழனிசாமி.

<u>திரு. பே. தர்மலிங்கம் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> திரு. இரா பழனிசாமி அவர்களைப் பேசுமாறு அழைத்திருக்கிறேன். திரு. இரா. பழனிசாமி.

<u>திரு. இரா. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை, உணவு மற்றும் நுகர் வோர் பாதுகாப்புத் துறை மானியக் கோரிக்கையின் மீது பேச வாய்ப்பு அளித்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலிலே, ரேஷன் பொருள்கள் வழங்குவது பற்றி ஒரு சில கருத்துக்களை சொல்ல முற்படுகிறேன். ரேஷன் பொருள்கள் மக்களுக்குச் சரியாக, உரிய அளவு சேர நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் நிறைய தவறுகள் நடைபெறுகின்றன. ரேஷன் கடைக்கு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடு சரியாக போய்ச் சேர்ந்தால் விற்பனையாளர்கள் மக்களுக்கு ரேஷன் பொருட்களை ஒழுங்காக விநியோகிப்பார்கள். ஆனால் ஒதுக்கப்பட்ட அளவு கடைகளு குச் செல்வதில்லை. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷனில் இருந்தே தவறு ஆரம்பித்து விடுகிறது. 100 கிலோ பொருள் ரேஷன் கடைக்குச் செல்லும்பொழுது 95 கிலோ தான் செல்லுகிறது. சிறிய ரேஷன் கடைகளில் 100 கிலோ எடை அளவு உள்ள மூட்டையை எடைபோடும் அளவுக்குத் தராசு இல்லை. சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன்காரர்களும் தராசு கொண்டு செல்வ தில்லை. ஒரு மூட்டை இறக்கினால் 100 கிலோ என்ற கணக்கில் கடைக்கினை ஒப்படைக்கிறார்கள். அதை ஒப்புக்கொண்டு வாங்க வில்லை என்றால் திரும்ப எடுத்து வந்துவிடுகிறார்கள். விற்பனை யாளர் மீது புகார் கூறி விற்பனையாளரை சஸ்பெண்டு செய் வதுடன் மீண்டும் வேர்ஹவுசில் இருந்து பொருளை விற்பனை யாளரே தன் சொந்த செலவில் எடுத்துச் செல்லும் நிலையை உருவாக்குகிறார்கள். எனவே ஒதுக்கீடு முழுமையாக செல்லாததால்

[திரு. இரா. பழனிசாமி] [1992 ஏப்ரல் 8

விற்பனையாளரும், மக்களுக்கு சரியான அளவு வழங்காமல் தவறு செய்கிறார்கள், இதை முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழும் அனைத்து குடும்பங்களுக்கும் ஒரு குடும்பத்திற்கு 20 கிலோ அரிசியை குறைந்த விலையில் வழங்க அரசு முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

1992-93 பட்ஜெட் உரையின் மீது நான் பேசுகின்றபோது உணவு பொருட்கள் பொதுமக்களுக்குச் சரியான எடை அளவு செல்வதில்லை, விற்பனையாளரும் அரசு அதிகாரிகளும் சேர்ந்து கூட்டாகத் தவறு செய்கிறார்கள் எனக் குறிப்பிட்டு பேசிய உடனே அதிகாரிகள் வீராவேசம் கொண்டு குறிப்பாக நான் வசிக்கும் மேச்சேரி ஊராட்சி ஒன்றியத்தில் பல ரேஷன் கடை களுக்குச் சென்று, காலையில் கடையைத் திறப்பதற்கு முன் பாகவே அங்கு முகாமிட்டு ஸ்டாக் வெரிபிகேஷன் என்று கடை யைச் சோதனையிட்டு பல விற்பனையாளர்களை தற்காலிக வேலை நீக்கம் செய்துள்ளார்கள். இது சட்டமன்ற உறுப்பினரை திருப்திபடுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கையாகத்தான் உள்ளதே தவிர, வினியோகத்தை ஒழுங்குபடுத்துகின்ற நடவடிக்கையாக தெரியவில்லை. தவறுகளைச் சுட்டிக்காட்டும்பொழுது அது நடைபெறாமல் இருப்பதற்கு வழிவகை வகுக்க வேண்டுமே யொழிய சட்டமன்ற உறுப்பினரை திருப்திபடுத்துவதற்கு உண் டான வழிகளை அரசு அதிகாரிகள் செய்யக்கூடாது எனச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 12—10

மேலும் ரேஷன் கடைகளை சோதனையிடும் அதிகாரிகள் உரிய அளவு மக்களுக்கு வினியோகிக்கிறார்களா என்பதைப் பார்த்தால் மட்டும் போதாது. உரிய அளவு குறிப்பாக அரிசி மண்ணெண்ணெய், பாமாயில், சர்க்கரை போன்றவை கடை களுக்கு வந்து சேர்கின்றனவா எனவும் பார்க்க வேண்டும். தாலுகா மாவட்ட வினியோக அதிகாரிகள் நேரடியாகச் சென்று பல கடைகளை தணிக்கை செயது தவறு ஏற்பட்டால் நட வடிக்கை மேற்கொள்ள வேண்டும். மேலும் ரேஷன் பொருட் கள் அனைத்தும் ஒரே நாளில் மக்களுக்குக் கிடைப்பதற்கு உண்டான நடவடிக்கையை அரசு மேற்கொள்ள வேண்டும். ஏழை தொழிலாளர்கள் தினசரி வேலைக்குச் செல்கிறவர்கள், ஒவ்வொரு பொருள் ஒவ்வொரு நாள் வாங்கச் சென்றால் அதற்கு ஒரு வாரம் சென்றுவிடுகிறது. மேலும் தற்பொழுது 1200 கார்டுகளுக்கு ஒரு ரேஷன் கடை என்று உள்ளதை தளர்த்தி 800 ரேஷன் கார்டுகளுக்கு ஒரு கடை என்று அறிவித் தால் நீண்ட நெடுந்தூரம் சென்று வாங்கக்கூடிய கிராமப் பகுதி



1992 ஏப்ரல் 8] [திரு. இரா. பழனிசாமி]

களுக்கு நன்மை பயக்கக் கூடியதாக இருக்கும். இதை அரசு கவனித்து நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள் கிறேன்.

அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்கள் 'நான் பொறுப்பேற் கிறேன்' என்று எழுதிக் கொடுத்தால் எந்தவித விசாரணையும் இல்லாமல் உடனடியாக ரேஷன் கார்டு வழங்க அமைச்சர் அவர்கள் உத்தரவு பிறப்பித்தார்கள். ஆனால் சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்பேற்று எழுதிக் கொடுக்கும் அனைத்துக் கடிதங்களுக்கும் ரேஷன் கார்டு வழங்க அதிகாரிகள் வசம் ரேஷன் கார்டுகள் இல்லை. தாலுகா மட்டத்திலே 100 கார்டு களை கேன்சல் செய்தால் 50 புதிய கார்டுகளை வழங்கலாம் என்ற உத்தரவு இன்றும் நடைமுறையில் உள்ளதால் சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்பேற்கும் அனைவருக்கும் ரேஷன் கார்டு வழங்கப்படுவதில்லை. எனவே, அரசு மேற்சொன்ன உத்தரவை தளர்த்தி சட்டமன்ற உறுப்பினர்கள் பொறுப்பேற்கும் அனைத்து விண்ணப்பங்களுக்கும் ரேஷன் கார்டுகள் வழங்க உத்தரவு பிறப் பிக்க வேண்டுமென்று அரசை கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

அடுத்து, தமிழ்நாடு முழுவதும் ஒவ்வொரு கூட்டுறவுச் சங் கத்திற்கும், நிலவள வங்கிக்கும் ஒரு செயலாளர் இருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரிந்ததே. அவர்தான் அந்தக் கூட்டுறவுச் சங்கத்தின் நிலவள குட்டி ராஜாவாக செயல்படு கிறார். பெருவாரியான செயலாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தையே ஆட்டிப் படைக்கிறார்கள். யாரையும் இவர்கள் மதிப்பதே இல்லை. இன்றுவரை கூட, இன்றைய முதல் அமைச்சர், முன் னாள் முதல்வர் புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர்., முன்னாள் பாரத பிரதமர் ராஜீவ் காந்தி இவர்கள் படத்தை மாட்ட கூட அனுமதிக்காத செயலாளர்கள் இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் சில அறிவுரைகளை வழங்க அவர்களை அழைத்தால் கூட அவர்கள் மதித்து வருவதில்லை. இதற்கு எல்லாம் என்ன காரணம் என்று அரசு சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும். இவர்கள் எல்லாம் நிரந்தர செயலாளர்களாக இருக்கிறார்கள் இவர்களை ஒரு இடத்தை விட்டு ஒரு இடத்திற்கு மாறுதல் செய்வதற்கு அரசு சட்டத்தைத் திருத்த வேண்டும். தவறு செய்யும் செயலாளர், எழுத்தர் போன்றவர்களை மாறுதல் செய்வதற்கு அரசு அனைத்து ஏற்பாடுகளையும் செய்யவேண்டும். (மணியடிக்கப் பெற்றது)

கூட்டுறவுச் சங்கங்களில் செயலாற்றும் ஒரே தகுதியுடைய செயலாளர் ஒரு சங்கத்தில் ரூ. 2000 சம்பளம் வாங்குகிறார். வேறு ஒரு சங்கத்தில் ரூ. 4000 வரை வாங்குகிறார். அதேபோல

[திரு. இரா. பழனிசாமி] [1992 ஏப்ரல் 8]

ஒரு எழுத்தர் சம்பள விகிதமும் 1000 ரூபாய் முதல் 2500 ரூபாய் வரை உள்ளது. ஒரே தகுதியுடைய அனைத்து செயலாளர்களும், எழுத்தர்களும் ஒரே மாதிரி சம்பளத்தைப் பெற அரசு ஒரு அறிவிப்பை வெளியிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, ஒன்றே ஒன்றை சொல்ல அனுமதி தர வேண்டுகிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு அளித்த கடனை வசூல் செய்வதில் அரசு கடுமையான நடவடிக்கை எடுப்பதைத் தவிர்த்து குறிப்பாக ஜப்தி செய்யாமல் விவசாயிகளுக்கு சலுகை அறிவிக்க வேண்டும். ஒரு குறிப்பிட்ட தேதியை நிர்ணயம் செய்து அந்தத் தேதியில் இருந்து ஒரு ஆண்டுக் காலத்திற்குள் அசலை திரும்பச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டி தள்ளுபடி செய்யப்படும் என அரசு அறிவித்தால் விவசாயிகள் கடனை திரும்ப செலுத்துவதற்கு வாய்ப்பாக இருக்கும். கடன் தொகையும் வசூல் ஆகும். அசலை திருப்பி செலுத்தியவர்களுக்கு வட்டியை தள்ளுபடி செய்து கொடுக்க அரசு முன்வர வேண்டும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இறுதியாக, நல்ல அறிவிப்பை விவசாயிகளுக்கு அறிவிக்க வேண்டும் எனக் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> திரு. நா. சா பழனிசாமி.

பிற்பகல் 12-15

<u>திரு. நா. சா. பழனிசாமி :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த மானியக் கோரிக்கைகள் மீது உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை முன் வைக்க வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

ரிசர்வ் வங்கியால் 1951- நியமிக்கப்பட்ட கிராமப்புறக் கடன் ஆய்வுக் கமிட்டி அதனுடைய கண்டுபிடிப்பாக சொன்ன புகழ் பெற்ற வாசகம், 'Co-operatives has failed but Co-operation must suceed' என்பதாகும். கூட்டுறவுச் சங்கங்கள் அதன் சேவையில் எதிர்பார்ப்பிற்கு ஈடுகொடுத்து செயல்படவில்லை என்றாலும் வேளாண்மைத் தொழிலுக்கு கடன் வசதி செய்ததில் கூட்டுறவுகளின் பங்குதான் பெரும் பங்காக உள்ளது. விவசாயமும், கிராமப்புறமும் முன்னேற வேண்டுமானால் கூட்டுறவுகள் வலுப் பெற வேண்டுமென்ற உண்மையை ஒத்துக்கொண்டாக வேண்டும். 4655 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மூலமாக நபர் ஜாமீன் பேரில் தனி நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக 30,000 ரூபாயும், அதில்



1992 ஏப்ரல் 8] [திரு. நா. சா. பழனிசாமி]

7,500 ரூபாய்வரை 11.5 சத வட்டியிலும், ரூ. 25,000-க்கு மேற்பட்ட கடனுக்கு 15 சத வட்டியிலும் வசூலிப்பதாகக் கொள்கைக் குறிப்பு கூறுகிறது. ஆனால் நபார்டு தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கிக்கு 3 சத வட்டியில் கொடுக்கும் பணத்தை 3.5 சத வட்டிக்கு மத்திய கூட்டுறவு வங்கிகளுக்குக் கொடுக்கிறது. மத்திய கூட்டுறவு வங்கிகள் இத்தொகையை 9 சத வட்டிக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்குகின்றன. இறுதியாக, விவசாயிகள் 11.5 சத வட்டிக்கும் 15 சத வட்டிக்கும், நகைக் கடனைப் பொறுத்தவரையில் 20 சத வட்டிக்கும் பெற வேண்டிய நிலை இருக்கிறது. மத்திய கூட்டுறவு வங்கிகள் இவ்வளவு இடைத் தரகு பெற வேண்டுமா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுவும் மத்திய கூட்டுறவு வங்கியிலிருந்து தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்குத் தரும்போது 5.5 சதம் வட்டி அதிகரிக்கிறது. மேலும் குறுகிய காலப் பயிர்க் கடன்கள் தவணை தவறும்போது அபராத வட்டி சேர்க்கப்பட்டு, வட்டி மீது வட்டி போக்கப் பட்டு, 20 சத அளவு வசூலிக்கப்படுகிறது. இது பிரியாரிட்டி செக்டார் என்ற அளவில் விவசாயத்திற்கு முன்னுரிமை கொடுத்துச் செய்யும்போது, மற்ற தொழில்களுக்கு வணிக வங்கி வட்டி வீதத்தைப் போலவே அதிகரித்துவிடுகிறது அதுவும் விவசாயத்திற்கு நகையீட்டுக் கடன் கொடுப்பதில் 20 சத வட்டி என்பதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

77.06 இலட்சம் மொத்த நில உடமையாளர்களில் 67.58 இலட்சம் நில உடமையாளர்கள் சிறு மற்றும் குறு விவசாயிகள் என்று அரசின் கொள்கைக் குறிப்பு கூறுகிறது. இதில் 1992 ஜனவரிவரை மொத்த விவசாயக் குடும்பங்களில் 79 சதத்தினரான சிறு மற்றும் குறு விவசாயக் குடும்பங்களில் 75.4 சதத்தினரை அங்கத்தினராகக் கொண்டிருக்கும் மாபெரும் ஸ்தாபனங்களான தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு சலுகைகள் அளிக்கின்றபோது, சிறு விவசாயிகள் எண்ணிக்கை 75.4 சதமாக இருக்கின்றபோதும், கூட்டுறவுக் கடனிலே அளிக்கப்படும் சலுகை ஒரு சிலருக்கு மட்டும்தான் வழங்கப்படுகிறது. இவ்வளவு பெரும் தரப்பினருக்கு வழங்கப்படுவதில்லை.

விவசாய உற்பத்தி மற்றும் விற்பனையில் ஒரு உறுதியில்லாத நிலையில், எல்லாப் பயிருக்கும் காப்புறுதித் திட்டம் கொண்டு வராத நிலையில் கடனை வாங்கி மண்ணில் போட்டு, குறைந்த பட்சம் 6 மாதம் அறுவடைக்குக்காத்திருந்து, பல நேரங்களில் இலவு காத்த கிளி போல விவசாயிகள் விதை முதலைக்கூட இழக்கின்ற சூழ்நிலைகளில், கடனைப் பெரும்பாலும் திருப்பிச் செலுத்த முடியாமல் போய்விடுகிறது. ஆனால் கடனுக்கான வட்டி அதிகரித்துக்கொண்டே இருக்கிறது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தன்னுடைய தேர்தல் அறிக்கையிலேயே, ''கடனிலே பிறந்து, கடனோடு வாழ்ந்து,

[திரு. நா. சா. பழனிசாமி] [1992 ஏப்ரல் 8

கடனோடு சாகின்ற விவசாயிகள்'' என்ற உண்மையை உறுதியோடு கூறியிருக்கிறார்கள். எனவே இந்தக் கடனுக்கு வட்டியையாவது, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் சட்டமன்றத்திலே கூறியபடி, தள்ளுபடி செய்து விவசாயிகளைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகளுக்குக் கடன் சலுகை அளிப்பதிலே பெரிய விவசாயிகள், சிறிய விவசாயிகள் என்று பிரித்துப் பார்ப்பதை தயவு செய்து கைவிடக் கேட்டுக் கொள்கிறேன். விரலுக்கு ஏற்ற வீக்கம் என்பதுபோல பெரிய விவசாயி என்றால் பெரிய கடன்காரனாகவும் சிறிய விவசாயி என்றால் சின்னக் கடன்காரனாகவும் இருக்கிறார்கள். ஆமை பூந்த வீடும் அமீனா பூந்த வீடும் உருப்படாது என்னும் வைதீக நம்பிக்கை கொண்டவர்கள் விவசாயிகள். ஜப்தி, ஏலம் என்பது தனக்கு இழைக்கப்பட்ட உயர்ந்தபட்ச அவமானமாக நினைப்பவர்கள் விவசாயிகள். எனவே ஜப்தி ஏலம் வரை வருவதை கையில் பணம் வைத்துக்கொண்டிருக்கும் எந்த விவசாயியும் விரும்பமாட்டான். ஜப்தி ஏல நிர்ப்பந்தம் வரும்போது தாலி தண்டைகளை அடமானம் வைத்தாவது கடன் கட்டுகிறவன் விவசாயி. அந்த நிலையில் இல்லாதவர்கள் ஜப்திக்கு விட்டு விடுகிறார்கள்.

ஜப்தி என்ற வெள்ளைக்காரன் காலத்து அவமானச் சட்டம் ஜனநாயக நாட்டிலும் தொடர்வது நல்லதல்ல. லார்டு வெல்லஸ்லி கவர்னர் ஜெனரலாக இருக்கும்போது கொண்டு வந்த ஜப்திச் சட்டம் நில வரி வசூலுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டது. 1972 ஆம் ஆண்டு நிலவள வங்கி கூட்டுறவுக் கடன்களுக்கும் இதைப் பயன்படுத்தி வசூலிக்கலாம் என்ற சட்டத் திருத்தத்தை தமிழநாடு சட்ட மன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றியவர்கள் தி.மு.க.வினர். அதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் பல விவசாயிகள் வழக்கு தொடுத்தபோது, அப்போதைய தலைமை நீதிபதியாக இருந்த திரு. எம். எம். இஸ்மாயில் அவர்களும், திரு. சய்யீர் சததார் என்ற மற்றொரு நீதிபதியும் இணைந்து அளித்த டிவிஷன் பெஞ்ச் தீர்ப்பில் ''நிலவரி அல்லாத ஒன்றை நிலவரியாகப் பாவித்து கற்பனை செய்து வசூலிப்பதற்கோ, அதற்கான சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதற்கோ தமிழ்நாடு சட்டமன்றத்திற்கே அதிகாரமில்லை'' என்ற நியாயமான தீர்ப்பினைக் கூறினார்கள். அந்தத் தீர்ப்புக்குப் பிறகு புரட்சித் தலைவர் அவர்கள் காலத்தில் ஜப்தி செய்யப்பட்ட விவசாயப் பொருட்கள் மீண்டும் விவசாயிகளுக்கு திருப்பித் தந்தார்கள். அதன் பின் எப்படியோ நீதியை நிர்வாகம் வென்றுவிட்டது. இன்று விவசாயப் பொருட்களான டிராக்டர்கள் ஜப்தி செய்யப்பட்டுள்ளவை எல்லாம் விடுவிக்கப்படாமல் இருக்கிறது. எனவே அப்படிப்பட்ட வேளாண்மை உற்பத்திச் சாதனங்களான டிராக்டர்கள், மின்சார மோட்டார்கள், டீசல் என்ஜின்கள் மற்றும் உழவு மாடுகளையெல்லாம் பிடித்து வைத்தால் விவசாயப் பணிகள் தடைப்படும். இதனால் வேளாண்மை செய்யக்கூடிய தொழிலாளர்களும் வேலை இழந்து நிற்



1992 ஏப்ரல் 8] [திரு. நா. சா. பழனிசாமி]

பார்கள். விவசாயமும் பாதிக்கப்படும். எனவே இப்படிப்பட்ட பொருட்களை திருப்பித் தரவேண்டுமென்று மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் வேண்டுகோளாகக் கூறிக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது)

பிற்பகல் 12–20

கூட்டுறவுச் சங்கங்கள் நீண்டகாலமாக தனி அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால், அதன் உறுப்பினர்களுக்கு அந்த சங்கங்களில் உரிமை இருக்கிறது என்பதுகூட மறந்து போய் விட்டது. கூட்டுறவுகளில் அரசியல் தலையீடு நாளுக்குநாள் அதிகரித்து வருவதும், தொழில் கூட்டுறவுகளில் அந்தத் தொழிலுக்குச் சம்பந்தமில்லாதவர்கள் உறுப்பினராகி, தேர்தலில் தில்லுமுல்லு செய்வதும், அப்படியும் வெற்றி பெற முடியாத போது நியமன உறுப்பினர்களைப் போட்டு தலைவர் பதவியைப் பிடிப்பதும் சென்ற அரசின் இமாலயத் தவறாக இருந்தன. இந்த அரசு அப்படிப்பட்ட தவறுகளைக் களைந்து கூட்டுறவை நல்ல முறையில் நடத்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பயிர்க் கடன்கள் கொடுக்கும்போது, விவசாயிகளுக்குத் தேவையான காலத்தில் கடன்கள் கிடைப்பதில்லை. பயிர்க்கடன்கள் என்பதில், பணம், பொருள் என்று பிரிக்காமல் பணமாகவே கொடுத்து, விவசாயிகள் தங்கள் விருப்பத்திற்கு உரங்களை வாங்க அனுமதிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன. நிலவள வங்கிக் கடன்களை கட்டி முடித்தபோதும் கூட, மூன்று ஆண்டுகளாகியும் எங்கள் மாவட்டத்தில் கடன் பத்திரங்களைத் திருப்பிக் கொடுக்காமல் இருக்கிறார்கள். எனவே அந்தக் கடன் பத்திரங்களைத் திருப்பிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

உணவு வழங்கல் துறையைப் பொறுத்தவரையில் இப்போது எல்லோருக்கும் ரேஷன் கார்டுகள் மூலம் உணவு வழங்குவது அவசியமா என்பதைப் பற்றி அரசு சிந்திக்க வேண்டும். உணவை உற்பத்தி செய்கிற விவசாயிகளுக்கு - சிறிய விவசாயிகளுக்கு மட்டும் தான் உரம் மானியமாக வழங்கப்படுகிறது. ஆனால் அவர்கள் உற்பத்தி செய்யும் அரிசியை எல்லோருக்கும், வசதி படைத்தவர்களுக்கும் சேர்த்து மானியமாக கொடுப்பது நியாயம் தானா என்பதைச் சிந்திக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உணவு மானியத்தில் 500 கோடி அளவுக்கு உயர்வைத் தடுப்பதற்காக வசதி படைத்தவர்களுக்கு அரிசியோ மற்ற விவசாயப் பொருட்களோ மானியமாகக் கொடுக்கவேண்டியதில்லை என்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

[1992 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. கே. கே. சின்னப்பன்.

திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் மானியக் கோரிக்கையில் எனது கருத்துக்களை வெளியிட அனுமதித்த தங்களுக்கு நன்றியைக் கூறிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பண்டித ஜவஹர்லால் நேரு அவர்களும், அன்னை இந்திரா காந்தி அவர்களும், எங்கள் அன்புத் தலைவர் ராஜீவகாந்தி அவர்களும் கூட்டுறவுத்துறை மூலம்தான் நாடு உயர முடியும் என்ற உன்னத நோக்கத்தோடு பொது விநியோகத் துறையை அன்னை இந்திரா காந்தி அவர்கள் கூட்டுறவுத்துறை மூலமாகச் செயல்படுத்த வேண்டுமென்று முயற்சிகளை எடுத்தார்கள். இன்றையதினம் நமது அரசு பொறுப்பேற்றுக் கொண்டதற்குப் பிறகு கூட்டுறவுத்துறையின் மூலம் பொது விநியோகத்துறை மிகச் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. குறிப்பாகச் சொன்னால், இந்த அரசு பொறுப்பேற்றவுடன் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களின் அறிவுரையின் பேரில் நமது கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு மாவட்டமாகச் சென்று ஆங்காங்கு இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களையும், நாடாளுமன்ற உறுப்பினர்களையும், பொது மக்களையும் நேரடியாக விசாரித்து இன்றையதினம் பொதுவிநியோக முறை சிறப்பாகச் செயல்படுவதற்கான உத்தரவாதத்தைக் கொடுத்திருக்கிறார்கள். அதன்படி, கிராமப் பகுதியில் வாழ்கிற நலிந்த மக்கள் நல்ல முறையில் விவசாயப் பொருட்களை வாங்கக்கூடிய அளவுக்கு நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறார்கள். அதற்காக அரசை நான் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். மேலும் கடந்த கால ஆட்சியிலே பல்வேறு இடங்களில் நெல்லும் அரிசியும் வேறு மாநிலங்களுக்கு கடத்திச் செல்லப்பட்டுக் கொண்டிருந்தது. அதனால் உணவுப் பொருள் தட்டுப்பாடு தமிழகத்திலே இருந்தது. இருந்தாலும் நமது அரசு பொறுப் பேற்றதற்குப் பின்னால் நெல் கடத்தல்காரர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுத்ததன் காரணமாக இன்றைய தினம் அரிசியின் விலை வெளி மார்க்கெட்டிலும், கூட்டுறவுத் துறைக் கடைகளிலும் குறைக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்க்கும் போது உண்மையிலேயே இந்த அரசைப் பாராட்ட வேண்டும். மேலும் கலப்படம் செய்கிறவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டும். பொது விநியோகத் திட்டத்தில் நஷ்டம் வந்தபோதும் அங்கே பணியாற்றிய பணியாளர்களுக்கு இன்றைக்கு ரூ. 350-லிருந்து 500 ரூபாய் வரை ஊதியத்தை உயர்த்திக் கொடுத்திருப்பதற்காக இந்த அரசைப் பாராட்டுகின்றேன்.



1992 ஏப்ரல் 8] [திரு. கே. கே. சின்னப்பன்]

மேலும் அந்தக் கூட்டுறவுத் துறையிலே பணியாற்றுகிற பணியாளர்களை நிரந்தரம் செய்து அவர்களை பணியாற்றுவதற்கு அனுமதிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பிற்பகல் 12—25

கூட்டுறவுக் கடைகளை கண்காணிக்கும் முறைகளை மாற்று
வதற்கு அரசு ஒரு சில நடவடிக்கைகளை எடுத்திருக்கிறது. அதை
மீண்டும் பரிசீலனை செய்து இன்றைய தினம் புதிதாக அறிமுகப்
படுத்தியுள்ள முறையைக் கையாள வேண்டும் என்று கேட்டுக்
கொள்கிறேன். காரணம் தற்போது தாலுக்காக்களில் டீ.எஸ்.
ஓ. மூலமும், கூட்டுறவுத் துறை அதிகாரிகள் மூலமும், மத்திய
வங்கி அதிகாரிகள் மூலமும், ஏ.ஓ.பி. போன்ற அதிகாரிகள் மூல
மும் தணிக்கையிடுவதாகக் கூறிக்கொண்டு அந்தக் கடைகளில்
சென்று செய்வதன்மூலம் பலவிதமான முறைகேடுகள் இன்றைய
தினம் நடந்துகொண்டிருக்கிற காரணத்தால்தான் பொது விநி
யோக திட்டத்திலே பணியாற்றுகின்ற பணியாளர்கள் ஒரு சிலர்
பொது விநியோகத் திட்டப் பொருள்களை தவறான வழியிலே
கொடுக்கிற சூழ்நிலை இருக்கிறது. எனவே இன்றைய தினம்
அரசு வட ஆற்காடு மாவட்டத்திலே எடுத்திருப்பதைப் போன்று
ஒரு சில கடைகளுக்கு குறிப்பிட்ட அதிகாரிகள்தான் பொறுப்
பேற்க வேண்டும் என்ற நிலையை உண்டாக்கி மேல்மட்டத்தில்
உள்ள அதிகாரிகள் மாத்திரம் அந்தக் கடைகளை சோதனையிட
லாம் என்ற முறையை அறிமுகப்படுத்தவேண்டும் என்று இந்த
நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சருடைய இந்த
ஆட்சியில் நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள
சட்டமன்றத்திலே இருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்
பினர்களுக்கும் ஒரு கௌரவத்தை உண்டாக்கும் வகையில்
அவர்கள் உண்மையிலே சிபாரிசு செய்தால் ரேஷன் கார்டுகளை
வழங்கும் சூழ்நிலையை உருவாக்கித் தந்திருக்கிறார்கள்.
(மேசையைத் தட்டும் ஒலி) அதைக்கூட இங்கே
பேசிய மார்க்சிஸ்ட் கட்சி நண்பர்கள் எதிர்ப்
பதாக குறிப்பிட்டார்கள். உண்மையிலேயே இந்த அள
விற்கு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மற்ற துறைகளிலே எல்லாம்
எந்தவிதமான முன்னுரிமையும் கொடுக்காவிட்டாலும் கூட்டுறவுத்
துறையிலே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வாய்ப்புத் தந்த
தற்காக இந்த அரசுக்கு சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக
நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ள கடமைப்
பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). எனவே மக்க
ளுடைய கஷ்டங்களை அறிந்த காரணமாகத்தான்
இன்றைய தினம் இந்த ஆட்சியிலே இருக்கின்ற தமிழக முதல்வர்
ஆட்சியிலே நாங்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினராக வந்
திருக்கிறோம். எனவே மக்களுடைய குறைகளை அறிந்

[திரு. கே. கே. சின்னப்பன்] [1992 ஏப்ரல் 8

நாங்கள் சிபார்சு செய்து ரேஷன் கார்டு வாங்கிக் கொடுப்பதிலே எவ்விதமான தவறும் இருக்காது. இந்த நடவடிக்கையில் குறிப்பாக அரசு மிகவும் கவனமாக, தெளிவாக இருக்கவேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ளுகிறேன். என்னுடைய தொகுதியிலே அதிகப்படியான ரேஷன் கார்டுகள் பல ஆண்டுகளாக வழங்கப்படவில்லை என்று மக்கள் குறைபட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே என்னுடைய தொகுதியிலே இருந்து கொடுக்கப்பட்டிருக்கிற மனுக்கள் அனைத்திற்கும் ரேஷன் கார்டு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அங்கே கேட்டால் ரேஷன் கார்டு இல்லை என்று பதில் வந்து கொண்டிருக்கிறது.

ஜெயங்கொண்டம் தாலுக்காவில் அதிகப்படியான நெல் கொள்முதல் செய்யப்படுகிறது. அங்கே இருக்கின்ற நெல்லை அரவைக்கு பக்கத்திலே உள்ள மில்களுக்கு எடுத்துச் செல்வதால் அரசுக்கு வீண் செலவுதான் ஏற்படுகிறது. எனவே அந்த தாலுக்காவில் அதிகப்படியான நெல் கிடைக்கின்ற காரணத்தாலும் அந்தப் பகுதியிலே அரவை மில் இல்லாத காரணத்தாலும் அரசு கூட்டுறவுத் துறையிலே ஒரு அரிசி ஆலையை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

காலம் கடந்துவிட்டக் காரணத்தால் நான் ஒன்றை மாத்திரம் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். இன்றைய தினம் நாம் தேர்தலை நடத்த வேண்டும் என்ற உணர்வோடு நின்று கொண்டிருக்கிறோம். ஆனால் ஒன்றை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். கடந்தகால ஆட்சியிலே நாமினேஷன் முறையை ஒழித்து அந்த சங்கத்திலே உறுப்பினராக இருக்கின்ற அவர்கள் மூலமாகவே 'கோ-ஆப்ஷன்' மூலம் வாய்ப்பு தந்திருக்கிறீர்கள். அதற்கு இந்த அரசை நான் பாராட்டுகிறேன். ஒன்றை மாத்திரம் தெரிந்து கொள்ளவேண்டும் திராவிட முன்னேற்றக் கழக அரசு காலங்களில், 1989'ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் எவ்வளவு தில்லுமுல்லு வேலைகளைச் செய்தது என்பதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகிறேன். நான் ஒரு முன்னோடி சங்கத்திலே தலைவருக்காக நின்றபோது அந்தப் பகுதியிலே இருந்த சங்கத்தின் உறுப்பினர், ஒரே ஒரு உறுப்பினர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நகரச் செயலாளராக இருந்த எஸ். டி. எஸ். மாறன் என்ற ஒருவர் - அவர் திராவிட முன்னேற்றக் கழக நகரச் செயலாளராக இருந்தார். அவர் ஒரு அரசு ஊழியர் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அவர் பொது சுகாதாரத் துறையிலே பணியாற்றிக் கொண்டிருக்கிறார். இன்றைய தினம்கூட அவர் அரசுப் பணியாளராகவும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் நகரச் செயலாளராகவும் இருந்து கொண்டிருக்கிறார். அவருடைய உண்மையான பெயர் சவரிமுத்து என்பது. அவர் அன்றைய தினம் ஓட்டுபோட வந்த



1992 ஏப்ரல் 8] [திரு. கே. கே. சின்னப்பன்]

போது சவரிமுத்து, சன் ஆஃப் தேவசகாயம் என்ற பெயரில் ஒரு ஓட்டினைப் போட்டார் அடுத்து எஸ். டி. எஸ். மாறன், சன் ஆஃப் தேவசகாயம் என்ற பெயரிலே, ஒரே ஒரு நபர், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நகரச் செயலாளராக பணியாற்றியவர், இரண்டு ஓட்டுகளை போட்டார். எனவே இது போன்ற தில்லுமுல்லுகளை எல்லாம் திராவிட முன்னேற்றக் கழக அரசு, கடந்த காலத்திலே செய்திருக்கிறது; இப்போதும் செய்துகொண்டிருக்கிறார்கள். இன்னுமொன்றை குறிப்பிட வேண்டும் என்று சொன்னால், கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று என்னுடைய தொகுதியிலே செல்லுகிறபோது, ஒரு வீடு கட்டும் கூட்டுறவுச்சங்கத்தினுடைய பிரதம அங்கத்தினருடைய பிரவேசப் புத்தகத்தை திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நகரச் செயலாளர், வீதிவீதியாக எடுத்துச் சென்று அங்கே உறுப்பினர்களைச் சேர்த்தார் என்ற தகவலை இந்த அரசுக்கு தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்று சொன்னால், ஒரு சில கூட்டுறவுத் துறை அதிகாரிகள் இன்றைய தினம் உங்களுடைய ஆட்சி வந்தபிறகு 10 மாதங்கள் ஆகியும் இதுவரையிலும் திருந்தாத ஒரு நிலை இருக்கிறது என்பதை நான் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன் அதுபோன்ற அதிகாரிகள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவர் தன்னுடைய தொகுதியில் ஒரு அதிகாரி இடத்திலே இருக்கவேண்டிய 'உறுப்பினர் புத்தகத்தை, யாரிடத்திலோ கொடுத்து, அவர் உறுப்பினர் சேர்ப்பதாகச் சொன்னார்கள். அவருடைய பெயரையும் மற்ற விவரங்களையும் தந்தால் உடனடியாகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

பிற்பகல் 12-30

திரு. கே. கே. சின்னப்பன் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்கொள்கின்றேன். அந்த விவரத்தினை நான் அமைச்சர் அவர்களிடத்திலே கொடுக்க கடமைப்பட்டு இருக்கிறேன். இன்னொன்றையும் சொல்லவிரும்புகிறேன். ஒரே ஒரு ஃபிராடு திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதையும் அமைச்சர் அவர்களிடத்திலே தெரிவிக்கலாம். டாக்டர் எம். கருப்புசாமி இருக்கையில் இல்லை. திரு. ப. ரங்கநாதன்,

*திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, உணவு, நுகர்பொருள் வழங்கல், நுகர்
வோர் பாதுகாப்பு கூட்டுறவுத் துறைக்கான மானியத்திலே
இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்
களை எடுத்துவைப்பதற்கு வாய்ப்பு தந்த மாண்புமிகு சட்ட
பேரவையின் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைக் கூறிக்
கொள்கின்றேன். இங்கே காங்கிரஸ் கட்சியின் சார்பில் இந்த
மானியத்தை ஆரம்பித்துவைத்துப் பேசிய சட்டமன்ற உறுப்பினர்
திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பேசும்போது மத்திய தொகுப்
பிலே இருந்து தருகின்ற அரிசியினுடைய அளவை இங்கே குறிப்
பிட்டார். அந்த நேரத்திலே மாண்புமிகு சுகாதாரத் துறை
அமைச்சர் அவர்கள் 'நாங்கள் கேட்கின்ற அளவிற்கு தொகுப்
பிலே அரிசியை ஒதுக்கினால் ஏழைகளுக்கு கூடுதலாக அரிசி
வழங்க முடியும்' என்று கருத்தினை வெளியிட்டார். நான்
ஒன்றைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டுள்ளேன். நமது
முதலமைச்சர் அவர்கள் டில்லிக்கு சென்று எதைக் கேட்டாலும்
அங்கே மத்தியிலே இருக்கின்ற பிரதமர் அவர்களும், மத்திய
அமைச்சர் அவர்களும் கொடுக்கத் தயாராக இருக்கின்றார்கள்.
அதற்குப் பல்வேறு உதாரணங்களை இங்கே எடுத்துச் சொல்ல
முடியும். ஆனால், நேரம் இல்லாத காரணத்தினால் அதைத்
தவிர்த்து, முதலமைச்சர் அவர்கள் டில்லிக்கு சென்று கேட்கின்ற
அளவிற்கு மத்திய தொகுப்பிலிருந்து அரிசி தருவதற்கும், மற்றும்
கோதுமை தருவதற்கும், பாமாயில் வழங்குவதற்கும் தயாராக
இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக்
கடமைப்பட்டுள்ளேன். அதேநேரத்தில் (குறுக்கீடு) இங்கே
உணவுத் துறை அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் -
முந்தைய ஆட்சியில் உணவுத் துறை அமைச்சராக இருந்தவரு
டைய அதே மாவட்டத்தைச் சேர்ந்தவர் தான். எதற்காகக்
குறிப்பிடுகிறேன் என்றால், என்னை எதிர்த்துத் தான் அவர்
இரண்டு முறையும் தேர்தலிலே போட்டியிட்டு, ஒரு முறை
வெற்றியும் பெற்றார்; ஒரு முறை தோல்வி அடைந்தார்.
அவர்கள் ஆட்சியில் இருந்த காலத்தில், அந்த அமைச்சர் இந்தத்
துறையின் பொறுப்பிலே இருந்தபோது, அன்றைக்கு எதிர்க்கட்சித்
தலைவராக இருந்த இன்றைய நமது முதலமைச்சர்
பல கோடி ரூபாய்க்கு அரிசி பேர ஊழல் இருக்கிறது என்று
சட்டமன்றத்திலேயும் மக்கள் மன்றத்திலேயும் எடுத்துச் சொன்
னார்கள். அதை எதிர்த்து வழக்கும் போட்டார்கள், அன்றைய
ஆட்சியாளர்கள். அதைப்பற்றி இங்கே அமைச்சர் அவர்கள்
பதிலுரையிலே அந்த ஊழலில் யார் சம்பந்தப்பட்டு இருந்தார்கள்,
எத்தனை கோடிக்கு ஊழல், கையாடல் நடந்து இருக்கிறது என்
பதை இங்கே தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் பணிவோடு
கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல் அன்றைக்கு உணவுத் துறை அமைச்சராக இருந்
தவர் தி. மு. க. ஆட்சிக் காலத்தில் இங்கே சென்னை நகரத்தில்
இருக்கின்ற கிடங்கில்—சூளையில் என்ற கிடங்கில் கோணிகளை



கள்ளக்கடத்தல் செய்து, அதை விற்று பல கோடி ரூபாய் சம்
பாதித்து, அந்தக் கோணி வழக்கிலே— அந்த வழக்கு இன்னும்
நீதிமன்றத்திலே இருக்கிறது; அந்த வழக்கில் யார் சம்பந்தப்
பட்டார்கள், அந்தத் துறை அமைச்சர் சம்பந்தப்பட்டாரா, அதி
காரிகள் சம்பந்தப்பட்டார்களா என்பதையும் அமைச்சர் அவர்கள்
பதிலுரையிலே தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–35

எதற்காகச் சொல்கிறேன் என்றால் அந்த அமைச்சர் வடாற்
காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர். அவர் காலத்தில் தான் உணவுத்
துறையில் பல கோடி ரூபாய்கள் ஊழல்கள் நடந்தன. அந்தத்
துறையில் ஊழல் நடந்த காரணத்தால் தான் அவர் அமைச்சர்
பொறுப்பிலிருந்து விடுவிக்கப்பட்டார். ஆனால் நம்முடைய முதல்
அமைச்சர் அவர்கள் அதே மாவட்டத்தைச் சேர்ந்த, அந்தப்
பகுதியைச் சேர்ந்த, அதே ஆற்காடு தொகுதியில் தேர்ந்தெடுக்கப்
பட்ட, படித்த இளைஞர், நாடாளுமன்றத்தில் உறுப்பினராக
இருந்தவர் (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அவரை இங்கே
அந்தத் துறை அமைச்சராக நியமித்து இருக்கிறார்கள். எதற்காக
நியமித்து இருக்கிறார்கள் என்றால் அவர் காலத்தில் நடந்த
தவறுகள் எங்களுடைய ஆட்சியில் நடக்கவில்லை என்பதை மக்
களுக்கு புரிய வைப்பதற்காகத் தான். அன்றைக்கு நடந்த அரிசி
பேர ஊழல்களை (மேசையைத் தட்டும் ஒலி), அன்றைக்கு நடந்த
சர்க்கரை பேர ஊழல்களை (மேசையைத் தட்டும் ஒலி), அன்
றைக்கு நடந்த பாமாயில் பேர ஊழல்களை நாங்கள் செய்ய
மாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏழைகளுக்காகவே
நாங்கள் ஆட்சி நடத்துகிறோம் என்பதை, அந்த மாவட்டத்திலே,
அந்த மாவட்டத்தில் மட்டுமல்ல, அன்றைக்கு அமைச்சராக
இருந்தவரின் அந்த ஊரைச் சேர்ந்தவர், அந்தத் தொகுதியைச்
சேர்ந்தவர், ஆற்காட்டிலே நின்று வெற்றி பெற்ற மாண்புமிகு
திரு விசுவநாதன் என்பவரைத்தான் இன்றைக்கு அமைச்சராக நிய
மித்து இருக்கிறார்கள். எனவே, அவர் செய்த தவறுகளையும்
அவர் கட்சித் தலைவர் செய்த தவறுகளையும், இன்றைக்கு
அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் தெளிவாக
விளக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.
காரணம் அன்றைக்கு எதிர்க்கட்சித் தலைவராக இருந்தவர்,
ஆந்திர மாநிலத்தில் அரிசி வாங்கியதில் பல கோடி ரூபாய்
கையாடல் நடந்திருக்கிறது என்று மக்கள் மன்றத்திலும், சட்ட
மன்றத்திலும் கோரிக்கை வைத்தவுடனே அன்றைய முதலமைச்
சர் பொய் வழக்கைப் போட்டு, வழக்கும் நீதிமன்றத்திலே
நடந்தது. அதற்காகத்தான் இங்கே குறிப்பிடுகிறேன். அன்
றைக்கு யார் யார் இதில் சம்பந்தப்பட்டார்கள் என்பதை இங்கே
தெளிவாக எடுத்து வைக்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்
கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) பேரவை துணைத்
தலைவர் அவர்களே, ஒரு நிமிடம் அதிகமாகக் கொடுக்க வேண்
டும். ஏனென்றால் ஆற்காடு வீராசாமி என்னுடைய தொகுதியில்
நின்று தான் தோற்றார்...

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் டெல்லிக்கு போனதில் 2 நிமிடங்கள், ஆற்காடு தொகுதியில் 5 நிமிடங்கள் இருந்திருக்கிறீர்கள். மானியத்திற்கு வாருங்கள்.

திரு. ப. ரங்கநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தயவுசெய்து இரண்டு நிமிடம் அதிகமாகக் கொடுக்க வேண்டும். எங்கள் கட்சிக்காரர் நேரத்தில் குறைத்துக் கொள்ளலாம். இன்றைக்கு சென்னை நகரத்தில் பொது விநியோகம் பல்வேறு கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்பட்டு வருகிறது. இவர்கள் கீழ் செயல்படும் கடைகளில் எடைக்குறைவு 12 கிலோவிற்கு 500 கிராம் முதல் ஒரு கிலோ வரை இந்த எடைக் குறைவு உள்ளது. சர்க்கரை 100 கிராம் முதல் 200 கிராம் வரை எடைக்குறைவு உள்ளது என்று தெரிய வருகிறது. இதற்கு முக்கிய காரணம் கிடங்குகளில் அரிசி சரியாக எடையிட்டு கடைகளுக்கு கொடுக்கப் படுவதில்லை. 75 கிலோ மூட்டைக்கு ஒரு கிலோ முதல் 2 கிலோ வரை எடைக்குறைவு உள்ளது. கிடங்குகளிலிருந்து லாரிகளில் கடைகளுக்கு எடுத்துச் செல்கிற போதுலோடு ஆட்கள் மூட்டைக்கு 2 கிலோ வீதம் குத்தி எடுத்து விடுகிறார்கள். ஆகவே, கடைக்கு வந்து சேர்கிற நேரத்தில் மூட்டை ஒன்றுக்கு குறைந்த பட்சம் 2 கிலோ முதல் 4 கிலோ வரை எடைக் குறைவு ஏற்படுகிறது. இதைச் சரிக்கட்ட கடைகளில் உள்ள பட்டியல் எழுத்தர் 12 கிலோவுக்கு 500 கிராம் முதல் ஒரு கிலோ வரை எடைக் குறைவு செய்கிறார்கள். இது எல்லா கூட்டுறவு கடைகளிலும் நடைபெறுகிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இவைகள் குறித்து சிவில் சப்ளைஸ் இலாக்காவினுடைய கடைகளை தணிக்கை செய்து சம்பந்தப் பட்ட கூட்டுறவு தனி அதிகாரிகளுக்கு அறிக்கை அனுப்பினால் உடனடியாக நடவடிக்கை எடுக்காமல் காலதாமதம் செய்கிறார்கள். இதனால் இப்படிப் பட்ட தவறுகளைத் தொடர்ந்து செய்ய வாய்ப்பு ஏற்படுகிறது. மேலும் போலி பட்டியல் தயார் செய்து இரவு நேரங்களில் ரேஷன் அரிசியை சமூக விரோதிகள், அந்தந்தப் பகுதியில் இருக்கிற கட்சித் தலைவர்கள் உதவியோடு கடத்தல் செய்கிறார்கள். இவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கா விட்டால் பொது விநியோக முறை—பி.டி.எஸ். சிஸ்டம்—சரியாக நடக்கவில்லை என்று அரசுக்கு அவப்பெயர் வர வாய்ப்பு உள்ளது என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மாதிரி தவறு செய்யும் நபர்கள் மீது நடவடிக்கையெடுக்க சிவில் சப்ளைஸ் இலாக்காவை சேர்ந்த உதவி ஆணையர் மற்றும் துணை ஆணையர் போன்றவர்களுக்கு அதிகாரம் வழங்கலாம். அல்லது உணவுப் பொருள் குற்றப் புலனாய்வுத் துறைக்கு வழங்கினால் அவர்களை கடுமையான தண்டனை மூலமாக—இன்றைக்கு காலையில் பத்திரிகையிலே படித்தேன்.



மூன்று அரிசி பேர ஊழல் மன்னர்களை திருச்சி மாவட்டத்திலும், கன்னியாகுமரி மாவட்டத்திலும், மற்றொருவரை இன்னொரு மாவட்டத்திலும் கைது செய்து உள்ளே தள்ளியுள்ளதாக கேள்விப்பட்டேன். அதையெல்லாம் பார்க்கிறபோது உண்மையிலேயே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், உணவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்ல கடமைப்பட்டுள்ளோம். (மணியடிக்கப் பெற்றது) அடுத்து சிவில் சப்ளைஸ் கார்ப்பரேசனைக் கலைத்துவிட்டு உணவு நுகர் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையோடு சேர்த்தால் நன்றாக இருக்கும். ஏன் என்றால், உணவுப் பொருள் வழங்கு துறையினர்தான் வரலாறு காணாத அளவிற்கு தனிக் கொள்முதல் செய்தல், வினியோகம் செய்தல், இவைகளைத் திறம்பட செய்து வருகிறார்கள்.

பிற்பகல் 12—40

கூட்டுறவு நிலையங்களில் பணிபுரியும் ஆட்களுக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கடைகளில் பணிபுரியும் நபர்களுக்கு வழங்கப்படும் ஊதிய அளவினை வழங்குவதன் மூலமாக சொல்லப்பட்ட தவறுகளை ஓரளவிற்காவது குறைக்கலாம்.

கிடங்குகளிலிருந்து சரியான எடையோடு பொருட்களை கடைகளுக்கு அனுப்பவும், கிடங்கிலிருந்து லாரிகள் மூலம் மூட்டைகளை எடுத்துச் செல்லும்போது, அத்தியாவசியமான பொருட்களின் திருட்டைத் தடுக்க, சம்பந்தப்பட்ட லாரியுடன் செல்லும் இயக்க உதவியாளர்களை பொறுப்பாளர்களாக ஆக்கி, கடைகளுக்கு வருகிற மூட்டைகளில் எடைக் குறைவு தென்பட்டால், அன்னாரை வேலை நீக்கம் செய்ய நடவடிக்கை எடுப்பதன் மூலம், தவறுகளை ஓரளவிற்கு சரி செய்ய இயலும்.

குடும்ப அட்டைகளைப் பொறுத்தவரையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் இங்கே பேசும்போது தெளிவாகக் குறிப்பிட்டார்கள். அமைச்சர் அவர்கள் சென்னை நகரத்திலே இரண்டு ஆலோசனைக் கூட்டங்களை நடத்தினார்கள். அந்தக் கூட்டத்திலேயே நான் குறிப்பிட்டேன், கிராமங்களில் இருப்பவர்களுக்கு கூடுதலாக மண்ணெண்ணெயை உயர்த்தித் தரலாம், நகரத்திலே இருப்பவர்கள், மண்ணெண்ணெயை குறைவாகத்தான் பயன்படுத்துகிறார்கள், ஆகவே இதைக் கருத்திலே கொண்டு, நகரத்திலே இருப்பவர்களுக்கு மண்ணெண்ணெயைக் குறைத்து, கிராமத்திலே இருப்பவர்களுக்கு மண்ணெண்ணெயை உயர்த்தலாம். இரண்டாவதாக கிராமத்திலே இருப்பவர்களுக்கு அரிசியைக் குறைத்து, நகரத்திலே இருப்பவர்களுக்கு அரிசியைக் கூட்டிக் கொடுத்தால் நல்லது. ஏழை எளியவர்கள், தொழிலாளர்கள், கட்டிடத் தொழிலாளர்கள், அனைவரும் வாழ்கின்ற காரணத்தால், நீங்கள் தயவுசெய்து குடும்ப அட்டைகளுக்கு, நகரத்திலே

இருப்பவர்களுக்கு 12 கிலோ என்பதைக் கூட்டி 25 கிலோ, அல்லது 30 கிலோவாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ்.வி சண்முகம.

*திரு. எஸ்.வி. சண்முகம் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நடைபெற்றுக் கொண்டிருக்கிற மானியக் கோரிக்கைகளின் மீது நான் சார்ந்திருக்கின்ற ஐக்கிய கம்யூனிஸ்ட கட்சியின் சார்பில் என்னுடைய கருத்துக்களைக் கூறுகின்ற நல்வாய்ப்பினைத் தந்த, தங்களுக்கு என்னுடைய நன்றியை முதலிலேயே தெரிவித்துக் கொள்கிறேன்.

பொதுவாக வினியோக முறையில் வழங்கப்படுகிற அரிசிக்கும், தமிழக அரசியலுக்கும் மிகுந்த தொடர்பு உள்ளது என்பதை அறிந்திருக்கிற இந்த அரசு, இந்தத் துறையின் அமைச்சர் அவர்கள், இந்தத் துறையை ஒழுங்குபடுத்துவதற்கு, சீர்படுத்துவதற்கு மிகுந்த முயற்சிகளைச் செய்து வருவதை நாமெல்லாம் காண முடிகிறது. நான் மனம் திறந்து சொல்ல விரும்புகிறேன் நம்முடைய உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள், தன்னுடைய சக்திக்கு மீறிய, மனித சக்திக்கு மீறிய அளவிற்கே சென்று, இந்தத் துறையை ஒழுங்குபடுத்துவதற்கு முயற்சிக்கிறார் என்பதைக் காண முடிகிறது.

திடீரென்று மதுரையில் இருப்பார். மறுநாள், மூணாறு செக் போஸ்ட் எல்லையிலே இருப்பார். இன்னொரு நாள் கோவையிலே இருப்பார். இன்னொரு நாள் ஈரோட்டிலே இருக்கிறார். பிறகு சென்னைக்கு வருகிறார். இப்படி, பறந்து பறந்து பணியாற்றுகிறார். இதைப் பார்க்க முடிகிறது. மனம் திறந்து பாராட்டாமல் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி).

நியாய விலைக் கடைகள் எல்லாம் அநியாய விலைக் கடைகளாக இருக்கின்றன என்பதை அவர் அறிந்து, அதை நியாய விலைக் கடைகளாக மாற்ற வேண்டும் என்ற நல்ல உணர்வோடு, அந்த ஊழியர்களுக்கும் ஊதிய உயர்வு கொடுத்துப் பார்த்தார்கள். பார்க்கிறார், முயற்சிக்கிறார். ஆனால், அவர்களையும் மிஞ்சி காரியங்கள் நடைபெற்று விடுகின்றன. காரணம் முந்தைய தி.மு.க. அரசினர் அப்படி பழக்கப்படுத்தி விட்டார்கள். கொள்ளை அடிப்பது எப்படி என்பதை ஒரு பாடமாகவே சொல்லிக் கொடுத்து இருந்தார்கள். என்னுடைய மேற்குத் தொகுதியிலே என்னை எதிர்த்துப் போட்டியிட்டவர்தான், கடைசி காலத்தில், உணவு கூட்டுறவுத் துறை அமைச்சராக இருந்தவர். மாண்புமிகு நண்பர்





திரு ரங்கநாதன், அவர்கள் சொன்னவர், அதற்கு முன்பு இருந்தவர். அவர் ஊழலுக்கு பிள்ளையார் சுழி போட்டவர், இவர் முடித்து வைத்தவர். அவர் அடிக்கடி மதுரைக்கு வருவார், கூட்டுறவு நியாயவிலைக் கடை ஊழியர்களை எல்லாம் அழைப்பார், கூட்டங்கள் நடத்துவார், மாதந்தோறும் நடத்துவார். காலையிலே பத்திரிகையாளர்களை அழைத்து, 'சீரான விநியோகத்திற்கு நேரான வழி என்ன என்பதைப் பற்றிப் பேசினோம்' என்று செய்தி கொடுப்பார். ஊழியர்களைப் பார்த்து என்ன என்று கேட்டால்,—போன மாதம் கட்டவேண்டிய 500 ரூபாய் எங்கே என்று கேட்டு, இந்த மாதத்தோடு சேர்த்துக் கட்டு என்று சொல்வார். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படியெல்லாம் ஊழல்கள் நியாயவிலைக் கடைகளிலே மலிந்துபோய் இருக்கின்றன.

பொது விநியோகத்திற்கு நம்முடைய அரசு 503 கோடி ரூபாய் செலவு செய்கிறது. மானியமாகக் கொடுக்கிறது. ஆனால், எந்த நோக்கத்தோடு இதை நாம் கொடுக்கிறோமோ அந்த நோக்கம் நிறைவேற்றப் படுகிறதா என்றால், இல்லை. அதிக விலைக்கு உணவுப் பொருட்களை வாங்கி குறைந்த விலைக்கு ஏழை எளிய மக்களுக்குக் கொடுக்கிறோம்.

பிற்பகல் 12–45

ஆனால் கடைகளில் வழங்கப்படுகின்ற அளவைப் பார்த்தால் 5 கிலோ அரிசிக்குப் பணம் கொடுத்து வாங்கினால், கண்டிப்பாக 4 கிலோவை அது தாண்டாது. 5 லிட்டர் எண்ணெய் வாங்கப் போனால், அது அநேகமாக 3–3/4 ஐத் தாண்டாது. அப்படி ஒரு கலை. அந்த ஊழியர்கள் அளவையிலே ஒரு வித்தை வைத்திருக்கிறார்கள். எண்ணெய் ஊற்றும்போதும் நுரை பொங்க ஊற்றுகிறமாதிரி ஒரு வித்தை. அளவையிலே இது ஒரு ஜாலக். இப்படியெல்லாம் பழக்கி வைத்திருக்கிறார்கள். இத்தகைய நிலைமை இருக்கிறது. இதையெல்லாம் போக்குவதற்கு நம்முடைய அரசு வந்தவுடன் ஒரு விழிப்புணர்ச்சிக் குழு அமைத்தோம். அதிலேயும் கடைக்காரன் புகுந்து விளையாடி விட்டான். என்னுடைய மதுரை மாநகரத்தில் இந்த விழிப்புணர்ச்சிக் குழுவிற்கான பட்டியலைக் கொடுக்கும்போது ** கொடுத்தார். அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையில் என்னிடம்பட்டியலைக்கேட்டார்கள். சரி முரண்பாடு வந்துவிடக் கூடாது என்பதற்காக **சொல்கின்ற பட்டியலை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று நான் எழுதிக் கொடுத்தேன். அதையும் மீறி ** சில இடங்களில் கடைக்காரன் கொடுத்தது பட்டியலாக வந்திருக்கிறது. செல்லூர் கடை எண். 2-ல் ஆயக்கம்மான் தெருவில் பாண்டியன்

** மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கூட்டுறவு சிறப்பு அங்காடி இருக்கிறது. அந்தக் கடைக் காரர் 7, 8 பேரைக் கொடுத்திருக்கிறார். ரொம்ப பொருத்த மான ஆளாகக் கொடுத்திருக்கிறார். ஒருத்தன் கள்ளச்சாரா யப் பேர்வழி, இன்னொருத்தன் கடத்தல்காரர். பெண் களுக்குப் பிரதிநிதித்துவம் வேண்டுமல்லவா? அதையும் கொடுத் திருக்கிறார். சும்மா வயது கம்மிதான். 80 வயது கிழவி. ஆகவே விழிப்புணர்ச்சிக் குழுவிலே அவர்கள் புகுந்து வளையாடி விட்டார்கள். இதிலே நான் கேட்டுக் கொள்வது எல்லாம் இந்த 'மெதடை' கொஞ்சம் மறுபரிசீலனை செய்யுங்கள் என கேட்டுக்கொள்கிறேன்.

குடும்பக் கார்டுகள் என்பது உண்மையிலேயே ஏழைகளுக் காக. அந்த 200 போகஸ் கார்டுகளையும் கடைக்காரன்தான் வைத்துக் கொண்டிருக்கிறான். இதெல்லாம் எப்போது கண்டு பிடிக்க முடிகிறது என்றால், இப்போது இலவச வேட்டி, சேலை கொடுக்கப் போகும்போது, கடைக்காரன் தான் மொத்தமாக வாங்கிக் கொண்டு போனான். ஆகவே இன்னும் துரிதமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய ஆலோசனை என்ற முறையில் இந்த அரசு பரிசீலனை செய்வதற்காக ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். 700, 800 குடும்ப அட்டைகள் என்ற வீதத்தில் கடைகள் இருக்கின்றன. அந்தக் குடும்ப அட்டைகளின் சொந்தக்காரர் களை இந்தக் கூட்டுறவுக் கடைகளில் உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன். அந்த உறுப் பினர்களை, குடும்ப அட்டைகளின் சொந்தக்காரர்களை, அந்தக் கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்கின்ற நிலை இப்போது இல்லை. ஏதோ டிஸ்ட்ரிக்ட் லெவல் சங்கம் என்று இருக்கிறது. அதனுடைய பிராஞ்ச்தான் அங்கே இருக் கும். அந்த குடும்ப அட்டை உரிமையாளர்களை சங்கத்தில் சேர்த்தால், அவர்களை டைரக்டர்களாகப் போடுவார்கள். இந்த ஊழல்கள் கொஞ்சம் குறையும். முழுவதுமாக ஒழி யாது. கொஞ்சம்தான் குறையும். சட்டமன்ற உறுப்பினர்கள் போகும்போது பிடுங்கல் ரொம்ப அதிகமாக இருக்கிறது. அது என்னவாயிற்று, இது என்னவாயிற்று என்று நம்மைப் போட்டு அளப்புகிறான். ஆகவே இதைக் கொஞ்சம் யோசிக்க வேண்டு மென்று கேட்டு, குடும்ப அட்டை உரிமையாளர்களை இந்தச் சங்கத்தில் உறுப்பினர்களாகச் சேர்க்க முடியுமா என்பதை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் கூற வேண்டு மெனக் கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுச் சங்கத் தேர்தலையெல்லாம் நடத்த முன் வந்திருப்பது ரொம்பவும் வரவேற்கத் தக்கது. அது ரொம்ப அடிப்படையான விஷயம். எங்களுடைய மதுரை மாநகரத்தில்





திருவள்ளுவர் கைத்தறி நெசவாளர் சங்கம், சௌராஷ்டிர சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுடைய வீவர்ஸ் சொசைட்டி ஒன்று இருக்கிறது. அந்தச் சங்கத்தினுடைய தலைவர் யார் தெரியுமா? ஒரு கசாப்புக் கடைக்காரர். முந்தைய தி.மு.க. ஆட்சியில் போட்டாகிவிட்டது. அதேபோன்று, திண்டுக்கல் மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில் தலைவர் ஒரு பெரிய தோல் வியாபாரி. அந்த நகர மன்றத் தலைவர். இப்படியெல்லாம் ஊழல்கள் நடந்திருக்கின்றன. இந்தக் குறைகளை எல்லாம் களைந்து நல்லாட்சி நடத்தி வருகின்ற நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களையும் ,தெரிவித்துக் கொண்டு, இன்னும் அதிகமான வேகத்தோடு இந்த அரசு பீடு நடை போட வேண்டுமென்று கேட்டு அரிசிக்கும் அரசியலுக் கும் சம்பந்தம் உண்டு என்ற எச்சரிக்கையோடு இருக்க வேண்டு மென்று தோழமை உணர்வோடு கூறி, நன்றி கூறி முடிக்கின் றேன். வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சண்முகம் அவர்கள் பேச்சில்** என்ற சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படு கிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

<u>திரு. வி.கே. லட்சுமணன் :</u> மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எல்லா மத்திய வங்கிகளுக்கும் கணிப் பொறி வாங்கவும், கூட்டுறவு திருத்தச் சட்ட முன்வடிவினை அறிமுகப் படுத்தவும், கோயம் பேட்டில் ரூ. 150.75 இலட்சத் தில் குளிர்பதன கிடங்கு நிறுவவும், நிரந்தரப் பணியாளர்கள் அஞ்சல் வழிக் கல்வி மூலமாக கூட்டுறவுப் பயிற்சி பெறவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்திருப்பதை அறிந்து அவர்களுக்கு நான் என்னுடைய நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்ளப் பெரிதும் கடமைப் பட்டிருக்கிறேன். கூட்டுறவுத் தத்துவம் என்பது ஒரு வாழ்க்கை நெறி. இங்கே பேசப்பட்ட கருத்துக்கள் எல்லாம் ஏதோ கூட்டுறவு என்றால் ஏதோ ரேஷன் கடைகளிலே அரிசி கொடுப்பதோடு நின்றுவிட்டதாகத்தான் எனக்குத் தோன்று கிறது. ஆனால் கூட்டுறவு இயக்கம் என்பது அந்தத் தத்துவத் தில் நம்பிக்கை உள்ள சிறந்த தலைவர்களை மையமாகக் கொண்டு வளர்ந்தது. தேசபக்தியாலும், நாணயத்தினாலும், நேர்மை உணர்வினாலும் தன்னலம் கருதாத சேவையாலும் அவர்கள் மக்கள் மத்தியிலே இமயமாக உயர்ந்து இருந்தார் கள். இன்றைக்கும்கூட குஜராத்திலே உள்ள ஆனந்த் பால் பண்ணை என்பது கூட்டுறவுச் சங்கங்களின் மெக்காவாக இருக் கிறது என்று சொன்னால் அதற்குப் பின்னாலே ஒரு டாக்டர் குரியன் அவர்கள் இருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க

** மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[திரு. வி. கே. லட்சுமணன்] [1992 ஏப்ரல் 8

முடியாது. தமிழ் நாட்டிலே கூட டி.ஏ. ராமலிங்கம் செட்டியார், சேலம் மணி கவுண்டர், கனகசபை, எல். பழனிசாமி கவுண்டர் என்று பல சிறந்த கூட்டுறவாளர்கள் அந்த இயக்கத்தை தலைமை ஏற்று நடத்தியதுண்டு. ஆனால் இன்றைக்கு அவர்கள் யாரும் உயிருடன் இல்லை.

பிற்பகல் 12—50

கடந்த பல ஆண்டுகளாக கூட்டுறவு தேர்தல் நடைபெறாத காரணத்தால், தமிழ்நாட்டிலே இன்று இவர்தான் சிறந்த கூட்டுறவாளர் என்று யாரையும் அடையாளம் காட்ட முடியாத நிலைமை இருக்கிறது. இதன் காரணமாக அனைத்திந்திய கூட்டுறவு சங்கம் ஆகிய இஃப்கோ போன்றவைகளில் நம்முடைய பங்கு இல்லாமலேயே போய் விட்டது, என்பதை நான் இங்கே வருத்தத்தோடு குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். கூட்டுறவுத் துறையிலே கட்சி அரசியல் நுழையத் தொடங்கியதுமே அதன் தன்மை மாசுபடுத்தப்பட்டு விட்டது. கூட்டுறவுச் சங்கங்கள் எண்ணிக்கையில் பெருகினாலும் அதன் தரம் பெரிதும் தாழ்ந்து விட்டது என்பதை நாம் இங்கே மறுக்க முடியாது. அமைச்சர் அவர்கள் அறிமுகப் படுத்தியிருக்கிற சட்டமுன்வடிவில் இரண்டு பிரச்சினைகளை வலியுறுத்தி இருப்பது வரவேற்கக் கூடியதாகும். நலிந்த பிரிவினர்களையும் பெண்களையும் நியமிப்பதற்கு நாமினேஷனுக்கு பதிலாக இசைந்து சேர்த்துக்கொள்ளுதல் என்ற முறையிலே கோவாப்ஷன் என்ற முறையில் அவர்கள் சேர்க்க முன் வந்திருப்பதை நான் பெரிதும் வரவேற்கிறேன். அதேபோல எந்த நோக்கத்திற்காக கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டனவோ அந்த நோக்கத்திலே நம்பிக்கை இல்லாதவர்களை அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து நீக்கவும் இனிமேல் சேர்த்துக் கொள்ளாமல் இருக்கவும் வகை செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நடந்து முடிந்த தி.மு.க. ஆட்சியிலே போலி உறுப்பினர்கள் பெரும் அளவிலே சேர்க்கப்பட்டனர். பல உறுப்பினர்களுடைய கையெழுத்து அந்த சந்தா ரசீதிலே இல்லை. இன்னும் சொல்லப்போனால் பல உறுப்பினர்களுடைய கையெழுத்து நுழைவு புத்தகத்திலே கூட விண்ணப்பத்திலே கூட இடையாது. அந்த அளவுக்கு அங்கே போலிகள் உருவாக்கப்பட்டனர். அதேபோல் இந்த உறுப்பினர்களைச் சேர்ப்பதற்காகப் பல சங்கங்கள் தங்களுடைய பங்குத் தொகையை மாற்றிய காட்சியையும் பார்த்தோம். சில சங்கங்கள் பத்து ரூபாய் என்று இருந்ததை 100 ரூபாயாக மாற்றியது. சில சங்கங்கள் 100 ரூபாய் என்று இருந்ததை 25 ரூபாயாக மாற்றியதையும் பார்த்தோம். நான் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்,



1992 ஏப்ரல் 8] [திரு வி. கே. லட்சுமணன்]

இந்தத் தேர்தலில் ஆள் மாறாட்டம் நடைபெறாமல் இருப்பதற்காக புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டைகளைத் தயவுசெய்து வழங்க வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பெற்றது) ஒரே நிமிடம். கூட்டுறவுச் சங்கத் தேர்தலானது பல ஆண்டுகளாக நடைபெறாததால் கூட்டுறவு இயக்கம் தமிழ்நாட்டிலே நலிந்து போய் இருக்கிறது. எப்படி பொதுத் தேர்தலுக்கு ஒரு தேர்தல் கமிஷன் மூலமாகத் தேர்தல்கள் நடைபெறுகின்றனவோ அதைப்போல கூட்டுறவுத் தேர்தல்களையும் ஒரு தேர்தல் கமிஷன் மூலமாகக் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்களை நடத்துவதற்கு மைய அரசு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னால் அதை நாம் ஆதரிக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன் கூட்டுறவுச் சங்கமானது வெறும் கடன் வழங்கும் சங்கம் என்ற நிலையிலே இருந்து பொருட்களை உற்பத்தி செய்யும் சங்கம் என்ற நிலையில் கூட்டுறவுச் சங்கம் உற்பத்தி செய்த பொருட்களை கூட்டுறவுச் சங்கங்களே வாங்காத நிலைமையை எல்லாம் பார்க்கிறோம். அதாவது கூட்டுறவு மத்தியிலே 'கோவாப்பிரேஷன் அமங் கோவாப்பிரேட்டிவ்ஸ்' கூட்டுறவு. பல சங்கங்கள் தரமான என்பது இல்லாத நிலைமையிலே பொருட்களை உற்பத்தி செய்தால்கூட அதை விற்க முடியாத நிலைமை இன்றைக்கு இருந்து கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். எனவே இவை எல்லாம் தவிர்க்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12—55

அதைப்போல கூட்டுறவுச் சங்கங்கள் உற்பத்தி செய்கிற பொருள்களுக்கு 15 சதவீதம் அதிகவிலை கொடுத்து வாங்குவதற்குச் சட்டத்திலே இடம் இருந்தாலும்கூட அவ்வாறு பொருள்கள் வாங்கப்படுவதில்லை. அதைச் செய்வதற்கு அரசு தக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையிலே பல தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. அந்தத் தொழிற்சாலைகள் 'பாக்டரி இன்ஸ்பெக்டர்களால் பலநேரங்களில் பரிசோதனை செய்யப்படுகின்றன; ஆய்வு செய்யப்படுகின்றன. அப்படிச் செய்கின்றபோது ஏதேனும் ஒரு சிறிய தவறு இருந்தாலும் கூட தண்டனை வழங்கப்படுகிறது. அந்தத் தண்டனை யாருக்கு வழங்கப்படுகிறது என்றால் கூட்டுறவுச் சங்கத் தலைவருக்குத் தண்டனை வழங்கப்படுகிறது. இதைப்போன்ற குறைபாடுகள் களையப்பட வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல தமிழ்நாடு கூட்டுறவு யூனியன் இருக்கிறது. அதனுடைய நடவடிக்கைகளைப் பற்றி கொள்கை விளக்கக்

[திரு. வி. கே. லட்சுமணன்] [1992 ஏப்ரல் 8

குறிப்பில் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அந்தக் கூட்டுறவு யூனியன் தெளிவாக இந்த ஆண்டிலே, இத்தனை கோடி ரூபாய், இன்ன காரியத்திற்காக செலவிட்டிருக்கிறது என்ற விவரம் கொடுக்கப்படவில்லை. அதற்கு மாறாக, சென்னையிலே நீண்டநாட்களாக ஒரு விடுதி 'ஐலண்ட் கிரவுண்டில்' இருந்தது. அந்த விடுதி மிகவும் கேவலமான நிலைமையில் இருந்தது. தற்போது அதையும் மூடி விட்டார்கள். கூட்டுறவாளர்களுக்காக சென்னை யிலே இந்த யூனியன் மூலமாக ஒரு பெரிய விடுதியைக் கட்டித்தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக் கொண்டு முடித்துவிடுகிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. சி. கிருஷ்ணன்.

திரு. சி. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உணவு மற்றும் கூட்டுறவு மானியக் கோரிக்கைகளில் பேச அனுமதித்த தங்களுக்கும், தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் என்னுடைய நன்றியினை முதலில் தெரிவித்துக்கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

கிராமப் பகுதிகளிலே இருக்கிற ஏழை எளிய விவசாயிகளிடத்தில் இன்றைக்கு இருப்பது மரியாதை ஒன்றுதான். மரியாதை ஒன்றைத்தான் அவர்களுடைய சொத்தாக வைத்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட மரியாதை இன்றைக்கு—சினிமாவிலே சொல் வதைப்போல, சின்ன கவுண்டர், பெரிய கவுண்டர் பெண் என்று சொல்வதைப் போல - நாம் ஜப்தி செய்வதன் மூலம் இழக்கப் படுகிறது. மரியாதையை இழக்கின்ற நிலைமைக்கு அவர்கள் ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். இதை எல்லாம் உணர்ந்த புரட்சித் தலைவி அவர்கள் சடுமையான நடவடிக்கை எடுத்து, ஜப்தியை நிறுத்தி, ஜப்தி செய்தவர்களுக்கு அந்தப் பொருள் களைத் திரும்ப வழங்க வேண்டுமென்று ஆணையிட்டு, மிகப் பெரிய ஒரு புரட்சியைத் தமிழ் நாட்டினுடைய வரலாற்றிலே ஏற்படுத்தியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). அப்படிப் பட்ட இந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க தமிழ் நாட்டினுடைய முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு இந்த நேரத்திலே நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இனி வரும் காலத்திலும் இதைப்போன்று தமிழ்நாட்டிலே ஜப்தி நட வடிக்கை இல்லை என்று சொல்லுகின்ற அளவுக்கு சட்ட திருத்தம் கொண்டுவந்து ஜப்தியை இல்லாமல் செய்ய வேண்டு மென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல நியாயவிலைக் கடைகளிலே விற்பனை யாளர்கள் நியமனத்திற்கு நேர்காணல் நடைபெற்றுக்கொண்டி ருக்கிறது. இந்த விற்பனையாளர்கள் நியமனத்தில் முன்னாள்



1992 ஏப்ரல் 8] [திரு. சி. கிருஷ்ணன்]

முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் எம். ஜி. ஆர். அவர்கள் சத்துணவுத் திட்டத்தில் எந்த அடிப்படையில் நியமனம் செய்தார்களோ, அதே அடிப்படையில் அந்தந்த நியாயவிலைக் கடைகளுக்கு நியமனம் செய்ய வேண்டும். பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அதிலும் குறிப்பாக கணவனால் கை விடப்பெற்ற பெண்களுக்கும்,ஊனமுற்றவர்களுக்கும் முன்னுரிமை கொடுத்து, அந்தந்த நியாயவிலைக் கடைகளுக்கு சுற்றுவட்டா ரத்தில் 3 அல்லது 4 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கிற பெண் களுக்கு முன்னுரிமை கொடுத்து, நியாயவிலைக் கடைகளில் அவர்களைப் பணியில் அமர்த்த வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, குடும்ப அட்டை வழங்குவது. மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் 1982- குடும்ப அட்டை வழங்கப்பட்டது. தற்போது பல குடும் பங்கள் தனியாகப் பிரிந்து, அப்படிப் பிரிந்த குடும்பங்களுக்கு உணவுப் பொருள்கள் வாங்க முடியாமல் இருக்கிறது. அதை உணர்ந்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சி யிலே விரைவாக குடும்ப அட்டைகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல, குடும்ப அட்டைகளை இரண்டு பிரிவு களாகப் பிரித்து—வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்கள் என்றும், வருமானம் உள்ளவர்கள் என்றும் இரண்டாகப் பிரித்து, அந்த அடிப்படையிலே உணவுப்பொருள்களை, நுகர்பொருள் களை வழங்குவதற்கு, நியாயவிலைக் கடைகளிலே அரிசி போன்ற பொருட்களை வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கின்றவர்களுக்கு விலை மலிவாகவும், வறுமைக் கோட்டிற்கு மேலே உள்ளவர் களுக்கு விலை அதிகமாகவும் கொடுக்கின்ற வகையிலே, குடும்ப அட்டையினுடைய வருமானத்தை இரண்டு வகையாகப் பிரித்து, அதனுடைய அடிப்படையிலே விலைப் பட்டியலை நிர்ணயம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1—00

அதேபோல, தர்மபுரி மாவட்டத்திலே செ. கந்தப்பன் என்ற பெயரிலே இருக்கின்ற சர்க்கரை ஆலைக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சர்க்கரை ஆலை என்று பெயரை மாற்றி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). (மணியடிக்கப் பெற்றது).

அதேபோல, வாழை, வெற்றிலை போன்ற பணப் பயிர்கள் புயல் வெள்ளத்தினால் பாதிக்கப்படுவதால், அந்த விவசாயி களுக்குக் கடுமையான இழப்பு ஏற்படுகிறது. எனவே, இந்தப் பயிர்களை பயிர் இன்ஷூரன்ஸ் திட்டத்திலே சேர்க்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

[திரு. சி. கிருஷ்ணன்] [1992 ஏப்ரல் 8

அதேபோல திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, அவர்களுடைய அதிகார துஷ்பிரயோகத்தினால் பெரியசாமி என்ற எழுத்தருக்கு முறைகேடாக - 12 ஆண்டுக்காலம் பதவி நீக்கம் செய்யப்பட்டவர் - பதவி உயர்வு கொடுத்து சுமார் 5½ இலட்சம் ரூபாய் அவருக்குக் கிடைக்கின்ற வகையிலே ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். நம்முடைய ஆட்சியிலே, இந்த முறைகேடான நடவடிக்கையை விசாரணை செய்து அப்படிப்பட்டவரிடமிருந்து அந்தப் பணத்தைத் திரும்பப்பெற்று அவருக்கு மீண்டும் வேலை நீக்க உத்தரவை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சேலம் மத்திய கூட்டுறவு வங்கியிலே பணியாற்றுகின்ற அந்த பெரியசாமி மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல நிலவள வங்கியிலே 75 வவுச்சர்கள் ஒரு எழுத்தர் எழுத வேண்டும் என்ற கணக்கு கடந்த காலத்திலே இருந்தது. அது தற்போது 250 வவுச்சர்கள் என்று அதிகமாக்கப்பட்டு உள்ளது. எனவே அது முந்தைய காலத்திலே இருந்ததைப்போல 75 வவுச்சர்கள் தான் எழுத வேண்டும் என்ற அடிப்படையிலே அவர்களுடைய வேலைப் பளுவைக் குறைத்து உத்தரவிடவேண்டுமென்று வேண்டுகிறேன். இதனைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு வாய்ப்புக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு காங்கிரஸ் கட்சி சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கூட்டுறவுத் துறையானது, மாவட்ட ரீதியாக 17 மத்திய கூட்டுறவு வங்கிகளையும், சுமார் 4,255 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளையும் கொண்ட சிறந்த அமைப்பாக இன்றைக்கு செயலாற்றிக் கொண்டிருக்கிறது நம்முடைய தமிழகத்திலே. ஏனைய வங்கிகளை விட சுமார் 2½% அதிகமாக வாடிக்கையாளர்களுக்கு அவர்களுடைய வைப்பு நிதிக்கு வட்டியாக கொடுக்கக்கூடிய அளவிலே இந்தக் கூட்டுறவுத் துறை வங்கிகள் செயலாற்றிக்கொண்டிருப்பது நம்முடைய கூட்டுறவுத் துறையினுடைய ஒரு பெருமையான செயலாகும். இங்கே மூன்றில் ஒரு பங்கு வேளாண்மைக் கடனை இந்தக் கூட்டுறவு வேளாண்மை வங்கிகள் நம்முடைய தமிழகத்திலே நிவர்த்தி செய்துகொண்டிருக்கின்றன. விவசாயிகளுக்கும், சிறுதொழில் முனைவோருக்கும் கடன் வழங்குவதிலே நம்முடைய கூட்டுறவுச் சங்கமானது ஒரு பெரிய செயலை நம்முடைய தமிழகத்திலே ஆற்றிக் கொண்டிருக்கிறது. கூட்டுறவே நாட்டுயர்வு என்ற சொல்லுக்கு இணங்க இந்தக் கூட்டுறவுத் துறையிலே இன்றைக்கு



1992 ஏப்ரல் 8] [திரு. எஸ். எஸ். ராமசுப்பு]

அமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் சிறப்பாகப் பணியாற்றக்கூடிய நல்ல அமைச்சராகத்
திகழ்ந்துகொண்டிருக்கிறார் என்பதில் ஐயமில்லை. ஆனால்
இந்தக் கூட்டுறவு இயக்கத்தின் மூலம் இதற்கு முந்தைய ஆட்சிக்
காலத்திலே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களையே நலிவு அடையச்
செய்யக்கூடிய அளவிலே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்
காலத்தில் எந்தவிதமான நார்ம்ஸ்ஸுமே இல்லாமல், அதிகாரத்தை
தங்கள் கையிலே எடுத்துக்கொண்டு, கிராமத்திலே உள்ள ஏழை
மக்களுக்கு, உரியவர்களுக்கு, கடன்கள், உதவிகள் வழங்கப்
படாமல், மக்களுக்கு சேவை ஆற்ற வேண்டும் என்ற எண்ணத்திற்கு
இடம் கொடுக்காமல், பினாமி லோன்கள் எல்லாம் வழங்கப்
பட்டன. கூட்டுறவினுடைய அடிப்படைத் தத்துவமே அந்தக்
காலத்திலே தகர்த்து எறியப்பட்டிருக்கிறது. அதாவது 16-ஆம்
தேதி போராட்டம் நடத்தப் போவதாக தி.மு.க.வினர் இன்றைக்கு
ஒரு கூட்டத்தில் அறிவித்து இருக்கிறார்கள். கூட்டுறவுச் சங்க
தேர்தல்கள் முறையாக நடைபெற்று ஜனநாயகம் நிலைநாட்டப்
படுமா என்ற கேள்வியை அவர்கள் கூட்டத்தில் வைத்து
இருக்கிறார்கள்.

பிற்பகல் 1—05

அதுமட்டுமல்ல, கூட்டுறவுச் சங்கங்களின் விதிமுறைகளுக்கு
எதிரான செயல்பாடுகளைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்றும்
முறையான தேர்தலை நடத்தக் கோரியும் ஜனநாயக முறைகளைக்
காப்பாற்றவும் அவர்கள் இன்றைக்கு இந்தக் கூட்டுறவு அமைப்பு
களைப் பாதுகாக்க வேண்டும் என்றும தி. மு. க. கூட்டத்தில்
இன்றைக்குத் தீர்மானமாக போடப்பட்டு 16-ஆம் தேதி அன்று
போராட்டம் நடத்தப் போவதாக சொல்லியிருக்கிறார்கள்.
ஜனநாயக நெறிமுறைகளைப் பற்றி யார் பேசுவது என்ற வரை
யறை இல்லாமல் போய்விட்டது. தி.மு.க. காலத்தில் எப்படி
ஜனநாயக முறைப்படி இந்தக் கூட்டுறவுத் தேர்தல்கள் நடை
பெற்றன என்பதை நாம் எல்லாம் அறிவோம். தமிழகத்திலே
வோட்டுப் பெட்டிகளைத் தூக்கிச் சென்றவர்கள்; அதைப் போல
முறையான தேர்தலை நடத்தாமல் வாக்குகளை அவர்கள் போட
விடாமல் இந்த தி.மு.க. காரர்கள் செய்த வன்முறைகள் இவை
களையெல்லாம் நாம் மறக்கவே முடியாது என்பதை நாம் இந்த
மாமன்றத்தில் இருக்கின்ற அத்தனை உறுப்பினர்களும் அறி
வோம். இன்றைக்கு அவர்கள் போராட்டம் நடத்தப் போவதாக
இங்கே அவர்கள் தீர்மானம் போட்டு சொல்லிக் கொண்டிருக்கி
றார்கள். மக்கள் அவர்களை நிச்சயமாக நம்ப மாட்டார்கள்
என்பதை இந்த மாமன்றம் அறியும், பொதுமக்கள் அறிவார்கள்.

அதுமட்டுமல்ல, இன்றைக்கு தனி மனிதர்கள் ஆதிக்கத்தின்
கீழ் கூட்டுறவுச் சங்கங்கள் பல்வேறு கிராமங்களில் செயல்பட்டுக்
கொண்டு இருக்கின்றன. தி.மு.க. காலத்தில் செகரட்டரி என்ற
ஒருவரைப் போட்டார்கள். ஒவ்வொரு கூட்டுறவுச்
சங்கத்திலும் அந்த செகரட்டரியாகப் பணியாற்றிக்

[திரு எஸ். எஸ்.ராமசுப்பு] [1992 ஏப்ரல் 8

கொண்டு இருப்பவர்கள் தி.மு.க.வைச் சேர்ந்தவர்களாக இருக்
கிறார்கள். இன்றைக்கு இருக்கின்றவர்கள் அதாவது உண்மையான
உறுப்பினர்களைச் சேர விடாமல் ஏற்கனவே போலியாக இருக்
கின்ற உறுப்பினர்களைக் கொண்ட சங்கங்களாகப் பல்வேறு
இடங்களில் திகழ்வதற்கு இந்த செகரட்டரி என்று சொல்லப்
படக்கூடியவர்கள் உறுதுணையாக இன்றைக்கும் இருந்து
கொண்டிருக்கிறார்கள். எங்களுடைய சங்கம்கொண்டான என்ற
கிராமத்தை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைத் தனி
கவனமாக எடுத்துக்கொள்ள வேண்டும். நான் அந்தச் சங்கத்தைச்
சென்று பார்க்கும்போது அங்கே இரண்டு பெரிய படங்கள் இருந்
தன. வை. கோபால்சாமி அவர்களுடைய படமும், கருணாநிதி
அவர்களுடைய படமும் அங்கே வைககப்பட்டு இருந்தன. அங்கே
இருக்கின்ற செகரட்டரியும், அங்கே பணியாற்றுபவர்களும் காலை
யில் வந்த உடன் அந்தப் படங்களுக்கு ஒரு கும்பிடு கும்பிட்டு
விட்டு கீழே அமர்ந்து அவர்களுடைய அன்றைய பணியைத
தொடங்குகிறார்கள். அங்கே எபபடி நியாயத்தை எதிர்பார்க்க
முடியும். அங்குள்ள மக்களுக்கு இவர்கள் எப்படி ஒழுங்காக,...

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :</u> மாண்புமிகு
உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

<u>*மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :</u> மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, இப்படிப்பட்ட செயலாளர்கள்
எங்கெங்கே யார், யார் இருக்கிறார்கள் என்பது தெரியுமானால்,
ஆங்காங்கே, இருப்பவர்கள் தெரிவிப்பார்களானால் கடுமையான
நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் (மேசையைத் தட்டும்
ஒலி) படங்கள் எல்லாம் அகற்றப்படும் என்பதையும் தெரிவித்துக்
கொள்கிறேன்.

<u>திரு. எஸ். எஸ். ராமசுப்பு :</u> மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன
தற்கு நன்றி. ஆனால் அங்கே பொதுமக்கள் அந்தச் சங்கத்திற்குச்
சென்று உரம் வாங்கமுடியாது. அதைப்போல ஒழுங்கான முறை
யிலே அரிசி கிடைப்பதில்லை. அங்குள்ள பொதுமக்கள் என்னை
அழைத்து அந்தச் சங்கத்திற்குக் கொண்டு போய்க் காட்டினார்கள்.
நான் அங்கு இருக்கின்ற செகரட்டரி மற்ற அதிகாரிகளைக் கேட்
கும் போது அவர்கள் இதற்கு சரியான பதிலைச் சொல்லவில்லை.
ஏன் என்றால் அங்கே ஒரு தனி மனிதன் ஆதிக்கம் செலுத்திக்
கொண்டு இருக்கின்றான். இதுபோன்ற சங்கங்கள் பல கிராமங்
களில் இருக்கின்றன. இதுபோன்ற செகரட்டரிகளை நீங்கள்
ஏதாவது ஒரு சட்டத்தின் மூலமாக அங்கிருந்து
அகற்றிப் போடாவிட்டால் நீங்கள் ஜனநாயக முறைப்படி ஒரு
நல்ல தேர்தலை நாம் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நடத்த முடி
யாது என்பதை மட்டும் இங்கே நான் சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன்.



1992 ஏப்ரல் 8] [திரு. எஸ். எஸ். ராமசுப்பு]

அதேபோல் குறுகிய காலப் பயிர்க் கடன்கள் நம்முடைய கூட்
டுறவுச் சங்கங்கள் மூலமாக வழங்கப்படுகிறது. குறுகிய காலப்
பயிர்க் கடன்கள் வழங்கும்போது பல்வேறு இடங்களில் இது ஒரு
பிரச்சினையாக இருந்து கொண்டிருக்கிறது. குறுகிய காலக் கடன்
என்றால் 6 மாதம், ஒரு வருடத்திற்குள், அது பயிர்க் கடன்,
நெல் பயிருக்கு அல்லது வேறு பயிர்களுக்கு அது கொடுக்கப்படு
கிறது. அப்படிக் கொடுக்கப்படும்போது அங்கே ஏழை விவசாயிகள்
புறக்கணிக்கப்படுகிறார்கள். இங்கே கூட நான் ஒரு உதாரணத்
திற்குச் சொல்ல விரும்புகிறேன். இதிலே பல்வேறு நிபந்தனை
கள் போடப்பட்டிருக்கின்றன. நிபந்தனைகள் என்பது சுமார்
11 நிபந்தனைகள் இதில் பிரிண்ட் செய்யப்பட்டு இருக்கிறது.
அந்த 11 நிபந்தனைகளுக்கு மேலாக ஒரு 20 நிபந்தனைகளை
இங்கே அவர்களாகவே எழுதியிருக்கிறார்கள். இது 6 மாத காலத்
தில் கொடுக்கப்படவேண்டிய கடனானது அந்த ஏழைகளுக்கு
சுமார் 56 ஏழைகளுக்கு அந்த சொசைட்டி மூலமாகக் கொடுக்கப்
பட வேண்டிய கடன் தள்ளுபடி செய்யப்பட்டதால் அந்தக் காலக்
கெடுவுக்குள் சீசனாலட்டி என்று சொல்லுவார்களே அந்த
சீசனாலட்டி பீரியடுக்குள் அவர்களுக்குக் கொடுக்கப்படாததால்
இன்றைக்கு அந்த 56 ஏழைகளும் கடன் வாங்க முடியாத ஒரு
சூழ்நிலையில் இருக்கிறார்கள். நான் மாண்புமிகு அமைச்சர்
அவர்களின் கவனத்திற்கு இதைக் கொடுக்கிறேன். இதுபோன்ற
குறுகிய காலப் பயிர்க் கடன்களை உடனடியாகக் கொடுப்பதற்கு
அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதை நான்
கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1–10

அதுமட்டுமல்ல, நகைக் கடன் வழங்குகிறார்கள். கூட்டுறவுச்
சங்கங்களின் மூலமாக நகைக் கடன்கள் வழங்கப்படுகின்ற
பொழுது சில நேரங்களிலே, பட்டாதாரர்களாக இல்லாதவர்கள்,
நிலம் இல்லாதவர்கள், லேவாதேவிக்காரர்கள் போன்றவர்கள்
அந்தக் கடனை எளிதாக வாங்கி வெளியே கிராமங்களிலே
அவர்கள் கடன் கொடுக்கக்கூடிய நிலை இருக்கிறது. இதைத்
தடுத்து நிறுத்துவதற்கும், அதைச் சரியான முறையிலே கொடுப்
பதற்கும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க
வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மேலும் கூட்டுறவுப் பயிற்சி நிறுவனங்கள இப்போது
தமிழகத்திலே இருக்கின்றன. இன்றைக்குத் திருநெல்வேலி
மாவட்டத்திலே இந்தக் கூட்டுறவு பயிற்சி நிறுவனங்களில் இப்
போதுதான் கொஞ்சம் அதிகமாகச் சேருகிறார்கள். இந்தக்
கூட்டுறவு பயிற்சி நிறுவனமானது இன்றைக்குத் தமிழகம் முழு
வதும் சிறப்பாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிற இந்தச் சமயத்

[திரு. எஸ். எஸ். ராமசுப்பு] 

தில் அந்தப் பயிற்சிகளைப் பெறுவதற்கு, இதில் அதிகமான மாணவர்களைச் சேர்ப்பதற்கு, நீங்கள் அதில் கூடுதலாக இடம் ஒதுக்கித் தர வேண்டுமென்பதையும் சொல்லிக் கொள்கிறேன்.

கடன் தள்ளுபடி. மாண்புமிகு நம்முடைய டாக்டர் முதல்வர் அவர்கள்கூட இந்தச் சபையிலே சொன்னார்கள், ஜனதா தளத்தினுடைய வி.பி. சிங் அரசும், இதற்கு முந்தைய திராவிட முன்னேற்றக் கழக அரசும் 10 ஆயிரம் ரூபாய் கடன் தள்ளுபடி செய்வதாகச் சொல்லி, அங்கேயிருந்து பல அறிக்கைகளும் அனுப்பப் பட்டன. அப்படி தள்ளுபடி செய்வதாகச் சொல்லப் பட்டு, இன்றைக்கு நாம் அந்தக் கடனைத் திருப்பி அடைக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழக சர்க்காரானது அதைக் கடனாகத்தான் செலுத்த வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது என்பதை இந்த மாமன்றத்திலே தெரிவித்தார்கள். இன்றைக்கு அந்த விவசாயிகள், கண்ணிழந்தவர்களுக்கு, ஒளி இழந்தவர்களுக்கு ஒளி கிடைத்து விட்டதுபோல இருந்தவர்களுக்கு மீண்டும் கண்ணை எடுத்ததைப் போல இன்றைக்கு அவர்கள் பரிதவித்துக் கொண்டு இருக்கிறார்கள். இந்த ஜனதா தளத்துக்காரர்களும் தி.மு.க.-காரர்களும் செய்த ஒரு பெரிய வேஷமானது இன்றைக்கு மக்கள் மத்தியிலே ஒரு பெரிய....

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ், நீங்கள் எந்த விதியின் கீழ் பேச ஆரம்பிக்கிறீர்கள் ? பாயிண்ட் ஆஃப் ஆர்டரா ? பாயின்ட் ஆஃப் இன்பர்மேஷனா? நீங்கள் திடீரென்று எழுந்து பேசுகிறீர்கள்.

டாக்டர் தே. குமாரதாஸ் : பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயின்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் என்றால் h is not yielding; he is not yielding for any of your clarifications உட்காருங்கள், திரு. எஸ் எஸ். ராமசுப்பு.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளதைத்தானே சொல்கிறேன். இதிலே என்ன இருக்கிறது? (மேசையைத் தட்டும் ஒலி) ஜனதா தளத்துக்காரர்கள், நீங்கள் என்ன சொன்னீர்கள் ? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கிளாரிபிகேஷன் என்றால் அவர் பேசி முடித்ததற்குப் பிறகு கேளுங்கள். அவர் பேசி முடிக்கட்டும். உட்காருங்கள். திரு.எஸ்.எஸ். ராமசுப்பு.





திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உள்ளதைத்தான் சொல்கிறேன் இதிலே என்ன இருக்கிறது ? பெரிய விஷயமா இது ? ஜனதாதளத்துக்காரர்கள், நீங்கள் என்ன செய்தீர்கள்? வந்து 10 ஆயிரம் கொடுக்கிறேன் என்று சொன்னீர்கள் ? ஏமாற்றி இருக்கிறீர்கள் மக்களை; அதைத்தான் நான் சொல்லி வருகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்,

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் கருங்கல் பகுதியில் என்னுடைய தொகுதிக்குட்பட்ட பகுதியில் ஒரு விவசாய சங்கத்தினுடைய தலைவராக இருந்தேன். அங்கே 11 லட்சம் ரூபாய் தள்ளுபடி செய்து நானே கையெழுத்திட்டு, தள்ளுபடி செய்திருக்கிறேன். அந்தப் பணங்களையெல்லாம் மீண்டும் கட்ட வேண்டுமென்று வந்திருக்கிறதே ; அன்றைக்கு தள்ளுபடி செய்ததை இன்றைக்கு வசூலிப்பதை இந்த அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அன்றைக்கு நானே (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் குமாரதாஸ் அவர் கேட்டது, நீங்கள் பத்தாயிரம் ரூபாய் தள்ளுபடி செய்கிறேன் என்று சொன்னீர்கள். அதையெல்லாம் இன்றைக்கு இந்த மாநில அரசு திருப்பித் தர வேண்டும் என்கிற அளவுக்கு தாக்கீது வந்திருக்கிறது. அது அன்றைக்குத் தள்ளுபடி செய்ததாக ஏமாற்றினீர்களா என்றுதான் கேட்கிறார். அதை விட்டுவிட்டு நீங்கள் இன்னொரு பிரச்சினைக்குச் செல்கிறீர்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், திரு. எஸ். எஸ் ராமசுப்பு. (குறுக்கீடு) நீங்கள் உட்காருங்கள் அவர் பேசட்டும். நீங்கள் அவர் கேட்டதை விட்டுவிட்டு வேறு எங்கோ செல்கிறீர்கள், உட்காருங்கள். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

திரு. எஸ் ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜனதா சர்க்கார் தள்ளுபடி செய்திருந்தால் அதற்கான நிதி ஒதுக்கீட்டையும் செய்திருக்க வேண்டும். நிதி ஒதுக்கீடு எதையும் செய்யவில்லை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக எடுத்துரைத்திருக்கிறார்கள். ஆகவே அநுபித்தலாட்டம் அது ஏமாற்று வேலை என்பதை முதலமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள், (மேசையைத்தட்டும் ஒலி) அதையே தான் எங்கள் கட்சி உறுப்பினரும் சொல்கிறார். (குறுக்கீடு)

[1992 ஏப்ரல் 8

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ், நீங்கள் அதற்குப் பதில் சொல்லாமல் வேறு எங்கோ போகிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் **1–15**

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இதைப்பற்றி தெளிவாக இந்த அவையில் நான் கூறியிருக்கிறேன். விவசாயக் கடன்கள் தள்ளுபடி என்று ஜனதா தள ஆட்சி அப்போது அறிவித்தபோது அதற்காக எந்த நிதி ஒதுக்கீடும் செய்யவில்லை. அப்போது அவர்கள் கூறியது 50 சதவீதத்தை மாநில அரசே ஏற்கவேண்டும் ; 50 சதவீதத்தை மத்திய அரசு கடனாகக் கொடுக்கும் என்றுதான் சொன்னார்கள் அப்படி அவர்கள் கொடுத்த நிதியிலிருந்து. அவர்கள் இப்போது கடனாகக் கொடுத்த நிதியை தமிழக அரசிடமிருந்து வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது கூட மத்திய அரசுக்கு தவணை முறையில் இந்த அரசு ஒரு குறிப்பிட்ட தொகையைச் செலுத்தி வருகிறது.

அதுமட்டுமல்ல, இது ஏற்கனவே கண்துடைப்பு நாடகம், மோசடி என்று சொன்னேன். எவ்வளவு பெரியமோசடி என்றால், அவர்கள் ஐம்பது சதவீதம் மத்திய அரசில் கொடுப்பதாகச் சொன்னார்களே, அதில்கூட பாக்கி வைத்திருக்கிறார்கள் இன்று வரை. (மேசையைத் தட்டும் ஒலி) அப்பொழுது அவர்கள் கொடுப்பதாகச் சொன்னதே 50 சதவீதம். அந்த 50 விழுக்காட்டைக்கூட அவர்கள் முழுமையாகக் கொடுக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) அதிலேயே இன்னும் 71 கோடியோ என்னமோ வரவேண்டி இருக்கிறது - இன்னும் 71 கோடி ரூபாய் வர வேண்டியிருக்கிறது மாநில அரசுக்கு, இதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன விளக்கத்தைச் சொல்லப் போகிறார் என்பதை அறிய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ்

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே அன்றையதினம் மத்தியிலிருந்த ஜனதா சர்க்காரும் தமிழகத்தில் இருந்த அரசும், திராவிட முன்னேற்றக் கழக அரசு மாகத் தள்ளுபடி செய்து ஒவ்வொரு சொசைட்டியிலிருந்தும் - 10,000 ரூபாய்க்கு அதிகமாக அதாவது 1985-க்கு முன்னாலே கடன் வாங்கி கட்ட முடியாத விவசாயிகளுக்கு ஒட்டுமொத்தமாகத் தள்ளுபடி செய்த விதத்தில் ஒவ்வொரு சொசைட்டிக்கும் குறைந்தபட்சம் 11 இலட்சம் ரூபாய்—நான் இருந்த சொசைட்டியின் மூலம் தள்ளுபடி செய்திருக்கின்றோம்.



1992 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதைத்தான் மாண்புமிகு முதலமைச்சர் சொல்கிறார், நீங்கள் தள்ளுபடி செய்யச் சொல்லி விட்டு அதற்குரிய பணத்தையும் இன்றுவரையும் கொடுக்காமல் இருப்பது எவ்வளவு மோசடி என்று. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதில் மீண்டும் மீண்டும் நான் தெளிவுபடுத்த விரும்புவது, அன்றைய மத்திய ஜனதா தள ஆட்சி, ஜனதா தள அரசு விவசாயிகளின் கடன்கள் தள்ளுபடி என்று அறிவித்ததேயொழிய அதில் ஒரு பைசா கூட மானியமாகக் கொடுக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) பின்னர் அது எப்படி தள்ளுபடி உண்மையான தள்ளுபடி என்று சொல்ல முடியும்? (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு. (குறுக்கீடுகள்) அவர் முடிக்கட்டும். முடியுங்கள். (குறுக்கீடுகள்) ஆட்சி நடத்தியது அவர். (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் எதற்கு வக்காலத்து வாங்குகிறீர்கள்? அவர் கட்சி ஆட்சி நடத்தியது, அவர் கட்சி ஆட்சியைப் பற்றிய பிரச்சினைக்கு அவர் பதில் சொன்னார். நீங்கள்கூட இருந்த பேர்கள். இரண்டு பக்கமும் எழுந்தால் எப்படி? (மேசையைத் தட்டும் ஒலி) உட்காருங்கள். திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமத்திலே ஒரு பழமொழியைச் சொல்வார்கள். கடைத் தேங்காயை எடுத்து வழிப் பிள்ளையாருக்கு உடைப்பது போல என்று. அந்தக் கதைதான் இங்கே. (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் இங்கேயிருந்து, தமிழகத்துக்காரர்களிடமிருந்து பிடுங்கி அங்கே கொடுத்தமாதிரி கதை. இது ஒரு சரியான முறை அல்ல. இவர்கள் செய்த ஒரு மாபெரும் தவறினால் இன்றைக்கு மக்கள் மிகவும் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : முடியுங்கள், திரு. எஸ். எஸ். ராமசுப்பு. நேரமாகிவிட்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குமாரதாஸ் அவர்களுக்கு இந்த விவரங்களெல்லாம் தெரியாதோ, என்னவோ, எனவே, மீண்டும் அவருக்குப் புரிய வைப்பதற்காக நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன்.

[டாக்டர். ஜெ. ஜெயலலிதா] [1992 ஏப்ரல் 8

ஜனதா தள அரசு செய்தது மிகப்பெரிய மோசடி. பத்தாயிரம்
ரூபாய் வரை விவசாயிக்குக் கடன்கள் தள்ளுபடி என்று அறிவித்
தார்களே தவிர அதற்காக மத்திய அரசு நிதியிலிருந்து ஒரு
ரூபாய்கூட அவர்கள் ஒதுக்கவில்லை; மானியமாகக் கொடுக்க
வில்லை. 50 சதவீதம் செலவினத்தை மாநில அரசே ஏற்க
வேண்டுமென்றார்கள். மீதமுள்ள 50 சதவீத நிதியை மத்திய
அரசு கடனாகத்தான் மாநில அரசுக்குக் கொடுக்கும் என்றார்கள்.
அப்படியென்றால், அவர்கள் கொடுத்த கடனை இன்றுவரை
வசூலித்துக்கொண்டிருக்கிறார்கள், மாநில அரசிடமிருந்து.

அதுமட்டுமல்லாமல் அவர்கள் கொடுக்க வேண்டிய அந்த
50 சதவீத கடனில்கூட 71 கோடி ரூபாய் இன்றுவரை நிலுவையில்
உள்ளது, பாக்கியாக உள்ளது, கொடுக்கவே இல்லை என்பதைச்
சுட்டிக் காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)
(குறுக்கீடு)

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ திரு. வே. தம்புசாமி.
கூட இருந்தேன் என்றால் எழுந்திருக்க வேண்டுமா?

__திரு. வே. தம்புசாமி :__ மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மத்தியிலே இருக்கக்கூடிய காங்கிரஸ் அரசு என்பதை
நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். முன்னால் தள்ளுபடி
செய்தது, ஆனால் இப்பொழுது வசூலிப்பது என்பது காங்கிரஸ்
அரசு. இதற்கு விவசாயிகள் மீது உண்மையிலேயே அக்கறை
இருந்தால் இந்தக் கடனை அவர்களைபின்பற்றி இருக்க வேண்டும்.
அதைப் பின்பற்றாமல், கடனாக வசூலித்துக்கொண்டிருப்பது
மத்தியில் இருக்கிற காங்கிரஸ் அரசு என்பதை நான் நினைவு
படுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ எதிர்க்கட்சித் தலைவர்.

__திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் :__ மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, முந்தைய மத்திய அரசின் கொள்கை எதுவோ
அதை இன்று மத்திய அரசு பின்பற்றிக் கொண்டிருக்கிறது.
கொடுத்த தொகை மானியமாகத் தரப்படவில்லை என்பதை
மிகத் தெளிவாக ஆதாரபூர்வமாக முதலமைச்சரவர்கள் சொல்லி
யிருக்கிறார்கள். அந்தக் கடனைத் திருப்பி வசூலிக்கவேண்டு
மென்பது மத்திய சர்க்காருடைய - பழைய மத்திய சர்க்காரு
டைய கொள்கை, இன்றைய மத்திய சர்க்கார் நிறைவேற்றிக்
கொண்டிருக்கிறது. அவர்கள் என்னென்ன கடனை வைத்து
விட்டுப் போயிருக்கிறார்களோ, அதையெல்லாம் நாங்கள் ஏற்றுக்
கொண்டிருக்கிறோம். மத்திய சர்க்கார் இன்றைய தினம், நீங்கள்
ஊருக்குச் சொல்லாமல் உலகுக்குச் சொல்லாமல், ஆயிரம் கோடி
ரூபாய்க்குத் தங்கம் அடமானமாக வைத்திருக்கிறீர்கள்; அதை
இன்றைய மத்திய சர்க்கார் மீட்டிருக்கிறது; அதுமட்டுமல்ல, உலக



1992 ஏப்ரல் 8] [திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன்]

வங்கியிடமிருந்து வாங்கிய கடனை யாருக்கும் சொல்லாமல்
வாங்கினீர்கள். அந்தக் கடனையெல்லாம் இன்றைய மத்திய
சர்க்கார்தான் திருப்பிச் செலுத்திக்கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1–20

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ மாண்புமிகு முதல்
அமைச்சர் அவர்கள்.

__மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா :__ மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, அவைக்கு சரியானத் தகவலைக்
கொடுக்க வேண்டும் என்பதற்காக இந்த விவரங்களைத் தெரி
விக்க விரும்புகிறேன். அன்றைய தினம், மத்தியில் வி. பி. சிங்
அவர்கள் தலைமையில், ஜனதாதள ஆட்சி இருந்தபோது, தள்ளு
படி என்று அறிவித்த மொத்தத் தொகை 249 கோடி ரூபாய்.
அதில் மத்திய அரசு, இன்னும் மாநில அரசுக்குக் கொடுக்க
வேண்டிய பாக்கி 71 கோடி ரூபாய். அதில், மாநில அரசு
மத்திய அரசுக்குக் கடன் தவணையாக மார்ச், 1992-இல் திருப்பிச்
செலுத்தவேண்டிய தொகை 49 கோடி ரூபாய். இங்கே மாண்பு
மிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் பேசுகிறபோது சொன்
னார்கள் , மத்திய அரசுக்கு உண்மையிலேயே விவசாயிகளின்
பேரில் அக்கறை இருக்குமானால் ஏன் இந்தத் தொகையைத்
திரும்ப வசூலிக்க வேண்டுமென்று கேட்டாகள். நான் அதற்குள்
நுழைய விரும்பவில்லை. ஆனால், அன்றைக்கு நீங்கள் அங்கம்
வகித்தீர்களே; உங்கள் கட்சி அங்கம் வகித்ததே, அந்த ஆட்சி -
அங்கே மத்தியில் நீங்கள் கூட்டணிக் கட்சியாக இருந்தீர்களே,
அந்த ஆட்சிக்கு உண்மையிலேயே விவசாயிகளின்-பேரில் உண்மை
யான அக்கறை இருக்குமானால், அவர்கள் ஏன் மானியமாகக்
கொடுக்கவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி) அதை ஏன் திரும்ப
வசூலிக்க வேண்டுமென்று சொன்னார்கள்? உண்மையான விவ
சாயிகளின்பேரில் அக்கறை இருப்பதுபோல பாவனை செய்து,
மக்கள் மத்தியில் ஒரு இமேஜ்' உருவாக்க வேண்டும்; ஒரு
தோற்றத்தை உருவாக்க வேண்டும் என்று அறிவித்து விட்டு,
விவசாயிகள் கடன் தள்ளுபடி என்று ஒரு மாபெரும் அறிவிப்பைச்
செய்துவிட்டு, அதற்காக அவர்கள் செலவிட்ட தொகை எவ்
வளவு? ஒரு ரூபாய்கூட இல்லை இதற்கு நீங்கள் என்ன விளக்கம்
கூறப் போகிறீர்கள்?(மேசையைத் தட்டும் ஒலி)

__மாண்புமிகு பேரவைத் தலைவர் :__ டாக்டர் தே. குமார
தாஸ்

__டாக்டர் தே. குமாரதாஸ் :__ மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நாங்கள் அறிவித்தது உண்மை. அதைநிறைவு
செய்ய வேண்டுமென்று எடுத்துக் கொண்ட முயற்சிகளும் உண்மை.
ஆனால் ஆட்சியிலிருந்து மாற்றப்பட்டதோடு மட்டுமல்லாமல்,
அன்றைக்கு இருந்த பொருளாதார நெருக்கடியில் நாங்கள்
வெளிநாட்டிலே இருந்து ஒரு காசுகூட கடன் வாங்காமல் ஆட்சி

[டாக்டர் தே.குமாரதாஸ்] [1992 ஏப்ரல் 8

நடத்திய பெருமை ஜனதா தளத்துக்குத்தான் உண்டு. இந்திரா காங்கிரசைப் போல, வெளிநாட்டிலேயிருந்து...

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : தவறான தகவல்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எதிர்க்கட்சித் தலைவர், கொஞ்சம் உட்காருங்கள். டாக்டர் தே. குமாரதாஸ், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டது, தமிழ்நாடு விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி என்று அறிவித்துவிட்டு, அதிலே ஒரு பைசாகூட தராமல், வெறும் வாய் ஜம்பம் செய்துவிட்டுச் சென்றிருக்கிறீர்களே, அதற்கு என்ன பதில் என்றுதான் கேட்டார்கள். நீங்கள், கடன் வாங்கவில்லை என்று சொல்கிறீர்கள். மத்திய அரசாங்கம் முழுவதையும் அவர்கள் குறை சொல்லவில்லை; உங்களுடைய நடவடிக்கைகள் பூராவையும் விமர்சிக்கவில்லை. இந்த ஒரு பிரச்சினையில், தமிழகத்திற்குக் கடன் தள்ளுபடி என்று அறிவித்து விட்டு, ஒரு பைசாகூடத் தராமல் இருந்தீர்களே என்று கேட்டால், அதற்கு நீங்கள் எங்கோ போகக் கூடாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய தினம் மத்திய அரசில் யார் இருந்தாலும் சரி, உண்மை நிலைமை என்ன? அன்று மத்திய அரசாங்கம் விவசாயக் கடன்கள் தள்ளுபடி என்று அறிவித்தது; ஆனால் உண்மையிலேயே 50 சதவீதம் கடன்களை தள்ளுபடி செய்தது மாநில அரசுதான். மத்திய அரசு எங்கே தள்ளுபடி செய்தது? அது கடனாகத்தானேகிடைத்தது. கொடுக்க வேண்டிய கடன்களை கூட 71 கோடி ரூபாய் பாக்கியாக வைத்திருக்கிறார்கள். ஆகவே, அரசு, அந்த மத்திய அரசு இதற்காக எப்படி ஒரு கிரடிட்டை எடுத்துக்கொள்ள முடியும்? அவர்களுடைய சாதனை என்று சொல்ல முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஜி. பழனிசாமி உட்காருங்கள். நீங்கள் ஒரு தடவை வக்காலத்து வாங்கினால் போதும் (குறுக்கீடு) அது போதும் இதிலே விளக்கம் இல்லை. இது டாக்டர் குமாரதாஸ் சம்மந்தப்பட்ட பிரச்சினை அதற்கு அவர் பதில் சொன்னார். நீங்கள் உட்காருங்கள். குறுக்கீடு முதலமைச்சர் அவர்கள் கேட்டது, கடன் தள்ளுபடி என்று அறிவித்துவிட்டு, ஒரு காசு கூடக் கொடுக்காத சர்க்கார், இந்தக் கிரடிட்டை எப்படி எடுத்துக் கொள்ளலாம் என்று கேட்டார். (குறுக்கீடு) இதிலே மேற்கொண்டு விவாதம் வேண்டாம். அவர் முடிக்க வேண்டும். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்,



1992 ஏப்ரல் 8]

திரு. எஸ். ஆர். பாலசுப்ரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கடன் நிவாரணத் திட்டத்தை அறிவிக்கும்போது, அன்றைய முதலமைச்சர் இந்தப் பேரவையிலே பேசியிருக்கிறார்கள். நான் அடிப்பதுபோல அடிக்கிறேன்; நீ அழுவதுபோல அழு என்று சொல்வதைப் போல 'நாபார்டு' உதவி செய்யுமென்று நம்புகிறோமென்று அவர் சொல்லியிருக்கிறார். யாரும் அவருக்கு உதவி செய்வதாக நேரடியாகச் சொல்லவில்லை. சில உறுப்பினர்கள்கூட பேசும்போது குறிப்பிட்டார்கள். நீங்கள் ரத்து செய்யப்பட்டு விட்டதாகச் சொல்கிறீர்களே, ஆனால், அந்தக் கடன்களை வசூலிக்க வேண்டுமென்று ஆணைகள் வந்திருக்கின்றனவே என்று கேட்டார்கள். நான் அப்போதெல்லாம் உண்மையைச் சொல்ல பயந்தேன். இப்போது பயம் நீங்கி விட்டது. காரணம், மதுதண்டவதே அவர்களுடைய கடிதத்திற்குப் பிறகு, அந்தப் பயம் நீங்கி விட்டது. பயப்படாதே, 'நாபார்டு' நம் பக்கம் இருக்கிறது. 'நாபார்டு' உதவி செய்யுமென்று சொன்ன பிறகு, பயம் நீங்கி விட்டது. 'நாபார்டு'க்கு என்ன சொன்னோம் என்றால், நாங்கள் கடனை வசூலிப்போம் என்று எல்லோருக்கும் எழுதி விடுகிறோம் என்று சொன்னோம். அதிகாரிகளுக்கு என்ன சொன்னோம் என்றால், அப்படி கடிதம் வரும்; நாங்கள் அடிப்பதுபோல அடிப்போம்; அழுவதுபோல் அழுங்கள் ஆனால் யாரும் வசூலிக்காதீர்கள் என்று சொல்லி, அந்த 39 கோடி ருபாய் கடனை வசூலிக்காமல் அதேநேரத்தில் 'நாபார்டு'-காரர்களுடைய கண்ணிலே சத்துணவு பொடி காட்டினாரே அதுமாதிரி, பொடி தூவி, நாங்கள் ஒரு தந்திரமாக அதைச் செய்து, அந்த 39 கோடி ரூபாய் கடன் ரத்துக்கும்வழி செய்திருக்கிறோம் என்று சொல்கிறார்களே தவிர, மத்திய சர்க்கார் நிதி ஏற்பாடு செய்திருக்கிறது. எனவே, அஞ்சத் தேவையில்லை என்ற வார்த்தையை அவர் சொல்லவே இல்லை. எனவே, இவர் சொல்வது முழுவதும் தவறான தகவல். கடனை வாங்கவில்லை என்று சொல்லியிருக்கிறார். 1000 கோடி ரூபாய்க்குத் தங்கத்தை அடமானம் வைத்து கடன் வாங்கினார்கள். இரண்டு ராஜபுத்திரர்களும் ஊருக்குச் சொல்லாமல், உலகிற்குச் சொல்லாமல் மொத்தமாக 6,000 கோடி ரூபாய் கடனை உலக வங்கியிலிருந்தும், சர்வதேச நிதி ஸ்தாபனத்திலிருந்தும் வாங்கியிருக்கிறார்கள். (குறுக்கீடு) முழுமையான ஆதாரத்தோடுதான் பேசுகின்றேன். (குறுக்கீடு) மத்திய நிதி அமைச்சர் பேசியிருக்கிறார். அதைத்தான் நான் பேசுகிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 1-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் குமாரதாஸ், அத்துமீறிப் போகக் கூடாது உட்காருங்கள் (குறுக்கீடு) உங்களுடைய போக்கு அத்துமீறிப் போகிறது. டாக்டர் குமாரதாஸ் உட்காரவேண்டும். (குறுக்கீடு) அதாவது பிரச்சினையை விட்டுவிட்டு வேறு எங்கு எங்கோ போவது முறையல்ல. உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர்.

[1992 ஏப்ரல் 8

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மோசடிக் குற்றச்சாட்டுக்கு மாண்புமிகு வி. பி.சிங்கும், தேவிலாலும்தான் காரணமே தவிர, நான் காரணம் அல்ல என்று சொல்லிவிட்டு உட்காருவாரேயானால் பிரச்சினை இல்லை. (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு (குறுக்கீடு) உட்காருங்கள். அவர் பேசி முடிக்கட்டும். நேரம் ஆகிவிட்டது. உட்காருங்கள். (குறுக்கீடு) இது முறையல்ல. திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் எந்த ஆதாரத்தை வைத்துச் சொல்லுகிறார்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உட்காருங்கள், சொல்கிறேன். நீங்கள்தான் கடன் வாங்கவில்லை என்றீர்கள், அவர்கள் வாங்கினார்கள் என்று சொல்கிறார்கள். வாங்கவில்லை என்பதற்கு நீங்கள் என்ன ஆதாரம் வைத்திருக்கிறீர்கள்? இதெல்லாம் இங்கே பேசுகிற பிரச்சினை அல்ல. (குறுக்கீடு) உட்காருங்கள் (குறுக்கீடு) உட்கார முடியுமா இல்லையா? டாக்டர் குமாரதாஸ் உட்காருங்கள். (குறுக்கீடு) பலமுறை ஆகிவிட்டது. திரு. எஸ். எஸ். ராமசுப்பு. (குறுக்கீடு)

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு உட்காருங்கள். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் என்ன சொல்லுகிறேன் என்றால், ஏற்கனவே ஆட்சி நடத்திய தி.மு.க. கூட அந்தத் திட்டத்தை நிறைவேற்றாமல் இருந்திருக்கலாம். மத்தியிலே இருந்த ஜனதா கட்சி ஆட்சி கூட அறிவித்து விட்டுச் செய்யாமல் இருந்திருக்கலாம். ஆனால் இன்றைக்கு விவசாயிகளுடைய நலனிலே அக்கறை கொண்டுள்ள நீங்கள் விவசாயிகளுடைய கடன் சம்பந்தமாக, உங்களுடைய கொள்கை என்ன என்று அறிவித்தால் தமிழ்நாட்டில் உள்ள விவசாயிகள் புரிந்துகொள்வதற்கு வாய்ப்பாக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதை அமைச்சர் அறிவிப்பார். நீங்கள் உட்காருங்கள். திரு. எஸ். எஸ். ராமசுப்பு.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பழனிசாமி எல்லாவற்றையும் ஒத்துக்கொண்டார்.



1992 ஏப்ரல் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ராமசுப்பு, பிரச்சினையை முடியுங்கள்....

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : இத்தோடு விட்டுவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு நிமிடத்தில் முடியுங்கள்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : ஆதலால் இன்றைக்கு மாண்பு
மிகு புரட்சித் தலைவி அவர்கள் கூட இங்கே விவசாயிகளுடைய
நலன் கருதி வட்டியைத் தள்ளுபடி செய்வதாகச் சொல்லி இருக்
கிறார்கள். நம்முடைய அரசானது விவசாயிகளுடைய நலனைக்
காத்து வருகிறது. இன்னும் இருக்கிற அந்த ஏழை விவசாயி
களுடைய கடன்களையெல்லாம் - 10 ஆண்டுகளாக கஷ்டப்பட்டு
அவர்கள் கட்டிவருகின்ற வட்டியினைத் தள்ளுபடி செய்வதற்கு
அரசு நல்ல ஒரு திட்டத்தை அறிவிக்க வேண்டும் என்பதை
இங்கே ஒரு வேண்டுகோளாக வைத்துக்கொள்ள விரும்புகிறேன்.
(மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ். எஸ். ரரமசுப்பு, போதும், போதும். மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

திரு. எஸ்.எஸ். ராமசுப்பு : பேரவைத் தலைவர் அவர்களே, இன்னும் ஒன்று சொல்லிவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஆகிவிட்டது. உங்களுக்குக் கொடுத்த 7 நிமிடங்களுக்கு மேலே போய் விட்டது. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

*மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பேரறிஞர் அண்ணா அவர்களால் அரசி
யலுக்கு அறிமுகப்படுத்தப்பட்டு, அவர்களாலேயே நாடாளுமன்
றத்திற்கு அனுப்பட்ட என்னை, மாண்புமிகு மறைந்த புரட்சித்
தலைவர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக்கி, அதற்குப் பிறகு
இரண்டு ஆண்டு கால இருட்டு ஆட்சியில்அடாவடித்தனத்திற்கும்,
அதிகார துஷபிரயோகத்திற்கும் ஆளாகி, அல்லல்பட்டுக் கிடந்த
என்னை, இன்று அமைச்சராக உங்கள் முன்னாலே நிற்க வைத்
திருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) காவல் தெய்வம், மாண்பு
மிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றி
யினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பிற்பகல் 1-30

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலத்தின் அருமை கருதி நான் சுருக்கமாகவே விடை கூற விரும்புகிறேன். நான் கூறவேண்டிய முக்கியமான சில விடைகளை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களே சொல்லிவிட்டார்கள். அதாவது இன்றைக்குக் கடன் தள்ளுபடி பற்றி சொல்லவேண்டியதை, சொல்லவேண்டியவர்களுக்கு, சொல்ல வேண்டிய அளவுக்குச் சொல்லி விட்டார்கள்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் 12 பேர்கள் இந்த விவாதத்தில் பங்கேற்று இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் எழுப்பிய சில முக்கியமான கோரிக்கைகளுக்கு நான் பதில் சொல்ல விரும்புகிறேன். அதேபோல் வெட்டுத் தீர்மானங்களும் நிறைய வந்து இருக்கின்றன. அவ்வளவையும் தனித்தனியாகப் பேசி முடிக்க முடியாது என்பதால் இதிலேயே அவைகளைப் பற்றியும் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

முக்கியமான சில, இந்த ஆண்டு எடுக்கப்பட இருக்கிற நடவடிக்கைகளை உங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டம் மூன்றாகப் பிரிக்கப்பட்டபின் காமராஜர் மாவட்டம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் என்று அமைக்கப்பட்ட மாவட்டங்களுக்குத் தனித்தனியே மத்திய கூட்டுறவு வங்கிகள் இதுவரையில் துவங்கப்படாமல் இருக்கிறது. உடனடியாக இந்த மாவட்டங்களுக்கு 3 மத்திய கூட்டுறவு வங்கிகள் துவக்கப்பட இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் புதிதாகத் துவக்கப்பட்டிருக்கிற திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்திற்கும் புதிதாக வங்கி துவக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) நாகைப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டத்திற்கு ஏற்கனவே நடந்துகொண்டிருக்கிற கும்பகோணத்தில் உள்ள மத்திய கூட்டுறவு வங்கி மாற்றப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தப் புதிய மாவட்டங்களான ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலையும் 5 மாவட்டத்திற்கும் கொடுக்கப்படும் என்று புரட்சித் தலைவி அவர்கள் முடிவெடுத்து இருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் புதிய மாவட்டங்களுக்கு கூட்டுறவு யூனியன் அமைப்பதற்கும் அவர்கள் நடவடிக்கை எடுக்கச் சொல்லி உத்தரவிட்டு இருக்கிறார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள



விரும்புகிறேன். அடுத்தாற்போல இன்றைக்கு வேளாண்மைக் கடன்களை உரிய நேரத்தில் செலுத்தும் விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான புதிய கடன்களை உடனே அளிப்பதற்காக 'இன்ஸ்டென்ட் க்ரெடிட் கார்ட்ஸ்' அல்லது 'க்ரீன் கார்ட்ஸ்' கொடுக்கும் திட்டம் சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் மட்டும் இருந்தது. இந்த அட்டையை வைத்திருப்போர் கடன் கோரினால் மாவட்ட, மத்திய கூட்டுறவு வங்கியின் அனுமதியின்றியே தொடக்க வங்கிகள் கடன் வழங்கலாம். இந்தத் திட்டம் மாநிலத்திலுள்ள அனைத்து விவசாயிகளும் பயன் பெறும் வகையிலும், கூட்டுறவுக் கடன்களை விரைவில் திருப்பிச் செலுத்துவதை ஊக்குவிக்கும் வகையிலும், எல்லா தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கும் விஸ்தரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கிகளிலும், தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியிலும் பணிபுரியும் அலுவலர்களின் சம்பள விகிதங்கள் ஏற்கெனவே சீரமைக்கப்பட்டுள்ளன. இருப்பினும் இவ்வலுவலர்கள் ஒருங்கிணைக்கப்படவில்லை. அதுபோல் மாநில அளவில் உள்ள கூட்டுறவு வங்கிகளில் பணியாற்றும் சில முக்கிய பணியிடங்களுக்கு ஒரு பொதுவான பணித் தொகுப்பு அதாவது ஒரு 'காமன் கேடர்' உருவாக்குவது என்று முடிவு செய்யப்பட்டு உள்ளது.

உங்களுக்குத் தெரிந்திருக்கும், இந்த மாவட்ட கூட்டுறவு வங்கிகளில் ஆங்காங்கே இருக்கிற செயலாளர்கள் எப்படி அந்த வங்கிகளை ஆட்டிப் படைக்கிறார்கள் என்று. தனி அலுவலர்கள் மாறினாலும் அவர்கள் மாறுவதில்லை. இந்திரன் மாறினாலும் இந்திராணி மாறுவதில்லை என்பார்கள். அதேபோல் இங்கே நிறைய உறுப்பினர்களும் அதைப் பற்றிப் பேசினார்கள். ஆகவே இனிமேல் அவர்களைப் பணிமாற்றம் செய்வதற்கு வழிவகை செய்யப்படுகிறது என்பதை அறிவிக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளிலே பணியாற்றும் செயலாளர்களும் அலுவலர்களும் நிரந்தரமாக இருக்கிறார்கள். அவர்களுக்கும் ஏதாவது ஒரு முடிவு செய்யவேண்டுமென்று பல உறுப்பினர்கள் இங்கே கூடப் பேசினார்கள். ஏற்கனவே என்னிடத்திலேயும் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அந்தப் பணித் தொகுப்பைப் பொறுத்தவரையில் பொதுவான பணித்தொகுப்பை உருவாக்குவதற்கான வாய்ப்புகளையும் ஆராய்வதற்கு ஒரு குழு அமைக்கப்படும். இக்குழு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைப் பற்றி மட்டுமன்றி, தொடக்கநிலை நிலவள வங்கிகள், நகர கூட்டுறவு வங்கிகள் ஆகியவற்றையும் சேர்த்து ஆராய்ந்து முடிவெடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. ஜி. விசுவநாதன்] [1992 ஏப்ரல் 8

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் அதாவது 'டேன்
பெட்' தற்சமயம் விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவை
யான இடுபொருட்களை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு
வங்கிகளின் மூலம் வழங்கி வருகிறது. இவ்வங்கிகள் இவ்விற்
பனையை மேலும் திறம்படச் செய்வதற்கான உதவிகளை
இணையம் மேற்கொள்ளும். குறிப்பாக உரங்களைச் சேமித்து
வைப்பதில் நவீன முறைகளைக் கையாள இணையம் உதவி
செய்யும். இதைத் தவிர பூச்சிக் கொல்லிகள், களைக் கொல்லிகள்
ஆகியவற்றை முறையாகச் சேமித்து விற்பனை செய்வதற்கான
உதவிகளையும் அளிக்கும்.

நடப்பாண்டில் 100 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு
வங்கிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவைகளை வேளாண் சிறப்பங்
காடிகளாக 'அக்ரோ சூப்பர் மார்க்கெட்ஸ்' உருவாக்குவதற்கு
ஒரு வங்கிக்கு ரூ. 18,500 வீதம் மொத்தம் ரூ. 18.5 இலட்சம்
செலவில் 100 வேளாண் சிறப்பங்காடிகள் உருவாக்கப்படும்.

பிற்பகல் 1-35

கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், நுகர்வோர் பண்டக
சாலைகளும் மக்களுக்குத் தரமான பொருட்களை, மலிவான
விலைகளில் விற்பனை செய்து வருகின்றன. கூட்டுறவு மொத்த
விற்பனைச் சங்கங்கள் குறிப்பிட்ட 27 மளிகைச் சாமான்களை
தீபாவளி, கிறிஸ்துமஸ், பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களில்
விற்பனை செய்து வெளிச்சந்தை விலையையும் ஓரளவிற்கு கட்டுப்
படுத்த மக்களுக்கு உதவி செய்தன. இந்தத் திட்டம் கூட்டுறவு
விற்பனை நிலையங்களில் எல்லாம் தொடர்ந்து கடைபிடிக்கப்
பட்டு விரிவாக்கப்படும். அதோடு இத்தகைய சீரிய பணிகளை
மேற்கொள்ளும் விற்பனைச்சங்கங்களும், நுகர்வோர் பண்டகச்
சாலைகளும் தேவையற்ற, நம்முடைய முதல்வர் அவர்களாலே
இன்றைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்ற இந்த மதுபான
ஒழிப்பை, மது ஒழிப்பை கடைபிடித்து, இனி மதுபான வகைகளை
விற்க அவசியம் இல்லை என்று புரட்சித் தலைவி அரசு முடி
வெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இச்சங்கங்களுக்கு
உள்ள உரிமங்கள் 31.5.1992 அன்று காலாவதியாகின்றன.
அதற்குப் பிறகு, புதிய உரிமம் எதையும் பெறுவது இச்சங்கங்
களுக்கு செல்லாது. மதுபான விற்பனையும் இனி கூட்டுறவுச்
சங்கங்கள் மூலம் நடைபெறாது என்பதைத் தெரிவித்துக்கொள்
கிறேன் (மேசையைத் தட்டும் ஒலி).

கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக இரண்டு தொழிற் பயிற்சி
நிலையங்கள், ஒன்று தர்மபுரி மாவட்டம் பர்கூரிலும் (மேசை
யைத் தட்டும் ஒலி) மற்றொன்று தஞ்சாவூர் மாவட்டத்தில்
பட்டுக்கோட்டையிலும் இவ்வாண்டே துவக்கப்படும். இந்நிலை
யத்திற்குத் தேவையான நிலங்களும் தேர்வு செய்யப்பட்டு



1992 ஏப்ரல் 8] [திரு. ஜி. விசுவநாதன்]

விட்டன. இதற்குத் தேவையான கட்டிடங்கள் கட்டுவதற்கு
சிறிது காலம் தாமதமாகும் என்பதாலும், இவை இந்த கல்வி
யாண்டிலேயே வாடகைக் கட்டிடங்களிலேயே உடனடியாகத்
துவக்கப்படும். பர்கூரிலே அந்த கட்டடத்திற்கு நம்முடைய மாண்பு
மிகு முதல்வர் அவர்களே அடிக்கல் நாட்டுவார்கள் என்பதை
யும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்சமயும் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கூட்டுறவு இயக்
கத்தைப் பற்றிய விளம்பரங்களையும் விளக்கங்களையும்
ஆண்டிற்கு ஒரு முறை கூட்டுறவு வாரம் கொண்டாடப்படும்
சமயத்தில் மட்டுமே செய்து வருகின்றது. இந்த நிலையை மாற்றி
கூட்டுறவு இயக்கம் மேலும் நல்ல முறையில் மாநிலத்தில் வளர,
மாவட்ட ஒன்றியங்கள் முடுக்கிவிடப்படும். கூட்டுறவின் சிறப்பு
அம்சங்களை ஆண்டு முழுவதும் எடுத்துச்சொல்கின்ற விளக்க
திரைப்படம் தயாரிக்கப்படும். இதற்குத் தேவையான விளம்பரச்
சாதனங்களும் அவற்றிற்கு அளிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்
கொள்கிறேன்.

நடப்பு ஆண்டில் ஒரு லட்சம் பேர்க்கு, நலிந்த பிரிவினருக்கு
தொழில் கடன் கொடுக்கப்படும். தாய்க்குலத்திற்கு முன்னுரிமை
அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த கடன் திட்டம்
ஏழை மக்களை வாழ்விக்க வந்த நமது மாண்புமிகு முதல்வர்
அவர்கள் பெயராலே ''புரட்சித் தலைவி ஜெயலலிதா தொழில்
கடன் திட்டம்'' என்று அழைக்கப்படும். (மேசையைத் தட்டும்
ஒலி)

பெண்ணுரிமைக்குப் பாடுபட்ட தந்தை பெரியார், பேரறிஞர்
அண்ணா, தாய்க்குலம் என்று அவர்களை அழைத்துப் போற்றிய
புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். வழிவந்த புதுமைப்பெண் புத்
துலகச் சிற்பி புரட்சித் தலைவியின் ஆட்சியில் மகளிரால், மக
ளிருக்காக நடத்தப்படும் மகளிர் வங்கி கிளைகள் மாவட்டத்திற்கு
ஒன்று துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்பு
கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உணவுத் துறையைப் பொறுத்த மட்டில், தற்பொழுது காவிரி
பாசன பகுதிகளிலே நடைபெற்றுக்கொண்டிருக்கிற ஏகபோக
கொள்முதல் இந்த ஆண்டு முழுவதும் தொடர்ந்து நீடிக்கும்.

மற்ற பகுதிகளில் ஒத்தி வைக்கப்பட்டு இருந்த வர்த்தக
லெவி முறை, உங்களுக்குத் தெரியும், இந்த டிரேடர்ஸ் லெவி
என்பது 1975-லே துவக்கப்பட்டு இதுவரை எந்த அரசாலேயும்
தைரியமாக எடுக்கமுடியாமல், அதிலே எவ்வளவு குறைபாடுகள்
இருந்தும், அதைப்பற்றி எல்லோரும் எடுத்துச் சொல்லியும்
பயந்துகொண்டு இருந்த நிலைமைஇருந்தது. அதையும் தைரிய
மாக முடிவெடுத்து. இங்கே அருமை நண்பர் திரு. அல்போன்ஸ்
அவர்கள் சொன்னார்கள், அரசியல் தைரியம் வேண்டும் என்று.

[திரு. ஜி. விசுவநாதன்] [1992 ஏப்ரல் 8

அப்படிப்பட்ட தைரியம் நம்முடைய மாண்புமிகு முதல்வர்
அவர்களை விட பெற்றவர் இனி ஒருவர் இந்த நாட்டிலே இருக்
கிறார்கள் என்று சொல்லமுடியாது. அப்படிப்பட்ட தைரியமான
ஒரு முடிவை எடுத்து இன்றைக்கு அந்த லெவி முறை நீக்கப்
பட்டதன் விளைவாக, நீங்கள் அறிவீர்கள், விலைவாசி குறையத்
தொடங்கியிருக்கிறது. மற்ற மாநிலத்திலே எல்லாம் விலைவாசி
ஏறிக் கொண்டிருக்கிறது. நாங்கள் கட்டுப்படுத்தியது மட்டுமல்ல,
விலையிலே 60 காசிலிருந்து, 70 காசிலிருந்து, ஒன்றரை ரூபாய்,
இரண்டு ரூபாய் வரையில் எல்லா இடத்திலேயும் குறைந்திருக்
கிறது. அதன் காரணமாக இந்த லெவி முறை இன்னும் சில
காலத்திற்கு தொடர்ந்து ஒத்தி வைக்கப்படும் என்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

எல்லா நியாயவிலை கடைகளிலும் அமைக்கப்படும் விழிப்பு
பணிக்குழுக்களில் நுகர்வோர் நல சங்கங்கள், கன்சுமர் ஆர்கனை
சேசன்களில் உள்ள உறுப்பினர்களுக்கும் பிரதிநிதித்துவம் வழங்கப்
படும். இப்பொழுது 10 லிட்டர் மண்ணெண்ணெய் மாவட்ட
தலைநகர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வருகிறது. அவைகளை
இன்னும் சில நகரங்களுக்கு இப்பொழுது விஸ்தரிக்கிறோம்.
காரைக்குடி, கும்பகோணம், விழுப்புரம், ஹோசூர் போன்ற
பெரு நகரங்களுக்கும் மாவட்ட தலைநகரங்களைப் போன்று
குடும்ப அட்டை ஒன்றுக்கு 10 லிட்டர் வீதம் மண்ணெண்ணெய்
வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்
கிறேன்.

பிற்பகல் 1–40

இப்பொழுது சிறிய டீ கடை வைத்திருப்பவர்கள், தேனீர்
போன்ற கடை வைத்திருப்பவர்கள் மண்ணெண்ணெய் கிடைக்கக்
மல் அவதிபட்டுக் கொண்டிருக்கிறார்கள் அல்லது கள்ளமார்க்
கெட்டில் சென்று அதிக விலைக் கொடுத்து வாங்குகிறார்கள்
என்ற புகார் இருக்கிறது. அவைகளை ஒழிப்பதற்காக சிறிய
தேனீர் விடுதிகள், அதைப்போன்று உணவு இல்லங்களுக்கு மாதம்
30 லிட்டர் மண்ணெண்ணெய் வழங்கப்படும். அவைகள் ரூ. 4.90
என்ற விகிதத்தில், இன்டஸ்ட்ரியல் ரேட்டில்அவர்களுக்கு வழங்கப்
படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, இங்கே கூட ஒன்றைப் பற்றி உறுப்பினர்கள் பேசி
னார்கள். கடந்த 3, 4 மாத காலமாக கடைகளிலே பரிசோதனை
என்ற பெயராலே, இன்ஸ்பெக்சன் என்ற பெயராலே மாதத்
திற்கு 8 பேர், 10 பேர் போகிறார்கள். அந்தக் கடைக்கு போய்
எல்லோருமே வெறும் கையோடு திரும்பி வருவதில்லை, கிடைத்
ததை எடுத்துக்கொண்டும் சிலபேர் வந்துவிடுகிறார்கள். அதனா
லேயே சேல்ஸ்மேன் தவறு செய்ய நேரிடுகிறது என்ற குற்றச்
சாட்டை இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்
கள். அதைப்பற்றி ஒரு முடிவு எடுப்பதற்கு வட ஆற்காடு
மாவட்டத்தில் பரிட்சார்த்தமாக ஒருமுறையைக் கையாண்டோம்.



1992 ஏப்ரல் 8] [திரு. ஜி. விசுவநாதன்[

வட ஆற்காடு மாவட்டத்தில் கடந்த 4 மாதங்களாக நடந்த
அந்த பரிசோதனையின் தொடர்பாக நியாய விலைக் கடைகளை
தணிக்கை செய்யும் முறையில் சில மாற்றுதல்கள் செய்யப்படும்.
கடைகளில் நடக்கும் தவறுகளுக்கு விற்பனையாளர் மட்டுமின்றி
அந்த சங்கத்தின் தனி அதிகாரி, செயலாளர் ஆகியோரும்
பொறுப்பு ஏற்க வேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.
(மேஜையைத் தட்டும் ஒலி) எப்படி தனியார் கடையாக இருந்தால்
அங்கே இருக்கிற விற்பனையாளர் மீது நடவடிக்கை எடுக்காமல்
கடையினுடைய சொந்தக்காரர்மீது தான் நடவடிக்கை எடுப்
பேர்மோ அதுபோல அங்கே இருக்கிற தனி அதிகாரி, செயலாளர்
போன்றவர்கள் மீதும் தவறு நடந்தால் அவர்கள்மீதும் நட
வடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்
கொள்கிறேன். அங்கே நடந்த பரிசோதனை வெற்றிகரமாக
அமைந்ததால் இது மாநிலம் முழுவதும் செயல்படுத்தப்படும்
என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மேஜையைத்
தட்டும் ஒலி)

தமிழகத்தில் நுகர்வோர் பாதுகாப்பு இயக்கம் அரசின் ஒத்
துழைப்போடும், ஆதரவோடும் பெருமளவில் இப்பொழுது
கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து வருகிறது. இன்னும் அது
நிறைய வலுப்படுத்தப்பட வேண்டும். இதிலே சட்டமன்ற உறுப்
பினர்களும் ஆங்காங்கு பங்கேற்று அவர்களை ஊக்குவிக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். அப்படிப்பட்ட பாதுகாப்பு
இயக்கத்தினுடைய பயிற்சி முகாம்கள், கருத்தரங்குகள், செய்தி
கடிதங்கள் மூலம் பொது மக்களுக்கு விழிப்புணர்ச்சி ஏற்பட
எல்லா நடவடிக்கையும் எடுப்பது என்றும் முடிவெடுத்திருக்
கிறோம்.

அத்தியாவசியப் பண்டங்களில் கலப்படம் அதிகமாக இருக்
கிறது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. அதிலே குறிப்பாக
நாள்தோறும் பயன்படுத்துகின்ற பொருள்களிலே கலப்படம்
இருக்கிறது. நம்மிலே பலர், விஷயம் தெரிந்தவர்கள்கூட அதைக்
கண்டுபிடிக்க முடியாமல் இருக்கிறது. ஆகவே, சில முக்கியமான
பொருள்களுக்கு அக்மார் முத்திரையை கட்டாயப் படுத்துவதற்கு
பரவல் ஆக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறோம்.

குறிப்பாக மிளகாய்த்தூள், மஞ்சள் தூள், கடலை எண்ணெய்,
துவரம் பருப்பு கடலைப் பருப்பு ஆகியவைகளுக்கு அக்மார்க்
முத்திரை பரவலாக பயன்படுத்தப்பட எல்லா நடவடிக்கைகளும்
எடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்
கொள்ள விரும்புகிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் சில முக்கியமான பிரச்சினை
களை எடுத்து வைத்திருக்கிறார்கள் (முதலில் பேசிய மாண்பு
மிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் தமிழக
அரசியலே அரிசியிலேதான் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள்.

[திரு. ஜி. விசுவநாதன்] [1992 ஏப்ரல் 8

அதை நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள் என்பது அனைவருக்கும் தெரியும். ஒரு காலத்திலே ஆட்சி நடத்திக்கொண்டிருந்தவர்கள் இருந்த லெவி முறையை; செக் போஸ்டுகளை ஒரே ஒரு நாள் விலக்கிவிட்டு 10 ஆயிரம் லாரிகளைக் கடத்துவதற்கு உடந்தையாக இருந்து (மேசையைத் தட்டும் ஒலி) அதன் விளைவாய் அரிசி விலை. அப்பொழுது படி என்று சொல்வோம், படி 10 ரூபாய்க்கு விற்று அந்த அரசாங்கம் அதிலேயே அடித்துக்கொண்டு போகப்பட்டது என்பதும் அனைவருக்கும் தெரிந்த விவகாரம் தான். ஆகவே தான் இன்றைக்கு எது நடந்தாலும், மாண்புமிகு நம்முடைய முதல்வர் அவர்கள் ஒவ்வொன்றையும் அதற்கு உத்தரவு போட்டு ஒழுங்காக நடக்க வேண்டும், எந்தப் புகாரும், எந்தத் துறை யிலேயிருந்தும் வரக்கூடாது என்று உத்தரவு போட்டிருக்கிறார்கள் அதற்கான எல்லா நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து அவர்கள் இங்கே பேசும்போது முக்கியமாக ஒன்றை சொன்னார்கள். எல்லோருக்கும் மானியமாக கொடுத்துக்கொண் டிருக்கிறோம். 1981-ல் ஒரு கோடி ரூபாய் மானியமாக இருந்தது. இன்றைக்கு 500 கோடி ரூபாயாக உயர்ந்திருக்கிறதே என்று சொன்னார்கள். இதிலே ஒரே ஒரு திருத்தம். இந்த 500 கோடி ரூபாயில் ஏற்கனவே நம் அரசாங்கம் சிவில் சப்ளைஸ் கார்ப்ப ரேசனுக்கு கொடுக்க வேண்டிய பாக்கி 160 கோடி ரூபாய். அது போல 340 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு மானியமாக நமக்கு அரசுக்கு தேவைப்படுகிறது. அதைச் சொன்ன உறுப்பினர் அவர்கள் ஏன் நீங்கள் தைரியமாக முடிவு எடுக்கக்கூடாது எல்லோருக்கும் தேர்தலுக்காக, ஓட்டுக்காக செய்வீர்களா அரசி யல் தைரியம் வர வேண்டும் என்று சொன்னார்கள். மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். துப்பாக்கிக்கும் தோட்டாவுக்குமே பயப்படாத நம்முடைய முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) இதில் முடிவெடுப்பதற்கு பயப்படப் போவதில்லை. அதைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

பிற்பகல் 1–45

மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர் களும், திரு. ப. ரங்கநாதன் அவர்களும் மற்ற உறுப்பினர்களும் தெரிவித்த கருத்துக்கள் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்துப் பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. முசிறி தங்கவேல் அவர்கள் நலிந்த பிரிவினருக்குத் தரப்படுகிற கடன் 500 ரூபாயை உயர்த்த வேண்டுமென்று சொன்னார்கள். அதை நிச்சயமாக இந்த அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும். மாண்பு



1992 ஏப்ரல் 8] [திரு. ஜி. விசுவநாதன்]

புரட்சித் தலைவி அவர்கள் கருணையோடு அதை ஏற்றுக் கொள்வார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசை யைத் தட்டும் ஒலி)

அடுத்து, நெல் கடத்துபவர்கள் ஒரு காலத்திலே அரசாங் கத்தின் ஆதரவோடு, முடிந்தால் துணையோடு கடத்தினார்கள். தமிழ்நாட்டிலே வெளி மார்க்கெட்டிலே நெல் விலையும், அரிசி விலையும் கூடியதற்கு அது ஒரு முக்கியமான காரணம். புரட்சித் தலைவி அவர்கள், நான் பொறுப்பு ஏற்பதற்கு முன்னாலே என்னைக் கூப்பிட்டு, இதிலே பல்வேறு புகார்கள் வருகின்றன, கடுமையான நடவடிக்கை எடுத்து, விலையைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். குறைந்தது 10 அல்லது 15 நாட்களுக்குள்ளாக தமிழ்நாட்டிலே யார் யார் லாரிக் கணக் கிலே மூட்டை மூட்டையாக அரிசியைக் கடத்தி, வெளி மாநிலங் களிலே விற்று, அதன்மூலம், கோடீஸ்வரர்களாகி இருக்கிறார்கள் என்ற கணக்கைப் பார்த்து, ஒரு மூன்று பேரைக் கைது செய்ய வேண்டுமென்று அரசாங்கம் முடிவெடுத்து, ஆங்காங்கே இருக்கின்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு உத்தரவிட்டு, 3 பேரைக் கைது செய்வதற்கு நடவடிக்கை எடுத்தோம். 2 பேர் கைது செய்யப்பட்டு, சிறையிலே அடைக்கப்பட்டார்கள். கன்னியா குமரி மாவட்டத்தில் ஒருவரும், மதுரை மாவட்டத்தில் ஒருவரும் கைது செய்யப்பட்டார்கள். மூன்றாவது நபரைப் பிடிப்பதற்காக நடவடிக்கை எடுத்து, முடியாது என்ற சூழ்நிலை மாத காலமாக இருந்து, நேற்று காலையிலேதான் திருச்சி மாவட்டத்திலே அவர் கைது செய்யப்பட்டிருக்கிறார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்குப் பின்னாலேதான் ஒரு நாளைக்கு 50 லோடுகள், 100 லோடுகள் என்று சென்றது இப்போது அறவே தடுத்து நிறுத்தப் பட்டிருக்கிறது. மாநிலத்திற்கு மாநிலம் இருக்கிற இன்டர் ஸ்டேட் செக்-போஸ்டுகள் அத்தனைக்கும் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவைப் பெற்று, ஆங்காங்கு சாதாரணப் போலீசார் இருந்ததோடு, ஆயுதப் போலீசையும் போட்டு, இருக்கின்ற செக்-போஸ்டுகளை இன்றைக்குப் பலப்படுத்தி இருக்கிறோம். எல்லாவிதமான அதிகாரிகளும் நம்முடைய மாவட்ட, மாநில எல்லையில் இருக்கிறார்கள். இதை மீறி யாரும் ஒரு மணிகூட கொண்டு போக முடியாது. அப்படி யாராவது கொண்டு போனால் கைது செய்யப்பட்டு, 6 மாத காலம் சிறையிலே அடைக்கப்படுவார்கள் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் இங்கே பேசுகின்றபோது கூட்டுறவுக் கடன்கள் முழுமையும் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். அங்கே, அவர்கள் கட்சி ஆட்சி செய்கிற மாநிலத்தில்

என்ன செய்கிறார்கள் என்பதைப் பற்றி நான் அதிகம்
பேச விரும்பவில்லை. காலம், நேரம் அதற்கு இடம்
தரவில்லை. அப்படி அங்கே எதுவும் நடைபெறவில்லை,
அதனால் விட்டுவிடுவோம் என்று நான் சொல்லவில்லை.
அங்கே அவர்கள் அரிசிக்கே மானியம் கொடுப்பதில்லை.
ஏழை மக்களுக்கு வழங்கப்படுகின்ற அரிசிக்கே மானியம்
கொடுக்காமல்தான், மேற்கு வங்கத்திலே ஆட்சி நடை
பெறுகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுமட்டுமல்ல
அதிகமாக அரிசியை விளைவிக்கிற மாநிலம் இந்தியாவிலேயே
ஆந்திரமாநிலமும், மேற்கு வங்க ) மாநிலமும் தான். கிட்டத்
தட்ட 1¼ கோடி டன் வருடம் ஒன்றுக்கு அங்கே
விளைகிறது. ஆந்திர மாநிலத்திலே 30 இலட்சம் டன்
கொள்முதல் செய்கிறார்கள். பொதுத் தொகுப்புக்கு
அளிக்கிறார்கள். மாநிலத்திற்கும் அளிக்கப்படுகிறது.
ஆனால் மேற்கு வங்கம் கொள்முதலே செய்வது கிடையாது
மத்திய அரசிலிருந்து வருவதை மட்டும்தான் கொடுத்துக் கொண்
டிருக்கிறார்கள் அதுவும் மத்திய அரசு கொடுக்கும் விலைக்கு
அப்படியே கொடுத்துவிடுகிறார்கள். மானியமே கொடுப்ப
தில்லை. நமக்கு இருக்கிற நிதிநிலை நெருக்கடியிலும் ஆண்டு
ஒன்றுக்கு 340 கோடி ரூபாய் நாம் கொடுத்துக் கொண்டிருக்
கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட நிலை
மையிலே கூட்டுறவுக் கடன் முழுமையும் தள்ளுபடி செய்ய
வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 1200 கோடி ரூபாய் அள
வுக்கு இப்போது கூட்டுறவுக் கடன்கள் இருக்கின்றன.
அதிலே வட்டி மட்டும் என்று சொன்னாலே 160 கோடி
ரூபாய் ஆகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மானியம் என்பதல்ல. அங்கே தேவையான
அளவுக்கு உற்பத்தியாகிறது. குறைந்த விலைக்கு மக்களுக்கு
விநியோகிக்கப்படுகிறது. ஒரு கிலோ 2 ரூபாய் அளவுக்கு
அங்கே விநியோகிக்கப்படுகிறது. அதனுடைய விளைவாகத்
தானே ஒழிய, வேறல்ல. (குறுக்கிடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சரவர்கள்
சொல்வார்கள். திரு. ஜி. பழனிசாமி.

பிற்பகல் 1-50

திரு. ஜி. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மேற்கு வங்காளத்தில் ரூ. 3-50க்கு அரிசி
விற்கப்படுவதாக.... (சிரிப்பு) (குறுக்கீடு)





மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதற்கு அமைச்சர்
பதில் சொல்வார். இருங்கள். அவையில் பேசுகிறபோது
இரண்டு ரூபாய்க்கு விற்கிறது, இரண்டரை ரூபாய்க்கு
விற்கிறது என்று பேசினால் பொறுப்பேற்றுக் கொண்டு
சொல்லவேண்டும். அமைச்சர் பதில் சொல்லட்டும்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்: சி.பி.ஐ. உறுப்பி
னர் அவர்களும் சி.பி.எம். உறுப்பினர் அவர்களும் விஷ
யத்தைத் தெரிந்து பேசுவது நல்லது. உங்களுடைய
கையில் கொடுத்திருக்கிற புத்தகத்திலேயே அச்சிடப்பட்டி
ருக்கிறது. ரூ. 3.50க்கு கொடுக்கப்படுகின்ற அரிசியை
மேற்கு வங்காளத்தில் ரூ.5.20 காசுக்கு விற்கிறார்கள்.
(மேசையைத் தட்டும் ஒலி) அதனால், இரண்டு ரூபாய்க்கு
அரிசி விற்கப்படுகிறது என்பதெல்லாம் இந்த அவையிலே
தவறான தகவல்களைக் கொடுப்பது போலாகும். மாண்பு
மிகு உறுப்பினர்கள் எல்லாம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி,
2 ரூபாய்க்கு விற்கப்படுகிறது என்று நீங்கள் எந்த குறிப்பை,
எந்த ஆவணத்தை வைத்துச் சொல்கிறீர்கள். மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, பொது விநியோக முறை
யில் அரிசி பொது மக்களுக்கு வழங்கப்படுகின்ற மாநிலங்
களில் இந்தியாவிலேயே மேற்கு வங்காளத்தில் தான் அதிகப்படி
விலையான ரூ. 5.20 காசுக்கு வழங்கப்படுகிறது. (மேசை
யைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஜி. பழனிசாமி,
திரு. வே. தம்புசாமி கேட்டார், அவருக்கு பதில் சொல்லப்
பட்டிருக்கிறது. நீங்கள் எதற்காக எழுந்து நிற்கிறீர்கள்?
(குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தியாவிலேயே அரிசி விற்கப்படுவதில் மாநிலத்
திற்கு மாநிலம் வித்தியாசம் இருக்கிறது. ஆனால்
தமிழகத்தில் இருக்கிற விலையை மற்ற மாநிலங்களோடு
ஒப்பிட்டு இங்குள்ள விலையை தமிழக அரசு உயர்த்தக்
கூடாது என்பதுதான் எங்களுடைய கோரிக்கை. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் உட்காருங்கள்.
அவர் பதில் சொல்லட்டும். நீங்கள் இரண்டு பேருமே
எழுந்து பேசிக்கொண்டிருக்க முடியாது. மாண்புமிகு உணவு
மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்.

[1992 ஏப்ரல் 8

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன்:</u> மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தியாவிலேயே அதிகமான மானி
யத்தைக் கொடுத்து குறைவான விலையில் அரிசியை ஏழை
மக்களுக்குக் கொடுத்து விலைவாசி உயர்விலிருந்து அவர்
களைக் காப்பாற்றிக் கொண்டிருப்பது புரட்சித்தலைவி
அவர்களின் அரசுதான் என்பது மற்ற 24 மாநிலங்களும்
ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கருத்து. (மேசையைத் தட்டும்
ஒலி) இதை தயவுசெய்து உறுப்பினர்கள் தெரிந்து
கொண்டு, தவறான தகவல்களைச் சொல்லி அவர்கள் மாட்டிக்
கொள்ள வேண்டாம் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு உறுப்பினர் திரு. தம்புசாமி அவர்கள் பேசு
கின்றபோது முக்கியமான ஒன்றைச் சொன்னார்கள். அவ
ருடைய மாவட்டத்தில் புன்செய் தானியங்கள் நிறைய விளை
கின்றன, அவைகளின் விலை மார்க்கெட்டில் குறைவாக இருக்
கின்றன. அவைகளை அரசே கொள்முதல் செய்யவேண்டு
மென்று சொன்னார்கள். ஏற்கெனவே கூட்டுறவு விற்பனைச்
சங்கங்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுருக்கிறது. அவர்கள் புன்
செய் தானியங்களை நல்ல விலைக்கு வாங்கி மொத்த விற்பனை
சங்கங்களுக்கு அவைகளை விற்க ஏற்பாடு செய்வார்கள்
என்பதைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. தர்மலிங்கம்
அவர்கள் பேசுகின்றபோது, தி.மு.க. ஆட்சி காலத்தில்,
மண்ணெண்ணையை விற்பவர்களுக்கு தவறான முறையில்
வழங்கப்பட்டிருப்பதாகவும், அந்த கை வண்டிகளை ரத்து
செய்ய வேண்டுமென்றும் கேட்டிருக்கிறார்கள். அப்படி தகுதி
யில்லாதவர்களுக்கு யாருக்காவது தவறாக வழங்கப் பட்டிருந்
தால், அதை பரிசீலனை செய்து ரத்து செய்யப்படும் என்பதை
இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத்
தட்டும் ஒலி)

எம்.எல்.ஏ. விடுதியில் அதிகமாக செலவு செய்யவேண்டி
யிருப்பதாகவும் மாண்புமிகு உறுப்பினர் திரு. தருமலிங்கம்
அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அது பேரவைத் தலைவர்
அவர்களுடைய ஆட்சிக்கு உட்பட்டது. மாண்புமிகு தலைவர்
அவர்கள் விரும்பினால், கூட்டுறவு உணவு விற்பனை நிலை
யத்தையும் இந்தத் துறை திறக்கத் தயாராக இருக்கிறது
என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்
கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு உறுப்பி
னர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் சொல்கிற யோசனைப்படியும் சென்ற ஆண்டு நமது



1992 ஏப்ரல் 8] [பேரவைத் தலைவர்]

விடுதியில் இருக்கிற உணவு விடுதிகளை மாற்றவேண்டுமென்று
கோரிக்கை வந்தபோது, அதை மாற்றுகிறபோதே முதலாவ
தாக நம்முடைய தமிழ்நாடு சுற்றுலா வாரியத்தின் சார்பாக
நடத்தப்படுகிற ஓட்டல்களைத்தான் கேட்டோம். பின்னர்
அமைச்சர் அவர்களின் பொறுப்பிலே இருக்கிற கூட்டுறவுத்
துறை மூலமாக எடுத்து நடத்துவதற்காகவும் கேட்டோம்.

பிற்பகல் 1–55

சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியில் நடத்துவது என்று
சொன்னால் எங்களால் முடியாது என்று அவர்கள் எழுத்து
மூலமாகக் கொடுத்திருக்கிறார்கள். வேறு எங்கு வேண்டு
மானாலும் நடத்துகிறோம். சட்டமன்ற உறுப்பினர் விடுதி
யிலே மட்டும் எங்களால் நடத்த முடியாது என்று சொன்ன
தற்குப் பிறகுதான் மற்றவர்களை விட்டு நடத்த சொல்லி
யிருக்கிறோம் என்பதை உறுப்பினர்களுடைய தகவலுக்குத்
தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது அமைச்சர் அவர்கள் முன்வந்து கூட்டுறவுத்
துறையிலே நடத்துவதாக இருந்தால் பெரு மகிழ்ச்சியோடு
சட்டமன்றப் பேரவைத் துறை அவர்களுக்கு ஒப்படைக்கத்
தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.
(மேசையைத் தட்டும் ஒலி)

<u>மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் :</u> மாண்புமிகு உறுப்
பினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது (குறுக்கீடு
கள்) அப்படி வேண்டுமென்றால் செய்யலாம். எம்.எல்.ஏக்கள்
கூட்டுறவு சொசைட்டி என்று ஒன்று ஆரம்பித்து அதன்மூலம்
வழங்குவதற்குத் தயாராக இருக்கிறோம். (மேசையைத் தட்டும்
ஒலி) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள்
பேசுகின்றபோது குடும்பத்திற்கு 20 கிலோ அரிசி வழங்க
வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். உங்களுக்குத்
தெரியும் இன்றைக்கு நமக்குத் தேவைப்படுவது, 12 கிலோ
என்று கொடுத்தாலே ஆண்டு ஒன்றுக்கு 17 இலட்சம் டன்
அரிசி தேவைப்படுகிறது. 20 கிலோ கொடுக்க வேண்டும்
என்று சொன்னால் ஆண்டு ஒன்றுக்கு 30 இலட்சம் டன் அரிசி
நமக்குத் தேவை. இன்றைக்கு இருக்கின்ற உற்பத்தியைக்
வைத்துக் கொண்டு அப்படி 20 கிலோவாக உயர்த்துவது
கடினம். அந்த அளவிற்கு விளைச்சலும் தமிழ்நாட்டிலே
எதிர்பார்க்க முடியாது. மத்திய தொகுப்பிலே இருந்து
அந்த அளவிற்குக் கொடுப்பார்கள் என்று காங்கிரஸ் உறுப்பினர்
களே நம்பமாட்டார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன்.
மாதத்திற்கு மாதம் அவர்கள் அங்கே இருந்து வழங்குவதும்
அதற்குமேல் கொஞ்சம் கூடுதலாக கொடுக்க வேண்டும் என்று
கடிதம் எழுதுவது, நேராகப் பேசுவது, தொலைபேசியில்

[திரு. ஜி. விசுவநாதன்] [1992 ஏப்ரல் 8

பேசுவது, ஐந்தாயிரம், பத்தாயிரம் கூட்டுவது என்று இதுதான் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே இது சாத்தியமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர், உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பாக, திரு. நா. சா. பழனிசாமி அவர்கள் பேசுகின்றபோது, சென்ற தேர்தலிலே நடைபெற்ற தவறுகள் மீண்டும் நடக்காமல் பார்த்துக் கொள்ளவேண்டும் என்று சொன்னார்கள். தனியாக அதற்கு மசோதா வர இருக்கிறது. அதிகப்படியாக அதைப்பற்றி நான் பேச விரும்பவில்லை. ஆனால் நான் ஒன்றைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன், ஜனநாயகத்திலே அழுத்தமான நம்பிக்கை கொண்ட மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் (மேசையைத் தட்டும் ஒலி) தி.மு.க. ஆட்சியில் நடைபெற்ற முறைகேடுகள், தில்லுமுல்லுகள், ஊழல்கள் நடக்காது என்பதை மட்டும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே. சின்னப்பன் அவர்கள் பேசுகின்றபோது அவருடைய பகுதியிலே பல ஆண்டுகளாக குடும்ப அட்டைகள் வழங்கப்படாமல் இருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது இந்த ஆண்டு மட்டும், ஓராண்டு முடிந்த காலத்தில் 1,55,000 கார்டுகளை வழங்கியிருக்கிறோம். பலபேர் தேவையில்லாமல் கார்டுகளை வைத்திருக்கிறார்கள்; ஆனால் உரியவர்களுக்குக் கிடைக்கவில்லை என்பது ஒரு நியாயமான புகார்தான். அதனால்தான் கடுமையான நடவடிக்கை எடுத்து சென்ற ஆண்டு 5,65,000 போலி கார்டுகளை நீக்கியிருக்கிறோம்; 1,55,000 கார்டுகளை புதிதாக வழங்கியிருக்கிறோம். யார், யார் நியாயமாகப் பெற வேண்டியவர்களோ அவர்களுக்கு, உடனடியாக நடவடிக்கை எடுத்து அவைகள் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. ரங்கநாதன் அவர்கள் பேசுகின்றபோது அவர் தொகுதியிலே எதிர்த்து நின்ற காரணத்தால் அவரைப் பற்றியே இங்கே அதிக நேரம் பேசினார்கள். அவர் காலத்திலே நடைபெற்ற ஊழலைப் பற்றி எல்லாம் இங்கே சொல்ல வேண்டும், அரிசி பேர ஊழல், கோணிப்பை ஊழல் என்று பல ஊழல்களை எடுத்துச் சொன்னார்கள். அவர்களிடத்திலே அரசாங்கத்தைவிட வேறு பல தகவல்கள் இருக்குமானால் அதையும் அவர்கள் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒன்று, அந்தக் காலத்தில் நடைபெற்ற கெரோசினில் ஏற்பட்ட ஊழல் மத்திய அரசுக்கு சம்பந்தப்பட்ட சி.பி.ஐ. விசாரணைக்குப் போயிருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.



1992 ஏப்ரல் 8] [திரு. ஜி. விசுவநாதன்]

பொதுவுடைமைக் கட்சி மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.வி. சண்முகம் அவர்கள் பேசுகின்றபோது இந்த விழிப்புக் குழுக்களில் சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுப்பதும் போடுவதில்லை, ஆளும் கட்சி உறுப்பினராக இருந்தாலும் அவர்கள் கொடுத்தாலும் போடுவதில்லை; ஆனால் இடையிலே யாரோ வந்து புகுந்துவிடுகிறார்கள்; அப்படிப்பட்ட தவறுகளை அதிகாரிகள் செய்கிறார்கள் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகள் யாராக இருந்தாலும் இனி அவர்களைச் செய்ய விடமாட்டோம். அவர்கள் அனைவரும் அறிவுருத்தப்பட்டிருக்கிறார்கள். இதிலே தவறு நடந்திருந்தால் அந்தப் பட்டியலை நீக்கி வேறு பட்டியலை அவர்கள் தயாரிக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதைத் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி). முக்கியமான ஒரு யோசனையையும் அவர்கள் சொன்னார்கள். ஒவ்வொரு குடும்ப அட்டைதாரர்கள், அவர்கள் எந்த கடையிலே போய் பொருள்களை வாங்குகிறார்களோ அந்தக் கடையிலேயே, அந்தச் சங்கத்திலேயே அவர்களை உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும் என்று சொன்னார்கள், ஏற்கெனவே இது அரசின் பரிசீலனையில் இருக்கிறது. அதைப்பற்றி பரிசீலனை செய்வோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.கே. லட்சுமணன் அவர்கள் பேசுகின்றபோது கூட்டுறவிலே அரசியல் புகுந்துவிட்டது என்று கஷடப்பட்டார்கள். இன்றைக்கு இருக்கிற ஜனநாயக சூழ்நிலையில் எங்கேயும் அரசியல்வாதிகளைத் தடுத்து நிறுத்த முடியாது என்பது அவருக்கே தெரியும்; அவரே அரசியல்வாதிதான்; ஆனாலும், சிறந்த கூட்டுறவாளர். இங்கு நடைபெறுகின்ற தேர்தலில் ஒழுங்கீனங்கள் நடக்காமல் பார்த்துக்கொள்வது இந்த அரசின் கடமையாக இருக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். புகைப்படம் ஒட்டிய அடையாள அட்டை வழங்க வேண்டுமென்று சொல்லி இருக்கிறார்கள். இது தேவையானதுதான். ஆனால், உடனடியாகச் செய்யக்கூடியது அல்ல; நிறையச் செலவாகும். ஆகவே, உடனடியாக நடைபெற இருக்கின்ற தேர்தலில் இதைச் செய்ய முடியாது; அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2—00

மாண்புமிகு உறுப்பினர் ஓமலூர் கிருஷ்ணன் அவர்கள் பேசுகின்றபோது, குடும்ப அட்டைகளை இரண்டாகப் பிரிக்க வேண்டும்; இரண்டு தரமாகப் பிரிக்க வேண்டும், தேவையானால் விலை வித்தியாசத்தைக்கூட நாம் வைத்துக்

[திரு. ஜி. விசுவநாதன்] [1992 ஏப்ரல் 8

கொள்ளலாம் என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். இது நல்ல யோசனை. இது நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இன்னொரு தனிப்பட்ட பிரச்சனை பற்றிக் குறிப்பிட்டு, சேலம் மத்திய கூட்டுறவு வங்கியில் ஏற்கெனவே வேலை யிலிருந்து நீக்கப்பட்டிருந்த ஒருவரை சென்ற தி.மு.க. ஆட்சியிலே, ஆட்சிக்கு வந்த உடனே மறுபடியும் அவரை வேலைக்குச் சேர்த்து, அவர் நீண்ட நாள் வேலையில் இல்லாது இருந்ததை எல்லாம் வேலையில் இருந்ததாக கணக்குப் போட்டு 5 இலட்ச ரூபாயை ஒரு நபருக்கு கொடுத்து, அதற்குப் பிறகும் அந்த ஆள் வேலை செய்யாமல் அவர் லீவு போட்டுவிட்டு போய்விட்டார் என்ற செய்தி எனக்கு வந்திருக்கிறது; அந்த புகார் சொன்னார்கள், அதிலே என்ன நடவடிக்கை எடுக்க முடியுமோ அந்த நடவடிக்கையை இப்போது அரசு எடுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு.எஸ். எஸ். ராமசுப்பு அவர் கள் பேசுகின்றபோது குறுகிய காலப் பயிர்க்கடன் வழங்குவ திலே அவருடைய தொகுதியில் பிரச்சினை இருப்பதாகச் சொன்னார்கள். அதிலே எந்த பிரச்சினையும் இருக்காது. ஒரே ஒரு, நமக்கு இருக்கிற மாபெரும் பிரச்சினை, சில சொசைட்டிகளில், சங்கங்களில் அவர்கள் கொடுத்த கடனை 60 சதவீதம் வசூல் செய்ய வேண்டுமென்று மத்திய அரசுக்கு சம்பந்தப்பட்ட நபார்டு நிறுவனம் சொல்லி இருக்கிறது. அந்த வசூலை அவர்கள் 60 சதவீதமோ அல்லது 40 சதவீதமோ—குறுகிய காலக் கடனாக இருந்தால் 40 சத வீதமும், நிலவள வங்கியாக இருந்தால் 60 சதவீதமும் அவர்கள் வசூல் செய்ய வேண்டும். இல்லையானால் They becom in ligible. ஆகவே, அதைச் செய்யாமல் இருக்கிறார்களா என்பது தெரியவில்லை. அதற்குக் கொஞ்சம் ஒத்துழைத்து--செ.. ற 2 ஆண்டுகளில் நிறைய பேர் பணத்தை வாங்கிக்கொண்டு, ஆளே காணாமல் போய்விட்டு இருக்கிறார்கள்; அவர்களை எல்லாம் கொஞ்சம் கண்டுபிடித்து அந்த வசூலை செய்துவிட்டோமேயானால், மீண்டும் புதிய கடன்களை கொடுப்பதற்கு நமக்கு நிறைய வாய்ப்பு இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இங்கே பாமாயில் கொடுக்கப்பட்டதைப் பற்றியும், இனிமேல் எவ்வளவு கொடுக்கப்படும் என்பதைப் பற்றியும் 3, 4 உறுப்பினர்கள் பேசினார்கள். பாமாயில் மாதாந்



1992 ஏப்ரல் 8] [திரு. ஜி. விசுவநாதன்]

திறும் கொடுக்கப்படுவது அல்ல. அவ்வப்போது மத்திய சர்க்கார் முடிவு எடுக்கின்றது. சென்ற முறை நம்முடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் 30 ஆயிரம் டன் பாமாயில் வேண்டுமென்று கேட்டார்கள். மத்திய அரசு 3 ஆயிரம் டன் கொடுத்தது. அதற்குப் பிறகு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து டெலக்ஸ் மூலமாக செய்தி அனுப்பி, தொலைபேசியில் பேசி, நேராகப் பேசி, கடைசியாக மத்திய அரசு மறுக்க முடியாத சூழ்நிலையில் 18 ஆயிரம் டன் பாமாயிலை தமிழ்நாட்டுக்குத் தான் முதன் முதலாக இந்தியாவிலேயே கொடுத்தார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி). மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுக்கு கொடுத்த பிறகு மற்ற மாநிலங்கள் எல்லாம் விழித்துக் கொண்டு, 5, 6 மாநி லங்கள் — அவர்களும் போய் ஆளுக்கு கொஞ்சம் வாங்கிக் கொண்டு வந்து இருக்கிறார்கள்.

''நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடி
புல்லுக்கும் ஆங்கே புசியுமாம், தொல்லுலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லோருக்கும் பெய்யும் மழை.''

என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) புரட்சித் தலைவி அவர்களின் முயற்சியாலே இன்றைக்கு மற்ற மாநிலங்களும் பாமாயிலைப் பெற்றார்கள். ஆனால், அதிலே இருக்கின்ற சிறப்பு அம்சத்தை நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல விரும்புகிறேன்.

தமிழ் நாட்டிலே அந்த பாமாயிலை நாம் முதலாவதாக பெற்றோம் என்பது மட்டுமல்ல; அதிகமான அளவு நமக்குத் தான், 18 ஆயிரம் டன் நமக்கு மத்திய சர்க்கார் இசைவு கொடுத்தது என்பதும் முக்கியமானது. அது மட்டுமல்ல, 5, 6 மாநிலங்களிலும் அதை விலைக்கு வாங்கினோம் அல்லவா— சில மாநிலங்களில் அது விலைக்கு வாங்கி இருக்கிறார்கள்; பெரிய பிரச்சினையாகக் கூட உருவெடுத்ததை நாம் செய்தித் தாளிலே பார்த்தோம். ஆனால், வெளிநாட்டிலே இருந்து, மலேசியாவிலே இருந்து நாம் இறக்குமதி செய்தோம். அதை மிகக் குறைந்த விலைக்கு— எஸ்.டி.சி. வாங்குகிற விலையை விட குறைந்த விலைக்கு தமிழ்நாட்டு அரசாங்கம் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களுடைய தலைமையிலே (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) வாங்கி இருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். நாம் வாங்கிய நேரத்தில் அன்றைக்கு எஸ்.டி.சி. அவர்களுடைய விலையே 402 டாலர். ஆனால் நாம் 392.50 அதாவது 392½ டாலருக்கு வாங்கினோம். மற்ற மாநிலங் களில் அவர்கள் 400, 405, 406 டாலர் என்றெல்லாம் வாங்கி இருக்கிறார்கள். விற்கிற விலை, மத்திய அரசு அப்போது 25

[திரு. ஜி. விசுவநாதன்] [1992 ஏப்ரல் 8

ரூபாய்க்கு விற்கலாம் என்று சொன்னார்கள். எஸ்.டி.சி. 27 ரூபாய் 50 காசுகளுக்கு விற்கலாம் என்று சொன்னார்கள். ஆனால் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புரட்சித் தலைவி அவர்கள் நல்ல முடிவெடுத்து இந்தியா விலேயே குறைந்த விலைக்கு 22 ரூபாய் 50 காசுகள் கிலோ ஒன்றுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) விற்கலாம் என்று சரித்திரத்தைப் படைத்து இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 2–05

மற்ற மாநிலங்களில் எல்லாம்—பெயரைச் சொல்ல விரும்ப வில்லை. சொல்லவேண்டுமென்றால் சொல்கிறேன். 29 ரூபாய், 30 ரூபாய், 33 ரூபாய் என்றுகூட மற்ற மாநிலங் களில் விற்கப்பட்டிருக்கிறது. கேரளாவில் 29 ரூபாய், கர்நாடகாவில் 30 ரூபாய், மகாராஷ்டிராவில் 30 ரூபாய், ஆந்திராவில் வாங்குவதையே நிறுத்திவிட்டார்கள். பஞ்சா பில் 33 ரூபாய், குஜராத்தில் வாங்குவதற்கு முடிவெடுத்து— நாம் நினைத்த காலத்தில் கொண்டு வந்து கொடுப்போம் என்று புரட்சித் தலைவி அவர்கள் சட்டமன்றத்தில் உறுதி அளித்தார்கள். அப்படியே கொடுத்தோம். குறிப்பிட்ட நேரத்தில் கப்பலைக் கொண்டு வந்து இறக்கி கொடுக்க முடிந்தது. ஆனால் அவர்கள்—இன்னும் குஜராத் மாநிலத்தில் நடுக் கடலிலேயே இருந்து கொண்டிருக்கிறது. இன்னும் வந்து கரையே சேரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)

ஆட்சி என்று சொன்னால் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக, முதலமைச்சர் என்று சொன்னால் எப்படிப்பட்ட முதலமைச்சராக இருக்க வேண்டும் என்று முன் னுதாரணமாக இருக்கிற முதலமைச்சராக (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்குப் புரட்சித் தலைவி அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்த ஆட்சியைத் நடத்திக் கொண்டிருக் கிறார்கள். விலைவாசியை எப்படியும் கட்டுப்படுத்த வேண்டும். நியாய விலைக் கடைகளில் கொடுக்கிற அரிசி ஒரு குடும்பத்திற்கு போதாது என்பது இந்த அரசுக்குத் தெரியும். 12 கிலோவை வைத்துக்கொண்டு ஒரு குடும்பத்தை நடத்தி விட முடியாது. ஆனால் ஏழைகளை விலைவாசி உயர்வி லிருந்து காப்பாற்றுவதற்கு இந்த அரசு என்ன செய்யும்? அதைத்தான் இன்றைக்கு நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். 340 கோடி ரூபாய்— அது நம்மால் முடியாது. ஆனாலும் செய்தே தீர வேண்டுமென் பதற்காக செய்துகொண்டிருக்கிறார்கள். வெளி மார்க்கெட் விலையை கட்டுப்படுத்துவதற்கு என்னென்ன நடவடிக்கை களை எடுக்க முடியுமோ அதைச் செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் உங்களுக்குத் தெரியும். வெளி மார்க்கெட்டிலிருக்கிற விலையைக் கட்டுப்படுத்துவது என்பது மாநில அரசால் முடி யாத காரியம். மத்திய அரசினுடைய பொருளாதார



1992 ஏப்ரல் 8] [திரு. ஜி. விசுவநாதன்]

கொள்கை, மத்திய அரசினுடைய வரி விதிப்புக் கொள்கை, மத்திய அரசினுடைய பொதுவான கொள்கை களைப் பொறுத்து, பணவீக்கத்தைப் பொறுத்து தான் வெளியே விலைவாசி ஏறுகிறது. ஒரு முறை அண்ணா அவர்கள் பேசுகிறபோது வேடிக்கையாகச் சொன்னார்கள். கந்தசாமியும் கலெக்டர் கார்த்திகேயனும் கலெக்டர். இரண்டு பேரும் கலெக்டர் என்றுதான் சொல்லிக்கொள்வார்கள். ஆனால் கார்த்திகேயன் ஜில்லா கலெக்டர். கந்தசாமி பில் கலெக்டர். இந்த அரசாங்கம் பில் கலெக்டர் மாதிரி என்று சொன்னார்கள். அப்படி அதிகாரங்கள் குவித்து வைக்கப் பட்டிருப்பது மத்திய அரசில். அவர்களும் இன்றைக்கு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவைகள் நீண்ட காலத்திற்கு பிறகு பயனளிக்கக் கூடிய வகையில் 'லாங் டேர்ம் பிளானாக' இருந்து கொண் டிருக்கின்றன. இடைக்காலத்தில் விலைவாசிகள் ஏறுவதைத் தடுப்பதற்கும் மத்திய அரசு நடவடிக்கையெடுத்துக் கொண் டிருக்கிறது. நமக்கு இருக்கிற குறைந்தபட்ச அதிகாரங்களை வைத்துக் கொண்டு என்னென்ன நடவடிக்கைகளை நம்மால் எடுக்க முடியுமோ அத்தனையையும் இன்றைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

யார் யார் பதுக்கல் செய்கிறார்களோ அவர்களைப் பிடிப் பதற்கு இன்றைக்கு போலீசை பயன்படுத்தி பிடிக்கிறோம். வெளி மாநிலங்களுக்கு யார் யார் அரிசி கடத்துகிறார்களோ, அவர்களை எல்லாம் கடத்தாமல் செய்வதற்கு என்னென்ன உண்டோ—சிலபேரை பிடித்து சிறையில் அடைக்கிறோம். சிலபேரை கூப்பிட்டு பயமுறுத்துகிறோம். சிலபேரை அந்தத் தொழிலைவிட்டு ஓடிப்போகிற அளவுக்கு வாகனங்களை கைப்பற்றி நிறுத்தி வைத்திருக்கிறோம். இப்படி எல்லா காரியங்களையும் செய்து வெளி மார்கெட்டில் விலையைக் குறைக்கிறோம்.

அதைப்போல கூட்டுறவுத் துறையைப் பயன்படுத்தி மொத்த விற்பனை பண்டகசாலை மூலமாக எங்கே பொருள் விளைகிறதோ, அந்த இடத்தில் விளைகிற நேரத்தில் சென்று, குறைவான விலைக்கு வாங்கிக் கொண்டு வந்து, அவைகளை தமிழ் நாட்டில் இருக்கிற 27 மொத்த கூட்டுறவு விற்பனை பண்டகசாலைகளில் வெளிமார்க்கெட் விலையை விட ஒரு ரூபாய் இரண்டு ரூபாய் கிலோவிற்கு குறைத்து விற்பனை செய்து விலையைக் கட்டுப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத் திருக்கிறோம். ஆகவே, இந்த துறைகளின் மூலம் இன்றைக்கு பல்வேறு சிறப்பான நடவடிக்கைகளை எடுத்துக்கொண் டிருக்கிறோம்;

[திரு. ஜி. விசுவநாதன்] [1992 ஏப்ரல் 8

சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 5 இலட்சம் டன்கள் அதிகமாக பொதுவிற்பனை முறையில் சென்று இருக்கிறது. இது இதற்கு மேலே போனால் இந்த அரசாங்கத்தால் தாங்க முடியாது. ஆகவேதான் 20 கிலோ வேண்டுமென்று சொல் கிறபோது நமக்கும் ஆசை தான். ஆனால் கொடுக்கமுடிய வில்லை. தென் மாவட்டங்களுக்கு நான் போகிற போதெல் லாம் எங்களுக்கு அதிகமாக புழுங்கல் அரிசி வேண்டுமென்று கேட்கிறார்கள். மத்திய தொகுப்பிலிருந்து வருகிற அரிசியில் 100-க்கு 90 சதவீதம் பச்சை அரிசியாகத்தான் நமக்கு தரப் படுகிறது. 10 சதவீதம் புழுங்கல் அரிசி வருகிறது. ஆனால், இந்த ஆண்டு நமக்கு நல்ல விளைச்சல் வந்திருக்கிறது. நுகர்பொருள் வாணிபக் கழகம் இதுவரை கிட்டத்தட்ட 12 இலட்சம் டன்களுக்கு மேலே கொள்முதல் செய்திருக்கிறது. இந்த ஆண்டு மொத்தமாக நெல் 15 இலட்சம் டன்கள் வருமென்று எதிர்பார்க்கிறோம். அப்படிப்பட்ட சூழ்நிலையில் இன்னும் அதிகமாக புழுங்கல் அரிசி வேண்டுமென்று நான் இங்கே சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதே புரட்சித் தலைவி அவர்களிடத்திலே, இங்கே முதலமைச்சரிடத்திலே கோரிக்கை வைத்ததை நான் பார்த்துக் கொண்டிருந்தேன். இப்போது முதலமைச்சர் அவர்களுடைய ஆணையைப் பெற்று, இன்னும் அதிகமாக புழுங்கல் அரிசியை வழங்குவோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொண்டு, இந்த மானியக் கோரிக்கைகளை ஏற்று, நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய 'புட்செல் சி.ஐ.டி.' பிரிவு முன்னாள் முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் தனியாக இயங்கிக் கொண்டிருந்தது. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் தான் 'புட்செல் சி.ஐ.டி.' பிரிவை ரெவின்யூவின் கீழ் கொண்டு வந்தார்கள். ரெவின்யூகாரர்கள் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். 'புட்செல் சி.ஐ.டி.' பிரிவை தனியாக இயங்கவிட்டால் இன்னும் சிறப் பாக இருக்கும். முந்தைய நம்முடைய அரசு செய் ததைப் போல் அதைச் செய்ய வேண்டும். ஆகவே, 'புட்செல் சி.ஐ.டி.' பிரிவை தனியாக இயக்கும் எண்ணம் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.



1992 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு அதை பரிசீலனை செய்யும்.

பிற்பகல் 2–10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு கோ-ஆப்பரேட்டிவ் சென்ட்ரல் பேங்கிலே இருக்கக் கூடிய செக்ரட்டரிகளை எல்லாம் மாற்றுவதாக இங்கே அறிவித்தார்கள். செக்ரட்டரிகளை மட்டும் மாற்றினால் போதாது. கோ-ஆப்பரேட்டிவ் ஆக்டிலே, அசிஸ்டன்ட் செக்ரட்டரி வரை இருப்பவர்களை மாற்றலாம் என்று இருந்தது. எச்.டி.சி. (H.D.C.) படித்து, 15 ஆண்டுகாலமாக இருக்கக் கூடிய சீனியர் அஸிஸ்டன்ட்களுக்கு எல்லாம், புரமோஷன் தந்து, அசிஸ்டன்ட் மேனேஜர் கேடருக்கு மேலே இருக்கின்ற வர்கள் வரை நிச்சயமாக தமிழகம் முழுவதும் அவர்களை மாற்றுவதற்கான விதிமுறைகளை அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற மாதங்களில் அசிஸ்டன்ட் செக்ரட்டரிகளும், துணைச் செயலாளர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் தே. குமாரதாஸ்.

டாக்டர் தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள மாநிலம், ஆந்திர மாநிலம் போன்ற மாநிலங்களில் எல்லா கடற்கரைப் பகுதிகளில் மீன்பிடிக்கச் செல்கிற ஏழை மீனவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 100 லிட்டர் மண்ணெண்ணெய் மீன்பிடிப்பதற்காக கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதைப்போல இங்கேயும் ஏழை மீனவர்களுக்கு, மீன்பிடிக்கச் செல்கின்ற தொழிலில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு நமது சர்க்கார் மானிய விலையில் குடும்ப கார்டுகளுக்கு மண்ணெண்ணெய் வழங்க முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

இன்னும் ஒன்று. இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிக்கின்ற நேரத்தில், இந்த கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக நடைபெறுகிற மதுபானக் கடைகள் மூடப்படும் என்று சொன்னார்கள். பாராட்டுக்குரிய செய்தி. ஆனால்,

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1992 ஏப்ரல் 8

அந்த மதுபானக் கடைகளிலே பணியாற்றி வருகிற ஊழியர்
களுக்கு வேறு எந்தத் துறையிலாவது பணி கொடுக்க, நிரந்
தரம் செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தப் படகுகளுக்கு கெரோசின் தரப்
படவேண்டும் என்ற வேண்டுகோள் ஏற்கனவே அரசுக்கு
வந்திருக்கிறது. உண்மையான மீனவர்கள் அல்லது படகு
வைத்திருப்பவர்கள் யார் என்று பார்த்து—வேறு யார் கைக்
கும் இந்த கெரோசின் போய்விடக்கூடாது. ஆகவே பார்த்து—
அவர்களுக்கு கொடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கா. பூ. முனுசாமி.

திரு. கா. பூ. முனுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தர்மபுரி மாவட்டத்திலே புதிதாக துவங்கியிருக்
கிற சர்க்கரை ஆலைக்கு செ. கந்தப்பன் என்ற பெயர்
தி.மு.க. ஆட்சியிலே வைக்கப்பட்டு இருக்கிறது. பல
தேசியத் தலைவர்களும், இந்த நாட்டுக்காக உழைத்தவர்களும்
இந்த நாட்டிலே பரிணமித்துக் கொண்டிருக்கிற இந்த கால
கட்டத்தில்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; சர்க்கரை ஆலைகள்
எல்லாம் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களிடம் தானே
வரும்? (குறுக்கீடு). கூட்டுறவு சர்க்கரை ஆலை.

திரு. கா. பூ. முனுசாமி; அந்தப் பெயரை மாற்றி, தர்மபுரி
மாவட்டத்திலே வாழ்ந்து, அந்த மாவட்டத்தினுடைய
மக்களுக்கு சிறப்பான செயலை ஆற்றிய, சுதந்திரப் போராட்ட
வீரர், சுப்ரமணிய சிவா அவர்களுடைய பெயர் அந்த
கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு வைக்கப்படுமா என்பதை
மாண்புமிகு தலைவர் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் ; மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்த கூட்டுறவு சர்க்கரை ஆலைகள்
தொழிற்துறைக்கு சம்மந்தப்பட்டவை. ஆனாலும் நம்முடைய
மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வேண்டுகோளை
நம்முடைய மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம்
புரட்சித் தலைவி அவர்கள் ஏற்றுக்கொண்டு விட்டார்கள்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும்
ஒலி).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ச. காந்திராஜன்.



1992 ஏப்ரல் 8]

திரு. ச. காந்திராஜன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த உணவுப் பொருட்களை கடத்துகின்ற
போது, பிடிபடுகின்ற லாரிகள் மற்றும் வாகனங்களை,
அப்படியே நிறுத்திவைக்காமல், அந்த வாகனங்களை அரசு
பயன்படுத்துவதற்கான சட்டத் திருத்தங்களை இந்த கூட்டுற
வுத் துறையின் மூலமாகக் கொண்டு வர அரசு முன்வருமா
என்பதை அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஜி. விசுவநாதன் ; மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அது இப்போது அரசின் பரிசீலனையில்
இருந்து கொண்டிருக்கிறது. விரைவில் முடிவு எடுக்கப்படும்
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திருமதி ஏ.எஸ்.
பொன்னம்மாள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ; மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சுப்பிரமணிய சிவா அவர்களுடைய
பெயரை வைத்ததற்காக நான் முதலிலே நன்றியைத்
தெரிவித்துக் கொள்கிறேன். ஏன் என்றால் அவர் பாப்பாரப்பட்டி
பிலே பிறந்து, பிறகு, அவருடைய வாழ்நாள் எல்லாம் வத்தல
குண்டிலே இருந்தவர், வத்தலகுண்டிலேதான் அவர்கள் சிரமப்பட்டு
வாழ்ந்தார்கள். அந்த வீடும் அங்கே இருக்கிறது, அவர்கள்
வாழ்ந்த வீடு. அந்த வீட்டைக்கூட நாம் எடுக்கவேண்டும் அதை
அரசு சின்னமாக ஆக்கவேண்டும் என்று நான் சொல்லியிருக்கிறேன்
அதற்கு வேண்டிய நடவடிக்கையை எடுப்பதோடு, நான் இப்போது
கேட்க வந்தது, மதுரை மாவட்டம் பிரிக்கப்படாமல் இருக்கும்
போது, L.M. Bank ஒன்றாக இருந்தது. இது திண்டுக்சல் மாவட்
டமும் அத்தோடு இணைந்திருந்தது. பிறகு மதுரை மாவட்டம்,
அண்ணா மாவட்டம் என்று பிரிந்த பிறகு, எல். எம். பாங்க்—
அந்த நிலவள வங்கி சோழவந்தானில் இருக்கிறது. இன்
னொரு ஜில்லாவில் இருக்கக்கூடியவர்கள் நிலக்கோட்டைக்காரர்
களை இங்கே எடுத்துக்கொள்ள முடியாது என்று எங்கள்
மெம்பர்களை எல்லாம் எடுத்துத் தூக்கிப் போட்டுவிட்டார்கள்,
பிறகு முந்தைய அரசிடம் கேட்டேன். இந்த மாதிரி சோழ
வந்தானில் இருக்கும் நிலவள வங்கிக்கு நாங்கள் செல்ல
முடியவில்லையே, நிலக்கோட்டைக்கு என்று தனியாக ஒரு
நிலவள வங்கி வேண்டுமென்று கேட்டபோது அவர்கள் என்ன
உத்தரவு போட்டார்கள் என்றால், நிலக்கோட்டையிலுள்ள
மக்கள், நிலக்கோட்டை யூனியனைச் சேர்ந்தவர்கள், திண்டுக்
கல்லுக்கும், வத்தலக்குண்டு யூனியனைச் சேர்ந்தவர்கள்
கொடைக்கானல் எல்.எம். பாங்கிற்கும் செல்லவேண்டு மென்று
சொன்னார்கள். ஆகையினால் மாண்புமிகு அமைச்சர் அவர்
களை நான் கேட்டுக்கொள்வது, கடன் வாங்கிக் கிணறு

[திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள்] [1992 ஏப்ரல் 8

வெட்டுவதற்கு அந்த நிலவள வங்கியை நிலக்கோட்டைக்கு என்று தனியாக ஒன்று அமைத்துக் கொடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

பிற்பகல் 2—15

*மாண்புமிகு திரு ஜி. விசுவநாதன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அக்கா அவர்களுடைய வேண்டுகோள் பரிவோடு பரிசீலனை செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

(அ) கோரிக்கை எண் 23—கூட்டுறவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மானியக் கோரிக்கை எண். 23—கூட்டுறவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மா. சுந்தரதாஸ்.

திரு. மா. சுந்தரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; திரு. மா. சுந்தரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ், தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்துகிறாரா என அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''கூட்டுறவு பற்றிய 23—ஆம் எண். மானியக் கோரிக்கையின் கீழ் ரூ. 89,53,27,000—க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.



1992 ஏப்ரல் 8] [பேரவைத் தலைவர்]

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது. மேசையைத் தட்டும் ஒலி).

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெற்றது.

(ஆ) கோரிக்கை எண். 35—நுகர்பொருள் வழங்கல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மானியக் கோரிக்கை எண். 35—நுகர்பொருள் வழங்கல், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன். திரு. எச்.எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

டாக்டர் தே. குமாரதாஸ், தன்னுடைய வெட்டுத் தீர்மானத்தை வலியுறுத்துகிறாரா என அறிய விரும்புகிறேன்.

டாக்டர் தே. குமாரதாஸ் : இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

''நுகர் பொருள் வழங்கல் பற்றிய 35—ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ 517,46,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்'' என்னும் மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது (மேசையைத் தட்டும் ஒலி)

அரசுக்கு கோரிய தொகை வழங்கப்பெற்றது.

[பேரவைத் தலைவர்] [1992 ஏப்ரல் 8

## 8. அறிவிப்பு.

### பேரவை அலுவல்கள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டதற்கிணங்க இந்தக் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி நிரலில் கீழ்க்கண்ட மாற்றம் செய்யப்பட்டுள்ளது :—

14–4–1992-ஆம் நாள் அம்பேத்கார் நூற்றாண்டு விழாவை ஒட்டி அரசு விடுமுறையாக அறிவிக்கப்பட்டுள்ளதால் அன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்வதாக இருந்த கோரிக்கை எண். 21 மீனளம், கோரிக்கை எண். 27 கதர் கிராமத் தொழில்கள், கோரிக்கை எண். 49 ஊரகத் தொழில்கள், கோரிக்கை எண். 60 ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய கோரிக்கைகள் அதாவது மீனளத் துறை அமைச்சர் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளும், ஊரகத் தொழில் துறை அமைச்சர் சம்பந்தப்பட்ட மானியக் கோரிக்கைகளும் 20–4–1992 திங்கட்கிழமை மாலை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று பேரவை மீண்டும் நாளை 9–4–1992 காலை 9.30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.19 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 9. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

57. தமிழ்நாடு கோழியின வளர்ச்சிக் கழகத்தின் 1989–90 ஆம் ஆண்டிற்கான பதினேழாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1-1956) 619 ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

58. தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தின் 1990-91 ஆம் ஆண்டிற்கான ஆண்டுக் கணக்குகள். [1974 ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தின் (மத்தியச் சட்டம் 6-1974) 39(2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).



1992 ஏப்ரல் 8]

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

95. கோரிக்கை எண். 23. — கூட்டுறவுத் துறைக்கான கொள்கை விளக்கம், 1992-93 (ஆங்கிலம்).

96. கோரிக்கை எண். 35—உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு (தமிழ், ஆங்கிலம்).

97. கோரிக்கை எண். 23—கூட்டுறவுத் துறைக்கான கொள்கை விளக்கம், 1992–93 (தமிழ்).

98. உரிமைக் குழுவின் அறிக்கை

99. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தேழாவது அறிக்கை, 1991–92.

100. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை, 1991–92.

101. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தொன்பதாவது அறிக்கை, 1991-92.

102. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஏழாவது அறிக்கை, 1991–92.

103. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் எட்டாவது அறிக்கை, 1991–92.

104. கூட்டுறவு நிறுவனங்களின் பணிகள் பற்றிய ஒரு கண்ணோட்டம (தமிழ், ஆங்கிலம்).

# இணைப்பு I

410—வம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க

## கூட்டுறவுத் துறை.

## கொள்கை விளக்கக் குறிப்பு 1992–93.

### 1. முன்னுரை

தமிழ்நாடு, இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்திற்கு முன்னோடியாக விளங்கும் சிறப்பு உடையதாகும். தமிழகத்தில் கூட்டுறவு இயக்கம் கடந்த எண்பது ஆண்டுகளுக்கும் மேலாக, மக்களின், குறிப்பாக கிராமப் பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினரின் பொருளாதாரத்தை உயர்த்துவதில் ஒரு முக்கியமான பங்கினை ஆற்றி வருகின்றது. மாநிலத்தில் உள்ள பல்வகைக் கூட்டுறவு சங்கங்கள் மக்களின் பலதரப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளில், அவர்களுக்கு பணியாற்றி வருகின்றன. மக்களின் பொருளாதார நடவடிக்கைகளில் கூட்டுறவு இயக்கம் பரவாத முக்கிய இனங்கள் இப்போது ஏதுமில்லையெனுமளவுக்கு அதன் வளர்ச்சி பிரமிக்கத்தக்கதாக உள்ளது.

2. 1955-ஆம் ஆண்டு வரை தமிழ்நாட்டில் உள்ள அனைத்து வகை கூட்டுறவுச் சங்கங்களும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுப்பாட்டில் இருந்தன. 1956–57-ஆம் ஆண்டு தொடக்க முதல் சில வகைச் சங்கங்கள் பிற துறைகளுக்கும் சட்டபூர்வமான வாரியங்களுக்கும் அப்போதைக்கப்போது மாற்றப்பட்டு அதன் தலைவர்களுக்கு பதிவாளரின் அதிகாரங்கள் அளிக்கப்பட்டன. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரைத் தவிர இத்தகைய செயல்முறைப் பதிவாளர்கள் பதினைந்து பேர் இப்போது உள்ளனர்.

3. கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவு அமைப்புகள், வேளாண்மை உற்பத்தி மேம்பாட்டுக் கடன், நகர்ப்புறக் கடன், வேளாண்மை பொருட்களின் விற்பனை, சேமிப்பு, வேளாண்மை இடுபொருள்களை விநியோகித்தல், தமிழ்நாடு முழுவதும் அத்தியாவசியப் பொருட்களை நுகர்வோர் கூட்டுறவுகள் மூலமாகவும், பொது விநியோகத் திட்டம் மூலமாகவும் விநியோகித்தல் கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி போன்ற முக்கியப் பணிகளை மேற்கொண்டு செயலாற்றுகின்றன. கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரது கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவு அமைப்புகளின் ஆண்டு விற்பனை அளவுத் தொகை சுமார் ரூபாய் 4,575 கோடி என்பது இங்கு குறிப்பிடத் தக்கதாகும். பதிவாளரது கட்டுப்பாட்டில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் பற்றிய எண்ணிக்கை விவரங்களும், அச்சங்கங்களின் ஆண்டு விற்பனையளவு விவரங்களும் கீழுள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன :—

| வரிசை எண். (1) | சங்கங்களின் வகைகள், (2) | | சங்கங்களின் எண்ணிக்கை. (3) | ஆண்டு விற்பனை அளவு. (4) (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | தலைமைக் கூட்டுறவு நிறுவனங்கள் | .. | 6 | 63,356.28 |
| 2 | மத்தியக் கூட்டுறவு வங்கிகள் | .. | 18 | 2,24,712.28 |
| 3 | கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் | .. | 28 | 53,693.43 |
| 4 | மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் | .. | 16 | 29.62 |
| 5 | கூட்டுறவு அச்சகங்கள் | .. | 18 | 529.54 |
| 6 | கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் | .. | 9 | 24.49 |
| 7 | தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம் | .. | 1 | 145.07 |
| 8 | தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கிகள் | .. | 4,655 | 48,474.56 |
| 9 | தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் | .. | 112 | 1,117.81 |
| 10 | கூட்டுறவு நகர வங்கிகள் | .. | 131 | 3,080.75 |
| 11 | தொடக்க நிலவள வங்கிகள் | .. | 181 | 2,749.98 |
| 12 | பணியாளர் கூட்டுறவு கடன் சங்கங்கள் | .. | 1,286 | 38,567.12 |
| 13 | நகர்ப்புற கடன் சங்கங்கள் | .. | 52 | 374.14 |
| 14 | தொடக்கக் கூட்டுறவுப் பண்டகசாலைகள் | .. | 822 | 18,354.43 |
| 15 | மாணவர்கள் கூட்டுறவுப் பண்டகசாலைகள் | .. | 3,086 | [illegible]689.33 |
| 16 | கூட்டுறவு சிற்றுண்டிச்சாலைகள் | .. | 75 | 318.07 |
| 17 | பதனிடும் சங்கம் | .. | 1 | .. |
| 18 | நீரேற்றுப் பாசனக் கூட்டுறவுச் சங்கங்கள் | .. | 39 | 0.73 |
| 19 | நிலக் குடியேற்ற கூட்டுறவுச் சங்கங்கள் | .. | 81 | 71.47 |
| 20 | காய்கறி உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள் | .. | 447 | .. |
| 21 | உப்பு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் | .. | 15 | 30.99 |
| 22 | தொழிலாளர் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள் | .. | 202 | 367.46 |
| 23 | ஊரக மின்சாரக் கூட்டுறவுச் சங்கங்கள் | .. | 3 | 824.40 |
| 24 | இதர பல்வகை கூட்டுறவுச் சங்கங்கள் | .. | 98 | 4.04 |
| | மொத்தம் | .. | 11,382 | 4,57,505.99 |



**4. பொது முன்னேற்றம்**

கூட்டுறவுத் துறையின் பெரும் பணிகளான விவசாயக் கடன்கள் வழங்குதல், வேளாண் விளைபொருள் விற்பனை, உர விநியோகம் நுகர்பொருள் விநியோகம், போன்ற இனங்களில்; 1991–92 ஆம் ஆண்டிற்கான திட்டம், அடைந்த முன்னேற்றம் மற்றும் 1992-93 ஆம் ஆண்டிற்கான திட்டம் கீழே குறிக்கப்பட்டுள்ளன :

| வரிசை எண். (1) | நடவடிக்கை விவரம். (2) | அலகு. (3) | 1991–92ஆம் ஆண்டுக்கான திட்டம். (4) | ஏப்ரல் 1991 முதல் சனவரி 1992 வரை அடைந்த முன்னேற்றம். (5) | 1992–93 ஆம் ஆண்டுக்கான உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டம். (6) |
|---|---|---|---|---|---|
| 1 | குறுகிய கால வேளாண்மைக் கடன்கள் வழங்குதல். | ரூபாய் கோடியில் | 275.00 | 217.75 | 280.00 |
| 2 | நடுத்தரக் கால வேளாண்மைக் கடன்கள் வழங்குதல். | ,, | 50.00 | 25.90 | 55.00 |
| 3 | குறுகிய கால மற்றும் நடுத்தரக் கால வேளாண்மைக் கடன்களை வழங்கியதில் மொத்தத்தில் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட்டவை. | விழுக்காடு | 70.00 | 65.00 | 68.00 |
| 4 | நீண்ட கால வேளாண்மைக் கடன்கள் வழங்குதல். | ரூபாய் கோடியில். | 32.00 | 28.31 | 41.00 |
| 5 | நகையீட்டுக் கடன்கள் வழங்குதல். | ,, | 640.00 | 658.70 | 705.00 |

| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
|---|---|---|---|---|---|
| 6 | சிறு தொழில் மற்றும் குடிசைத் தொழில்கள் போன்ற பண்ணை சாராப் பிரிவுக் கடன்கள் வழங்குதல். | ரூபாய் கோடியில் | 17.00 | 19.98 | 18.00 |
| 7 | இரசாயன உரங்கள் சில்லறை விற்பனை. | .. | 100.00 | 127.16 | 120.00 |
| 8 | வேளாண் விளை பொருட்கள் விற்பனை. | .. | 300.00 | 209.49 | 325.00 |
| 9 | கிடங்கு வசதியின் திரண்ட கொள்திறன். | ஆயிரம் டன்களில். | 702 | 695 | 714 |
| 10 | நுகர் பொருட்கள் சில்லறை விற்பனை. | ரூபாய் கோடியில். | 1,110.00 | 1,036.69 | 1,300.00 |



**5. வளர்ச்சித் திட்டங்களுக்கான செலவு.:**

கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களுக்கான 1990-91 ஆம் ஆண்டிற்கான செலவு, 1991-92 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு, 1991-92 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடு மற்றும் 1992-93 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்ட மதிப்பீடு ஆகிய விவரங்கள் கீழே குறிக்கப்பட்டுள்ளன :—

| திட்டங்களின் விவரம். (1) | 1990-91 ஆம் ஆண்டுக்கான செலவு. (2) | 1991-92 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடு. (3) | 1991-92 ஆம் ஆண்டுக்கான திருத்த மதிப்பீடு. (4) | 1992-93 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட மதிப்பீடு. (5) |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்.) | | |
| **(அ) மாநிலத் திட்டப் பணிகள் :** | | | | |
| 1. நெறிப்படுத்துதலும் நிருவாகமும் | 0.02 | 0.01 | 0.08 | 0.01 |
| 2. கடன் கூட்டுறவுச் சங்கங்கள் | 5.75 | 2.82 | 2.83 | 2.86 |
| 3. ஏனைய கூட்டுறவுச் சங்கங்கள் | 0.06 | 0.10 | 0.10 | 0.59 |
| 4. கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி | 0.03 | 0.02 | 0.03 | 0.02 |
| 5. பழங்குடியினர் பகுதிகள் துணைத் திட்டம். | 0.86 | 1.05 | 0.79 | 0.79 |
| | 6.72 | 4.00 | 3.83 | 4.27 |
| (ஆ) மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களும், தன்னாட்சி நிறுவனங்கள் நிதி உதவி பெறும் திட்டங்களும் (தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம், கிராமிய மின்வசதிக் கழகம்). | 5.27 | 1.33 | 4.19 | 1.37 |
| திட்டப் பணிகளின் மொத்தம் | 11.99 | 5.33 | 8.02 | 5.64 |
| (இ) திட்டத்தில் சேராத பணிகள் .. | 38.26 | 36.83 | 92.53 | 84.06 |
| பெரு மொத்தம் .. | 50.25 | 42.16 | 100.55 | 89.70 |

## 2. கடன்.

### அ. குறுகிய கால மற்றும் நடுத்தரக்கால வேளாண்மைக் கடன்.

6. அமைப்பு :

தமிழகத்தில் குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன் வழங்குதலுக்கான கூட்டுறவுக் கடன் அமைப்பானது மாநில அள வில் தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி, மாவட்ட அளவில் 17 மத்தியக் கூட்டுறவு வங்கிகள் (வேளாண்மையைத் தவிர்த்து பிற காரியங்களுக்கு கடன் வழங்கும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கி நீங்கலாக) மற்றும் கிராம அளவில் 4,655 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் என மூன்று அடுக்குகளைக் கொண்டதாகும்.

#### (i) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் குறுகிய மற்றும் நடுத்தரக் காலக் கடன்கள்ள வழங்கும் அடிப்படை அமைப்புகளாக அமைந்துள்ளன. மாநிலத்தில் உள்ள விவசாயி களின் வேளாண்மை உற்பத்திக்கான கடனை வழங்க இம்மாநிலத் தில் 4,655 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் உள்ளன. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் விவசாயிகளுக்கு பயிர் சாகுபடி செலவிற்கான குறுகிய கால கடன்களையும், பால் பண்ணை, ஆடு வளர்த்தல், கோழிப் பண்ணை முதலிய வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்களை மேற்கொள்ள நடுத்தரக் காலக் கடன்களையும் வழங்கி வருகின்றன. அவைகள் குத்தகை சாகுபடியாளர்களுக்குப் பயிர் கடன்களையும், நில மில்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு துணைத் தொழில்களுக் கான கடன்களையும், வழங்கி வருகின்றன. பயிர் சாகுபடிக்கான கடன்கள் தேவையின் அடிப்படையில் 35,000 ரூபாய் வரை (அதில் நபர் ஜாமீன் பேரில் 30,000 ரூபாய் வரை) வழங்கப் படுகின்றன. எனினும், பதிவு செய்யப்பட்ட கரும்பு சாகுபடி யாளர்களுக்கு நில அடமானத்தின் பேரில் 50,000 ரூபாய் வரை கடன் வழங்கப்படுகிறது. இவ்வகைக் கடன்களில் ரொக்கம் ஒரு பகுதியாகவும், உரம், விதை, பூச்சிக் கொல்லிகள் உட்பட்ட இடுபொருட்கள் ஒரு பகுதியாகவும் உள்ளன. குறுகிய காலப் பயிர் சாகுபடி கடன்கள் அறுவடை முடிவுற்ற பின்னர் மகசூல் தொகையிலிருந்து, அதிக பட்சமாக 15 மாத காலத்திற்குள் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். துணைத் தொழில்களை மேற்கொள்வதற்கான நடுத்தரக் காலக் கடன்கள் மூன்று முதல் ஐந்து ஆண்டு காலத்திற்குள் முதலீட்டின் மூலமாக பெற்ற வரு மானத்திலிருந்து திருப்பிச் செலுத்தப்பட வேண்டும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் தங்களது வைப்பு நிதியை திரட்டுவதிலும், கடன் வழங்கலை பரவலாக்கி பலமுகப்படுத்து வதிலும் வெகுவாக தம்மை ஈடுபடுத்திக்கொண்டுள்ளன. கிராம மக்களை கவரும் நோக்குடன் வைப்புத் தொகைகளுக்கு வணிக வங்கிகள் அளிக்கும் வட்டியை விட 2.5 விழுக்காடு கூடுதலாக வட்டி வழங்க அவை அனுமதிக்கப்பட்டுள்ளன.



#### (ii) மத்தியக் கூட்டுறவு வங்கிகள்

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அவற்றின் எல்லைகளுக்குள் இயங்கும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பாகும். அவை தங்களது நிதி ஆதாரங் களான பங்கு மூலதனம், இலாபத்திலிருந்து ஒதுக்கப்பட்ட நிதிகள் (R serve Funds), வைப்புத் தொகை ( Deposit ) முதலிய வற்றிலிருந்தும் மற்றும் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியின் மூலமாக வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி ( NABARD ) ஒப்பளிக்கும் கடன் அளவு வரம்பு களிலிருந்தும் ( Credit limits ) தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு நிதி வசதி அளிக்கின்றன. தமிழக அரசு வழங்கி யுள்ள ரூபாய் 15.75 கோடி உள்பட மத்தியக் கூட்டுறவு வங்கி களின் மொத்த பங்கு மூலதனம் ரூபாய் 93.28 கோடியாகும். இவ்வங்கிகள் 31—1—1992-ன்படி ஒதுக்கிய நிதிக்ள் ரூபாய் 101.64 கோடியும் வைப்புத் தொகை ரூபாய் 1,102.72கோடியும் ஆகும். அவை வழங்கிய மொத்த கடன்கள் ரூபாய் 1,327.37 கோடியாகும். அவை அவற்றின் எல்லையில் செயல்படும் எல்லா வகையான கூட்டுறவுகளுக்கும் நிதி வசதி அளிக்கின்றன. அவ்வங்கிகள் 1990–91 ஆம் ஆண்டில் ஈட்டிய மொத்த நிகர இலாபம் ரூபாய் 11.94 கோடியாகும்.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் அவற்றுடன் இணைந்துள்ள சங்கங்களுக்கு அவற்றின் சொந்த நிதியிலிருந்தும், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியிடமிருந்து வாங்கிய கடன்களிலிருந்தும் நிதி உதவி அளிக்கின்றன. மாநிலத்தில் வேளாண்மைத் தொழிலுக்கு வழங்கப்படும் கடனில் மூன்றில் ஒரு பகுதியை கூட்டுறவு வங்கிகள் நிறைவு செய்கின்றன என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். அது போன்றே தமிழகத்தில் வங்கியியல் பிரிவிலுள்ள மொத்த வைப்புத் தொகைகளில் ஐந்தில் ஒரு பகுதியை கூட்டுறவு வங்கிகள் பெற்றுள்ளன.

#### (iii) தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் பணிகள்.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பாகும். எனவே, இவ்வங்கி வேளாண்மை மற்றும் வேளாண்மை சாரா கடன் வழங்குவதில் பெரும் பங்கு ஆற்றி வருகிறது. இவ்வங்கி வேளாண்மைக்கான குறுகிய காலக் கடன்கள், வேளாண்மைச் சார்ந்த நடுத்தரக் காலக் கடன்கள், நடுத்தரக் கால மாற்றுக் கடன்கள், நெசவுத் தொழிலுக்கான நிதியுதவி, உற்பத்தி அடமான கடன்கள் (Produce Pledge loans) முதலியனவற்றிற்கு தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான வங்கி வழங்கும் நிதியைப் பெற்றுத்தருகிறது மேலும், உர வியாபாரம், பொது விற்பனை, அத்தியாவசியபொருட்

கள் விநியோகம், சர்க்கரை ஆலைகள், நூற்பாலைகளுக்கான நடைமுறை மூலதனம், காலக் கடன்கள் ( Term loans ) போன்றவற்றிற்கு மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வழங்கும் நிதி வசதிகளுக்கு ஈடு செய்யும் ரொக்கக் கடன் ( Cash Credit limit) ஒப்பளிப்பு அளித்து வருகிறது. மேலும், மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் பொது வங்கியியல் தேவைகளுக்காக (General Banking Requirements ) அவற்றில் முதலீடு செய்யப்பட்டுள்ள அரசு பொறுப்பாட்சியர் கடன் பத்திரங்கள் ( Government Trust Securities ) நிலை வைப்புகள் ( Fixed Deposits ) ஆகியவற்றின் பேரில் நடப்பு கணக்கின் மீது அதிகப் பற்று வசதிக்கும் ( over draft) தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கி வழிவகை செய்கிறது. இவ்வங்கி தமிழ்நாடு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் (கோ-ஆப்டெக்ஸ்), தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம், தமிழ்நாடு தொழிலியல் கூட்டுறவு வங்கி, தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், தமிழ்நாடு கூட்டுறவு எண்ணெய் வித்து சாகுபடியாளர் இணையம் போன்ற பிற தலைமைக் கூட்டுறவு நிறுவனங்களுக்கு நேரிடையாக நிதி வசதியை அளித்து வருகிறது. இவ்வங்கி பண்ணை சாராப் பிரிவுக்கு கடன் உதவி வழங்குவதை எளிதாக்க ஒரு தொழில் நுட்ப உதவிப் பிரிவு ஏற்படுத்தியுள்ளது.

கூட்டுறவு சர்க்கரை ஆலைகள், தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், கோ-ஆப்டெக்ஸ், சாகோ சர்வ் முதலியன பெரிய அளவில் கிடங்கு கட்டுவதற்காக உலக வங்கி தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் மூலமாக அளிக்கும் கடனுதவி முதன் முறையாக இவ்வங்கி மூலமாக அளிக்கப்படுகிறது. தமிழகத்தில் இவ்வங்கி உலக வங்கி அளிக்கும் கூட்டுறவு கிடங்கு வசதி உதவித் திட்டங்களை செயல்படுத்தும் நிறுவனமாகும். 31—3—1992 நாள் நிலவரப்படி தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கியின் மூலதனம் ரூபாய் 5.83 கோடி (இதில் அரசின் பங்கு ரூபாய் 1.26 கோடி), வைப்புத் தொகை ( Deposit) ரூபாய் 435.55 கோடி, ஒதுக்கப்பட்ட நிதி ( Reserve Fund ரூபாய் 26.61 கோடி ஆகும். இதன் மூலமும் மற்றும் வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி ( NABARD ), இந்திய தொழில் மேம்பாட்டு வங்கி ( IDBI ) சிறுதொழில் மேம்பாட்டு வங்கி ( SIDBI ) முதலியனவற்றிடமிருந்து கிடைக்கப் பெறும் மறுநிதி வசதியைக் கொண்டு இவ்வங்கி 31—12—1991-ஆம் நாளன்று வழங்கிய கடன்களின் அளவு ரூபாய் 816.55 கோடியாகும். இவ்வங்கி 1990-91 ஆம் ஆண்டில் ரூபாய் 10.10 கோடி அளவிற்கு நிகர இலாபம் ஈட்டி 14 விழுக்காட்டளவிற்கு ஈவுத்தொகை ( Dividend ) வழங்கியுள்ளது. அண்மைக் காலங்களில், செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்திற்கு 14 விழுக்காட்டளவிற்கு ஈவுத் தொகை வழங்கிய மாநிலக் கூட்டுறவு வங்கி என்ற பெருமை நாட்டிலேயே இந்த வங்கியைச் சாரும்.



## 7. கடன் வழங்குதல்

ஏழாவது ஐந்தாண்டுத் திட்ட காலம், 1990-91 மற்றும் 1991-92 ஆம் ஆண்டுகளில் குறுகியகால மற்றும் நடுத்தர காலக் கடன்கள் வழங்குதலில் எய்திய முன்னேற்றம் பின்வருமாறு:

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு. | குறுகிய கால பயிர் சாகுபடிக் கடன்கள். | | பண்ணைத் தொழில் களுக்கான நடுத்தரக் கால வேளாண்மைக் கடன்கள். | | வழங்கப்பட்ட மொத்த கடன்கள் (குறுகிய காலம் மற்றும் நடுத்தரக் காலம்). |
|---|---|---|---|---|---|
| | திட்டம். | முன்னேற்றம். | திட்டம். | முன்னேற்றம். | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1985–86 | 135.00 | 130.88 | 20.00 | 20.14 | 151.02 |
| 1986–87 | 160.00 | 162.45 | 20.00 | 25.32 | 187.77 |
| 1987–88 | 185.00 | 186.82 | 22.00 | 34.03 | 220.85 |
| 1988–89 | 215.00 | 205.04 | 30.00 | 40.14 | 245.18 |
| 1989–90 | 250.00 | 233.84 | 37.55 | 41.11 | 274.95 |
| 1990–91 | 260.00 | 243.98 | 40.00 | 40.02 | 284.00 |
| 1991–92 (31-1-92 வரை) | 275.00 | 217.75 | 50.00 | 25.90 | 243.65 |

மேலே குறிப்பிட்ட ஆண்டுகளில் வேளாண்மைக் கடன் வழங்கல் சீராக அதிகரித்து வருவதும், 1990-91-ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட வேளாண்மைக் கடன்கள் மிகவும் அதிகமென்பதும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும். 1992-93 ஆம் ஆண்டுக்கான குறுகிய கால கடன் வழங்கலுக்கான குறியீடு 280 கோடி ரூபாயும், நடுத்தரக் காலக் கடனுக்கான குறியீடு 55 கோடி ரூபாயுமாகும்.

## 8. நில உடைமைதாரர்களை கூட்டுறவில் சேர்த்தல்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மாநிலத்திலுள்ள எல்லா கிராமங்களையும் உள்ளடக்கியுள்ளன. பொதுவாக, ஒரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி அதன் எல்லையிலுள்ள இரண்டு அல்லது மூன்று வருவாய் கிராமங்களை உள்ளடக்கியுள்ளது. மாநிலத்திலுள்ள மொத்த நில உடைமை விவசாய குடும்பங்களின் எண்ணிக்கை 77.06 இலட்சம் ஆகும்; சிறு மற்றும் மிகச் சிறு விவசாய குடும்பங்களின் எண்ணிக்கை 67.58 இலட்சம் ஆகும். 1992 ஆம் ஆண்டு சனவரி இறுதி வரை மொத்த விவசாயக் குடும்பங்களில் 79 சதவிதத்தினரையும், சிறு மற்றும் மிகச் சிறு விவசாய குடும்பங்களில் 75.4 சதவிதத்தினரும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுகளில் உறுப்பினராக சேர்க்கப்பட்டுள்ளனர்.

## 9. உடனடி கடன் வழங்கும் திட்டம்

கடன் வழங்கல் நடைமுறையை எளிதாக்கவும், கடன் தவணை தவறாத உறுப்பினர்களுக்கு பயிர் கடன்களை துரிதமாக வழங்குவதை உறுதிப்படுத்தவும் நடப்பு ஆண்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உடனடி கடன் வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

## 10. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்க்கு கடன் வழங்குதல்

வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கியின் (நாபார்டு) வழிமுறைகளின்படி, வழங்கப்படும் மொத்தக் குறுகிய காலக் கடன்களில் 20 விழுக்காடு நலிந்த பிரிவினரான சிறு விவசாயிகளுக்கு அதாவது ஐந்து ஏக்கர் அல்லது அதற்கு குறைந்த நன்செய் அல்லது புன்செய் நிலத்தைச் சொந்தமாக வைத்திருப்பவர்களுக்கு கூட்டுறவுச் சங்கங்களால் வழங்கப்பட வேண்டும். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மாநிலத்திலுள்ள நலிந்த பிரிவின்ரின் கடன் தேவைகளை நிறைவு செய்வதில் உரிய கவனம் செலுத்தி வருகின்றன. 1990-91 ஆம் ஆண்டில் நலிந்த பிரிவினர்க்கு வழங்கப்பட்ட குறுகிய மற்றும் நடுத்தரக் கால்க் கடனின் அளவும், 1991-92 ஆம் ஆண்டுக்கான திட்டமும் அதில் 1992 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 31 ஆம் நாள் வரை எய்திய முன்னேற்றம் பின்வருமாறு :—

| வ. எண். | விவரங்கள். | ஆண்டு | திட்டம் (விழுக் காட்டில்) | நலிந்த பிரிவினர்க்கு வழங்கப் பட்ட கடன் தொகை (ரூபாய் கோடியில்) | வழங்கப் பட்ட மொத்த க்டனில் இதன் சதவீதம். |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1. | குறுகிய காலக் கடன் | 1990–91 | 63 | 155.10 | 63.6 |
| | | 1991–92 (1992 சனவரி 31 வரை) | 66 | 134.46 | 61.7 |
| 2. | நடுத்தரக் காலக் கடன்கள் | 1990–91 | 95 | 37.41 | 93.5 |
| | | 1991–92 (1992 சனவரி 31 வரை) | 95 | 23.58 | 91.0 |

1992–93 ஆம் ஆண்டில் சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்க்கு குறுகிய காலக் கடனில் 63 விழுக்காடும், நடுத்தரக் காலக் கடனில் 95 விழுக்காடும் வழங்கப்பட உள்ளது.



## 11. ஆதி திராவிடர்களை உறுப்பினர்களாகச் சேர்த்தல்.

வேளாண்மைத் தொழிலுக்கான குறுகிய காலக் கடன் மற்றும் வேளாண்மை சார்ந்த துணைத் தொழில்களுக்கான நடுத்தரக் காலக் கடன் பெற்று பொருளாதார நிலையை மேம்படுத்த ஆதி திராவிட வகுப்பினரின் குடும்பத்தில் ஒருவரையேனும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக்கும் நோக்கத்துடன் அரசு 1981-82 ஆம் ஆண்டிலிருந்து ஆதி திராவிட விவசாயிகளை அதிக அளவில் கூட்டுறவில் சேர்க்கும் திட்டம் தீட்டியுள்ளது; அரசு ஒவ்வொரு நபருக்கும் சங்கத்திற்கு செலுத்த வேண்டிய பங்கு மூலதனத்திற்காக ரூபாய் 100 மானியமாக வழங்கி வருகிறது. அரசு அளித்துள்ள 110 இலட்ச ரூபாய் மானியத்தில் இதுவரை தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் 1.10 இலட்சம் நபர்கள் உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டுள்ளனர். இத்திட்டத்தை தற்சமயம் மைய அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. 1988-89 முதல் 1991-92 வரைக்கான காலத்தில் 65,092 ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த நபர்களை கூட்டுறவில் உறுப்பினர்களாக்க மைய அரசு ரூபாய் 65.092 இலட்சம் மானியம் வழங்கியுள்ளது. இவ்வாறு 31-3-1992 ஆம் நாள் வரை மாநில மற்றும் மைய அரசு திட்டங்களின் கீழ் 1.75 இலட்சம் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் உதவி பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு ஆண்டுக்கான மொத்தக் கடன் வழங்கும் திட்டத்தில் ஒரு குறிப்பிட்ட விழுக்காடு ஆதி திராவிட மற்றும் பழங்குடி உறுப்பினர்களுக்கு வழங்க ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. 1990-91 ஆம் ஆண்டில் ஆதி திராவிட மற்றும் பழங்குடி வகுப்பைச் சார்ந்த உறுப்பினர்களுக்கு குறுகிய காலக் கடனில் 9.6 விழுக்காடும், நடுத்தரக் காலக் கடனில் 24 விழுக்காடும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 1991–92 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனில் 12 விழுக்காடும் நடுத்தரக் காலக் கடனில் 22 விழுக்காடும் கடன்கள் வழங்க திட்டமிட்டதில் 1992 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 31 ஆம் நாள் வரை முறையே 10.7 விழுக்காடும், 23.3 விழுக்காடும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட அறிக்கையின்படி 1992–93 ஆம் ஆண்டில் குறுகிய காலக் கடனில் 11 விழுக்காடும் நடுத்தரக் காலக் கடனில் 22 விழுக்காடும் கடன்கள் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## 12. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் வணிக மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்துதல்.

ஒவ்வொரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியும் தன்னிறைவு பெற ஏதுவாக ஒரு செயல் திட்டத்தினை தயாரிக்க வேண்டுமென வேளாண்மைக் கடன் ஆய்வுக்குழு கருத்து தெரிவித்துள்ளது. மேலும், ரூபாய் 10 இலட்சம் கடன் லேவாதேவி எய்திடாத எல்லா தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு

வங்கிகளை மேம்பாடு அடைய தனிக் கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளது. ஒவ்வொரு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கியும் தனது கடன் லேவா தேவியை அதிகரிக்கச் செய்யவும், கடன் அளித்தல் தவிர இதரப் பணிகளை மேற்கொள்வதன்மூலம் கிடைக்கும் இலாபத்தினை அதிகப்படுத்தவும், நிதி ஆதாரத்தினை பெருக்கவும், மற்றும் தவணை தவறிய கடனை குறைத்து லேவாதேவியை அதிகரிப் பதின் மூலம் நடைமுறைச் செலவினத்தை ஈடுகட்டி கருதிய இலாபம் ஈட்டுவதே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இதன் முதற் கட்டமாக தொடக்க வேளாண்மைக் கூட் டுறவு வங்கிகளுக்கான வணிக மேம்பாட்டுத் திட்டம் தயாரிப் பதற்காக எல்லா நிலைகளிலும் மத்தியக் கூட்டுறவு வங்கிப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 1992 சனவரி திங்களில் நடேசன் கூட்டுறவு பயிற்சிக் கல்லூரியில் ஒவ்வொரு மத்தியக் கூட்டுறவு வங்கியின் நான்கு அலுவலர்களுக்கு இத் திட்டப் பயிற்சி மூன்று பகுதிகளாக நடத்தப்பட்டது. இவ் விதம் பயிற்சி பெற்ற அலுவலர்கள் தொடர்பு அலுவலர் களாக நியமனம் செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் வணிக மேம்பாட்டுத் திட்டத்தினை தயாரித்து செயல்படுத்தவும் பொறுப்புடை யவர்கள் ஆவார்கள். தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கான வணிக மேம்பாட்டுத் திட்டம் தயாரித்தல், செயல்படுத்துதல் மற்றும் கண்காணித்தல் பற்றிய விரிவான வழிமுறைகள் கள அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின் முன்னேற்றத்தினைக் கண்காணிக்க மண் டல இணைப் பதிவாளர் தலைமையில் மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இது போலவே மாநில அளவில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் தலைமையிலான குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

1991–92 ஆம் ஆண்டில் இவ்வணிக மேம்பாட்டுத் திட் டத்தினை செயல்படுத்த, 409 தொடக்க வேளாண்மைக் கூட் டுறவு வங்கிகள் தெரிவு செய்யப்பட்டு இத்திட்டம் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இவ்வங்கிகள், 1991–92 ஆம் ஆண்டில் கீழ்க்கண்ட இலக்கினை எய்திட திட்டம் வகுக்கப் பட்டுள்ளது :—

| வியாபாரத்தின் தன்மை. | நிர்ணயிக்கப்பட்ட திட்டக் குறியீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| 1. கடன் வழங்குதல் | |
| 2. வேளாண் இடுபொருள் வழங்குதல் | 9,018.32 |
| 3. நுகர்வோர் பொருட்கள் வழங்குதல் | 1,540.66 |
| 4. வேளாண் விளைபொருள் விற்பனை | 3,896.24 |
| 5. வைப்புத் தொகை திரட்டுதல் | 252.55 |
| | 1,840.03 |



தன்னிறைவு பெறாமல் உள்ள எஞ்சிய தொடக்க வேளாண் மைக் கூட்டுறவு வங்கிகளையும் படிப்படியாக இத்திட்டத்தின் கீழ் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## 13. சிறப்பு நடவடிக்கைகளும் திட்டங்களும்.

### (i) ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி பெருக்குத் திட்டம்.

இந்திய அரசின் ஒருங்கிணைந்த அரிசி உற்பத்தி பெருக்குத் திட்டம் கீழே குறிப்பிட்ட 14 மாவட்டங்களில் செயல்படுத்தப் பட்டு வருகிறது: —

1. செங்கல்பட்டு-எம். ஜி. ஆர்.
2. வடார்க்காடு-அம்பேத்கார்
3. திருவண்ணாமலை-சம்புவராயர்
4. தென்னார்க்காடு
5. தஞ்சாவூர்
6. நாகப்பட்டினம்-காயிதே மில்லத்
7. திருச்சிராப்பள்ளி
8. புதுக்கோட்டை
9. மதுரை
10. திருநெல்வேலி கட்டபொம்மன்
11. சேலம்.
12. பெரியார்.
13. இராமநாதபுரம்.
14. பசும்பொன் முத்துராமலிங்கதேவர்.

இத் திட்டத்தின்கீழ் கடன் வழங்கும் சங்கங்கள் நெற்பயிர் சாகுபடிக்காக பயிர்க்கடன்கள் அளிப்பது மட்டுமின்றி மானிய விலையில் இடுபொருட்களையும் (ஜிப்ஸம் மற்றும் களைக்கொல்லி கள்) வழங்கும்.

இத்திட்டம் அமுலாக்கப்பட்ட 1988-89 ஆம் ஆண்டிலிருந்து நிர்ணயிக்கப்பட்ட திட்டக் குறியீடு மற்றும் அதில் எய்தப்பட்ட முன்னேற்றம் பின் வருமாறு :—

| ஆண்டு. | திட்டக் குறியீடு. | அடைந்த முன்னேற்றம் |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்.) | |
| குறுகிய காலம் : | | |
| 1988-89 .. .. | 52.45 | 55.87 |
| 1989-90 .. .. | 63.10 | 69.30 |
| 1990-91 .. .. | 68.90 | 75.46 |
| 1991-92 .. .. | 85.26 | 76.13 |
| (1992 ஆம் ஆண்டு சனவரி 31 வரை.) | | |

(ii) எண்ணெய் வித்துக்கள் பெருக்குத்திட்டம் :

இத் திட்டம் கன்னியாகுமரி, சென்னை மற்றும் நீலகிரி மாவட்டங்கள் தவிர ஏனைய எல்லா மாவட்டங்களிலும் செயல் படுத்தப்பட்டு வருகிறது. வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக் கான தேசிய வங்கியின் மறு நிதி வசதியுடன் எண்ணெய் வித்துக் கள் பயிர் சாகுபடி செய்ய கடன் வழங்குவதே கூட்டுறவுகளின் தனித்தன்மைப் பங்காகும். 1990-91 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் ரூபாய் 40.14 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கத்திட்ட மிட்டதில் ரூபாய் 34.63 கோடி அளவிற்கு கடன்கள் வழங்கப் பட்டன. 1991-92 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 39.41 கோடி ரூபாய் அளவிற்கு கடன்கள் வழங்க திட்டமிட்டுள்ளதில், 1991 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் 1992 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 31 ஆம் நாள்வரை ரூபாய் 28.89 கோடி அளவிற்கு முன்னேற்றம் அடைந்துள்ளது.

(iii) நகைக் கடன்கள்

கடன் நிவாரணச் சட்டம் இயற்றப்பட்டதால் நிறுவன் அமைப்பில்லாத தனியார் நிறுவனங்களிடமிருந்து கடன் கிடைப் பதரிதாகிய நிலையில், கூட்டுறவுச் சங்கங்கள் நகையீட்டின் பேரில் மாநிலம் முழுவதும் கடன் வழங்கி, மக்களின் கடன் தேவைகளை நிறைவுசெய்வதில் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றி வருகின்றன. இப்போது 4185 கூட்டுறவு அமைப்புகள் நகை



யீட்டுக் கடன் வழங்குவதில் ஈடுபட்டுள்ளன. 1990-91 ஆம் ஆண்டில், 19.84 இலட்சம் நபர்களுக்கு ரூபாய் 773.89 கோடி அளவிற்கு நகையீட்டு கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. 1991-92 ஆம் ஆண்டில் சனவரி 31 ஆம் தேதி வரை இவ்வகைக் கடன்கள் ரூபாய் 658.70 கோடி அளவிற்கு வழங்கப்பட்டுள்ளன. 1992-93 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 705 கோடி அளவிற்கு வழங்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. இவ்வகையில் கூட்டுறவுச் சங்கங்கள் கிராமப் பகுதிகளில் உள்ள நலிந்த பிரிவினர்களின் அவசர நிதி தேவை களைப் பயன் விளையத்தக்கவகையில் நிறைவு செய்து வரு கின்றன. சவரன் ஒன்றிற்கு வழங்கப்படும் கடனின் அதிக அளவு ரூபாய் 2,200 ஆகும். தனி நபர்களுக்கு அளிக்கப்படும் அதிக பட்ச கடன் அளவு 10,000 ரூபாயிலிருந்து 25,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.

(iv) சிறு வியாபாரிகளுக்கு கடன்கள்

சிறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ள மகளிர்க்கு உதவி புரிய அதிகபட்சமாக ரூபாய் 500 வரை ஒருவருக்கு தேவையின் அடிப் படையில் சிறு கடன்கள் வழங்க மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு அறிவுரைகள் வழங்கபட்டுள்ளன. சிறு வியாபாரங்களில் ஈடு பட்டுள்ள மகளிர்க்கு தேவையடிப்படையில் சிறு கடன்கள் வழங் கல் என்ற சிறப்புத் திட்ட செயலாக்கம் குறித்து. கூர்ந்து ஆராய ஒவ்வொரு மத்தியக் கூட்டுறவு வங்கியிலும் ஒரு மகளிர்ப் பிரிவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அண்மையில், நகர கூட்டுறவு வங்கி களும் இவ்வகைக் கடன்களை வழங்ககேட்டுக் கொள்ளப்பட் டுள்ளன. நடப்பு ஆண்டில் 1992 ஆம் ஆண்டு சனவரி திங்கள் 31 ஆம் நாள் வரை 4005 மகளிர் உறுப் பினர்களுக்கு ரூபாய் 16.68 இலட்சம் அளவிற்கு மேலே குறிப் பிட்ட கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

14. பயிர் ஈட்டுறுதித் திட்டம் :

1979 ஆம் ஆண்டு முன்னோடி பயிர் ஈட்டுறுதித் திட்டம், அறிமுகப்படுத்தப்பட்டபோது இத்திட்டத்தில் முதலில் பங் கேற்ற மாநிலங்களுள் தமிழ்நாடு மாநிலம் ஒன்றாகும். இத் திட்டத்தின் கீழ், நெல் பயிர் மட்டுமே கொண்டுவரப்பட்டது. 1979—80-ஆம் ஆண்டு முதல் 1984—85 ஆம் ஆண்டு வரையான காலத்தில் பிரிமியமாக ரூபாய் 22.28 இலட்சம் வசூலிக்கப்பட்டு, ஈட்டுத் தொகையாக ரூபாய் 25.62 இலட்சம் வழங்கப்பட்டது.

முன்னோடி பயிர் ஈட்டுறுதித் திட்டத்தில் பெற்ற அனுபவத்தின் அடிப்படையில், விரிவான பயிர் ஈட்டுறுதித்திட்டத்தினை மைய அரசு காரிப் 1985 பருவ காலம் முதல் அறிமுகப்படுத்தியது. இத் திட்டம் மைய அரசின் முகவரான பொதுக் காப்பீட்டுக் கழகத் தின் மூலம், மாநில அரசின் தீவிர ஒத்துழைப்புடன் செய லாக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் கூட்டுறவு, வணிக மற்றும் மண்டல கிராமிய வங்கிகளால் நெல், எண்ணெய் வித்துக்கள் மற்றும் சிறு தானியப் பயிர்களுக்கு அறிவிக்கப்பட்ட பகுதிகளில் (Notifi d areas) வழங்கப்படும் குறுகிய காலப் பயிர்க்கடன் முழு வதும், ஒரு விவசாயிக்கு ரூபாய் 10,000-க்கு மிகாமல் ஈட்டுறுதி செய்யப்படுகிறது. நெல் மற்றும் சிறு தானியப் பயிர்களுக்கு பிரிமியத் தொகை ஈட்டுறுதி செய்யப்படும் தொகையில் இரு சதவீதமும் எண்ணெய் வித்துக்களுக்கு ஒரு சதவீதமும் வசூலிக் கப்படுகிறது. பெறப்படும் பிரிமியத்தொகையையும், வழங்கப்படும் ஈட்டுத் தொகையையும் மைய அரசும், மாநில அரசும் முறையே 2 : 1 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்ளுகின்றன. சிறு மற்றும் குறு விவசாயிகளைப் பொறுத்தமட்டில், அவர்கள் செலுத்த வேண்டிய பிரிமியத் தொகையில் 50 சதவீதம் மானியமாக அனு மதிக்கப்படுகிறது. இச் செலவினை மைய அரசும், மாநில அரசும் சம அளவில் ஏற்கின்றன. ஆரம்ப காலம் தொட்டு இத்திட்டம் செயலாக்கப்பட்ட விவரம் கீழே அளிக்கப்பட்டுள்ளது:—

| ஆண்டு. | விவசாயிகள் எண்ணிக்கை. | பரப்பளவு (ஹெக்டேரில்) |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1985—86 | 106193 | 206027 |
| 1986—87 | 163874 | 228694 |
| 1987—88 | 221604 | 292506 |
| 1988—89 | 43444 | 79850 |
| 1989—90 | 200011 | 297717 |
| 1990—91 | 247226 | 341935 |
| 1991—92 (காரீப்). | 99554 | 154955 |

| ஆண்டு. | ஈட்டுறுதி செய்த தொகை. | வசூலித்த பிரிமியத் தொகை. | வழங்கப் பட்ட ஈட்டுத் தொகை. |
|---|---|---|---|
| | (4) | (5) | (6) |
| | (ரூபாய் இலட்சங்களில்.) | | |
| 1985—86 | 3689.00 | 69.08 | 81.03 |
| 1986—87 | 6806.03 | 70.99 | 85.12 |
| 1987—88 | 7900.32 | 132.76 | 122.67 |
| 1988—89 | 1873.00 | 23.46 | 18.85 |
| 1989—90 | 6835.08 | 127.02 | 73.80 |
| 1990—91 | 8074.75 | 146.66 | 21.72 |
| 1991—92 (காரீப்) | 3934.00 | 75.84 | இன்னும் தீர்க்கப்படவில்லை. |

குறிப்பு : 1. இத்திட்டம் 1988–89 ஆம் ஆண்டில் காரீப் பருவத்தில் செயலாக்கப்படவில்லை.

2. 1990–91 ஆம் ஆண்டுக்கு மேற்கொண்டு ஈட்டுத் தொகையாக ரூபாய் 227.08 இலட்சம் வழங்கப் பட வேண்டியுள்ளது.



இத்திட்டம் தற்போது (ராபி 1991—92 பருவ காலம்) கீழ்க் குறிப்பிட்ட விவரப்படி அறிவிக்கப்பட்ட பகுதிகளில் செயலாக் கத்தில் உள்ளது :

| வரிசை எண். | பயிர். | வட்டாரங்களின் எண்ணிக்கை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | நெல் | 230 |
| 2. | சோளம் | 69 |
| 3. | கம்பு | 75 |
| 4. | கேழ்வரகு | 88 |
| 5. | நிலக்கடலை | 138 |
| 6. | எள் | 61 |
| 7. | சூரியகாந்தி | 1 |

ஆ. நீண்ட காலக் கடன்

15 (i) தொடக்க நில்வள வங்கிகள்

நீண்ட காலக் கடன் அமைப்பு வட்டம் மற் றும் வட்டார அளவில் செயல்பட்டு வரும் 181 தொடக்க நிலவள வங்கிகளையும், மாநில அளவில் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கியையும் கொண்ட இரண்டு அடுக்கு முறையில் செயல்பட்டு வருகிறது. தொடக்க நிலவள வங்கிகள், திட்ட அடிப்படையில் (schematic lending) சிறிய நீர்ப்பாசனம், தோட்டப் பயிர்கள் வளர்த்தல், கோழி வளர்ப்பு, பால் பண்ணை, ஆடு வளர்ப்பு, டயர் வண்டிகள், பட்டுப்புழு வளர்த்தல் போன்ற பல இனங்களுக்குக் கடன்களை வழங்கி வருகின்றன. சாதாரண கடன் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் (normal lending) கிணறுகளை செப்பனிடுதல், நீர்க்குழாய் அமைத்தல், டிராக்டர், விசை உழவுச் சாதனங்கள், நிலச்சீர்திருத்தம், முந்தைய கடனைத் தீர்த்தல், நிலம் வாங்குதல், கால் நடைகளுக்கான கொட்டகை கட்டுதல் மற்றும் பண்ணை வீடு அமைத்தல் போன்ற இனங்களுக்கு கடன்களை நிலவள வங்கிகள் வழங்கி வருகின்றன. இவ்வகையிலான கடன்களுக்கான திருப்பிச் செலுத்தும் கால வரம்பு 5 முதல் 15 ஆண்டுகள் என நிர்ண யம் செய்யப்பட்டுள்ளது.

தொடக்க நிலவள வங்கிகளின் கடன் வழங்கும் தகுதிநாபார்டு நிர்ணயம் செய்துள்ள நெறி முறைகளின் அடிப்படையில்முக்கிய மாக, அவைகளின் வசூல் திறனை அடிப்படையாகக் கொண்டு 1—4—1991 முதல் கீழ்க்கண்ட நிர்ணயம் செய்யப்படுகிறது.

படி கடன் வழங்கும் தகுதியை நிர்ணயம் செய்வதற்கான நெறி முறைகளை நாபார்டு திருத்தி அமைத்துள்ளது:—

| முந்தைய ஆண்டில் ஜூன் 30 உடன் முடிவடைந்த காலத்தில் வசூல் திறனின் சதவிகிதம். | | தொடக்க நிலவள வங்கிகளின் கடன் வழங்கும் தகுதி. |
|---|---|---|
| அ. வகை | 60 சதவிகிதமும் மற்றும் அதற்கு மேலும். | வரையறையற்றது. |
| ஆ. வகை. | 60 சதவிகிதத்திற்கு குறைவாக | கடந்த நிதி ஆண்டில் வழங்கப்பட்ட கடன் தொகை அளவு (அல்லது) கடந்த 3 நிதி ஆண்டுகளில் வழங்கப்பட்ட கடன் தொகைகளின் சராசரித் தொகை (அல்லது) ஜூன் 30 உடன் முடிவடைந்த கடந்த ஆண்டில் வசூலான தொகை அளவு (அல்லது) முந்தைய 3 கூட்டுறவு ஆண்டுகளில் வசூலான தொகை சராசரித் தொகை இவற்றில் எது அதிகமோ அத்தொகை. |

மேற்கண்ட நெறிமுறைகளின் அடிப்படையில். 1991—92 ஆம் ஆண்டில் 74 நிலவள வங்கிகள் வரையறையற்ற கடன் வழங்கும் தகுதியையும் (unrestricted lending) எஞ்சிய 107 நிலவள வங்கிகள் வரையறுக்கப்பட்ட கடன் வழங்கும் தகுதியையும் பெற்றிருந்தன.

ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலத்திலும் மற்றும் 1990-91 1991-92 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட நீண்டகாலக் கடன் தொகைகளின் விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :—

(ரூபாய் கோடியில்)

| ஆண்டு | | திட்டம் | கடன் வழங்கிய அளவு |
|---|---|---|---|
| 1985—86 | .. | 20,00 | 24,19 |
| 1986—87 | .. | 20,00 | 20,52 |
| 1987—88 | .. | 20,00 | 30,60 |
| 1988—89 | .. | 27,00 | 28,94 |
| 1989—90 | .. | 30,00 | 25,97 |
| 1990—91 | .. | 25,00 | 31,31 |
| 1991—92 (31—1—1992 வரை) | .. | 32,00 | 28,31 |

1992—93 ஆம் ஆண்டில் ரூபாய் 41,00 கோடி கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



## (ii) தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி

கடன்கள் வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியைச் சாதாரண மற்றும் சிறப்பு கடனீட்டுப் பத்திரங்கள் (debentures) வெளியிடுவதன் மூலம் தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி பெறுகிறது. மாநில மத்திய அரசுகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், பாரத ஸ்டேட் வங்கியும் அதன் பிரிவுகளும், வர்த்தக வங்கிகள், தமிழ்நாடு தலைமைக் கூட்டுறவு வங்கி, மற்றும் இதர மாநில கூட்டுறவு நிலவள வங்கிகள் சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. நாபார்டு, மாநில மற்றும் மத்திய அரசுகள் ஆகியவை சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களில் முதலீடு செய்கின்றன. சிறிய நீர்ப்பாசனம் மற்றும் சிறிய நீர்ப்பாசன மற்ற திட்டத்தின் கீழ் நிதியுதவி செய்யும் நோக்கத்தோடு, பகுதி முன்னேற்ற திட்டங்கள் பலவற்றை மாநில நிலவள வங்கி தீட்டியுள்ளது. 31—1—1992 அன்று சாதாரண மற்றும் சிறப்புக் கடனீட்டுப் பத்திரங்களில் முறையே ரூபாய் 51.54 கோடி மற்றும் ரூபாய் 113,80 கோடியும் நிலுவையில் உள்ளது. 31—1—1992 அன்று வங்கியின் சொந்த நிதி ஆதாரம் ரூபாய் 66,48 கோடியாகும். ஒவ்வொரு சாதாரணக் கடனீட்டுப் பத்திரங்களுக்கான காலம் முடிவடையும் போது பத்திரங்களுக்குரிய தொகைகளைத் திருப்பிச் செலுத்துவதற்காக ''கடனீட்டு பத்திர மீட்பு நிதி'' (Debunture Redemption Fund) ஒன்றினை வங்கி பராமரித்து வருகிறது. இந்த நிதியில் 31—1—1992 தேதியில் ரூபாய் 22.21 கோடி உள்ளது.

பல்வேறு திட்டங்களின் செயல்பாட்டில் ஏற்படும் சிக்கல்களை கண்காணிக்கவும் ( Moritoring ) திட்டத்தினால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பயனைக் கணிப்பாய்வு (Evaluation) செய்யவும், கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுக்குழு ஒன்றை தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. இந்நாள் வரை 244 கண்காணிப்பு மற்றும் கணிப்பாய்வுகள் செய்யப்பட்டுள்ளன.

விவசாயிகட்கு விரிவாக்க பணியாக ' நிலவளம் ' என்ற மாதாந்திர இதழை தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி வெளியிடுகிறது. தொடக்க நிலவள வங்கி பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக நாபார்டின் உதவியுடன் இளநிலை பணியாளர் பயிற்சித் திட்டம் ஒன்றினை தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி நடத்தி வருகிறது.

## 16. கடன்கள் வழங்குவதற்காக நிலவள வங்கிகட்கு புதிய வழிகள்

பால்பண்ணை, ஆடு வளர்ப்பு. கோழிப்பண்ணை, ஆகிய பலதரப்பட்ட காரியங்களுக்காகவும், ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் போன்ற சிறப்பு திட்டங்களின் கீழ் மட்டும், இந்நாள்வரை நிலவள வங்கிகள் கடன்களை வழங்கி

வந்தன. ஆயினும், நிதி வசதி அளிப்பதில் இதர நிதி நிறுவனங்கள் அளவில் ஏற்பட்டுள்ள மாறுதலான நிலைமையை அனுசரித்து தொடக்க நிலவள வங்கிகள். கீழ்க்கண்ட பிற இனங்களுக்கும் கடன்கள் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன:—

(i) பண்ணை சாராப் பிரிவுகட்கு கடன் வழங்கல்.

நாபார்டினால் அறிவிக்கப்பட்டுள்ள மறுநிதி உதவித் திட்டத்தின்படி கிராம கைவினைஞர், கைத்திறனாளர்கள் மற்றும் சிறிய அளவிலான வாணிபம் செய்பவர்கட்கு, பண்ணை சாராக் கடன் திட்டத்தின் கீழ் 1990-91-ஆம் ஆண்டு முதல் நிலவள வங்கிகள் கடன் வழங்கி வருகின்றன. இவ்வகை நிதியுதவி, கிராம மக்களுக்கு இலாபகரமான வேலை வாய்ப்புகளை அளித்து அதன் மூலம் அவர்களது வருமானத்தை அதிகரித்து பயன் அளிப்பதுடன், நிலவள வங்கிகளின் கடன் லேவாதேவியை விரிவடையச் செய்யவும் உதவுகிறது, நாபார்டினால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ள கடன் வழங்கு நெறிமுறைகளைக் கடைப்பிடிக்காது, நிலவள வங்கிகள் இத் திட்டத்திற்கு கடன் வழங்கலாம் என்பதும், அவ்வாறு வழங்கப்படும் கடன் அளவில் 100 சதவீத அளவிற்கு நாபார்டு மறு நிதி உதவி செய்வதும் இதனுடைய சிறப்பு அம்சமாகும், இத் திட்டத்தின் கீழ், தனி நபர் ஒருவருக்கு அதிகபட்சமாக ரூபாய் 50,000 கடன் வழங்கலாம் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது, 1991-92-ஆம் ஆண்டில் ரூபாய் 3,00 கோடி அளவிற்கு கடன் வழங்க குறியீடு நிர்ணயிக்கப்பட்டு, டிசம்பர் 1991 வரை ரூபாய் 1,93 கோடி அளவிற்கு நிலவள வங்கிகள் கடன் வழங்கியுள்ளன, 1992-93-ஆம் ஆண்டில் ரூபாய் 4,00 கோடி கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது,

(ii) கிராமங்களில் வீடுகட்ட கடன் வழங்குதல்

1989-90 ஆம் ஆண்டின் வரவு செலவு கூட்டத் தொடரில் மக்களவையில் அறிவிக்கப்பட்ட தேசிய கொள்கைக்கு ஏற்ப, தேசிய வீட்டு வசதி வங்கியின் மறு நிதி உதவியுடன் கிராமப்புறங்களில் புதிய வீடுகள் கட்ட கடன்கள் வழங்க தொடக்க நிலவள வங்கிகள் அனுமதிக்கப்பட்டுள்ளன, தனி நபர் அதிகபட்ச கடன் அளவு ரூபாய் 1,00, இலட்சம் ஆகும், இத்திட்டத்தின்கீழ், தொடக்க நிலவள வங்கிகள் கடன் வழங்குவதை ஆரம்பிக்க இயலவில்லை, இதன் காரணம் கடன் வழங்குவதானது கடன் வசூல் திறனுடன் இணைக்கப்பட்டுள்ளதேயாகும்,



1.7, நலிந்த பிரிவினருக்கான கடன் வசதி.

சமுதாயத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு தேவைப்படும் கடன் உதவி அளிக்கும் வகையில் கடன் வழங்கும் திட்டம் நிர்ணயம் செய்யப்படும் போது, சாதாரண திட்டத்தின் கீழ் 20 சதவிகித அளவிற்கும். திட்ட அடிப்படையில் 60 சதவிகித அளவிற்கும், நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, ஏழாவது ஐந்தாண்டு திட்ட காலம் முதல் நலிவுற்ற பிரிவினருக்கு கடன் வழங்கிய விபரம் மற்றும் அதன் விழுக்காடு குறித்த விபரங்கள் கீழ் வருமாறு :—

| ஆண்டு | | மொத்த கடன் வழங்கியது | நலிவுற்ற பிரிவினருக்கு வழங்கிய கடன் தொகை | வழங்கிய மொத்த கடன் தொகையில் நலிவுற்ற பிரிவினருக்கான பங்கின் சத்விகிதம் |
|---|---|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) | | |
| (1) | | (2) | (3) | (4) |
| 1985—86 | .. | 24.19 | 10.70 | 44.2 |
| 1986—87 | .. | 20.52 | 9.78 | 47.7 |
| 1987—88 | .. | 30.60 | 14.18 | 46.3 |
| 1988—89 | .. | 28.94 | 11.38 | 39.3 |
| 1989—90 | .. | 25.97 | 7.79 | 30.0 |
| 1990—91 | ... | 31.31 | 9.78 | 31.2 |
| 1991—92 (31—1—1992 வரை) | .. | 28.31 | 8.60 | 30.4 |

எட்டாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ள ரூபாய் 265,00 கோடியில் நலிவுற்ற பிரிவினருக்கு ரூபாய் 132,92 கோடி அளவிற்கு நிதி உதவி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இத்தொகை மொத்த கடன் தொகையில் 50,15 சதவிகிதமாகும், திட்ட ஆவணத்தின் படி, 1992-93-ஆம் ஆண்டில் கடன் வழங்க நிர்ணயித்துள்ள குறியீடான ரூபாய் 41.00 கோடியில் நலிவுற்ற பிரிவினருக்கு ரூபாய் 18.70 கோடி நிதி உதவி செய்ய திட்ட மிடப்பட்டுள்ளது இத்தொகை மொத்த கடன் தொகையில் 46 சதவிகிதமாகும்.

8, பொய்த்த கிணறுகள் நிதி.

கூட்டுறவு தொடக்க நிலவள வங்கிகளில் கடன் பெற்று தோண்டப்படும் கிணறுகளில் தண்ணீர் இன்றி பொய்த்துப் போய் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உதவுவதற்கான பொய்த்த கிணறுகள் நிதி ஒன்றை தமிழ்நாடு மாநில நிலவள வங்கி நிர்வகித்து வருகிறது, கூட்டுறவு கள். வடிமுனைக் குழாய்க் கிணறுகள். திறந்த வெளிக் கிணறு ஆழ்குழாய் கிணறுகள் ஆகியவைகளுக்கு குழாய்க் கிணறுகள், நிதியிலிருந்து உதவியளிக்க தற்போது பொய்த்த கிணறுகள் பயிர் விளைச்சல் பற்றிய நடைமுறையிலுள்ள பயிரிடப்படும் பரப்பு, அரசு தளர்த்தியுள்ளது. இத் திட்டத்தின் விதிமுறைகளை கட்கு மற்றும் பெரிய விவசாயிகட்கு கீழ், சிறு விவசாயி விகிதமும், 75 சதவிகிதமும் முறையே 90 சத களுக்கு நிவாரணம் அசல் மற்றும் வட்டி பகுதி மற்றும், பழங்குடி அளிக்கப்படுகிறது, பிற்படுத்தப்பட்ட சிறு விவசாயிகட்கு அவர்களின் சொந்த உழைப்பாக அளித்த பங்கு, நீங்கலாக, முழுத் தொகை யும், மான்யமாக அளிக்கப்படுகிறது. 31—12—1991 வரை 3194 பொய்த்த கிணறுகட்கு ரூபாய் 220.37 இலட்சம் உதவி வழங்கப்பட்டது.

எல்லா மாநிலங்கட்கும், பொதுவான பொய்த்த கிணறுகள் இழப்பீட்டுத் திட்டம் ஏற்படுத்தும் நோக்கத்துடனும். மானியம் அளிப்பதில், பொதுவான நெறி முறைகளைப் பின்பற்றும் நோக்கத்துடனும், எல்லா மாநிலங்களும் கடைப்பிடிப்பதற் கான பொய்த்த கிணறுகள் இழப்பீட்டு நிதி ஒன்றினை நாபார்டு அறிவித்துள்ளது. மேற்படி பொய்த்த கிணறு இழப்பீட்டு நிதி திட்டத்தினை 1—7—1986 முதல் செயல் படுத்த அரசு ஒப்புதல் செய்துள்ளது. இத்திட்டத்தின்படி; தொடக்க கூட்டுறவு வங்கிகள், தொடக்க நிலவள வங்கிகள், வணிக வங்கிகள் மற்றும் மண்டல ஊரக வங்கிகள் மூலம் கடன் பெற்று, கிணறுகள் தோண்டி, அவை பொய்த்துப் போனால், பாதிக்கப்பட்ட சிறு விவசாயிகள், நலிந்த விவசாயிகள், பிற்பட்ட மற்றும் பழங்குடி விவசாயிகட்கு 100 சதவீதஅளவிற்கு மானியம் வழங்கப்படும், இத்திட்டத்தின்படி. கடன் தொகையில் அசல் பகுதிக்கான மானியத் தொகை மாநில மற்றும் மத்திய அரசுகளால் சரிசமமாக பகிர்ந்து கொள்ளப்படும். வட்டிப் பகுதி யைப் பொறுத்த வரையில் நாபார்டு திட்டங்கள் தொடர்பான கடன்களாக இருந்தால், நாபார்டும், சம்பந்தப்பட்ட வங்கியும் சரி சமமான அளவிலும் இதர சாதாரண திட்டம் பற்றியக் கடன் களாக இருந்தால், முழு வட்டித் தொகையையும் சம்பந்தப்பட்ட வங்கி தள்ளுபடி செய்து தன் சொந்த நிதியிலிருந்து ஏற்கும்.



19 (i) கடன் வசூலும், நிவாரணமும்

1991-92 ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்டவாறு கடன்கள் வழங்க உத்தேசிக்கப்பட்டது :—

| | | | (ரூபாய் கோடியில்) |
|---|---|---|---|
| (i) குறுகியகால பயிர்க்கடன் | .. | .. | 275 |
| (ii) நடுத்தரக்கால வேளாண்மைக் கடன் | | .. | 50 |
| (iii) நீண்ட காலக் கடன் | .. | .. | 40 |
| | மொத்தம் | | 365 |

குறுகிய மற்றும் நடுத்தரக் காலக் கடன்.

மேற் குறிப்பிட்ட ரூபாய் 325 கோடி கீழ்க்கண்டவாறு திரட்டப்படுகிறது :—

| | | | (ரூபாய் கோடியில்.) |
|---|---|---|---|
| (i) 'நாபார்'டிடமிருந்து மறுநிதியாக | | .. | 250 |
| (ii) தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கியின் சொந்த நிதியாக | .. | .. | 56 |
| (iii) மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் நிதியாக | | | 19 |

விவசாயிகளிடமிருந்து குறுகிய காலக் கடன்களுக்கு ரூபாய் 7500 வரை 11.5 சதவீதமும், ரூபாய் 25,000-க்கு மேற்பட்ட கடன்களுக்கு 15 சதவீதமும் வட்டி வசூலிக்கப்படுகிறது. தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கிக்கு நாபார்டு நிறுவனம் தனது நிதியிலிருந்து 3 சதவீத வட்டிக்கு கடன் அளிக்கிறது. தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி, மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு இத் தொகையை 3.5 சதவீதம் வட்டிக்குவழங்குகின்றது. மத்தியக் கூட்டுறவு வங்கிகள் இத்தொகையை 9 சதவீத வட்டிக்கு தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்குகின்றன. இறுதியாக, விவசாயிகள் இதனை 11.5 சதவீதம் வட்டிக்குப் பெறுகிறார்கள்.

## நீண்ட காலக் கடன்.

நீண்ட காலக் கடன்களைப் பொறுத்த வரையில், மொத்தத் தொகையான ரூபாய் 40 கோடி பின்வரும் இரண்டு திட்டங்களின் கீழ் அளிக்கப்படுகிறது :—

(i) சாதாரண திட்டம் (ரூபாய் 8 கோடி).

(ii) நாபார்டு உதவும் திட்டங்கள் (ரூபாய் 32 கோடி)

கடன் பத்திரங்கள் வெளியிடுவதன் மூலமாக இந்த இரண்டு திட்டங்களுக்கு நிதி ஆதாரம் திரட்டப்படுகிறது. சாதாரண திட்டங்களுக்கு வெளியிடப்படும் கடன் பத்திரங்கள் சாதாரண கடன் பத்திரங்கள் என அழைக்கப்படுகின்றன. இவைகளுக்கு மாநில அரசு 8 விழுக்காடும், மைய அரசு 8 விழுக்காடும் மற்றும் மற்ற வணிக வங்கிகள், ஆயுள் காப்பீட்டுக் கழகம், மற்றும் துணைக் கூட்டுறவு அமைப்புகள் எஞ்சிய 84 விழுக்காடும் நிதி அளிக்கின்றன. 'நாபார்டு' உதவி பெறும் திட்டங்களுக்கு நாபார்டிடமிருந்து 86 சதவீதம், மாநில அரசிடமிருந்து 7 சதவீதம், மைய அரசிடமிருந்து 7 சதவீதம் கூடிய சிறப்பு வளர்ச்சி கடன் பத்திரங்கள் மூலம் நிதி ஆதாரம் திரட்டப்படுகிறது. இவ்வாறாக ரூ. 40 கோடி நீண்ட காலக் கடனில் நாபார்டு ரூபாய் 27.51 கோடி அல்லது சுமார் 69 சதவீதம் நிதி அளிக்கிறது.

குறுகிய கால, நடுத்தரக் கால மற்றும் நீண்ட காலக் கடன்கள் வழங்கிட தேவையான மொத்த நிதியில் 75.89 சதவீதம் நாபார்டு ..லம் குறைந்த வட்டி வீதத்தில் கிடைக்கிறது. எனவே, கூட்டுறவுகள் மூலம் வேளாண்மைக் கடன் வழங்குவதில் நாபார்டு நிறுவனத்தின் பங்கு மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், இன்றியமையாததாகவும் உள்ளது.

## நாபார்டின் நிபந்தனைகள்

(i) குறுகிய மற்றும் நடுத்தரக் காலக் கடன்கள்.

கடன் வாங்கும் வங்கிகளின் மீது கடன்கள் பெறுவதற்கு நாபார்டு, மறு நிதி அளிக்கும் நிறுவனம் என்ற வகையில் இயல்பான சில நிபந்தனைகளை விதித்துள்ளது. இந்த நிபந்தனைகள் பெரும்பாலும் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மட்டத்தில் கடன் வசூல் செய்வது பற்றியவை. நாபார்டிலிருந்து மறுநிதி உதவி பெறத் தகுதி அடைய மத்தியக் கூட்டுறவு வங்கி குறைந்த பட்சம் 40 சதவீதம் வசூலிக்க வேண்டும். இந்த 40 சதவீதத்திற்கு மேல் வசூலிக்கப்படும் தொகைக்கு ஏற்ற விகிதத்தில் இவ்வங்கி மறுநிதி வசதியைப் பெற முடியும். அதாவது இவ்வங்கிகள் 60 சதவீதம் கடன் வசூல் செய்தால்; 60 சதவீதம் நாபார்டிலிருந்து மறுநிதி வசதியைப் பெறமுடியும். மறு நிதியைப் பெற வசூலிக்கப்பட வேண்டிய 40 சதவீதம் தொகையில் 30 சதவீதம் தொகையை வசூலித்து தலைமைக் கூட்டுறவு வங்கிக்கு குறிப்பிட்ட நாட்களுக்கு முன்னர் செலுத்தப்பட வேண்டும் என்பது



நாபார்டு விதித்துள்ள மூன்றாவது நிபந்தனையாகும். இதன்படி காரீப் பருவத்திற்கு அதாவது ஏப்ரல் 1-ந் தேதி முதல் செப்டம்பர் முப்பதாம் தேதிவரை அளிக்கப்பட்ட கடன் தொகையில் 30 சதவீதம் வசூலிக்கப்பட்டு தலைமைக் கூட்டுறவு வங்கியில், அதற்கு அடுத்த ஆண்டு மார்ச்சு முப்பத்தோராம் நாளுக்குள் செலுத்தப்பட வேண்டும். மற்றும் மீதி 70 சதவீதம் தொகையை வசூலித்து ஜூன் முப்பதாம் நாளுக்குள் செலுத்தப்பட வேண்டும்.

(ii) நீண்ட காலக் கடன்கள்

தனிப்பட்ட நபர்களுக்கு வழங்கப்படும் கடன் தொகையைப் பொறுத்து 6.5 சதவீதத்திலிருந்து 9.5 சதவீதம் வரை வட்டி வீதத்தில் மாநில நிலவள வங்கிகளுக்கு நாபார்டு நிதியளிக்கிறது. மாநில நிலவள வங்கி இத்தொகையை 7.5 சதவீதத்திலிருந்து 10.5 சதவீதம் வரை வட்டி வீதத்தில் தொடக்க நிலவள வங்கிகளுக்கு கொடுக்கிறது. தொடக்க நிலவள வங்கிகள் இத்தொகையை ரூபாய் 7500 வரை உள்ள கடன்களுக்கு 11 சதவீதம் வட்டிக்கும், ரூபாய் 50,000 வரையுள்ள கடன்களுக்கு 15 சதவீதம் வட்டி வீதத்திலும் கடன் வழங்குகின்றன.

தொடக்க நிலவள வங்கிகளுக்கு வழங்கும் நீண்டகாலக் கடன்கள் மீதும் நாபார்டு சில நிபந்தனைகளை விதித்துள்ளது. நாபார்டு குறிப்பிடும் ஒதுக்கீடு அளவிற்கு தடையின்றி கடன் வழங்க தகுதி பெற இவ்வங்கிகள் 60 சதவீதத்திற்கு குறையாமல் கடன் தொகையை வசூலிக்க வேண்டும். கடன் வசூல் செய்வது 60 சதவீதத்திற்கு குறைந்தால் நாபார்டின் மறுநிதி வசதியும் அந்த அளவிற்கு குறைக்கப்படும். இதன் விளைவாக தொடக்க நிலவள வங்கிகள் விவசாயிகளுக்கு வழங்கும் கடனை குறைக்க வேண்டி நேரிடும்.

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் இந்த நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும் என்பதில் நாபார்டு மிகவும் தீவிரமாக உள்ளது. இந்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதற்காக மத்தியக் கூட்டுறவு வங்கிகள் குறைந்த பட்ச அளவு வசூல் செய்வதை கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. மேற்கூறிய நிபந்தனைகளை நிறைவேற்றாவிடில் நாபார்டிலிருந்து குறைந்த வட்டியில் மறுநிதி வசதி பெற்று விவசாயிகளுக்கு கடன் வழங்க இவ்வங்கிகளுக்கு இயலாமல் போய்விடும்.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க நிலவள வங்கிகள் ஆகியவற்றை பொறுத்தமட்டில் கடந்த ஐந்து ஆண்டுகளில் தவணை தவறிய கடன் நிலவரம் பின்வருமாறு :—

| நாளிதுவரை. | தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் அளவில். | | | தொடக்க நிலவள வங்கிகள் அளவில். | | |
|---|---|---|---|---|---|---|
| | கடன் நிலுவைத் தொகை. | தவணை தவறிய கடன் தொகை. | கேட்பில் தவணை தவறிய கடன் விழுக்காடு. | கடன் நிலுவைத் தொகை. | தவணை தவறிய கடன் தொகை. | கேட்பில் தவணை தவறிய கடன் விழுக்காடு. |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| | (ரூபாய் கோடியில்) | | | (ரூபாய் கோடியில்.) | | |
| 1987 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30ஆம் நாள். | 420.53 | 147.23 | 33.7 | 147.58 | 41.82 | 42.3 |
| 1988 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30ஆம் நாள். | 545.40 | 179.03 | 41.2 | 163.13 | 52.38 | 77.2 |
| 1989 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30ஆம் நாள். | 710.58 | 227.50 | 36.3 | 175.93 | 64.34 | 78.3 |
| 1990 ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30ஆம் நாள். | 941.31 | 398.34 | 55.6 | 193.11 | 87.61 | 88.1 |
| 1991ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 30 ஆம் நாள். | 1019,85 | 404.63 | 43.7 | 196.39 | 66.27 | 54.8 |
| 1992 ஆம் ஆண்டு சனவரி 31 ஆம் நாள். | 1125.97 | 525.67 | 68.6 | 211.85 | 79.15 | 91.5 |



தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க நில வள வங்கிகள் ஆகியவற்றின் மொத்த கடன் நிலுவை 31–1–92 ஆம் நாளன்று இருந்த ரூபாய் 1337.82 கோடியில் தவணை கடந்த கடன் ரூபாய் 604.82 கோடியாகும்.

குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்கள் சராசரி வசூல் 40 சதவீதத்திற்கு குறைவதானது நிதிவசதி பெறும் தகுதியினைப் பெற முடியாததாக ஆக்கிவிடும், கடன் வசூல் செய்யும் விகிதத்தைப் பொறுத்தே நாபார்டின் மறுநிதி வசதி பெற முடிகிறது. எனவே, கடன் தொகையில் மீதியை 30-6-1992-க்குள் கணிசமான அளவுக்கு வசூல் செய்தாலன்றி 1992—93 ஆம் ஆண்டிற்கு மேற்கொண்டு கடன்கள் வழங்க நிதி பெறுவது மிகவும் குறைந்ததாகிவிடும், நீண்டகாலக் கடன்களை பொறுத்த மட்டில் நாபார்டு விதித்துள்ள 60 சதவீதக் கடன் தொகை வசூலிக்கப்பட வேண்டும் என்ற விதிக்கு மாறாக, 11.52 சதவீதம் மட்டுமே வசூலித்ததால் அதன் நிலை மிகவும் மோசமாக ஆகியுள்ளது. தடையற்ற கடன் வழங்குவதற்கு மொத்தமுள்ள 181 தொடக்க நிலவள வங்கிகளில் இரண்டு வங்கிகள் மட்டுமே தகுதி பெற்றுள்ளன,

கூட்டுறவு அமைப்புகளை எதிர் நோக்கியுள்ள முக்கிய பிரச்சனை கூட்டுறவுக் கடன்களை தாராளமாக வழங்குதலுக்கு முட்டுக்கட்டையாக இருக்கும் பெருகி வரும் தவணை தவறிய கடன் நிலுவையே ஆகும். தவணை தவறிய கடன் நிலுவை கேட்பில் 40 விழுக்காட்டிற்கு குறைவில்லாமல் வசூல் செய்தாலொழிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி மறுநிதி வசதி அளிக்காது. சாகுபடியாளர்களிடையே கடனை திருப்பிச் செலுத்தும் மரபு சமீப காலமாக குறைந்து வருவதால் கூட்டுறவுகளில் தவணை தவறிய கடன்கள் பெருகி வருகின்றன.

1990ஆம் ஆண்டு வேளாண்மை மற்றும் ஊரக கடன் நிவாரணத் திட்டத்தின் கீழ் கூட்டுறவு நிறுவனங்களின் கடன்தாரர்களுக்கு (குறுகிய கால மற்றும் நீண்டகாலக் கடன்களில்) ரூபாய் 289.43 கோடி அளவிற்கு பெருத்த அளவில் கடன் நிவாரணம் அளித்திருந்தும், முன்னர் குறிப்பிட்ட புள்ளி விவரங்களினின்று கடன் வசூலில் போதிய முன்னேற்றமின்மையை அறியலாம், கடன் பெற்றவர்கள் மேலும் கடன் தள்ளுபடி எதிர்நோக்கி தாம் பெற்ற கடன் நிலுவையை திருப்பிச் செலுத்த முன்வராமல் உள்ளனர். வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சிக்கான தேசிய வங்கி எவ்வித நிபந்தனைகளின்றி சட்டப்பூர்வ நடவடிக்கைகள் மூலம் கூட்டுறவு நிறுவனங்களின் தவணை கடந்த தொகையை வசூலிக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகிறது. அது கடன் வசூலில் போதிய முன்னேற்றம்

கொணப்படாவிடில் மறுநிதி வசதி அளிப்பதற்கான தடை ஆணை. விதிக்க நேரிடும் என்றும் தெளிவாக தெரிவித்துள்ளது.

(ii) வேளாண்மை மற்றும் ஊரகக் கடன் நிவாரணத் திட்டம், 1990

1990ஆம் ஆண்டு வேளாண் மற்றும் ஊரகக் கடன் நிவா
ரணத் திட்டத்தினை மத்திய அரசு அறிவித்த போது மொத்த
நிவாரணத் தொகையில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்
படும் என்றும், எஞ்சிய 50 விழுக்காட்டினை மாநில அரசு
அளிக்க வேண்டுமென்றும், இத்தொகை கடனாக மாநில அரசிற்கு
நாபார்டு நிறுவனம் மூலம் அளிக்கப்படும் எனவும் அறிவித்தது.

இத்திட்டத்தின் கீழ், கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் 10.89
இலட்சம் பயனாளிகள் ரூபாய் 289.43 கோடி நிவாரணம் பெற்
றுள்ளனர்.

இது குறித்து முடிவு உரிமைக் கோரிக்கை அறிக்கை
நாபார்டு நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும்,
தேசிய வங்கி இதுகாறும் கீழ்க்கண்டவாறு ரூபாய் 218.294
கோடி மட்டுமே அளித்துள்ளது:—

(ரூபாய் கோடியில்)

| | |
|---|---|
| (1) குறுகிய மற்றும் நடுத்தரக் காலக் கடன் நிலுவைக்காக அளிக்கப் பட்ட தொகை | 160.714 |
| (2) நீண்டகாலக் கடன் நிலுவைக் காக அளிக்கப்பட்ட தொகை | 57.580 |
| மொத்தம் | 218.294 |

நாபார்டு நிறுவனத்திடமிருந்து மீதித் தொகையான
ரூபாய் 71.136 கோடி இன்னமும் வரவேண்டியுள்ளது.

கடன் நிவாரணத் திட்டத்தின் கீழ் நிவாரணம் அளித்துள்ள
தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் மேற்படி பாக்கித் தொகை
யான ரூபாய் 71.136 கோடி அளிக்கப்படாமையால்
கடன் வழங்கும் திட்டத்தினை மேற்கொள்ளுதலில் தனது
பாடுகளுக்குள்ளாகியுள்ளன. மேற்படி நிவாரணத் இடர்
அளிக்கப்படாமையால் தொடக்கக் கூட்டுறவுச் தொகை
31—12—1991 ஆம் தேதி வரை ரூபாய் 17 கோடி சங்கங்களுக்கு
வட்டி





இழப்பு ஏற்பட்டுள்ளது. நிதிப் பற்றாக்குறை தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் செயற்பாட்டினை பெருமளவில் பாதித்துள்ளது. போதிய நிதி இல்லாமையால் தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கி மற்றும் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் இச் சங்கங்களுக்கு உதவ இயலாத நிலையில் உள்ளன. எஞ்சிய தொகையை தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விரைவில் வழங்கப்படாவிட்டால் வரும் காலங்களில் இச் சங்கங்களுக்கு கடன் வழங்குதலில் இடர்பாடு ஏற்படும். இப்பொருள் குறித்து மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

## இ. நகர்ப்புற மக்களுக்கு கடனுதவி

### 20. கூட்டுறவு நகர வங்கிகள்

1947 ஆம் ஆண்டு வங்கியியல் ஒழுங்கு முறை சட்டத்தின் கீழ் தமிழ்நாட்டில் 131 கூட்டுறவு நகர வங்கிகள் உள்ளன. இவ்வங்கிகள் நகர்ப்புற மற்றும் ஓரளவு நகர்ப்புறங்களில் வசிக்கும் ஏழை/நடுத்தர வர்க்க மக்களுக்கு மிகச் சிறு வியாபாரம், கைத்தொழில், வீடுகளை பழுது பார்த்தல், விரிவுபடுத்தல், குழந்தைகளுக்கான கல்விச் செலவு, குடிசைத் தொழில்கள் போன்ற இனங்களுக்காக நபர் ஜாமீன் மற்றும் சொத்து ஜாமீன் ஆகியவற்றின் மீதும் கடன் அளிக்கின்றன. இப்போது உள்ள 131 நகர கூட்டுறவு வங்கிகளில் 125 நகர கூட்டுறவு வங்கிகள் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள் நகரங்கள் மற்றும் ஓரளவு நகர்ப்புறங்களில் உள்ள மக்களுக்கு 1990—91 ஆம் ஆண்டில் ரூபாய் 361.32 கோடி அளவிற்கு குறுகிய கால மற்றும் நடுத்தரக் காலக் கடன்களை வழங்கியுள்ளன. 1990—91-ஆம் ஆண்டின் இறுதியில் இவ்வங்கியிடமிருந்த வைப்புத் தொகைகள் ரூபாய் 388.35 கோடியாகும். கூட்டுறவு நகர வங்கிகள் வழங்கும் கடன்களில் 60 சதவீதத்திற்கு குறையாமல் முன்னுரிமைப் பிரிவிற்கு வழங்க வேண்டும் என்று இந்திய ரிசர்வ் வங்கி வழிமுறைகளை வகுத்துள்ளது. முன்னுரிமைப் பிரிவிற்குக் கொடுக்கப்படுகின்ற மொத்தக் கடன் தொகையில் குறைந்தது 25 சதவீதம் நலிந்த பிரிவினருக்கு வழங்கப்பட வேண்டும். 1990—91 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட மொத்த கடன் தொகையான ரூபாய் 361.32 கோடியில் ரூபாய் 238.63 கோடி அளவிற்கு முன்னுரிமை பிரிவிற்கு வழங்கப்பட்ட கடனாகும்; இது மொத்த கடன் தொகையில் 66 சதவீதம் ஆகும். நலிந்த பிரிவினருக்கு ரூபாய் 138.27 கோடி அளவிற்கு கடன் வழங்கப்பட்டுள்ளன, இது மொத்த முன்னுரிமைப்பிரிவு கடன்களில் 58 சதவீதம் ஆகும்.

கூட்டுறவு நகர வங்கிகள், குடிசைத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்களுக்கு கடன்கள் வழங்குகின்றன. 1991—92 ஆம் ஆண்டில் பண்ணை சாராப் பிரிவுக் கடன்கள் ரூபாய் 17.00

கோடி அளவிற்கு சிறு மற்றும் குடிசைத் தொழில்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 31—1—1992 வரை உள்ள காலத்திற்கு திட்டமிடப்பட்ட ரூபாய் 14.00 கோடியில் ரூபாய் 16.90 கோடி வழங்கப்பட்டுள்ளது. 1992—93 ஆம் ஆண்டில் சிறு மற்றும் குடிசைத் தொழில்களுக்கு ரூபாய் 18 கோடி அளவிற்கு கடன் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 3. வேளாண்மை இடு பொருட்கள் விநியோகம்

### 21(அ) இரசாயன உரங்கள்

தஞ்சாவூர் மற்றும் நீலகிரி மாவட்டம் நீங்கலாக, மாநிலம் முழுவதிலும் தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையத்துடன் இணைக்கபட்டு தொடக்கநிலையில் 112 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் உள்ளன. திருவாரூரில் உள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையமும், உதக மண்டலத்திலுள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கமும் முறையே தஞ்சாவூர் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் செயல்பட்டு வருகின்றன.

இரசாயன உரங்களை கூட்டுறவு நிலையங்கள் மூலம் விநியோகம் செய்யும் மொத்த விற்பனை யாளர்களாக தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையம், நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவைகள் செயல்பட்டு வருகின்றன. 4326 தொடக்கக் கூட்டுறவு விவசாய வங்கிகளின் 5678 சில்லறை விற்பனை நிலையங்கள் மூலமாகவும், 101 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலமாகவும் உறுப்பினர்களுக்கு பயிர்க்கடன்களில் ஒரு பகுதியாகவும், உறுப்பினரல்லாதவர் மற்றும் உறுப்பினர்களுக்கு ரொக்கத்திற்கும், உரங்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. 1991-92-ஆம் ஆண்டில் 2.19 இலட்சம் டன் (என்.பி.கே.) அளவிற்கு ரூபாய் 100 கோடி மதிப்பிற்கு உரம் வழங்கத்திட்டமிடப்பட்டுள்ளது. ஏப்ரல் 1991 முதல் சனவரி 1992 வரை 2.21 இலட்சம் டன் (என்.பி.கே.) அளவிற்கு ரூபாய் 127.16 கோடி மதிப் பிற்கு உரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. 1992-93-ஆம் ஆண்டில் 3 இலட்சம் (என்.பி.கே.) டன் அளவிற்கு உர விநியோகத்தை அதிகப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

சமீபத்தில் மைய அரசால் அறிமுகப்படுத்தப்பட்ட உர மானியத் திட்டம் கூட மாநிலத்திலுள்ள கூட்டுறவுச் சங் சங்கள் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத் தின்படி, வேளாண்மைத்துறை மூலம் வழங்கப்படும் அடை யாள அட்டையின் பேரில் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு



22 வகையான உரங்கள் மானிய விலையில் விநியோகிக்கப் படுகின்றன. அரசு இதற்காக முதல் தவணைத் தொகை யாக ரூபாய் 13.327 கோடி அளித்துள்ளது.

இந்த உர மானியத்துடன் மேலும், நாகப்பட்டினம் காயிதே மில்லத், தென்னாற்காடு, தஞ்சாவூர், செங்கை எம்.ஜி.ஆர்., வடாற்காடு அம்பேத்கார் மற்றும் திருச்சிராப் பள்ளி மாவட்டங்களில் சமீபத்தில் வெள்ளத்தினால் பாதிக் கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் அளிக்கும் நோக்கத் துடன் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உர விநியோகம் செய்ய அரசு ரூபாய் 5.2928 கோடி வழங்கியுள்ளது. கூட் டுறவுச் சங்கங்களினால் இரசாயன உரங்கள் விநியோகம் செய்வதன் மூலமாக இந்நிவாரணம் நீட்டிக்கப்பட்டுள்ளது.

### (ஆ) விதைகள், பூச்சி மருந்துகள் மற்றும் வேளாண்மைக் கருவிகள்

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம், தஞ்சா வூர் கூட்டுறவு விற்பனை இணையம், நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கம் ஆகியவைகள் விதைகள், பூச்சி மருந்துகள் போன்ற இதர இடுபொருட்கள் மற்றும் வேளாண்மைக் கருவிகள் போன்றவைகளையும் விநியோகிக்கும் மொத்த விற்பனையாளர்களாக செயல்பட்டு வருகின்றன. 1991-92-ஆம் ஆண்டு இவ்வகை இடுபொருட்கள் ரூபாய் 9.50 கோடி அளவிற்கு வழங்க திட்டமிட்டதில், ஏப்ரல் 1991 முதல் சனவரி 1992 வரை கூட்டுறவுச் சங்கங்கள் ரூபாய் 7.06 கோடி அளவிற்கு வழங்கியுள்ளன. 1992-93-ஆம் ஆண்டுக்கு ரூபாய் 11.80 கோடி அளவிற்கு வழங்க திட்ட மிடப்பட்டுள்ளது.

துடியலூர் கூட்டுறவு வேளாண்மைச் சேவைச் சங்கமும், கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களிலுள்ள மூன்று கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், "கோவை விதைகள் கூட்டுறவுகளின் கூட்டமைப்பு" என்ற அமைப்பின் கீழ் விதைப் பெருக்கத் திட்டத்தினை செயல்படுத்தி வரு கின்றன. இவைகள் சான்றளிக்கப்பட்ட விதைகளை உற் பத்தி செய்து கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் இதர நிறுவனங் களுக்கு இந்த கூட்டமைப்பு மூலமாக விநியோகம் செய்கின்றன. இந்த கூட்டமைப்பு 1991-92-ஆம் ஆண்டில் (ஏப்ரல் 1991 முதல் சனவரி 1992 வரை) 773 மெ. டன் அளவிற்கு ரூபாய் 54.43 இலட்சம் மதிப்பிற்கு விதைகள் விநியோகம் செய்துள்ளது. இக்கூட்டமைப்பின் வியாபாரத்தினை முன் னேற்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

துடியலூர் கூட்டுறவு வேளாண்மை சேவைச் சங்கம் பூச்சி மருந்துகள் தயாரிக்கும் அலகினையும் விவசாய உப கரணங்கள் தயார் செய்யும் ஒரு அலகினையும் நடத்தி வரு

இறது. இச் சங்கம் 1991-92-ஆம் ஆண்டில் (ஏப்ரல் 1991 முதல் சனவரி 1992 வரை) ரூபாய் 154 இலட்சம் மதிப்புள்ள பூச்சி மருந்துகளும், ரூபாய் 18.12 இலட்சம் மதிப்புள்ள வேளாண்மைக் கருவிகளும் விநியோகித்துள்ளது.

தமிழ்நாடு வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூபாய் 2.24 கோடி மதிப்பிற்கு பூச்சி மருந்து வியாபாரம் வேளாண்மை இயக்ககத்திலிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.; இத்திட்டத்தின் செயலாக்கம் முன்னேற்றத்திலுள்ளது.

## 4. விற்பனை, பதனிடுதல் மற்றும் கிடங்கு வசதி.

### 22. தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் (டான்பெட்).

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் 1959-ல் துவக்கப்பட்டு மாநில அளவிலான விவசாயிகள் அமைப்பாக விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தேவையான இடுபொருட்கள் வழங்குவதிலும், வேளாண் விளை பொருள் விற்பனையிலும் பெரும் பங்கு வகிக்கிறது. தஞ்சாவூர் மாவட்டம் மன்னார்குடிக்கு அருகே பாமணி என்ற இடத்தில் உரத் தொழிற்சாலை ஒன்று 1970-ல் துவக்கப்பட்டு என். பி.கே. மணி உரம் தயாரிக்கப்படுகிறது; இது நாள் ஒன்றுக்கு சராசரி 120 டன் உற்பத்தித் திறன் கொண்டது.

இதுதவிர, தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மாநிலத்தில் 10 இடங்களில் உரக்கலவை நிலையங்களை நடத்தி வருகின்றது. இவ்விணையம் மிளகாய், தனியா, உளுந்து போன்ற வேளாண் விளைபொருட்களை கொள்முதல் செய்து வருகிறது. விலை ஆதரவு திட்டத்தின்கீழ் நேபட் ( National Co-operative Marketing Federation ) நிறுவனத்தின் முகவராக் தமிழகத்தில் செயல்பட்டு வருகிறது; 1976 முதல் பூச்சிக்கொல்லி மருந்து மொத்த விற்பனையாளராகவும் செயல்பட்டு வருகிறது. 25100 மெட்ரிக் டன் கொள் திறன் கொண்ட 32 கிடங்குகள் இதற்குச் சொந்தமாக உள்ளன. இது தவிர, 18,150 மெட்ரிக் டன் கொள்திறன் உடைய 26 கிடங்குகளை வாடகைக்கு எடுத்துள்ளது.

டான்பெட் சென்னையில் 1250 மெ.டன் கொள்ளளவு கொண்ட குளிர்ப்பதன சேமிப்பு நிலையம் ஒன்றினை நிர்வகித்து வருகிறது. 1990-91 ஆம் ஆண்டில் 70 சதவீதம் பயன்படுத்தப்பட்டு ரூபாய் 10.47 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் சனவரி 92 வரை, இக்குளிர்ப்பதன சேமிப்பு நிலையம் 62 சதவீதம் பயன்படுத்தப்பட்டு ரூபாய் 8.45 இலட்சம் வருமானம் ஈட்டியுள்ளது. இதன் பயனீட்டினை முழுமையான அளவிற்கு கொண்டுவர அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சென்னையை அடுத்த கோயம்



பேட்டில் ரூபாய் 109.75 இலட்சம் மதிப்பில் 2500 மெட்ரிக் டன் கொள்திறன் கொண்ட ஒரு குளிர்ப்பதனச் சேமிப்பு நிலையத்தை அமைக்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்விணையம் தலா 320 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட மூன்று வெங்காய சேமிப்புக் கிடங்குகளை திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் எரியோடு என்னுமிடத்தில் நடத்தி வருகிறது.

மேலே குறிப்பிடப்பட்ட இனங்களில் டான்பெட் 1991-92 ஆம் ஆண்டில் செய்த வியாபாரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :—

| விவரம். | 1991–92 ஆம் ஆண்டு (சனவரி 1992 முடிய) | |
|---|---|---|
| | அளவு மெட்ரிக் டன்னில். | மதிப்பு ரூபாய் கோடியில். |
| (1) | (2) | (3) |
| 1. உரவிநியோகம் | 3,70,000 | 99.46, |
| 2. பாமணி உர உற்பத்தி | 19,253 | 5.19 |
| 3. பாமணி உரவிற்பனை | 21,175 | 6.61 |
| 4. டான்பெட் கலப்பு உரங்கள் விற்பனை | 3.442 | 0.58 |
| 5. வேளாண்விளை பொருள் கொள் முதல் | 8.124 | 8.61 |
| 9. விதை விற்பனை | — | 0.15 |
| 7. பூச்சி கொல்லி விநியோகம் | — | 3.47 |
| 8. வேளாண் உபகரணங்கள் விநியோகம் | — | 0.07 |
| 9. மண்ணெண்ணெய் விநியோகம் | 2,049 (கிலோ லிட்டர்) | 57.70 |

### 23. விவசாய விளை பொருட்கள் விற்பனை செய்தல்

மாநிலத்தில் 112 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் இருக்கின்றன. அவை தம் உறுப்பினர்களின் வேளாண் விளை பொருட்களை விற்பனை செய்வதின் மூலம் அவர்கள் நியாயமான விலையைப் பெற உதவி செய்து வருகின்றன. 1991-92 ஆம் ஆண்டில் ரூபாய் 3.00 கோடிக்கு வேளாண் விளைபொருட்களை

விற்பனை செய்ய திட்டமிடப்பட்டதில் சனவரி 1992 வரை
ரூபாய் 209.49 கோடிக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.
1992-93-ஆம் ஆண்டிற்கு வேளாண் விளைபொருட்கள் விற்
பனையை ரூபாய் 325 கோடிக்கு மேலும் உயர்த்த திட்டமிடப்
பட்டுள்ளது.

24. கூட்டுறவு விற்பனைச் சங்கங்களை தொடக்கக் கூட்டுறவு
வங்கிகளோடும் நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களோடும்
இணைத்தல்.

உற்பத்தியாளர்கள் தம் விளை பொருட்களை விற்பதில்
ஆதாயமான வருமானம் பெறவும், நுகர்வோர் இன்றியமையாப்
பொருட்களை நியாயமான விலைகளில் பெறவும், ஏதுவாக
கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் ஒரு பக்கம் தொடக்கக் கூட்
டுறவு வங்கிகளுடனும், மறு பக்கம் நுகர்வோர் கூட்டுறவு சங்
கங்களுடனும் இணைக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் கீழ்
தொடக்க கூட்டுறவு வங்கிகளின் உறுப்பினர்கள் கூட்டுறவு விற்
பனைச் சங்கங்களின் உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, விற்
பனைச் சங்கங்களின் கொள்முதல் செயல்முறைகள் கடன்தாரர்
களுடன் இணைக்கப்படுகின்றன. கூட்டுறவு மொத்த விற்பனைப்
பண்டகசாலைகள் அவற்றிற்கு தேவையான பொருட்களை
வாங்குவதில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் சேவையை
பெரிதும் பயன்படுத்திக் கொள்கின்றன. 1990-91-ல்
வேளாண் விளை பொருட்கள் விற்பனை செய்த
தின் மூலமாக ரூபாய் 68.86 இலட்சம் அளவிற்கு உற்பத்தி
கடன்கள் வசூல் செய்யப்பட்டன. இது 1991-92-ல் மற்றும்
1992-93ல் முறையே ரூபாய் 100 இலட்சம் மற்றும் ரூபாய்
125 இலட்சத்திற்கு அதிகப்படுத்தப்படும்.

விவசாய உறுப்பினர்கள் தங்கள் விளை பொருட்களுக்கு
நியாயமான விலை கிடைக்கும் பொருட்டு அவர்களது விளை
பொருட்களின் ஈட்டின் பேரில் கூட்டுறவு விற்பனைச் சங்கங்
களும் தொடக்கக்கூட்டுறவு வேளாண்மை வங்கிகளும் தொடர்ந்து
கடன்கள் வழங்கி வருகின்றன. இவ்வகை கடன்கள் 1990-91
ஆம் ஆண்டில் ரூபாய் 737.81 இலட்சம் வழங்கப்பட்டுள்ளன.
1991-92ஆம் ஆண்டு மற்றும் 1992-93 ஆம் ஆண்டுகளில் கூட்
டுறவு விற்பனை சங்கங்களினால் வேளாண் விளைபொருளீட்டுக்
கடன் முறையே 450 ரூபாய் இலட்சம் மற்றும் ரூபாய் 500
இலட்சம் அளவிற்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

25. பதப்படுத்தும் அலகுகள்.

விவசாயிகளுக்கு குறைந்த செலவில் பதனிடும் வசதிகளை
அளிக்கும் பொருட்டு கூட்டுறவுச் சங்கங்கள் பல்வகைப்பட்ட
பதப்படுத்தும் அலகுகளை நிறுவியுள்ளன. அரசிடமிருந்தும்



தேசீய கூட்டுறவு வளர்ச்சி கழகத்திடமிருந்தும் பங்கு மூலதன
மாகவும் கடனாகவும் நிதியுதவி நீட்டிக்கப்பட்டுள்ளன. தற்
சமயம் தமிழ்நாட்டில் அரிசி ஆலைகள் 38, பருத்தி விதை நீக்கும்
ஆலைகள் 19, கடலை உடைக்கும் அலகுகள் 16, எண்ணெய்
பிழியும் இயந்திரங்கள் 14, எண்ணெய் ஆலை 1, பழம் பதப்
படுத்தும் ஆலைகள் 3, காப்பி அரவை ஆலை 4, காப்பி சுத்தப்
படுத்தும் ஆலை 1, குளிர்ப்பதன அறை 1, மரவள்ளிக் கிழங்கு
பதப்படுத்தும் அலகு 1, மஞ்சள் தூள் அரவை ஆலை 1, மாவு
அரவை ஆலைகள் 4, பருப்பு ஆலைகள் 2, சேமியா தயாரிக்கும்
அலகுகள் 2, விதைகள் நேர்த்தி செய்யும் அலகுகள் 4, புளி பதப்
படுத்தும் அலகு 1, சீயக்காய்த் தூள் அரவை ஆலை 1 ஆக
மொத்தம் 113 பதப்படுத்தும் அலகுகள் நடத்தப்பட்டு வரு
கின்றன.

26. சேமிப்பு கிடங்கு - ஊரக மற்றும் விற்பனைக் கிடங்குகள்

விற்பனை மற்றும் விநியோகத்தினை செயல்படுத்த கூட்டுறவுச்
சங்கங்கள் கிராம அளவில் ஊரகக் கிடங்குகளையும், மண்டி அளவி
லான விற்பனை கிடங்குகளையும் கட்டி வருகின்றன. நிதியுதவி 45
சதவீதம் பங்கு மூலதனமாகவும் 50 சதவீதம் கடனாகவும் வழங்
கப்படுகிறது. எஞ்சியுள்ள 5 சதவீதத் தொகை சம்பந்தப்பட்ட
சங்கங்களின் சொந்த நிதியில் இருந்து ஏற்கப்படுகிறது. நாளது
தேதிவரை 6.95 இலட்சம் மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட
4978 கிடங்குகள் உள்ளன. 14,572 மெ.டன் கொள்ளளவு
கொண்ட 124 ஊரக கிடங்குகளும், 5 விற்பனைக் கிடங்குகளும்
இப்போது கட்டுமானத்தில் பல்வேறு நிலைகளில் உள்ளன. 1991-
92 ஆம்ஆண்டில் தேசீய கூட்டுறவு வளர்ச்சி கழக மூன்றாவது
உலக வங்கித் திட்டத்தின் கீழ் 50 ஊரக கிடங்குகள் மற்றும் 1
விற்பனை கிடங்கு கட்ட அரசு நிதியுதவி அளித்துள்ளது. 1991-
92ஆம் ஆண்டின் இறுதியில் கூட்டுறவுச் சங்கங்களின் திரண்ட
கிடங்கு கொள்திறன் 7.02 இலட்சம் மெட்ரிக் டன்னாக அதிக
ரிக்கப்படும்.

1992-93ஆம் ஆண்டில் 12,400 மெ.டன் கொள்திறன்
கொண்ட 50 ஊரக கிடங்குகளும் 9 விற்பனை கிடங்குகளும்
கட்ட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## 5. நுகர்வோர் பணிகள்.

27. தமிழ்நாட்டில் இப்போது நுகர்வோர் கூட்டுறவு தொடக்க
நிலையில் 3,755 தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகளுடனும்
(மாணவர் கூட்டுறவுப் பண்டகசாலைகள் உள்பட) மாவட்ட
அளவில் 29 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக
சாலைகளுடனும், மாநில அளவில் தமிழ்நாடு நுகர்வோர் கூட்
டுறவு இணையமும் கொண்டு செயல்பட்டு வருகிறது.

[1992 ஏப்ரல் 8

நுகர்வோர் கூட்டுறவுகளின் தலைமை நிறுவனமான, தமிழ் நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையம் 1966-ஆம் ஆண்டில் துவக்கப்பட்டது. இதன் முதன்மை நோக்கம் அத்தியாவசிய நுகர்வு பொருட்களை மொத்த கொள்முதல் மற்றும் இறக்குமதி மூலம் கிடைக்கச் செய்வதும் மற்றும் தமிழ்நாட்டில் உள்ள மாவட்ட மற்றும் தொடக்க நிலையில் உள்ள கூட்டுறவுகளின் பணிகளை ஒருங்கிணைப்பதுமாகும். நுகர்வோர் சென்னையில் 7000 மெ.டன் கொள்ளளவுள்ள கிடங்கு வசதி இது யுடைய ஒரு மண்டல விநியோக மையத்தை துவக்கியுள்ளது. இவ்விணையம் தமிழ்நாடு பாடநூல் நிறுவனம் தயாரிக்கும் பாட புத்தகங்கள் மற்றும் சலுகை விலை குறிப்பேடுகள் ஆகியவற்றை விநியோகம் செய்வதில் ஒருங்கிணைக்கும் முகவராகவும் செயல் படுகிறது. இவ்விணையத்தின் செயல்பாடு குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:—

| ஆண்டு. | கொள்முதல். | விற்பனை | நிகர நட்டம். |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| (1) | (2) | (3) | (4) |
| 1988-89 | 887.22 | 967.55 | 68.74 |
| 1989-90 | 481.65 | 541.41 | 66.75 |
| 1990-91 | 354.60 | 377.71 | 65.57 |
| 1991-92 (31—12—1991 வரை) | 144.85 | 172.90 | 57.10 |

இலாபகரமான மதுபான விற்பனையை தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்திடமிருந்து தமிழ்நாடு மாநில வாணிபக் கழகம் எடுத்துக்கொண்டது, மேற்படி நட்டத்திற்கான முக்கிய காரணமாகும். தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணை யத்திற்கு தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி வழங்கியுள்ள கடன் தொகைக்கு இன்னும் நிலுவையிலுள்ள அதிக வட்டி பளுவும் மற்றும் அதிகமான பணியமைப்பு செலவும் நட்டத்திற்கான காரணமாகும். எனினும், தமிழ்நாடு நுகர்வோர் கூட்டுறவு இணையத்தை இலாபகரமாக நடத்த நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

## 28. நுகர்பொருள்கள் சில்லறை விற்பனை

1990-91 ஆம் ஆண்டில் எல்லாவகை நுகர்வோர் கூட்டுறவு களும் செய்த நுகர் பொருட்களின் சில்லறை விற்பனை மதிப்பு ரூ. 1,156.80 கோடி ஆகும். 1991-92-ஆம் ஆண்டிற்கு ரூபாய் 1,100 கோடி அளவிற்கும், 1992-93-ஆம் ஆண்டிற்கு ரூபாய் 1,300 கோடி அளவிற்கும் விற்பனை செய்ய திட்டம் தீட்டப்பட் டுள்ளது. நாட்டிலுள்ள அனைத்து கூட்டுறவுப் பண்டகசாலை



1992 ஏப்ரல் 8]

கள் செய்யும் விற்பனையில், மூன்றிலொருபங்கு தமிழ் நாட்டில் தான் செய்யப்படுகிறது. தமிழ் நாட்டிலுள்ள நுகர்வோர் கூட்டு றவுகள் நாட்டில் முதல் இடத்தை தொடர்ந்து தக்க வைத்துக் கொண்டு வருகின்றன.

## 29 நியாயவிலைக் கடைகள் மூலம் இன்றியமையாப் பொருட் களை விநியோகித்தல்.

கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் பொது விநியோகத் திட்டமானது 117 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு 20,907 நியாயவிலைக் கடைகள் மூலம் செயல்படுத்தப்படுகிறது. இக் கடைகள் 28 மொத்த விற்பனை பண்டகசாலைகள், 112 கூட்டு டுறவு விற்பனைச் சங்கங்கள், 4655 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள் மற்றும் 415 இதர தொடக்க கூட்டுறவு சங்கங்களால் நடத்தப்படுகின்றன. பொது விநியோகத் திட்டம் மூலம் மாதம் ஒன்றுக்கு ரூபாய் 75 கோடி அளவிற்கு அத்தியா வசியப் பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன.

இந்தியாவில் பொது விநியோகத் திட்டத்தின் கீழ் சில்லறை வியாபாரம் செய்யும் அமைப்பை பெருமளவில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயல்படுத்தும் ஒரே மாநிலமாக தமிழ்நாடு திகழ்கிறது.

## 30, பொது விநியோகத் திட்டத்தை சீரமைத்தல்

பொது விநியோகத் திட்டத்தின் கீழ் செயல்படும் சில்லறை விற்பனை நிலையங்கள் பல்வேறு துறையினரால், மிக அதிகமான ஆய்வுகளுக்கு உள்ளாக்கப்படுகின்றன, இந்த முறையானது ஊழல்களை தன்னகத்தே கொண்டிருக்கிறது.' எனவே, சோதனை அடிப்படையில் வடாற்காடு அம்பேத்கார் மாவட் டத்தில் சுமார் 20 நியாய விலைக் கடைகளுக்கு கட்டுப்பாட்டு பொருட்களை விநியோகிப்பதற்கு ஒரு கூட்டுறவுச் சார் பதிவாளர் பொறுப்பாக்கப்பட்டு, இக்கடைகளில் காணப்படும் முறைகேடுகளுக்கும் அவரே பொறுப்பாக்கப்படுகிறார், இக் கடைகளில் கூட்டுறவுத் துறையினால் பல்வேறு நிலைகளில் நடத்தப்படும் ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படவும், இதர துறையினர் மேற்கொண்டு வரும் ஆய்வுகளை விலக்கிக் கொள்ளவும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் தொடங்கப்பட்ட இந்த சோதனை முயற்சி வெற்றிகரமாக அமையுமானால், இத்திட்டத்தை இதர மாவட்டங்களுக்கும் நீட்டிப்பது குறித்து பரிசீலிக்கப்படும்,

## 31, சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை கட்டுப் படுத்துவதில் கூட்டுறவு அமைப்புகளின் தலையீடு

ஒரு சில அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்தும் வகையில் பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், வாசனைப் பொருட்கள், சோப்பு வகைகள்

போன்ற 27 பொருள்கள் தெரிவு செய்யப்பட்டு, கிருஸ்துமஸ் மற்றும் பொங்கல் போன்ற பண்டிகைக் காலங்களில் குறைந்த விலைக்கு விற்கப்பட்டன, இந்த விலைக் குறைப்பு 10 முதல் 15 விழுக்காடு அளவிற்கு இருந்ததால் வெளிச்சந்தை விலைகளை குறைக்க உதவியது, வருங்காலங்களில் இத்தகைய பணி தொடர்ந்து நடைபெறுமென கூட்டுறவு அமைப்புகள் நம்புகின்றன,

**32, சிறப்பங்காடிகள் மற்றும் சிற்றங்காடிகள்**

மாநிலத்தில் உள்ள நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மற்றும் தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் 34 பலநோக்கு சிறப்பங்காடிகளையும் 233 சிற்றங்காடி களையும் (நவீன சில்லறை விற்பனைக் கூடங்களும், பெரிய அளவிலான சில்லரை விற்பனைக் கூடங்களும்) நடத்தி வருகின்றன,

1990-91ஆம் ஆண்டில் பெரிய அளவிலான சில்லறை விற்பனைக் கூடங்கள் அமைக்கவும், மற்றும் சிறிய அளவிலான சில்லறை விற்பனை கூடங்கள் அமைக்கவும் மற்றும் நடமாடும் ஊர்தி அங்காடிகள் வாங்கவும் மத்திய அரசு, மத்திய அரசு திட்டத்தின்கீழ் ரூபாய் 15.70 இலட்சம் நிதி வழங்கி உள்ளது. 1991-92 ஆம் ஆண்டில் ஒரு பெரிய அளவிலான விற்பனை நிலையம் மற்றும் இரண்டு சிறிய அளவிலான விற்பனை நிலையங்களை அமைக்க ரூபாய் 2.55 இலட்சம் வழங்கப்பட்டது.

**33, சுயசேவைப் பிரிவு ஆரம்பித்தல்.**

தேவைப்படும் நுகர்பொருட்களின் தரத்தை கண்டறிந்தும், அவற்றின் விலைகளை ஒப்பிட்டும் சரிபார்த்த பிறகு வாங்குவதை விரும்பும் நுகர்வோர்களின் தேவையை பூர்த்தி செய்ய சுயசேவைக் கடைகள் தொடங்கப்பட்டன, இச்சுய சேவைப் பிரிவுகள், நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களின் வியாபாரத்தில் முன்னேற்றம் காண்பதற்காகவும், நுகர்வோர்களின் தேவைகளை நிறைவு செய்யவும் ஏற்படுத்தப்பட்ட மிக நவீன உத்திகளில் ஒன்றாகும், இம்முயற்சிக்கு நல்ல ஆதரவு கிடைத்துள்ளது, அதனால் நுகர்வோர் கூட்டுறவுகளின் வியாபாரம் பெருகியுள்ளது, இப்போது மாநிலத்தில் 58 சுயசேவைப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன, சென்னை கூட்டுறவுச் சங்கத்தினால் நடத்தப்பட்டு வரும் திருவல்லிக்கேணி நகர பேட்டையில் உள்ள புதிய காமதேனு சுயசேவை பிரிவு, தென்னிந்தியாவிலேயே மிகப் பெரிய அளவில் சுமார் 6,000 சதுர அடி பரப்பளவில் இயங்கும் சுயசேவைப் பிரிவாகும்,

**34, நடமாடும் ஊர்தி அங்காடிகள்.**

தொழிற்கூட பணியாளர்கள் புறநகர்ப் பகுதியில் குடிசையில் வாழ்வோர் ஆகியோருக்கு உதவும் வகையில் நடமாடும் ஊர்தி அங்காடிகள் நடத்துவதற்காக ஐந்து இலட்சம்



மக்கள் தொகைக்கு அதிகமாக வசிக்கும் நகரங்களில் ஆண்டொன்றுக்கு குறைந்த பட்சம் ரூபாய் 100 இலட்சத்திற்கு மேல் விற்பனை செய்யும் கூட்டுறவு பண்டகசாலைகள் மத்திய திட்டத்தின் கீழ் நிதிஉதவி பெற தேர்ந்தெடுக்கப்பட்டு வருகின்றன. சென்னை, கோயம்புத்தூர், திருச்சி மற்றும் மதுரை நகரங்களிலும் மலைப்பகுதியான கொடைக்கானலிலும் நடமாடும் ஊர்தி அங்காடிகள் இயங்கி வருகின்றன. மாநிலத்தில் ஐந்து நடமாடும் ஊர்தி அங்காடிகள் இயங்கி வருகின்றன,

மாநிலத்தில் எளிதில் சென்றடைய இயலாத பகுதிகளில் நடமாடும் நியாய விலைக் கடைகளை இயங்க செய்வதன் மூலம் பொது விநியோகத் திட்டத்தை வலுப்படுத்த 1991-92-ஆம் ஆண்டில் 7 நடமாடும் ஊர்திகளை வாங்க அரசு, ரூபாய் 17.50 இலட்சம் வழங்கியுள்ளது, இவ்வூர்திகள் அந்தியூர், சத்தியமங்கலம், மசினக்குடி, கோத்தகிரி. உதகமண்டலம், கொடைக்கானல் மற்றும் பச்சைமலை ஆகிய இடங்களில் பயன்படுத்துவதற்காக அளிக்கப்பட்டுள்ளன,

## 6. கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி

**35, கொள்கை பரப்புதல் மற்றும் விளம்பரம்**

கூட்டுறவுச் சங்கங்களின் செயல்பாட்டினை சீரிய நிலையில் கவனிக்கவும், பலதிறப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றத்திற்காகவும், உறுப்பினர்களுக்கும் சங்கப் பணியாளர்களுக்கும், கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி அளித்தல் மற்றும் விளம்பரம் மற்றும் கொள்கையைப் பரப்புவதற்காக 1914-ல் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் மாநில அளவிலான சங்கமாக அமைக்கப்பட்டது, அது தமிழ்நாட்டில் கூட்டுறவுக் கல்வி மற்றும் பயிற்சி விளம்பரம் மற்றும் கொள்கையைப் பரப்புதல் ஆகிய பணிகளையும் கண்காணிக்கிறது, அது ஆராய்ச்சி மற்றும் கல்விக்கும் பொறுப்பேற்றுள்ளது,

மாவட்ட அளவில் 16 மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள் மேற்கூறிய பணிகளை செயல்படுத்தி வருகின்றன,

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் எல்லாக் கூட்டுறவு நிறுவனங்கள் மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் மற்றும் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்களையும் உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது; அதனுடைய நிதி அங்கத்தினர்களாக உள்ள சங்கங்களிடமிருந்து பெறும் சந்தாக் கட்டணங்கள் வெளியீடுகள் விற்பனை மற்றும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி வசூல் ஆகியவற்றின் மூலம் கிடைக்கிறது, மாவட்டக் கூட்டுறவு ஒன்றியத்தின் செயல்பாட்டு எல்லையில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் கூட்டுறவு பயிற்சிகள் நிலையங்கள் தவிர மாவட்டக் கூட்டுறவு ஒன்றியத்தின் உறுப்பினர்களாக உள்ளன.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவு கல்வி நிதி என்ற இரண்டு நிதிகளை நிர்வகித்து வருகிறது, ஒவ்வொரு உறுப்பினர் சங்கமும் தங்களது நிகர இலாபத் தொகையிலிருந்து முறையே 3 சதவீதமும், 2 சதவீதமும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி மற்றும் கூட்டுறவு கல்வி நிதிக்கு சந்தா செலுத்த வேண்டும், வசூல் தொகையில் 10 சதவீதத்தினை தங்களது செலவிற்காக மாவட்டக் கூட்டுறவு ஒன்றியங்கள் வைத்துக் கொள்கின்றன, இந்த இரண்டு நிதிகளும் 1988ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் 90 மற்றும் 91-ன்படி அமைக்கப்பட்ட குழுவால் நிர்வகிக்கப்படுகிறது. கூட்டுறவுச் கங்கங்களின் பதிவாளர் இக்குழுக்களுக்கு தலைவராவார்.

தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் இதழ்கள் வெளியிட்டும், பொருட்காட்சிகள் நடத்தியும், சுவரொட்டிகள், படக்காட்சி கள் மற்றும் சினிமாப் படங்கள் மூலமும் கூட்டுறவுக் கொள்கை களை பரப்பி வருகின்றன. இது உறுப்பினர் கல்வி திட்டம் நடத்தி வருகிறது. தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம் ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் திங்களில் கூட்டுறவு வார விழாவினை நடத்தி தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியம், கூட்டுறவு கொள்கைகளை மக்களிடம் பரப்பி வருகின்றது.

## 36. கூட்டுறவுப் பயிற்சி

தமிழ்நாட்டில் கோயம்புத்தூர், தஞ்சாவூர், மதுரை, சேலம், காஞ்சிபுரம், வேலூர், திருநெல்வேலி, சாத்தூர் மற்றும் கடலூர் ஆகிய 9 இடங்களில் கூட்டுறவு பயிற்சி நிலையங்கள் இளநிலையாளருக்கு பயிற்சி அளித்து வருகின்றன. இப்பயிற்சி நிலையங்கள் கூட்டுறவு நிறுவனங்களில் பணி புரிபவர்களுக்கும் கூட்டுறவு நிறுவனங்களில் பணியில் சேர விரும்புவோருக்கும் தேலவயான 36 வாரங்கள் கால அளவிலான பொது அடிப் படைப் பயிற்சி அளித்து வருகின்றன. கூட்டுறவு நிறுவனங் களில் பணி புரிபவர்களுக்கு அவர்கள் வேலைக்குத் தொடர் புடைய மற்றும் தேவையான குறுகிய காலப் பயிற்சிகளும் இப்பயிற்சி நிலையத்தில் அளிக்கப்பட்டு வருகின்றன.

இவை தவிர, நேரடி நியமனம் செய்யப்பட்ட இளநிலை ஆய்வாளர்களுக்கும் மற்றும் சான்றளிக்கப்பட்ட இளநிலை ஆய்வாளர்களுக்கும் சென்னையில் உள்ள மத்திய கூட்டுறவு பயிற்சி நிலையத்தில் கூட்டுறவுப் பயிற்சி அளிக்கப்பட்டு வரு கிறது.

இடைநிலை அலுவலர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக சென்னையில் நடேசன் கூட்டுறவு பயிற்சி கல்லூரியும், மதுரை யில் ஒரு கூட்டுறவு பயிற்சி கல்லூரியும் செயல்பட்டு வருகின்றன.



## 37. மாநில மனித சக்தி மேம்பாடு மற்றும் பயிற்சி திட்டம்

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்கக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் பணியாளர் களுக்கு அளிக்கப்படும் பயிற்சி உலக வங்கித் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழக மூன்றாம் திட்டத்தின் கீழ் வரும்பயிற்சிகளில் ஒன்றாகும். தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி இத்திட்டத்தை செயல்படுத்தும் முகவராகும். தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கி சென்னையில் வேளாண்மைக் கூட்டுறவு பண்ணியாளர் பயிற்சி நிலையம் நிறுவியுள்ளது. இது 2,000 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக நிறுவப்பட்டதாகும். தஞ்சாவூரிலுள்ள சாமியப்பா கூட்டுறவு பயிற்சி நிலையம், மற்றும் கோயம்புத் தூரிலுள்ள இராமலிங்கம் கூட்டுறவு பயிற்சி நிலையமும், மொத்தம் 700 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி பணி யாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்காக உள்ளன. சென்னை மற்றும் மதுரையில் உள்ள கூட்டுறவு பயிற்சி நிலையம் 200 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு விற்பனை சங்கங்களின் பணி யாளர்களுக்கு பயிற்சி அளித்து வருகின்றன. 2,900 பணியாளர் களுக்கு பயிற்சி அளிப்பதற்காக தமிழ்நாடு மாநில தலைமை கூட்டுறவு வங்கிக்கும், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கும் தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ரூ. 222.916 இலட்சம் மானியமாக அளித்துள்ளது. ரூபாய் 222.916. இலட்சத்தில், ரூபாய் 110 இலட்சம் சென்னை, மாதவரத்தில் வேளாண்மை பணியாளர் பயிற்சி நிலையத்திற்கென ஒரு கட்டிடம் கட்ட பயன்படுத்தப்படும். வேளாண்மைப் பணியாளர் பயிற்சி நிலை யத்திற்கென மாதவரத்தில் 4.86 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப் பட்டு கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

## 38. தர்மபுரி மாவட்டத்தில் பர்கூரிலும், தஞ்சாவூர் மாவட்டத் தில் பட்டுக்கோட்டையிலும் தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைத்தல்.

தர்மபுரி மாவட்டத்தில் பர்கூரிலும் தஞ்சாவூர் மாவட்டத்தில் பட்டுக்கோட்டையிலும் தொழிற் பயிற்சி நிலையங்கள் அமைத்திட தொழில் நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி கூட்டுறவுச் சங்கம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. தலைமைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மத்தியக் கூட்டுறவு நிலையங்கள் மேற்படி தொழில் நுட்பக் கல்வி மற்றும் தொழிற் பயிற்சி கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் ஆவார்கள். இந்த இரண்டு தொழில் பயிற்சி நிலையங்களையும் மேற்படி கூட்டுறவுச் சங்கம் ஆரம் பித்து நடத்த ஆகும் மூலதனச் செலவு மற்றும் தொடரா செலவினங்களுக்கு கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதி யிலிருந்து ரூபாய் 150 இலட்சம் வழங்கிட தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்திற்கு அரசு அனுமதி அளித்துள்ளது. இந்த இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்களையும் இந்தக் கூட்டுறவுச் சங்கம் நடத்துவதற்கு ஏற்படும் தொடரும் செலவினங்களுக்கு ஒரு

குவிப்பு நிதி ஏற்படுத்த இச்சங்கத்திற்கு அரசு அனுமதி வழங்கி யுள்ளது. தலைமைக் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் மத்தியக் கூட்டுறவுச் சங்கங்கள் அதன் பொது நிதியிலிருந்து இந்தக் குவிப்பு நிதிக்கு நிதி வழங்கிட அரசு அனுமதி வழங்கியுள்ளது

1992–93 ஆம் ஆண்டில் இந்த இரண்டு தொழிற் பயிற்சி நிலையங்களையும் ஆரம்பிப்பதற்கு மேற்படி கூட்டுறவுச் சங்கம் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகிறது. இந் நிலையத்தில் அளிக்கப்படும் பயிற்சிகளைத் தேர்ந்தெடுப்பதில் உள்ள ஆண் மற்றும் பெண் ஆகிய இரு பாலருக்குத் தகுந்ததும் சுயவேலை வாய்ப்பு அளிப்பதான பயிற்சிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும்.

## 7. பல்வகைப் பணிகள்.

### 39. சிறப்பு வகைக் கூட்டுறவுச் சங்கங்கள்.

தொழிலாளர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடி திருத்துவோர், உப்பள தொழிலாளர்கள் மற்றும் மலை வாழ் மக்கள் போன்ற நலிந்த பிரிவினரின் நலன் கருதி சிறப்புக் கூட் டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. தொழில் ஒப்பந்தக் கூட்டுறவுச் சங்கங்கள், ஒப்பந்த வேலைகளைப் பெற்று தரு வதன் மூலம் அவற்றின் உறுப்பினர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கின்றன. கூட்டுறவு அமைப்புகள் மற்றும் அதன் உறுப் பினர் சங்கங்களின் அச்சுப் பணிகளை நியாயமான விலையில் 18 கூட்டுறவு அச்சகங்கள் ஏற்று நடத்துகின்றன. இதர வகைக் கூட்டுறவுச் சங்கங்கள் அவற்றின் உறுப்பினர்களுக்கு சேவை களையோ அல்லது கடன் உதவியோ அளிக்கின்றன. இச்சங்கங் களுக்கு மானியம், பங்குத் தொகை, கடன் மற்றும், துறைப் பணியாளர்களின் இலவசச் சேவை ஆகியவற்றை அரசு அளித்து வருகிறது.

### 40. மலைவாழ் மக்களின் மேம்பாடு.

தமிழ்நாட்டில் இப்போது 18 பெரும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் 65,714 உறுப்பினர்களுடன் செயல்பட்டு வருகின்றன. முதல் பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 1977ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் அமைக்கப்பட்டது. பெரும்பாலான பழங்குடி யினர் குடும்பங்கள் இச்சங்கங்களில் சேர்க்கப்பட்டுள்ளன. பழங் குடியினரின் ஏழ்மையான பொருளாதார நிலையைக் கருத்திற் கொண்டு அரசு இச்சங்கங்களுக்குத் தொடர்ந்து நிதியுதவிகளைத் தாராளமாக வழங்கி வருகிறது. இச்சங்கங்கள் பயிரிடுதல் மற் றும் உற்பத்திக் காரியங்களுக்காகச் சலுகை வட்டியில் அதாவது ஆண்டுக்கு நான்கு சதவீதத்தில் 1984-85 வரை கடன் வழங்கின. இச்சங்கங்கள் இப்போது வட்டியில்லாக் கடன்கள் வழங்கி வரு கின்றன. இச்சங்கங்களுக்கான வட்டி மான்யத்தை அரசு மான்ய



மாக வழங்குகிறது. 1990-91இல் வட்டி மான்யமாக ரூபாய் 31.82 இலட்சம் வழங்கப்பட்டது. ஒருங்கிணைந்த பழங்குடி யினர் வளர்ச்சித் திட்டப்பகுதி மற்றும் ஒருங்கிணைந்த பழங் குடியினர் வளர்ச்சித் திட்டமில்லாத பகுதிகளுக்கு 1992-93 ஆம் ஆண்டில் ரூபாய் 79 இலட்சம் நிதியுதவி வழங்கத் திட்ட மிடப்பட்டுள்ளது. 1985-86 முதல் இச்சங்கங்கள் ஆற்றிய பணி கள் விபரம் பின்வருமாறு:—

| ஆண்டு. | | வழங்கிய கடன். (ரூபாய் இலட்சத்தில்.) | வேளாண்பொருள் கொள்முதல். |
|---|---|---|---|
| (1) | | (2) | (3) |
| 1985–86 | .. | 98.48 | 11.00 |
| 1986–87 | .. | 120.26 | 14.27 |
| 1987–88 | .. | 166.52 | 13.85 |
| 1988–89 | .. | 228.29 | 16.48 |
| 1989–90 | .. | 273.17 | 29.54 |
| 1990–91 | .. | 321.00 | 30.89 |
| 1991–92 (சனவரி 1992 வரை) | .. | 248.06 | 30.81 |

| ஆண்டு. | | வேளாண் இடுபொருள் வழங்கல். | சிறுவனப் பொருள் கொள்முதல். (ரூபாய் இலட்சத்தில்.) | நுகர்பொருள் விநியோகம். |
|---|---|---|---|---|
| | | (4) | (5) | (6) |
| 1985–86 | .. | 26.41 | 22.15 | 95.90 |
| 1986–87 | .. | 29.20 | 34.15 | 104.39 |
| 1987–88 | .. | 32.15 | 54.39 | 136.20 |
| 1988–89 | .. | 35.66 | 45.05 | 167.43 |
| 1989–90 | .. | 47.26 | 45.04 | 194.93 |
| 1990–91 | .. | 52.97 | 50.16 | 239.34 |
| 1991–92 சனவரி '92 வரை | .. | 54.81 | 38.68 | 187.06 |

[1992 ஏப்ரல் 8

## 41. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் :

தேசிய வளர்ச்சிக் கழகம் நாட்டில் சில தெரிவு செய்யப்பட்ட
மாவட்டங்களில் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தை
செயல்படுத்துவதற்காக ஒரு திட்டத்தை உருவாக்கியுள்ளது.
தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களின் பணிகளை பிரிவுபடுத்தி
வியாபாரத்தை பெருக்குதல் இத்திட்டத்தின் நோக்கமாகும்.
இத்திட்டத்தில் வேளாண்மை மற்றும் அதைச் சார்ந்த இனங்க
ளான தோட்டகலை, பட்டுப்பூச்சி வளர்த்தல், பன்றி வளர்த்
தல், கோழிப்பண்ணை, மீன் வளர்ப்பு ஆகியவைகள் மட்டுமின்றி
பண்ணை சாரா இனமான கைத்தறி, கிராமத் தொழில்கள்,
கைவினைஞர்களின் தொழில்கள் அடங்கும். கூட்டுறவுச் சங்கங்
களை அடிப்படையாகக் கொள்ளாமல் வட்டார வளர்ச்சியை
கருத்தில் கொள்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்போது
ரூபாய் 862 இலட்சம் செலவில் இத்திட்டம் காமராசர் மாவட்டத்
தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது அரசு இதுவரை ரூபாய்
652.61 இலட்சத்தை இத்திட்டத்திற்காக அளித்துள்ளது.

தென்னாற்காடு மாவட்டத்திற்கென தயாரிக்கப்பட்ட திட்டம்
தேசிய வளர்ச்சிக் கழகத்தால் அனுமதிக்கப்பட்டு, அதற்கான
ஆணைகள் அரசினால் பிறப்பிக்சுப்பட்டுள்ளன ; இத்திட்டத்
திற்காக ரூபாய் 15 கோடி நிதி ஒதுக்கீடாக இருக்கும்.

தருமபுரி மாவட்டத்திற்காக ரூபாய் 15 கோடி அளவிலான
ஒரு திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. இதனை தேசிய
கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்திற்கு அனுப்பி, தேசிய கூட்டுறவு
வளர்ச்சிக் கழகத்தில் அனுமதி பெறப்பட்டவுடன் அரசாணை
வழங்கப்பட வேண்டும்.

இத்திட்டத்தினை திருவண்ணாமலை சம்புவராயர், கோயம்
புத்தூர் மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் செயல்படுத்த
அரசால் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கான திட்ட
அறிக்கை திட்ட ஆலோசகர்களால் தயாரிக்கப்பட்டு வருகின்றன.
இத்திட்டம் பிற மாவட்டங்களுக்கும் படிப்படியாக விரிவுபடுத்
தப்படும்.

## 42. கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல்

கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தல்கள் நடத்த முதற்கட்ட நட
வடிக்கைக்காக தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் நிர்வாகத்தில்
பெண்கள் மற்றும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ஆகி
யோர் போதுமான பங்கு ஏற்க ஏதுவாக 30 சதவீதம் மகளிரை
யும், 18 சதவீதம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரையும்
உறுப்பினராகச் சேர்க்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.
31—1—1992 வரை 20.07 இலட்சம் பெண் உறுப்பினர்கள்
அதாவது மொத்த உறுப்பினர்களில் 16 சதவீதமும்17.31 இலட்



1992 ஏப்ரல் 8]

சம் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி உறுப்பினர்கள் அதாவது
மொத்த உறுப்பினரில் 14 சதவீதமும் கூட்டுறவுச் சங்கங்களில்
சேர்க்கப்பட்டுள்ளனர். தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு
விரைவில் தேர்தல் நடத்த அரசு முடிவெடுத்துள்ளது.

## 43. முடிவுரை :

வேளாண்மைக் கடன் வழங்குதல், இடுபொருள் வழங்குதல்,
நுகர்வோர் பணிகள், வேளாண் விளைபொருள் விற்பனை மற்றும்
விலைகளை நிலைப்படுத்துவதற்காகக் கூட்டுறவு விற்பனை
அமைப்புகளின் தலையீட்டின் வாயிலாக மக்களின் பொருளாதார
மேம்பாட்டுக்கு கூட்டுறவு நிறுவனங்கள் பெரும்பணி ஆற்றிவரு
கின்றன. எனவே, பொதுவாக மக்களுக்கும், குறிப்பாகச் சமு
தாயத்தின் நலிந்த பிரிவினருக்கும் கூட்டுறவு நிறுவனங்
களின்பணிகளை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் அவற்றை
வலுப்படுத்துவது தேவையானதாகும்.

410-ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க

## உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு.

### I. முன்னுரை.

இன்றியமையாப் பொருட்கள் பொது மக்களுக்கு போதுமான அளவிலும் நியாயமான விலையிலும் கிடைப்பதை உறுதி செய்வதே உணவுப் பொருள் வழங்கல் குறித்த அரசின் கொள்கையாகும். ஆக்கபூர்வமான பொது விநியோக முறையைப் பராமரிப்பதாலும், மக்களால் அதிக அளவில் உபயோகிக்கப்படும் இன்றியமையாப் பொருட்களின் விலைகளை கண்காணிப்பதாலும், 1955ஆம் ஆண்டின் இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் இயற்றப்பட்டுள்ள பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளை செயல்படுத்துவதாலும், மாநிலத்தில் நுகர்வோர் இயக்கத்தை பலப்படுத்த ஊக்குவிப்பதாலும், இக்கொள்கையை வெற்றிகரமாக அரசு செயல்படுத்தி வருகிறது.

உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர், உணவுப் பொருள் வழங்கல் (குற்றப் புலனாய்வு) காவல்துறை துணைத் தலைவர் ஆகிய இரண்டு துறைத் தலைவர்களுடன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் ஆகிய இரு அரசு நிறுவனங்கள் இத்துறையின் கட்டுப்பாட்டிலுள்ளன. 1986ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையம், மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்புகள் ஆகியனவும் இத்துறையின் கீழ் செயல்பட்டு வருகின்றன.

பின்வரும் பத்திகள் அரசு மேற்கண்ட கொள்கையை செயல்படுத்துவதற்கு உதவியாக உள்ள பல்வேறு கூறுகளைப் பற்றி விவரிக்கின்றன.

### II. பொது விநியோக முறை.

அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவதில், பொதுவிநியோக முறை மிக முக்கிய பங்கு வகிக்கிறது. பொதுமக்கள் சுலபமாகச் சென்று பெறக் கூடிய இடங்களில், வாங்க இயலக் கூடிய விலைகளில், ஏற்றுக்கொள்ளத்தக்க தரத்தில் சில இன்றியமையாப் பொருட்களை கிடைக்கச் செய்வதே பொது விநியோக முறையின் குறிக்கோளாகும். தற்போது பொதுவிநியோக முறையில் மாநிலத்தின் அனைத்து வருவாய் கிராமங்களிலும் உள்ள நியாய விலைக் கடைகள் மூலம் அனைத்து குடும்பங்களுக்கும், குடும்ப அட்டைகள் மூலமாக அரிசி, கோதுமை, சர்க்கரை, சமையல் எண்ணெய் மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றை அரசு வழங்கி வருகிறது. தற்போது, மாநிலத்தில் புழக்கத்தில் உள்ள ஏறத்தாழ 125.29 லட்சம் குடும்ப அட்டை

களுக்கு 21,986 நியாய விலைக் கடைகள் மூலம் இன்றியமை யாப் பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. 1990 மற்றும் 1991 ஆம் ஆண்டுகளில் இன்றியமையாப் பொருட்களின் நுகர்வு பற்றிய விவரங்கள் பட்டியல் 1-ல் உள்ளன.

**1. அரிசி.**

தமிழ்நாட்டின் முக்கிய உணவு அரிசியாகும். ஆகவே, பொது விநியோகத்தில் வழங்கப்படும் பொருட்களில் முக்கியமானது அரிசியாகும். ஆனால் மாநிலத்தில் அரிசி உற் பத்தி, தேவையை நிறைவு செய்ய இயலாதவாறு பற்றாக் குறைவாக உள்ளது.

பொது விநியோகத்திற்குத் தேவையான அரிசி கீழ்க்காணும் முறைகளில் பெறப்படுகிறது :—

(அ) காவிரி டெல்டா பகுதிகளில், ஏகபோக கொள்முதல் முறையில் விவசாயிகளிடமிருந்து நேரிடையாகக் கொள்முதல் செய்தல் ;

(ஆ) மத்திய அரசால் மாதந்தோறும் மையத் தொகுப்பில் ருந்து ஒதுக்கீடு செய்யப்படும் ஒரு குறிப்பிட்ட அளவு அரிசி யைப் பெறுதல் ;

(இ) அரிசி ஆலையாளர்கள் மற்றும் மொத்த வணிகர் களிடமிருந்து வர்த்தக லெவி மூலம் கொள்முதல் ; மற்றும்

(ஈ) மேற்கூறிய முறைகளில் பெறப்படும் அரிசி பொது விநியோகத்திற்கு போதாவிட்டால் வெளிச்சந்தையில் வாங்குதல்.

**1.1 பொது விநியோக முறைக்கான அரிசியினை பெறும் வழிகள் :**

**(i) ஏகபோக கொள்முதல் :**

அறுவடைக் காலங்களில், தஞ்சாவூர் மற்றும் நாகப்பட்டினம்- காயிதேமில்லத் மாவட்டங்கள் முழுவதும், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரியலூர், உடையார்பாளையம், முசிறி, குளித் தலை, லால்குடி மற்றும் திருச்சிராப்பள்ளி வட்டங்களிலும், தென்னாற்காடு மாவட்டத்தில் சிதம்பரம் மற்றும் காட்டு மன்னார்கோயில் வட்டங்களிலும், புதுக்கோட்டை மாவட்டத் தில் ஆலங்குடி, ஆவுடையார்கோவில் மற்றும் அறந்தாங்கி வட்டங்களிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம் விவ சாயிகளிடமிருந்து நேரிடையாகக் கொள்முதல் செய்கிறது. ஒவ் வொரு ஆண்டும் விவசாய விளைபொருள் உற்பத்தி செலவுகள் மற்றும் விலைகள் ஆணை குழுவின் பரிந்துரைகள், மாநில அரசுகள் மற்றும் மத்திய அமைச்சகங்களின் கருத்துக்கள் மற்றும் விலைகளை நிர்ணயிப்பதற்குத் தேவையான அனைத்தையும் கருத்தில் கொண்டு, மைய அரசு நெல்லுக்கு ஆதரவு விலை நிர்ணயம் செய்கிறது. மத்திய அரசு நிர்ணயித்த கொள்முதல்



விலைகளுக்கும் கூடுதலாக, ஏகபோக கொள்முதல் பகுதிகளில் விவசாயிகளுக்கு மாநில அரசு தற்சமயம் ஒரு குவிண்டால் நெல்லுக்கு 35 ரூபாய் உற்பத்தி ஊக்கத்தொகை வழங்குகிறது. 15-9-1991 முதல் அமுலுக்கு வந்த 1991-92ஆம் ஆண்டுக்கான கொள்முதல் விலைகள் பின்வருமாறு :—

| ரகம். | | கொள்முதல் விலை. | விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை (குவிண்டாலுக்கு). | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| | | ரூ. | ரூ. | ரூ. |
| சாதாரணம் | .. | 230 | 35 | 265 |
| சன்னம் | .. | 240 | 35 | 275 |
| மிகச்சன்னம் | .. | 250 | 35 | 285 |

இது ஏகபோக கொள்முதல் பகுதிகளில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் நேரடிக் கொள்முதல் நிலையங் களில் விவசாயிகள் கொடுக்கும் நெல்லுக்கு வழங்கப்படும் விலை யாகும்.

1-7-1991 முதல் 14-9-1991 வரையிலான ஒரு சிறிய இடைவெளி தவிர, 1991ஆம் ஆண்டு முழுவதும் காவிரி டெல்டா பகுதிகளில் ஏகபோக கொள்முதல் அமுலில் இருந்தது. மற்ற பகுதிகளில் 28-1-1992 வரை 50 சதவீதம் வர்த்தக லெவி அமுலில் இருந்தது. 1-7-1991 முதல் 14-9-1991 வரை, ஏக போக கொள்முதல் இல்லாத காலங்களில் இந்த பகுதிகளிலும் 50 சதவீதம் வர்த்தக லெவி அமுல்படுத்தப்பட்டது. 1990 மற்றும் 1991ஆம் ஆண்டுகளில் சம்பா மற்றும் குறுவை பருவ காலங் களில் கொள்முதல் செய்யப்பட்ட அளவு மற்றும் 1992ஆம் ஆண்டுக்கான குறியீடு பின்வருமாறு :—

(இலட்சம் டன்களில்)

| | | 1990 | 1991 | 1992* |
|---|---|---|---|---|
| குறுவை | .. | 1.74 | 2.16 | 2.25 |
| சம்பா | .. | 12.53 | 11.58 | 13.25 |
| மொத்தம் | .. | 14.27 | 13.74 | 15.50 |

1992ஆம் ஆண்டின் சம்பா பருவம் 16-12-1991-ல் ஆரம்பித்து 30-6-1992 வரை தொடரும். 1992ஆம் ஆண்டின் குறியீடு 13.25 லட்சம் டன்களாகும். இதில் 15-3-1992 வரையில் 11.04 லட்சம் டன்கள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

* (எதிர்பார்க்கப்படும் அளவு.)

(ii) மத்தியத் தொகுப்பிலிருந்து அரிசி ஒதுக்கீடு :

ஒவ்வொரு மாதமும், பொது விநியோகத்தின் மூலம் வழங்குவதற்காக மத்திய அரசு மத்திய தொகுப்பிலிருந்து ஒரு குறிப்பிட்ட அளவு அரிசியை மாநில அரசுக்கு ஒதுக்கீடு செய்கிறது.

மத்திய அரசு, 1991 ஆம் ஆண்டு சனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களுக்கு மாதம் ஒன்றுக்கு 65,000 டன் அரிசி ஒதுக்கீடு செய்தது. 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் ஆகஸ்ட் மாதம் வரை, மாதம் ஒன்றுக்கு 75,000 டன் அரிசி ஒதுக்கீடு செய்யப் பட்டது. 1991 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நவம்பர் மாதம் வரையில், மாதம் ஒன்றுக்கு 81,000 டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 1991 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்கு மட்டும் 91,000 டன் அரிசி ஒதுக்கீடு செய்யப்பட்டது. இவ்வா றாக, 1991 ஆம் ஆண்டின் முழுமைக்கும் இம்மாநிலத்திற்கு 9.14 லட்சம டன் அரிசி மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப் பட்டது. 1990 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அரிசியின் அளவு 7.36 லட்சம் டன்களாகும். 1992 ஆம் ஆண்டு சனவரி மாதத்திற்கு 81,000 டன் அரிசியும், பிப்ரவரி மாதத்திற்கு 60,000 டன் அரிசியும், மார்ச் மாதத்திற்கு 68,000 டன் அரிசி யும் மத்திய அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மாதம் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 75,000 டன் அரிசி ஒதுக்கீடு செய்யுமாறு மத்திய அரசை இந்த அரசு கேட்டுள்ளது. மாநிலத்தில் மக்களின் விருப்பம் பெருமளவு புழுங்கலரிசியாகவே இருந்தாலும் மத்திய தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் அரிசி பெரும்பாலும் பச்சரிசியாகவே உள்ளது.

(iii) வெளிச்சந்தையில் அரிசி வாங்குதல் :

முன்பே குறிப்பிட்டுள்ளபடி, பொது விநியோக முறையின் தேவைகளை மேற்கண்ட கொள்முதல் மூலம் சரிகட்ட முடிய வில்லையெனில், மத்திய அரசின் அனுமதியை பெற்று அரசு வெளிச்சந்தையில் அரிசி வாங்குகிறது.

1991-ம் ஆண்டு இடைப்பகுதியில், அரசிடம் உள்ள அரிசி யின் இருப்பு மற்றும் நுகர்வினை ஆராய்ந்த அரசு, ஆந்திர பிரதேசத்தில் வெளிச்சந்தையில் 1 லட்சம் டன் புழுங்கலரிசி வாங்கலாம் என முடிவெடுத்தது. இந்த அரிசியினை 31—12—1991-க்குள் வாங்க மத்திய அரசின் அனுமதி பெறப் பட்டது. இதில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நிர்ணயிக்கப்பட்ட காலம் வரை 68,074 டன் அரிசி வாங்கி யுள்ளது.

(iv) வர்த்தகர் லெவி:

தமிழ்நாடு 1984-ம் ஆண்டு நெல்/அரிசி கொள்முதல் (லெவி) ஆணையின் பகுதி 3-ன்படி உரிமம் பெற்ற ஆலையாளர்கள் மற்றும் வணிகர்களிடமிருந்து அவர்களிடம் உள்ள இருப்பில் 50 சதவிகிதத்தை அரசு நிர்ணயிக்கும் கொள்முதல் விலையில் லெவியாகப் பெற அரசுக்கு அதிகாரம் உள்ளது.



கடந்த 5 ஆண்டுகளில், நான்கு முறைகளிலும் கொள்முதல் செய்யப்பட்ட அரிசியின் விவரங்கள் பின்வருமாறு :—

| ஆண்டு | ஏகபோக கொள்முதல் | லெவி | மத்தியத் தொகுப்பு ஒதுக்கீடு | வெளிச் சந்தையில் வாங்கிய அரிசி | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1987 | 6,22,627 (47.15 சதவீதம்) | 1,13,542 (8.56 சதவீதம்) | 5,51,739 (41.77 சதவீதம்) | 32,023 (2.42 சதவீதம்) | 13,19,931 |
| 1988 | 4,84,494 (33.24 சதவீதம்) | 1,20,724 (8.24 சதவீதம்) | 7,15,198 (49.10 சதவீதம்) | 1,36,277 (9.34 சதவீதம்) | 14,56,693 |
| 1989 | 6,62,183 (39.71 சதவீதம்) | 64,823 (3.83 சதவீதம்) | 5,97,763 (35.81 சதவீதம்) | 3,42,239 (20.51 சதவீதம்) | 16,67,008 |
| 1990 | 8,26,769 (47.28 சதவீதம்) | 1,15,759 (6.58 சதவீதம்) | 6,94,517 (39.72 சதவீதம்) | 1,10,655 (6.29 சதவீதம்) | 17,47,700 |
| 1991 | 8,49,113 (44.22 சதவீதம்) | 83,630 (4.35 சதவீதம்) | 9,20,000 (47.89 சதவீதம்) | 68,041 (3.54 சதவீதம்) | 19,21,084 |

மேலேயுள்ள பட்டியலிலிருந்து வர்த்தகர் லெவியாக பெறப் படும் அரிசி மிகக் குறைந்த அளவே, அதாவது சராசரியாக 6 சத வீதம்தான் என்பதைக் காணலாம். இந்த சிறிய அளவு அரிசியினைப் பெற பெருத்த அளவில் பணமும் நேரமும் செயல் திறனும் விரயமாகிறது. மேலும் பல முறைகேடுகளுக்கும் இம்முறை இடமளிக்கிறது. மேலும் மாவட்டங்களிடையே தாராளமாக அரிசி எடுத்துச் செல்வது இயலாத நிலையில் அரிசி இருப்புக் குறைவான மாவட்டங்களிலும், வறட்சியால் பாதிக்கப்பட்ட மாவட்டங்களிலும் வெளி அங்காடியில் அரிசி விலை உயர்ந்திருந்தது. தவிரவும் அரிசி வியாபாரிகள் வர்த்த கர் லெவியினை நீக்கினால் வெளி அங்காடி அரிசி விலை கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாயிலிருந்து 1.50 ரூபாய் வரை குறையுமென உறுதி அளித்தனர். இவை அனைத்தையும் கருத்தில் கொண்டு அரசு 29—1—1992 முதல் வர்த்தகர் லெவி முறையினை நிறுத்தி வைத்தது. வெளி அங்காடியில் அரிசி விலை கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய்க்கு மேலும் குறைந்துள்ளது, அரசின் மேற்கண்ட முடிவு சரியானதெனக் காட்டும். வர்த்தகர்கள் அரிசி அதிகமுள்ள மாவட்டங்களிலிருந்து தேவையான மாவட் டங்களுக்கு அரிசியினை எடுத்துச் செல்ல முடிந்ததால் தென் மாவட்டங்களில் அரிசி விலை குறைவு பெருமளவில் உள்ளது (இணைப்பில் பட்டியல் 2).

**1.2. குடும்ப அட்டைக்கு வழங்கப்படும் விநியோக அலகுகள் :**

மாதந்தோறும் குடும்ப அட்டைகளுக்கு வழங்கப்படும்
அரிசியின் அளவைப் பொறுத்து பொது விநியோகத்திற்கு
தேவைப்படும் அரிசியின் அளவு அமைகிறது. விநியோக அலகுகள்
அவ்வப்போது மாற்றியமைக்கப்படுகின்றன. தற்போது
பெரியவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா 4 கிலோ மற்றும்
சிறியவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு தலா 2 கிலோ என்ற அலகு
களில் அட்டை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு 12 கிலோவிற்கு
மிகாமல் அரிசி வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு குடும்ப
அட்டைக்கும் வழங்கத்தகுதியான 12 கிலோ அரிசியில், ஒரு
பகுதி சாதாரண ரக அரிசியாகவும், எஞ்சிய பகுதி சன்னரக
அரிசியாகவும் வழங்கப்படுகிறது. இதேபோல் ஒரு பகுதி புழுங்கல்
அரிசியாகவும் மற்றொரு பகுதி பச்சரிசியாகவும் வழங்கப்
படுகிறது. விநியோகிக்கப்படும் சாதாரண மற்றும் சன்ன
ரக அரிசியின் விகிதமும், புழுங்கல் மற்றும் பச்சரிசியின் விகித
மும் நுகர்வோரது விருப்பம் மற்றும் இருப்பில் உள்ள அரிசி
யின் ரகத்தை பொறுத்து அமையும். குடும்ப அட்டைகளுக்
கான அரிசி விநியோகம் தவிர, மாதந்தோறும் 20,000 மெட்ரிக்
டன் அரிசி புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். மதிய சத்துணவு
திட்டத்திற்கும் வழங்கப்படுகிறது.

**1.3. பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசியின் விற்பனை விலை :**

முன்பே கூறியுள்ளபடி பொதுவிநியோகத்திற்கு தேவைப்
படும் அரிசி (அ) காவிரி டெல்டா பகுதிகளில் ஏகபோக கொள்
முதல் விலையில் விவசாயிகளிடமிருந்து நேரிடையாக கொள்
முதல் செய்தல், (ஆ) மத்திய அரசால் மாதந்தோறும் மைய
தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு செய்யப்படும் ஒரு குறிப்பிட்ட
அளவு அரிசியை பெறுதல், (இ) வர்த்தகர் லெவி மற்றும்
(ஈ) வெளிச்சந்தையில் வாங்குதல் ஆகிய முறைகளால் பெறப்
படுகிறது. மேற்கண்ட நான்கு முறைகளிலும் பெறப்படும்
அரிசியின் விலை வேறுபடுகிறது. ஆனால் பொதுவிநியோக
முறையில் வழங்கப்படும்போது இந்த நான்கு முறைகளில்
பெறப்படும் அரிசிக்கும் ஒரே விற்பனை விலைதான் நிர்ணயம்
செய்யப்படுகிறது. இந்த நான்கு முறைகளில், வர்த்தகர்
லெவி தற்போது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. மிகவும் அவசி
யம் என்றால்தான் வெளிச்சந்தையில் அரிசி வாங்கப்படுகிறது.

தற்போது (15—9—1991 முதல்) நெல் கொள்முதலின்
விலை பின்வருமாறு :—

(குவிண்டால்/ரூபாயில்.)

| நெல் ரகங்கள் | | சாதாரணம் | சன்னம் | மிகச்சன்னம் |
|---|---|---|---|---|
| கொள்முதல் விலை | .. | 230 | 240 | 250 |
| ஊக்கத் தொகை | .. | 35 | 35 | 35 |
| மொத்தம் | .. | 265 | 275 | 285 |



நெல் கொள்முதல் செய்யப்பட்டபின் இது தமிழ்நாடு நுகர்
பொருள் வாணிபக் கழகம் நடத்தும் அரிசி ஆலைகள் மற்றும்
முகவர்களின் அரிசி ஆலைகளிலும் அரைக்கப்படுகிறது. இதன்
பின்னர் பொதுவிநியோக முறையில் நியாயவிலைக்கடைகள்
மூலமாக விநியோகம் செய்யப்படுவதற்காக இந்த அரிசி நுகர்
பொருள் வாணிபக் கழக கிடங்குகளுக்கு எடுத்துச் செல்லப்படு
கிறது. நெல்லை அரைப்பது, போக்குவரத்து, சேர்த்து
வைப்பது மற்றும் இதற்கான வட்டி தொகைகள் ஆகிய
செலவுகள் நுகர்பொருள் வாணிபக் கழகத்தினாலேயே ஏற்றுக்
கொள்ளப்படுகின்றன. மேற்கண்ட அனைத்தையும் கணக்கில்
கொண்டால் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஒரு
குவிண்டாலுக்கு ஆகும் அரிசியின் அடக்கவிலை பின்வருமாறு :—

| சாதாரணம் | சன்னம் | மிகச் சன்னம் |
|---|---|---|
| ரூ 460.10 | ரூ 475.63 | ரூ 491.16 |

இதன் மூலம், நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு ஆகும்
அரிசியின் இறுதி விலை, நெல் கொள்முதல் விலையைவிட சுமார்
இரு மடங்கு உயர்ந்திருப்பதை காணலாம். சென்ற பல
ஆண்டுகளாகவே இந்த நிலைதான் இருந்து வருகிறது.

மத்திய தொகுப்பிலிருந்து பெறப்படும் அரிசிக்கான விற்பனை
விலையை மத்திய அரசு அவ்வப்போது அறிவித்து வருகிறது.
தற்போதுள்ள விலைகள் 28—12—1991-லிருந்து அமுலுக்கு
வந்தன. தற்போதைய விலையும் அதற்கு முன்பிருந்த
விலையும் பின்வருமாறு :—

(குவிண்டால் ரூபாயில்.)

| | | சாதாரணம் | சன்னம் | மிகச் சன்னம். |
|---|---|---|---|---|
| 25—6—1990 முதல் | .. | 289 | 349 | 370 |
| 28—12—1991 முதல் | .. | 377 | 437 | 458 |
| உயர்வு | .. | 88 | 88 | 88 |

மத்திய தொகுப்பிலிருந்து பெறப்படும் அரிசி மாநிலத்தின்
சில இடங்களில் உள்ள இந்திய உணவு கழகத்தின் கிடங்குகள்
மூலமாக வழங்கப்படுகின்றன. தமிழ்நாடு நுகர்பொருள்
வாணிபக் கழகம் இந்திய உணவுக் கழக கிடங்குகளிலிருந்து
அரிசியை எடுத்து அதனைத் தனது கிடங்குகளுக்கு எடுத்துவந்து

பொதுவிநியோக முறையின் மூலம் வழங்குவதற்காக சேமித்து வைக்கிறது. போக்குவரத்து, சேமிப்பு மற்றும் வட்டிக்கான செலவுகளைக் கருத்தில் கொண்டால், மத்திய தொகுப்பி லிருந்து பெறும் அரிசியின் அடக்கவிலை, நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு குவிண்டால் ஒன்றுக்கு பின்வருமாறு :

| சாதாரணம் | சன்னம் | மிகச் சன்னம் |
|---|---|---|
| ரூ 431.20 | ரூ 497.20 | ரூ 520.30 |

எனவே நேரடி கொள்முதல் மற்றும மத்திய தொகுப்பிலிருந்து நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் பெறப்படும் குவிண்டால் ஒன்றுக்கான அடக்கவிலை, பொது விநியோக விலை அரிசியின் ஆகியவை பின்வருமாறு :—

(குவிண்டால் ரூபாயில்.)

| அரிசியின் அடக்க விலை (1) | சாதாரணம் (2) | சன்னம் (3) | மிகச் சன்னம் (4) |
|---|---|---|---|
| (i) நேரடிக் கொள்முதல் | 460.10 | 475.63 | 491.16 |
| (ii) மத்திய தொகுப்பு அரிசி | 431.20 | 497.20 | 520.30 |
| (iii) பொது விநியோக விலை | 200.00 | 350.00 | 350.00 |

ஆனால் பொதுவிநியோக முறையில் வழங்கப்படும் விலையோ மிக குறைவாகும். குவிண்டால் ஒன்றுக்கு சில்லறை வணிகர்களின் விளிம்பாக 10 ரூபாயை அரசே ஏற்றுக்கொண்டபின் பொதுவிநியோக விற்பனை மூலமாக அரசுக்கு கிடைக்கும் தொகை குவிண்டால் ஒன்றுக்கு பின்வருமாறு :—

(குவிண்டால் ரூபாயில்.)

| | சாதாரணம் | சன்னம் | மிகச் சன்னம் |
|---|---|---|---|
| பொது விநியோகம் மூலம் கிடைக்கும் தொகை. | 190.00 | 340.00 | 340.00 |



**1.4. அரிசி விநியோகத்திற்கான மானியம் :**

மேற்கண்ட விவரங்களின்படி அரிசி விநியோகத்தில் கணிசமான அளவு மானியம் உள்ளதை அறியலாம். இந்த மானியத்தின் அளவு, அரிசியின் ரகம் மற்றும் அந்த அரிசி பெறப்படும் முறைகள் ஆகியவற்றிற்கு தகுந்தவாறு மாறுபடுகிறது. இந்த மானியத்தின் அளவு நேரடிகொள்முதல் மற்றும் மத்திய தொகுப்பிலிருந்து பெறப்படும் அரிசியின் அளவு மற்றும் சாதாரணம், சன்னம் மற்றும் மிகச் சன்னரக அரிசியின் அளவு ஆகியவற்றை பொறுத்துள்ளது. மேலும் இது பொது விநியோக முறையில் அரிசியின் நுகர்வு அளவினையும் பொறுத்துள்ளது.

1991ஆம் ஆண்டு பொது விநியோக முறையில் அரிசியின் நுகர்வு 17.31 லட்சம் டன்களாகும். ஆனால் 1990ஆம் ஆண்டு செலவான அரிசி 12.33 லட்சம் டன்கள்தான். பொது விநியோகத்தில் அரிசியின் நுகர்வு குடும்ப அட்டைகளுக்கு கொடுக்கப்படும் அளவு, மொத்த குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை மற்றும் பொதுவிநியோகத்தில் வழங்கப்படும் அரிசிக்கும் வெளி அங்காடியில் உள்ள அரிசிக்கும் உள்ள விலை வித்தியாசம் ஆகியவற்றை பொறுத்ததாகும். 1991ஆம் ஆண்டு வெளி அங்காடி அரிசியின் விலை உயர்ந்திருந்ததும், பொது விநியோகத்தில் வழங்கப்பட்ட விலை அத்துடன் ஒப்பிடும்போது மிகக் குறைந்திருந்ததும், அந்த ஆண்டு அரிசியின் நுகர்வு அதிகமானதற்கு காரணமாகும். இந்த இரண்டு விலைகளின் வித்தியாசம் குறையும்போது அரிசியின் நுகர்வும் குறைகிறது. உதாரணமாக 1978-79, 1979-80 மற்றும் 1980-81ஆம் ஆண்டுகளில் அரிசி நுகர்வு ஒரு லட்சம் டன்கள்தான் இருந்து வந்தது. இதற்கிணங்க இந்த அரிசி விற்பனையில் ஏற்படும் இழப்பினை ஈடு செய்ய அரசு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்திற்கு வழங்கும் மானியத்தொகையும் ஒவ்வொரு ஆண்டும் அதிகமாகிக் கொண்டே வருகிறது. 1980-81ஆம் ஆண்டுக்கு அளிக்கப்பட்ட மானியத்தொகை 1.81 கோடி ரூபாய்கள்தான். ஆனால் 1990-91ஆம் ஆண்டு இது 219.31 கோடியை எட்டியது. 1991-92ஆம் ஆண்டுக்கு இந்த மானியத்தின் அளவு 290.48 கோடி ரூபாய்களாகும். உணவு மானியத்திற்காக 1992-ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் 503 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் 343 கோடி ரூபாய் 1992-93ஆம் ஆண்டுக்கும், எஞ்சியுள்ள 160 கோடி ரூபாய் நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு அளிக்கவேண்டிய பாக்கி தொகையும் ஆகும் (இணைப்பில் பட்டியல் 3).

**1.5. உணவு கடன் :**

சென்னையிலுள்ள பாரத ஸ்டேட் வங்கி மூலமாக நெல் மற்றும் அரிசி கொள்முதல் மற்றும் பொது விநியோக முறை மூலம் விநியோகம் ஆகியவற்றிற்காக மாநில அரசு கணக்குகள்

வைத்துக் கொள்ள இந்திய ரிசர்வ் வங்கி அனுமதி வழங்கிய
இதற்குத் தேவையான உடன்படிக்கைகளை பாரத
வங்கியுடன் இந்த அரசு செய்து கொண்டுள்ளது.

மேற்கண்ட உணவு கடன் தமிழ்நாடு அரசின் மு
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால் செய
படுத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு நுகர்பொருள் வ
கழகம் கீழ்க்கண்ட மூன்று கணக்குகளை செயல்முறைப்
கிறது:—

**கணக்கு—1** .. தமிழ்நாட்டில் அரிசிக்கான விலை—இந்திய உணவு கத்திடமிருந்து அரிசி வா மற்றும் நெல் மற்றும் லெவி.

**கணக்கு—2** .. தமிழ்நாட்டில் ஏகபோக முதல் மற்றும் ஊக்கத்

**கணக்கு—3** .. தமிழ்நாட்டிற்கு வெளியே அங்காடியில் அரிசி வாங்கு

உணவு கண்க்கிற்கான வட்டி விகிதம் 20.75
ஆகும். இந்திய ரிசர்வ் வங்கி தமிழ்நாடு அரசு த
நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு மானியம் வழங்
தீவிரமாக கண்காணிக்கிறது. மேலும் இந்த வங்கி
கடன் வசதிகள் வேறு எந்த வகையிலும் செலவிடப்பட
அது கண்காணித்து வருகிறது. தமிழ்நாடு
நுகர் பொருள் வாணிபக் கழகத்திற்கு உரிய
மானியம் வழங்காமல் அதன் மானியத் தொகை அ
சேர்ந்தால், அதனை ஒரு ஒழுங்கீனமாகக் கருதி
ரிசர்வ் வங்கி தான் வழங்க வேண்டிய கடனை வழ
நிறுத்தக்கூடும்.

**1.6. பொது விநியோக முறையில் வழங்கப்படும் மானிய விலை அரிசியின் பொருளியல் :**

பொது விநியோக முறையில் மானிய விலையில் வழங்
அரிசியின் பொருளியலை ஆராயும்போது சில முக்கிய
களை கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது.
அரசின் நெல் கொள்முதல் விலை, மத்திய தொகுப்ப
வழங்கப்படும் அரிசியின் விலை, பொது விநியோகத்தி
விலை, வருடாந்திர நுகர்வு மற்றும் கடந்த 15 ஆண்
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்கு
ஆகிய விவரங்களை இணைப்பில் பட்டியல் 3-ல்
லாம். இதிலிருந்து 1980-81ஆம் ஆண்டிலிருந்து
ஆம் ஆண்டுவரை நெல்லின் கொள்முதல் விலை,



அரசின் விற்பனை விலை மற்றும் பொது விநியோகத்தில் அரிசி விலை ஆகியவை கீழ்க்கண்டவாறு மாறியுள்ளதை அறியலாம் :

| வருடம். | நெல் கொள்முதல் விலை (குவிண்டாலுக்கு) | | | மத்திய அரசின் விற்பனை விலை (குவிண்டாலுக்கு) | | | பொதுவிநியோக முறையின் விலை (கிலோவுக்கு) | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | சாதாரணம் | சன்னம் | மிகச் சன்னம் | சாதாரணம் | சன்னம் | மிகச் சன்னம் | சாதாரணம் | சன்னம் | மிகச் சன்னம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) | (10) |
| | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. | ரூ. |
| 1980-81 | 95 | 99 | 103 | 165 | 177 | 192 | 1.75 | 2.00 | 2.15 |
| 1991-92 | 230 | 240 | 250 | 377 | 437 | 458 | 2.00 | 3.50 | 3.50 |
| உயர்வு | 135 | 141 | 147 | 212 | 260 | 266 | 0.25 | 1.50 | 1.35 |
| சதவீதம் | 142.1 | 142.4 | 142.7 | 128.5 | 146.5 | 138.5 | 14.2 | 75 | 62.8 |

மேற்கண்ட பட்டியலிலிருந்து பல ஆண்டுகளாக நெல் கொள்முதல் விலை மற்றும் மத்திய தொகுப்பு அரிசியின் விலை ஏறிய காலங்களிலும், அதற்கு தகுந்தவாறு பொது விநியோக முறை அரிசியின் விலை உயர்த்தப்படவில்லை என்பதைக் காணலாம். மேலும் இப்பட்டியிலிருந்து கடந்த மூன்று ஆண்டுகளில், முன்பிருந்த ஆண்டுகளோடு ஒப்பிடும்போது நெல். கொள்முதல் விலையும், மத்திய தொகுப்பு அரிசியின் விலையும் பெருமளவில் உயர்ந் துள்ளதைக் காணலாம். உதாரணமாக 1979 லிருந்து 1988 வரை சாதாரண நெல்லின் விலை 65 ரூபாய்தான் உயர்த்தப்பட்டுள்ளது. ஆனால் கடந்த மூன்று ஆண்டுகளில் இது 70 ரூபாய்க்கு உயர்த் தப்பட்டுள்ளது. மேலும் இப்பட்டியலிலிருந்து நெல்லின் கொள் முதல் விலையும் மத்திய தொகுப்பு அரிசியின் விலையும் குறைந்த அளவுதான் உயர்த்தப்பட்டபோது, நான்கு ஐந்து ஆண்டுகளாக, பொது விநியோக விலை உயர்த்தப்படவில்லை என்பதையும், இந்த விலைகள் கடந்த மூன்று ஆண்டுகளில் கணிசமாக உயர்த் தப்பட்டபோதுதான் பொது விநியோகத்தில் அரிசி விலையை ஆண்டுக்காண்டு உயர்த்தவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது என்பதையும் அறியலாம்.

அனேகமாக ஒவ்வொரு ஆண்டும் நெல்லின் விலை உயர்த்தப் படுகிறது. நெல்லின் கொள்முதல் விலையைவிட அரிசியின் இறுதி விற்பனை விலை இரண்டு மடங்காக உள்ளது என்பது முன்பே சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனவே நெல்லின் அடக்க விலை குவிண்டாலுக்கு 10 ரூபாய் உயர்த்தப்பட்டால், அரிசியின் விற்பனை விலையில் கிலோ ஒன்றுக்கு 20 பைசா கூடுகிறது. இந்த உயர்வினை குடும்ப அட்டைதாரர் ஏற்கா விட்டால், இதற்கு மானியம் வழங்கவேண்டும். ஒவ்வொரு லட்சம் டன் அரிசிக்கு அரசு இரண்டு கோடி ரூபாய் மானியம் வழங்கவேண்டியிருக்கும். தற்போதைய நுகர்வான 17.5 லட்சம் டன் அரிசிக்கு கொள்முதல் விலை 10 ரூபாய் கூடினால் அரசு 35 கோடி ரூபாய் மானியம் வழங்கவேண்டிவரும். எனவே ஒவ்வொரு முறையும் விவசாயிகளுக்கு நெல் கொள்முதல் விலையை உயர்த்தும்போது குடும்ப அட்டைதாரரும் மாநிலமும் செலவிட வேண்டிய தொகையை கணக்கில் கொள்வது அவசியம்.

மத்திய தொகுப்பிலிருந்து வழங்கப்படும் அரிசியின் விலையை 28—12—1991-லிருந்து கிலோ ஒன்றுக்கு 86 பைசாக்கள் மத்திய அரசு உயர்த்தியபின்னும் கூட மாநிலத்தில் பொதுவிநியோக முறையில் 29—1—1992 முதல் விநியோகிக்கப்படும் அரிசியின் விலை மற்ற மாநிலங்களுடன் ஒப்பிடும்போது மிகக்குறை வானதே என்பதும் இங்கு சுட்டிக்காட்டப்படவேண்டியது அவசியமாகும்.



(கிலோ ரூபாயில்)

| | முன்பு | | | பின்பு | | |
|---|---|---|---|---|---|---|
| | சாதாரணம் | சன்னம் | மிகச்சன்னம் | சாதாரணம் | சன்னம் | மிகச் சன்னம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| மத்திய தொகுப்பு அரிசி விலை .. | 2.89 | 3.49 | 3.70 | 3.77 | 4.37 | 4.58 |
| ஆந்திரப்பிரதேசம் .. | 1.90 | .. | .. | 3.50 | .. | .. |
| கர்நாடகா .. | 2.50 | .. | 4.10 | 3.50 | .. | 5.10 |
| கேரளம் .. | 3.15 | 3.76 | 3.97 | 3.15 | 3.76 | 3.97 |
| மேற்குவங்காளம் .. | 3.25 | 4.02 | 4.25 | 4.61 | 4.99 | 5.20 |
| மத்தியபிரதேசம் .. | 3.25 | 4.00 | 4.20 | 4.30 | 4.95 | 5.15 |
| ஒரிஸ்ஸா .. | 3.40 | 4.00 | 4.25 | 4.32 | 4.98 | 5.20 |
| பீகார் .. | .. | .. | .. | 4.13 | 4.77 | 4.99 |
| தமிழ்நாடு .. | 2.00 | 2.50 | 2.50 | 2.00 | 3.50 | 3.50 |

2. **கோதுமை :**

கோதுமை, தமிழக மக்களின் துணை
பொருளாக உள்ளது. கோதுமை இம்மாநிலத்தில் விளைவதில்லை. நுகர்வு
பொதுவிநியோக திட்டத்திற்கு தேவைப்படும்
மையின் முழு அளவும் மைய அரசால் ஒதுக்கீடு செய்யப்படுகிறது. கோது
மத்திய அரசு இம்மாநிலத்திற்கு மாதந்தோறும் பொது விநி
யோக திட்டத்தின் கீழ் வழங்குவதற்காக 30,000 மெட்ரிக் டன்
(1991 டிசம்பர் மாதத்தில் மட்டும் ஒதுக்கீடு 27,000 டன்னாக
இருந்தது) கோதுமை வழங்கிய போதிலும், சராசரியாக ஒவ்
வொரு மாதமும் தேவைப்படக்கூடிய அளவு சுமார் 20,000
டன்களாகும். பொது விநியோக முறையின மூலம் வழங்கப்பட
வேண்டிய கோதுமையின் மத்திய அரசின் விற்பனை விலை
28—12—1991-ல் குவிண்டால் ஒன்றுக்கு 234 ரூபாயிலிருந்து
280 ரூபாயாக உயர்த்தப்பட்டது. மேலும், ஒருங்கிணைந்த
பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்ட பகுதிகளில் பொதுவிநி
யோக முறையின் மூலம் வழங்கப்படவேண்டிய கோதுமையின்
விற்பனை விலையும் 28—12—1991லிருந்து குவிண்டால் ஒன்றுக்கு
184 ரூபாயிலிருந்து குவிண்டால் ஒன்றுக்கு 230 ரூபாயாக உயர்த்
தப்பட்டுள்ளது. எனினும் இந்த அரசு மாநிலத்தில் கோதுமை
விலையினை உயர்த்தத் தேவையில்லை யென முடிவெடுத்துள்ளது.
மாநிலத்தில் பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்ட பகுதிகளில்
பொது விநியோக முறையின் மூலம் வழங்கப்படும் கோதுமையின்
விலை கிலோ ஒன்றுக்கு 2.20 ரூபாய் என்ற விலையிலும் மற்ற
பகுதிகளில் கிலோ ஒன்றுக்கு 2.60 ரூபாய் என்ற விலையிலுமே
நிலவி வருகின்றன.

மாநில அரசு கோதுமை பயன்படுத்துவதை பரவலாககுவதறகு
இயன்ற அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு
வருகின்றது. இது இம்மாநில மக்கள் முக்கிய உணவு பொருளாக
அரிசியையே சார்ந்திருப்பதை குறைக்க உதவும்.

3. **சர்க்கரை :**

மத்திய அரசு இம்மாநிலத்திற்கு நபர் ஒருவருக்கு 425 கிராம்
என்ற வீதத்தில் 1986-ம் ஆண்டில் இருந்த மக்கள்தொகை
530 லட்சம் என்ற கணக்கில் 1—2—1987-முதல் மாதந்தோறும்
22,500 மெட்ரிக் டன்கள் லெவி சர்க்கரை ஒதுக்கீடு
செய்து வருகிறது. ஆனால் மக்கட்தொகை கணக்கெடுப்புத்
துறை இயக்குநரின் கணக்குப்படி, 1—3—1991-ல் இம்மாநிலத்
தின் மக்கட் தொகை 557 லட்சமாகும். எனவே, மாநிலத்தின்
தேவைக்கும் விநியோகத்திற்கும் இடையே பற்றாக்குறை
உள்ளது. ஆகவே, மைய அரசின் ஒதுக்கீடு போதுமானதாக
இல்லை. இந்த நிலையில் மாநிலத்தின் அனைத்து குடும்ப
அட்டைதாரர்களுக்கும் சர்க்கரையை சீராக வழங்க
என்பதற்காக, இவ்வரசு நபருக்கு மாதம் ஒன்றுக்கு 500 கிராம்
சர்க்கரை என்ற வீதத்தில் உச்ச அளவாக, ஒரு குடும்ப
அட்டைக்கு மாதம் ஒன்றுக்கு இரண்டு கிலோ என்று நிர்ண
யித்து, 1—10—1989 முதல் நடைமுறை படுத்தி வருகிறது.



அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் நபருக்கு 500 கிராம் என்ற அளவில் வழங்க, குறைந்தது 31,000 மெட்ரிக் டன்கள் சர்க்கரை தேவைப்படுகிறது. தற்போதைய ஒதுக்கீட்டில் பற்றாக்குறை ஒவ்வொரு மாதமும் சுமார் 8,500 மெட்ரிக் டன்களாகும். எனவே இவ்வரசு, மைய அரசை மாதம் ஒன்றுக்கு வழங்கும் லெவி சர்க்கரையை 22,500 மெட்ரிக் டன்களிலிருந்து 31,000 மெட்ரிக் டன்களுக்கு உயர்த்த வேண்டும் என்று விடாமல் கேட்டு வருகிறது. எனினும், மைய அரசு வழக்கமான மாத ஒதுக்கீட்டில் 5 சதவீதம் மட்டுமே, 1991-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை தற்காலிகமாக உயர்த்தி அனுமதித்துள்ளது (22,500 + 1,125 = 23,625 மெட்ரிக் டன்கள்). 1991ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் பண்டிகைக்காக குடும்ப அட்டைதாரர்க்கு ஒரு கிலோ சர்க்கரை அதிகம் வழங்கப்பட்டது.

மத்திய அரசு லெவி சர்க்கரையின் விற்பனை விலையை 24—7—1991-லிருந்து கிலோவிற்கு 5.25 ரூபாயாக இருந்ததை 6.10 ரூபாயாக உயர்த்தியது. மீண்டும் 21—1—1992-லிருந்து கிலோ ஒன்றுக்கு 6.10 ரூபாயாக இருந்ததை 6.90 ரூபாயாக உயர்த்தியது. இதற்கேற்ப பொது விநியோகத்திலும் சர்க்கரையின் விலை 21—1—1992-லிருந்து 6.90 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது. வெளி அங்காடி சர்க்கரையின் விலை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதோடு சர்க்கரை மாநிலம் முழுவதும் சுலபமாக கிடைக்கிறது.

4. **பாமோலின் :**

பொது விநியோக முறையின் மூலம் பாமோலின் வழங்கப்பட ஆரம்பித்ததிலிருந்து இதன் மலிவு விலை காரணமாக மக்களிடையே இதன் தேவை பெருகியுள்ளது. பொது விநியோகத்தின் கீழ் பாமோலின் வழங்கப்படுவதால் வெளிச் சந்தையில் சமையல் எண்ணெயின் விலையை ஓரளவிற்கு கட்டுப்படுத்த முடிகிறது. எனினும் பாமோலின் விநியோகம் மத்திய அரசின் ஒதுக்கீட்டை சார்ந்தே உள்ளது.

ஒரு குடும்ப அட்டைதாரருக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு கிலோ பாமோலின் வழங்கினால்கூட இம்மாநிலத்திற்கு மாதம ஒன்றுக்கு 13,000 டன் பாமோலின் தேவைப்படுகிறது. மாநிலத்

தில் உள்ள வெவ்வேறு பகுதிகளுக்கு விநியோகிக்கத் தேவைப்படும் பாமோலின் அளவு கீழ்க்கண்டவாறு :

| பகுதிகள். (1) | தேவை (மெட்ரிக் டன்கள்) (2) |
|---|---|
| சென்னை நகரம் அதன் புறநகர்ப் பகுதிகளில் குடும்ப அட்டை ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் | 1,260 |
| சென்னை நகரம் அதன் புறநகர்ப்பகுதி மற்றும் மாவட்ட தலைமையிடங்களில் குடும்ப் அட்டை ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் | 2,450 |
| சென்னை நகரம் அதன் புறநகர்ப் பகுதி மாவட்ட தலைமை யிடங்கள் மற்றும் நகராட்சிகளில் குடும்ப அட்டை ஒன்றுக்கு ஒரு கிலோ வீதம் | 3,450 |
| சென்னை நகரம் மற்றும் அதன் புறநகர்ப் பகுதி, மற்றும் அனைத்து நகரப் பகுதிகளில் குடும்ப அட்டை ஒன்றுக்கு ஒரு கிலோ வீதமும் ஊரகப் பகுதிகளில் குடும்ப அட்டை ஒன்றுக்கு ½ கிலோ வீதம். | 9,200 |
| மாநிலத்தில் உள்ள அனைத்து குடும்ப அட்டை தாரர்களுக்கும் ஒரு கிலோ வீதம் | 13,000 |

1990-91 எண்ணெய் ஆண்டில் (நவம்பர்—அக்டோபர்) இந்தியா முழுவதிலும் சமையல் எண்ணெயின் விநியோகிக்கப்பட்ட எண்ணெயின் தேவைக்கும் இருந்த பற்றாக்குறை ஆறு லட்சம் டன்கள் என அளவிற்கும் இடையே பட்டுள்ளது. இந்த தட்டுப்பாட்டினை சமையல் கணக்கிடப் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்வதின் எண்ணெயை கட்டலாம் எனில் நாட்டின் அந்நிய செலாவணி மூலம் ஈடு காரணமாக இயலவில்லை. 1989-90-ஆம் நெருக்கடி லட்சம் டன் இறக்குமதி செய்யப்பட்டது. ஆண்டில் 6.1 ஆண்டு 1.1 லட்சம் டன் சமையல் எண்ணெய்தான் ஆனால் சென்ற செய்ய முடிந்தது. பொது விநியோக இறக்குமதி பாமோலின் வழங்கப்படாதது பொது முறையின் மூலம் குறையாக இருந்ததோடு வெளி மக்களுக்கு ஒரு பெரும் ணெயின் விலை வெகுவாக அங்காடியில் சமையல் எண் அனைத்தையும் கருத்தில் உயர ஆரம்பித்தது. இவை பாமோலின் வழங்குவதற்காக கொண்டு பொது விநியோகத்தில் இறக்குமதி செய்ய தேவையான மாநில அரசு நேரடியாக அதனை முதலமைச்சர் அவர்களே நடவடிக்கைகளை மாண்புமிகு முயற்சியின் காரணமாக மேற்கொண்டார். அவரது பெரு படும் எண்ணெயின் விலையை மத்திய அரசின் இறக்குமதி செய்யப் திட்டத்தின் கீழ் 18,000 ரூபாய் நாணயத்தில் அளிக்கும் இறக்குமதி செய்ய மெட்ரிக் டன்கள் பாமோலினை மத்திய அரசின் முடிந்தது. அனுமதியும் இத்திட்டத்திற்கு பெறப்பட்டது.



இந்த முயற்சிகளின் காரணமாக மாநில அரசால் குடும்ப அட்டைதாரர்களுக்கு, உதிரி எண்ணெய் கிலோ ஒன்றுக்கு 25 ரூபாய் என்று மத்திய அரசு விலை நிர்ணயித்திருந்தாலும் கூட, கிலோ ஒன்றுக்கு 22.50 ரூபாய்க்கு பாமோலின் வழங்க முடிந்தது. நீலகிரி மாவட்டம் மற்றும் கொடைக்கானல் வட்டங்களில் அப்பகுதிகளின் சீதோஷண நிலையை கருத்தில் கொண்டு பாமோலின் பைகளில் கிலோ ஒன்றுக்கு 24 ரூபாய் என்ற விலையில் விநியோகிக்கப்பட்டது.

**5. மண்ணெண்ணெய் :**

மண்ணெண்ணெய் பொது விநியோக முறையின் மூலமாக மட்டுமே மக்களுக்கு வழங்கப்படும் ஒரு இன்றியமையாப் பொருளாகும். மாநிலங்களுக்கு மொத்தமாக மண்ணெண்ணெய் வழங்கும் மத்திய அரசு, கீழ்க்கண்டவாறு இம்மாநிலத்திற்கு மண்ணெண்ணெய் ஒதுக்கீடு செய்தது.

1. குளிர்காலம்—நவம்பர் 1990-லிருந்து பிப்ரவரி 1991 வரை மாதம் ஒன்றுக்கு 75,929 கிலோ லிட்டர்.

2. கோடைக்காலம்—மார்ச் 1991-லிருந்து ஜுன் 1991 வரை மாதம் ஒன்றுக்கு 65,571 கிலோ லிட்டர்.

3. மழைக்காலம்—ஜுலை 1991-லிருந்து அக்டோபர் 1991 வரை மாதம் ஒன்றுக்கு 67,72.9 கிலோ லிட்டர்.

இம்மாநிலத்திற்கான சீரான ஒதுக்கீட்டளவை நிர்ணயிப்பதற்காக மத்திய அரசு, 1990–91ஆம் ஆண்டில் மண்ணெண்ணெய் சராசரியாக வழங்கும் முறையைப் பின்பற்றியுள்ளது. இந்த சீரான ஒதுக்கீட்டை 1992 ஏப்ரலிலிருந்து பின்பற்றலாமெனக் கேட்டிருந்தபோதிலும், 1991 நவம்பரிலிருந்து இந்த ஏற்பாடு பின்பற்றப்பட்டுள்ளது. 1991ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் 1992ஆம் ஆண்டு சனவரி மாதம் வரை மத்திய அரசு மாதம் ஒன்றுக்கு 54,612 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயை ஒதுக்கீடு செய்தது. எனினும் மத்திய அரசு 1992 சனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களுக்கு 625 கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் கூடுதலாக ஒதுக்கி, மாதம் ஒன்றுக்கு 55,237 கிலோ லிட்டர் ஒதுக்கீடு செய்துள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது மொத்தம் 530 மொத்த மண்ணெண்ணெய் வணிகர்கள் உள்ளனர். ஒவ்வொரு மாதமும் மத்திய அரசு, இந்தியன் ஆயில் கார்பொரேஷன், இந்துஸ்தான் பெட்ரோலியம், இந்தோ பர்மா பெட்ரோலியம் மற்றும் பாரத் பெட்ரோலியம் ஆகிய நான்கு எண்ணெய் கம்பெனிகளின் மூலமாக மண்ணெண்ணெயை மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்கிறது. இந்த மண்ணெண்ணெயை சென்னை உணவு பொருள்

வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையர்
சென்னை நகரத்திற்கும், மாவட்டங்களுக்கும் ஒதுக்கீடு
செய்கிறார். மாவட்டங்களில், மாவட்ட வழங்கல் அதிகாரி
வட்ட வழங்கல் அதிகாரிகளுக்கு மண்ணெண்ணெயை ஒதுக்
கீடு செய்கிறார். வட்ட வழங்கல் அதிகாரிகள் மொத்த வணி
கர்கள் வழியாக நியாயவிலைக் கடைகள் மற்றும் சில்லறை
பதிவு சான்றிதழ் பெற்றவர்கள், கைவண்டிக்காரர்கள்,
தொழிற்சாலைகள் மற்றும் மீனவர்கள் போன்ற ஏனையோருக்கு
ஒதுக்கீடு செய்கிறார். சென்னை மற்றும் அதன் புறநகர்
பகுதிகள் மற்றும் மாவட்ட் தலைநகரங்கள் ஆகியவற்றில்
மாதம் ஒன்றுக்கு குடும்ப அட்டை ஒன்றுக்கு 10 லிட்டர் வீதமும்,
மற்ற நகராட்சி பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்
றுக்கு 6 லிட்டர் வீதமும், பேரூராட்சிகள் மற்றும் நகரிய
பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்றுக்கு 5 லிட்டர் வீத
மும், கிராமப் பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்றுக்கு
3 லிட்டர் வீதமும் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படு
கிறது. நீலகிரி மாவட்டத்தில், மாவட்ட தலைமையகம் மற்
றும் நகராட்சி பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்
றுக்கு 15 லிட்டர் வீதமும், நகரியம், பேரூராட்சிப் பகுதிகளில்
மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்றுக்கு 10 லிட்டர் வீதமும்
கிராமப் பகுதிகளில் மாதம் ஒன்றுக்கு அட்டை ஒன்றுக்கு 5
லிட்டர் வீதமும் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுகிறது.

மத்திய அரசு மண்ணெண்ணெயின் விலையை குறைத்த
தால் 1–8–1991 முதல் லிட்டர் ஒன்றுக்கு 2.95 ரூபாயாக இருந்த
மண்ணெண்ணெயின் விலை சென்னை நகரம் மற்றும் அதன்
புறநகர்ப் பகுதிகளில் லிட்டர் ஒன்றுக்கு 2.70 ரூபாயாக குறைக்
கப்பட்டது. ஆனால் மத்திய அரசு மண்ணெண்ணெயின் விலை
யை மீண்டும் உயர்த்தியதால், 3–1–1992 முதல் லிட்டர் ஒன்
றுக்கு 2.70 ரூபாயாக இருந்த மண்ணெண்ணெயின் விலை
சென்னை நகரம் மற்றும் அதன் புறநகர்ப்பகுதிகளில் லிட்டர்
ஒன்றுக்கு 2.80 ரூபாயாக உயர்த்தப்பட்டது.

தமிழ்நாட்டில் ஏறத்தாழ 2,840 கை வண்டிக்காரர்கள் உள்ள
னர். சென்னை மாநகரில் நாள் ஒன்றுக்கு 100 லிட்டர் வீதம்
மாதத்தில் 25 நாட்களுக்கு பொது விநியோக முறை விலையில்
விநியோகிப்பதற்காக மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது.
மாவட்டங்களில் இவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 50 லிட்டர் வீதம்
மாதத்தில் 25 நாட்களுக்கு பொது விநியோக முறை விலையில்
விநியோகிப்பதற்காக மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. இந்த
கைவண்டிக்கர்ரர்கள் குடும்ப அட்டைதாரர்களின் அதிகப்படி
யான தேவைகளை நிறைவு செய்கிறார்கள்.

நியாய விலைக் கடைகளை தவிர சுமார் 2,900 தனியார்
சில்லறை வணிகர்கள் மண்ணெண்ணெய் விநியோகத்தில் ஈடு
பட்டுள்ளனர். சில்லறை விற்பனையாளர் பதிவு சான்றிதழ்



பெற்று இவர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட பகுதியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் விநியோகம் செய்து வருகிறார்கள். ஒவ்வொரு சில்லறை வணிகர்களுக்கும் 500-க்கு மேற்படாமல் குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ளன. தொழிற் சாலைகளுக்கும், மீனவர்கள் போன்ற பிறருக்கும் மண்ணெண்ணெய் வழங்கப்படுகிறது. சிறு வணிகர்கள் மற்றும் தேநீர் கடைகள் வைத்திருப்பவர்கள் தங்களது மண்ணெண்ணெய் தேவைக்கு கைவண்டிக்காரர்களையே நம்பியிருக்க வேண்டியிருக்கிறது. இந்த சிறு வணிகர்களின் சிரமத்தைப் போக்கும் வகையில் இந்த அரசு இவர்களுக்கு மாதத்திற்கு 30 லிட்டருக்கு மேற்படாமல் தொழிற்சாலைக்கு வழங்கப்படும் விலையில் மண்ணெண்ணெய் வழங்கலாம் என ஆணையிட்டுள்ளது. இது சோதனை முறையில் தற்போது சென்னை மற்றும் மதுரை நகரங்களில் அமுல் படுத்தப்படும்.

இம்மாநிலத்திற்கு ஒதுக்கீடு செய்யப்படும் மண்ணெண்ணெய் முழுவதுமாக எடுக்கப்பட்டு விநியோகம் செய்யப்படவேண்டும் என்பதில் இவ்வரசு உறுதிகொண்டுள்ளது. இதனை கருத்தில் கொண்டு கணிப்பொறி மேலாண்மை தகவல் முறை அரசால் உருவாக்கப்பட்டு இவ்வாண்டு சனவரி மாதம் முதல் நடைமுறையிலுள்ளது.

## 6. நியாயவிலைக் கடைகள் :

மக்கள் சுலபமாக சென்று வாங்கக்கூடிய வகையில் நியாய விலைக் கடைகளை அமைத்தல் என்பது பொதுவிநியோக முறையின் நான்கு முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். குறிப்பிட்ட வகை இன்றியமையா பொருட்கள் சுலபமாய் கிடைத்தல், அவை ஏற்றுக் கொள்ளத்தக்க நல்ல தரத்தில் கிடைத்தல், மக்கள் வாங்கத்தக்க வகையில் நியாயமான விலையில் கிடைத்தல் ஆகியவை பொது விநியோகத்தின் மற்ற மூன்று குறிக்கோள்களாகும். நியாய விலைக் கடைகள், குடும்ப அட்டைதாரர்கள் தங்களுக்கு தேவையான அனைத்து பொருட்களையும் ஒரே சமயத்திலும் தேவையான அளவிலும் பெறும் வகையில் இயங்க வேண்டியது அவசியம். தற்போது மாநிலத்தில் மொத்தம் 21,986 நியாயவிலைக் கடைகள் இயங்கி வருகின்றன. இவற்றில் 20,916 கடைகளை கூட்டுறவு சங்கங்களும் மீதமுள்ள 1,070 கடைகளை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகமும் நடத்தி வருகின்றன. கிராமப்புறங்களில் 17,394 நியாய விலைக் கடைகளும் நகர்ப்புறங்களில் 4,592 கடைகளும் இயங்கி வருகின்றன.

மாநிலத்தில் உள்ள நியாயவிலைக் கடைகள், அவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளின் எண்ணிக்கையோடு கீழே உள்ள பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ளன.

| குடும்ப அட்டைகளின் எண்ணிக்கை | | கடைகளின் எண்ணிக்கை | திறன் எண்ணிக்கை. | திறன் சத விகிதம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| 1. 100-க்கு குறைவு | .. | 776 | .. | 3 |
| 2. 101—200 | .. | 2,270 | 3,046 | 13 |
| 3. 201—300 | .. | 2,473 | 5,519 | 25 |
| 4. 301—400 | .. | 2,426 | 7,945 | 36 |
| 5. 401—500 | .. | 1,941 | 9,886 | 45 |
| 6. 501—600 | .. | 1,784 | 11,670 | 53 |
| 7. 601—700 | .. | 1,863 | 13,533 | 61 |
| 8. 701—800 | .. | 1,805 | 15,338 | 69 |
| 9. 801—900 | .. | 1,751 | 17,089 | 77 |
| 10. 901—1000 | .. | 1,551 | 18,640 | 85 |
| 11. 1000-க்கு மேல் | .. | 3,346 | 21,986 | 100 |
| மொத்தம் | .. | 21,986 | | |

800 குடும்ப அட்டைகள் இணைக்கப்பட்டுள்ள நியாயவிலைக் கடைகள்தான் நட்டம் இன்றி இயங்க முடியும். மேலே உள்ள பட்டியலின்படி மாநிலத்தில் 15,338 கடைகளில் (69 விழுக்காடு) 800 அட்டைகளுக்கும் குறைவாகவே இணைக்கப்பட்டுள்ளதை காணலாம்.

இந்த நியாயவிலைக் கடைகளைத் தவிர தேவைப்படும் இடங்களில் நியாயவிலைக் கடை நடத்த, கட்டிடங்கள் வாடகையின்றி வழங்கப்படும் பட்சத்தில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரின் இசைவினைபெற்று, பகுதிநேர நியாயவிலைக் கடைகள் திறக்க மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.



**6.1. நடமாடும் நியாயவிலைக் கடைகள் :**

நெடுந்தூரம் உள்ள, மற்றும் எளிதில் சென்றடைய முடியாத பகுதிகளில் வசிக்கும் மக்கள், இன்றியமையாப் பொருட்களை பொது விநியோக முறை மூலம் பெற உதவும் வகையில் அரசு, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டத்தில் 2 நியாயவிலைக் கடைகளையும், திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் 1 கடையையும், திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டத்தில் 1 கடையையும் ஆக மொத்தம் 4 நடமாடும் நியாயவிலைக் கடைகளை தற்போது நடத்தி வருகிறது. சென்ற ஆண்டு மத்திய அரசு 7 வாகனங்கள் வாங்க மாநில அரசுக்கு மானியமும், கடனும் வழங்கியுள்ளது. இந்த 7 வாகனங்கள் நீலகிரி மாவட்டத்தில் 3, பெரியார் மாவட்டத்தில் 2, திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் 1 மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 1 என்ற விகிதத்தில் நடமாடும் நியாயவிலைக் கடைகளாகப் பயன்படுவதற்காக வழங்கப்பட்டுள்ளன.

**7. குடும்ப அட்டைகள் :**

தற்போது இம்மாநிலத்தில் சுமார் 125.29 இலட்சம் குடும்ப அட்டைகள் புழக்கத்தில் உள்ளன. மாநிலத்தில் உள்ள அனைத்து குடும்பங்களும் பொது விநியோகத்தின் மூலம் பயனடைகின்றன.

மாநிலத்தில் உள்ள போலி குடும்ப அட்டைகளைக் களையும் பொருட்டு எடுக்கப்பட்ட தீவிர நடவடிக்கைகளின் விளைவாக 1991-ம் ஆண்டு சுமார் 4.93 இலட்சம் போலி குடும்ப அட்டைகள் அனைத்து மாவட்டங்களிலும் களையப்பட்டன.

1982-ம் ஆண்டு கணக்கெடுப்புக்குப் பின் மாநிலத்தில் உள்ள அனைத்து குடும்பங்களுக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டன. பின்னர் 1988-ம் ஆண்டு இந்த அட்டைகள் புதுப்பிக்கப்பட்டபோது, புதிதாகக் கணக்கெடுப்பு செய்யப்படாமல், முன்பிருந்த குடும்ப அட்டைகளில் இருந்த குடும்பத்தின் மாத வருமானமும், குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணிக்கையும் புதிய அட்டைகளில் பூர்த்தி செய்யப்பட்டன. இந்த குடும்ப அட்டைகள் 31–12–92 வரை புழக்கத்தில் இருக்கும். இந்த குடும்ப அட்டைகளில் உள்ள விவரங்களை நாளது வரையிலானதாக்கும் பொருட்டு குடும்ப அட்டைதாரர்களின் சரியான மாத வருமானத்தை அவர்களிடமிருந்தே பெறலாம் என்று அரசு கருதி ஒரு வினாப்படிவம் தயாரிக்கப்பட்டு அவை அனைத்து குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டன. அனைத்து குடும்ப அட்டைதாரர்களும் பூர்த்தி செய்யப்பட்ட இந்த வினாப்படிவத்தை அவர்களது குடும்ப அட்டை பதியப்பட்டுள்ள நியாயவிலைக் கடைகளில் திருப்பித் தர வேண்டும்

என கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் இந்த படிவங்களில் உள்ள அனைத்து விவரங்களையும் சேகரித்து அரசுக்கு ஒரு விரிவான அறிக்கையை அனுப்பியுள்ளார். அந்த அறிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**8. மாநிலத்தில் பொது விநியோக திட்டத்தை சீரமைக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் :**

**8.1. விழிப்புப் பணிக் குழுக்கள் :**

மக்களுக்கு பொது விநியோகம் மூலம் வழங்கப்படும் இன்றியமையாப் பொருட்கள் நல்ல தரத்துடனும், சரியான எடையுடனும் வழங்கப்படுகின்றனவா என்பதை கண்காணிக்கும் பொருட்டு அரசு ஒவ்வொரு நியாயவிலைக் கடைக்கும் ஒரு விழிப்புப் பணிக்குழுவினை அமைத்துள்ளது. இக் குழுவின் மொத்த உறுப்பினர்களில், குறைந்த பட்சம் இரண்டு பெண் உறுப்பினர்கள் இடம் பெறுவர். இவை தவிர, வட்ட அளவிலும், மாவட்ட அளவிலும் கூட பொது விநியோக முறை சீராக நடைபெறும் பொருட்டு விழிப்புப் பணிக்குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. சென்னை நகரத்திற்கு மட்டும் தனியாக ஒரு விழிப்புப் பணிக்குழு அமைக்கப்பட்டுள்ளது. வட்ட அளவிலும் மாவட்ட அளவிலும் அமைக்கப்பட்ட குழு ஆண்டுக்கு ஒரு முறையும் நியாயவிலைக் கடைக்கு அமைக்கப்பட்ட குழுக்கள் இரண்டாண்டுக்கு ஒருமுறையும் மாற்றியமைக்கப்படும். இந்த குழுக்களில் உள்ள உறுப்பினர்கள் எவராவது தங்கள் அதிகாரத்தினை தவறாகப் பயன்படுத்தினாலோ அல்லது அவர்கள் தங்கள் பணியில் முழுமையான அக்கறை காட்டாதிருந்தாலோ மூன்று மாத காலத்துக்கு அவர்கள் செயல் முறையை கண்காணித்தபின் அந்த உறுப்பினர்களை மாற்றவோ அல்லது அவருக்கு பதிலாக, இப்பணியில் அக்கறை கொண்ட ஒருவரை நியமிக்கவோ மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரமுண்டு.

பொதுவிநியோகத்திற்கான விழிப்புப்பணிக்குழுக்கள் தவிர நியாயவிலைக்கடைப் பணியாளர்கள் மீதான குற்றச்சாட்டுகளை ஆய்வு செய்யும் பொருட்டு ஒவ்வொரு மாவட்ட அளவில் மாவட்ட வருவாய் அதிகாரி தலைமையில் ஒழுங்கு நடவடிக்கை குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

**8.2. மக்கள் குறைகளைத் தீர்த்தல் :**

நியாயவிலைக் கடைகளின் நடைமுறைகள் குறித்து மக்கள் தாங்கள் வெளியிட விரும்பும் குற்றச்சாட்டுகளை தெரிவிக்கும் வகையில் ஒவ்வொரு நியாயவிலைக் கடையிலும் ஒவ்வொரு புகார் பெட்டியும், புகார்ப் புத்தகமும் வைக்கப்பட்டுள்ளன.



இவற்றின் மூலம் குடும்ப அட்டைதாரர்கள் நியாயவிலைக் கடையின் செயல்பாடு குறித்த தங்கள் குற்றச்சாட்டுகளை தெரிவிப்பதுடன் கடை சிறந்த முறையில் இயங்குவதற்கான தங்கள் ஆலோசனைகளையும் தெரிவிக்கலாம். கண்காணிப்பு அதிகாரிகளால் இந்த குற்றச்சாட்டுகளும், ஆலோசனைகளும் பரிசீலிக்கப்பட்டு குடும்ப அட்டைதாரர்களின் குறைகள் நிவர்த்தி செய்யப்படுகின்றன.

எடைகுறைவு, இருப்புக்குறைவு மற்றும் கடைகளில் தேவையான அளவு பொருட்களின் இருப்பின்மை ஆகியவை பொதுவாக நியாயவிலைக் கடைகளின் மீது கூறப்படும் குற்றச் சாட்டுகளாகும். பொருட்கள் முழுமையாக வழங்கப்பட்டு, அவை முழுமையாக எடுக்கப்படுகின்றனவா என்பதை உறுதி செய்வதற்காக மாவட்ட அளவில் இன்றியமையாப் பொருட்கள் ஒதுக்கீட்டுக்குழு ஒன்று மாவட்ட வருவாய் அதிகாரி தலைமையில் இயங்கி வருகிறது. இந்தக்குழு, கடைகளில் தேவையான பொருட்கள் இருப்பு இருக்குமாறு பார்த்துக்கொள்கிறது. மாத தொடக்கத்தில் கடைகளில் இன்றியமையாப் பொருட்கள் தேவையான அளவு இருக்க வேண்டும் என்பதற்காக நியாய விலைக் கடையின் சென்ற மாத ஒதுக்கீட்டின் 80 விழுக்காட்டினை முன்னதாகவே எடுக்க கடைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நியாயவிலைக் கடைகளின் மீது வேறு குறைகள் ஏதாவது இருப்பின் அவை மாவட்ட ஆட்சித் தலைவர் வாரந்தோறும் கூட்டும் கூட்டத்தில் பரிசீலிக்கப்பட்டு நிவர்த்தி செய்யப்படுகின்றன.

**8.3 எடை குறைவு இல்லாமல் பார்த்துக் கொள்ளல்:**

எடை குறைவினைத் தவிர்க்கும் பொருட்டு கூட்டுறவு சங்க பிரதிநிதிகள் முன்னிலையில் தரப்படுத்தப்பட்டு, அரிசி 100 சதவீதம் எடை போட்டு வழங்கப்பட வேண்டும் என்று கிடங்கு பணியாளர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாறு பெறப்பட்ட இன்றியமையாப் பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு எடைகுறையாமல் வழங்கப்படவேண்டியது கடைகளின் பொறுப்பாகும். குடும்ப அட்டைதாரர்கள் பொருட்களின் எடையை சரிபார்த்துக் கொள்ள ஏதுவாக, சென்னை நகரத்தில் உள்ள சில நியாயவிலைக் கடைகளில் எடை பார்க்கும் இயந்திரங்கள் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**8.4 மேற்பார்வை—வலிவுபடுத்தப்பட்டுள்ளது :**

நியாயவிலைக்கடைப் பணியாளர்கள் அதிகமான அதிகாரிகள் அடிக்கடி கடைகளை சோதனை செய்வது தங்களுக்கு தொல்லை கொடுப்பதாக முறையிடுவதால், மேற்பார்வையிடும் அதிகாரிகளின் எண்ணிக்கையை குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள அதே நேரத்தில் மேற்பார்வையின் தரத்தினை மேம்படுத்தவும்

நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. உணவு பொருள் வழங்கல் குற்றப்புலனாயவுத்துறையினர் நியாயவிலைக்கடைகளை சோதனையிட வேண்டாம் என ஆணைகள் வெளியிடபட்டுள்ளன. நியாயவிலைக்கடைகளை மேற்பார்வையிடும் கூட்டுறவுத்துறை பொது விநியோக அதிகாரிகள் கடைகளை சோதனையிடுவதுடன் நியாய விலைக்கடை பணியாளர்களுக்கு உதவும் வகையிலும், அவர்களை வழி நடத்தி செல்லும் வகையிலும் கடைகளை பராமரித்து வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இந்த திட்டம் சென்னை நகரத்தில் தற்போது அமுல்படுத்தப்படுகிறது. பிற நகரங்களுக்கும் இது விரைவில விரிவுபடுத்தப்படும்.

**8.5. கடை பணியாளர்களின் சம்பளம்—உயர்த்தப்பட்டது :**

கூட்டுறவுச் சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக்கடை பணியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் அரசு 1—3—1992 முதல் அவர்களது சம்பளத்தை மாதம் 350 ரூபாயிலிருந்து 500 ரூபாயாக உயர்த்தியுள்ளது.

**8.6. மாவட்டங்களில் நடத்தப்பட்ட மறு ஆய்வு கூட்டங்கள் :**

பொது விநியோக திட்டத்தை சீரமைக்கும் வகையில் மாவட்டங்களில் உள்ள உணவு வழங்கல துறை, வருவாய்த்துறை, கூட்டுறவுத்துறை மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழக அதிகாரிகளுடன் ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்பட்டன. மாவட்டங்களிலுள்ள சட்டமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த கூட்டங்களில் கலந்துகொண்டு பொது வினியோக முறையினை சீரமைப்பதற்கான தங்களது ஆலோசனைகளை வழங்கினர்.

**8.7. நியாயவிலைக்கடை விழிப்புப்பணிக்குழு உறுப்பினர்களுக்கு பயிற்சி :**

தென்னாற்காடு மாவட்டம் முண்டியம்பாக்கத்தில் உள்ளகரும்பு உற்பத்தியாளர் சமூக நலக்கூடத்தில் நியாய விலைக்கடை விழிப்புப்பணிக்குழு உறுப்பினர்களுக்கு, 20—2—1992 அன்று ஒரு பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது. நியாய விலைக்கடைகளின் நடைமுறை, அக்கடைகளை எவ்விதம் முனைப்புடன் நடத்துவது, விழிப்புப் பணிக்குழு உறுப்பினர்களின் கடமைகள் மற்றும் செயல்பாடு ஆகியவை குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. உணவு அமைச்சர் துவக்கி வைத்த இந்தக் கூட்டத்தில் சில நுகர்வோர் பாதுகாப்பு அமைப்புகளும் பங்கேற்றன.

**9. கண்டறியப்பட்ட பகுதிகளில் பொதுவிநியோக முறையை வலிவுபடுத்துதல் :**

மத்திய அரசின் கட்டளைகளுக்கிணங்க வலிவூட்டப்பட்ட பொதுவிநியோக திட்டம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத்திட்டப்பகுதி, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டப்பகுதி போன்ற பகுதிகளில் 1—1—1992 முதல் இம்மாநிலத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. இப்பகுதிகளில் உள்ள வட்டாரங்களின் தகவல்களை இணைப்பில் பட்டியல் 5-ல் காணலாம். இப்பகுதிகளில் குடும்ப அட்டை பெறாதவர்கள் அனைவருக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்படுகின்றன. தேவையான இடங்களில் கூடுதல் நியாய விலைக்கடைகள் திறக்கப்படுகின்றன. இவற்றிற்குத் தேவையான அனைத்து உள்ளமைப்புகளு ஏற்படுத்தப்பட்டுள்ளன.



## III. தமிழ்நாட்டின் விலைவாசி நிலவரம்.

வெளி அங்காடியில் இன்றியமையாப் பொருட்களின் விலையை மாநில அரசு தொடர்ந்து கண்காணித்து வருகிறது. இதனால் இயல்பு மீறிய விலை ஏற்ற இறக்கம் ஏற்படும்போது சரியான நடவடிக்கை எடுக்க முடிகிறது. அனைத்து இன்றியமையாப் பொருட்களின் வெளி அங்காடி விலைகள் குறித்த வாராந்தர அறிக்கைகளை மாவட்ட ஆட்சித்தலைவர்களிடமிருந்து பெற்று கணிப்பொறி தகவல் அமைப்பில் பாதுகாத்துவைத்து, இன்றியமையாப் பொருட்களின் விலையில இயல்பு மீறி ஏற்படுகிற ஏற்ற இறக்கம் கண்காணித்து வரப்படுகிறது.

பணவீக்கம், பெட்ரோலியப் பொருட்களின் விலை உயர்வு அதனால் ஏற்பட்ட போக்குவரத்து செலவினங்களின் அதிகரிப்பு போன்ற பொருளாதார மாற்றங்களினால் தமிழ்நாட்டிலும் வெளி அங்காடியில் இன்றியமையாப் பொருட்களின் விலைவாசி உயர்ந்தே காணப்பட்டது. இந்திய அரசின் 1992 ஆம் ஆண்டுக்கான பொருளியல் ஆய்வில் குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்கண்ட கருத்துக்களை இவ்விடத்தில் சுட்டிக்காட்டுதல் பொருத்தமாக இருக்கும் :

> **"1990–91 ஆம் ஆண்டு வேகமாக உயர்ந்த விலைகள், 1991-92ஆம் ஆண்டிலும் உயர்ந்து வந்தன. மொத்த விலைக்குறியீடு 11.7 சதவிகித உயர்வை 1991ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 1992ஆம் ஆண்டு பிப்ரவரி முதல் தேதி வரை காட்டியது. தொழிற்சாலை ஊழியர்களின் நுகர்வோர் விலை குறியீடு 1991ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை 11.9 சதவிகிதத்திற்கு உயர்ந்தது. ஆண்டுக்கான புணவீக்கம் மொத்த விலை குறியீட்டை பொறுத்த வரையில் 1–2–1992-ல் 12.1 சதவிகிதம் இருந்தது. தொழிற்சாலை ஊழியர்களின் குறியீட்டை பொறுத்த வரையில் இந்த பண வீக்கம் 1991ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 13.1 சதவிகிதமாக இருந்தது.**

1990-91 ஆம் ஆண்டு இருந்தவாறே இந்த பணவீக்கம் இந்த ஆண்டும் உணவு தானியங்கள், காய்கறிகள், சர்க்கரை மற்றும் சமையல் எண்ணெயில் வலிவடைந்துள்ளது கவலை அளிப்பதாக உள்ளது. சுலபமாக கிடைக்கக் கூடிய பண்டங்களின் விலைகள் கூட உயர்ந்துள்ளன..........

சென்ற ஆண்டுகளில் நிதிப்பற்றாக்குறையால் ஏற்பட்ட அதிக தேவைகள்தான் இந்த பணவீக்கத்திற்கு காரணமாகும். இதனால் பணப்புழக்கம் அதிகமானது. இது தவிர நாட்டில் உற்பத்தி குறைவாலும் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய அந்நிய செலாவணி பற்றாக்குறை இடம் தராததாலும், பருப்புகள், சமையல் எண்ணெய் ஆகியவற்றின் இருப்புக்கும் தேவைக்கும் இடையே பற்றாக்குறை ஏற்பட்டது. தானியங்களின் கொள் முதல் விலையில் ஏற்பட்ட உயர்வாலும் அதனால் விற்பனை விலையில் ஏற்பட்ட உயர்வாலும், வெளி அங்காடியில் இவற்றின் விலை அதிகமானது".

தமிழ்நாடும் இந்த பணவீக்கத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டது.

சாதாரணரக சி.ஆர். 1009 புழுங்கல் அரிசியின் சில்லறை விலை 1991-ம் ஆண்டு சனவரி மாதத்தில் கிலோ ஒன்றுக்கு 4.64 ரூபாயாக இருந்தது, 1992-ம் சனவரி மாதத்தில் கிலோ ஒன்றுக்கு 6.11 ரூபாயாக உயர்ந்தது. சாதா ரக சி. ஆர். 1009 பச்சரிசியின் சில்லறை விலை 1991-சனவரியில் கிலோ ஒன்றுக்கு 4.60 ரூபாயாக இருந்தது, 1992-ம் ஆண்டு சனவரியில் கிலோ ஒன்றுக்கு 6.14 ரூபாயாக உயர்ந்தது. வர்த்தகர் லெவியினை நிறுத்தி வைத்தபின் இவற்றின் விலைகள் குறைந்துள்ளன.

இம்மாநிலத்தில் பயிறு வகைகளின் உற்பத்தி, இதன் தேவைகளை நிறைவு செய்ய போதுமானதாக இல்லை. எனவே, பயிறு வகைகளின் விலை ஏற்ற இறக்கம் பெருமளவில் பயிறு வகைகளை உற்பத்தி செய்யும் மாநிலங்களான ஆந்திரப்பிரதேசம், மத்தியபிரதேசம், ராஜஸ்தான், உத்திரபிரதேசம், குஜராத், போன்ற மாநிலங்களிலிருந்து கிடைக்கும் பயிறு வகைகளின் அளவைப் பொறுத்தே உள்ளது. மேற்சொன்ன மாநிலங்களிலிருந்து போதிய அளவு பயிறு வகைகள் வரப்பெறாததால் கடலைப் பருப்பு தவிர, அனைத்துவகை பயிறு வகை விலைகளும் சற்று உயர்ந்தது. இம்மாநிலத்தில் அதிக அளவு பயன்படுத்தப்படுகிற துவரம்பருப்பு விலை 1991-சனவரியில் கிலோ ஒன்றுக்கு 15.70 ரூபாயாக. இருந்தது 1992-ம் ஆண்டு சனவரி மாதத்தில் கிலோ ஒன்றுக்கு 18.30 ரூபாயாக உயர்ந்தது.



அனைத்து வகை சமையல் எண்ணெய்களின் விலைகளும் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்தன. தமிழ்நாடு உள்பட இந்தியாவின் அனைத்து பகுதிகளிலும் போதுமான பயிர் விளைச்சல் இன்மை இந்த விலை உயர்வுக்கு ஒரு காரணமாகும்.

பெருமளவில் நிலக்கடலை உற்பத்தி செய்யும் மாநிலங்களான ஆந்திரபிரதேசம், குஜராத், மத்தியபிரதேசம் போன்ற மாநிலங்களிலிருந்து போதிய அளவு நிலக்கடலை கிடைக்காததால் 1991-ம் ஆண்டின் முதற்பாதியில் கடலை எண்ணெய் விலை குறிப்பிடத்தக்க அளவில் உயர்ந்திருந்தது. இந்த நேரத்தில் கடலை எண்ணெயின் விலை கிலோ ஒன்றுக்கு 41.00 ரூபாயாக இருந்தது.

இதைப்போன்றே நல்லெண்ணெயும், தேங்காய் எண்ணெயும் விலை உயர்ந்தே காணப்பட்டது.

1991-ம் ஆண்டு சனவரியில் கிலோ ஒன்றுக்கு 14.45 ரூபாயாக இருந்த மிளகாய் வற்றலின் விலை படிப்படியாக உயர்ந்து 1991ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கிலோ ஒன்றுக்கு 48.80 ரூபாயாக இருந்தது, 1992-ம் ஆண்டு சனவரி மாதத்தில் கிலோ ஒன்றுக்கு 42.35 ரூபாயாக குறைந்தது. பெருமளவில் மிளகாய் உற்பத்தியாகும் ஆந்திரபிரதேசம் போன்ற மாநிலத்திலிருந்து போதுமான அளவு மிளகாய் வற்றல் வராததும், மிளகாய் வற்றல் ஏற்றுமதி செய்யப்படுவதும் இந்த விலை உயர்வுக்கு காரணமாகும்.

உயர்ந்துவரும் பொருட்களின் விலைகளை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர அரசு விலைகளுக்கான குழு ஒன்றினை அமைத்தது. இந்தக்குழுவின் பரிந்துரைகளின்படி, இந்த அரசு அரிசியையும் மிளகாயையும் ஏற்றுமதி செய்ய வேண்டாம் என மத்திய அரசை கேட்டுக்கொண்டது. வெளி அங்காடியில் பொருட்களின் விலையினை கட்டுப்படுத்தும் வகையில் கூட்டுறவு மொத்த விற்பனை சங்கங்கள் பருப்பு, மிளகாய், தனியா, கடுகு, மிளகு, வெல்லம், தேயிலை போன்ற 27 பொருட்களை விவசாயிகள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக வாங்கி வெளி அங்காடி விலையைவிட குறைந்த விலையில் விற்றுவருகின்றன.

வெளி அங்காடியில் அரிசி விலை உயர்வதை கட்டுப்படுத்துவதற்காக இந்திய உணவு கழகம், சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் விநியோகிப்பதற்காக அரிசி வழங்கியது. இந்த அரிசி, கூட்டுறவு சங்கங்களின் மூலம் 16-12-1991-லிருந்து 27-12-1991-வரை, கிலோ ஒன்றுக்கு 4.20 ரூபாய் என்ற விலையில் விற்கப்பட்டது. சென்னையில் 616 டன்களும், மதுரையில் 300 டன்களும், கோயம்புத்தூரில் 140 டன்களும் விற்கப்பட்டன. 29—12—1991-முதல் மத்திய தொகுப்பிலிருந்து வழங்கப்படும் அரிசி விலையை உயர்த்திய பின்னர் இவ்வாறு அரிசி வழங்குவதை மத்திய அரசு நிறுத்திவிட்டது.

இவை தவிர கட்டாயமாகவோ அல்லது தாமாகவோ உணவுப் பொருட்களின் விலையினை வியாபாரிகள் குறைக்க செய்வதற்காக, அரிசி, மிளகாய் வற்றல், சமையல் எண்ணெய், பயிறுவகைகள், காய்கறிகள் வியாபாரிகளுடன் தொடர்ந்து கூட்டங்கள் நடத்தப்பட்டன.

வர்த்தக லெவியினை 29-1-1992 முதல் நிறுத்திவைத்ததும், விலை உயர்வினை தடுப்பதற்காக மேற்கொண்ட ஒரு முயற்சியே ஆகும். இதனால் லெவி அங்காடியில் அரிசி விலை குறிப்பிடத்தக்க வகையில் குறைந்தது.

இந்த பலமுனை நடவடிக்கைகள் காரணமாக உணவு பொருட்களின் விலைகள் கடந்த சில மாதங்களாக வெகுவாக குறைந்துள்ளன. 1991ஆம் ஆண்டு சனவரி மாதம் கிலோ ஒன்றுக்கு 41.00ரூபாயாக இருந்தகடலை எண்ணெயின் விலை, தற்போது கிலோ ஒன்றுக்கு 35.60 ரூபாயாக குறைந்துள்ளது. வெளிச் சந்தையில் சாதாரண ரக மற்றும் சன்ன ரக புழுங்கலரிசியின் விலை கிலோ ஒன்றுக்கு 1.50 ரூபாய் அளவிற்கு குறைந்துள்ளது.

1991 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கிலோ ஒன்றுக்கு 48.80 ரூபாயாக இருந்த மிளகாய் வற்றலின் விலை 1992ஆம் ஆண்டு சனவரி மாதத்தில் கிலோ ஒன்றுக்கு 42.35 ரூபாயாக குறைந்தது.

## IV. 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்களின் சட்டத்தை செயற்படுத்துதல்.

மைய அரசின் 1955ஆம் ஆண்டு இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் இன்றியமையாப் பொருட்கள் தொடர்ந்து சீராக கிடைக்கப் பெறுவதை உறுதி செய்வதற்கு மாநில அரசு பல்வேறு கட்டுப்பாட்டு ஆணைகளைப் பிறப்பித்துள்ளது. கீழே குறிப்பிட்டுள்ள சில முக்கியமான கட்டுப்பாட்டு ஆணைகள் உணவுத்துறைக்குத் தொடர்புடையவையாகும்.

(1) தமிழ்நாடு 1984ஆம் ஆண்டு இன்றியமையா வாணிபப் பொருட்கள் (வாணிபம் ஒழுங்கு முறைப்படுத்தல்) ஆணை;

(2) தமிழ்நாடு 1973ஆம் ஆண்டு மண்ணெண்ணெய் (வாணிபம் ஒழுங்கு முறைப்படுத்தல்) ஆணை;

(3) தமிழ்நாடு 1982ஆம் ஆண்டு அட்டவணைப் பொருட்கள் (குடும்ப அட்டை மூலம் பங்கீட்டை ஒழுங்குபடுத்துதல்) ஆணை ; மற்றும்

(4) தமிழ்நாடு 1984ஆம் ஆண்டு நெல் மற்றும் அரிசி (லெவி மூலம் கொள்முதல்) ஆணை.

மேற்காணும் ஆணைகள் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் பணியாளர்களால் செயல்படுத்தப்படுகிறது. இப்பணியினை செயல்படுத்த குடிமைப்



பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை பிரிவினர் உதவுகின்றனர். இந்த குற்றப்புலனாய்வுப் பிரிவினர் காவல் துறை தலைவரின் கட்டுப்பாட்டிலும் மற்றும் உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை ஆணையாளர், வனத்துறை க்கான குற்றப்புல்னாய்வுக் காவல் துறைத் தலைவர் ஆகியோரின் கண்காணிப்பிலும் இயங்கி வருகின்றனர். 1991ஆம் ஆண்டு குற்றப்புலனாய்வு காவல் துறை திருத்தியமைக்கப்பட்டது. வர்த்தகர் லெவி நிறுத்திய பின்னர் இப்பிரிவில் மீண்டும் மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளன.

29—1—1992 முதல் வர்த்தகர் லெவியினை நிறுத்திய பின்னர் ஏகபோகக் கொள்முதல் பகுதிகளில் கூடுதல் காவலர்களை நியமிக்கவும், மாநில எல்லைப்புற சோதனைச் சாவடிகளை உறுதிப்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. 3 ஆயுதம் தாங்கிய சிறப்புக் காவல் படையினர் ஏகபோக கொள்முதல் பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். மாநிலங்களுக்கு இடையே கள்ளத்தனமாக நெல் மற்றும் அரிசி கடத்தப்படுவதை தடை செய்யும் பொருட்டு கன்னியாகுமரி, திருநெல்வேலி, மதுரை ஊரகம், கோயம்புத்தூர் மற்றும் நீலகிரி மாவட்ட காவல் துறை கண்காணிப்பாளர்கள் தேவையான அளவு ஆயுதம் தாங்கிய காவலர்களை அப்பகுதிகளுக்கு அனுப்புமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர். இது தவிர, மாவட்டங்களிலுள்ள உணவு வழங்கல் குற்றப்புலனாய்வு காவல் துறையினர் ஒரு பிரிவினை வட்டங்களிலுள்ள எல்லைப்புறபகுதிகளுக்கு அனுப்புமாறு பணிக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள, பிரிவுகள் மற்ற மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளனர். நிலைமையை உன்னிப்பாக கவனிக்கவும், தீவிர சோதனை செய்யவும், வழக்குகள் தொடரவும், கட்டுப்பாட்டு ஆணைகளை அமுல்படுத்தும் அமைப்பு விழிப்புடன் செயல்படுவதை உறுதி செய்யவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். இப்பிரிவு தற்போது தகவல்கள் சேகரித்தல், கலப்படக் குற்றங்களை கண்டுபிடித்தல், உணவுப் பொருட்களை கடத்துதலை தடுத்தல், பொருட்கள் பதுக்கப்படுவதைத் தடுத்தல் மற்றும் கள்ளச்சந்தையினை தடுத்தல் ஆகிய பொறுப்புகளை ஏற்றுள்ளது. இது தவிர மாவட்ட எல்லைகளில் பொருட்கள் கடத்தப்படுவதைத் தடுத்தல், பொது விநியோகத்திற்கான பொருட்கள் நியாயவிலைக் கடைகளிலிருந்து வெளிச்சந்தைகளுக்கு செல்வதைத் தடுத்தல், நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை கவனித்தல்,மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர் வெளியிடும் பறிமுதல் ஆணைகளை மேற்கொள்ளுதல் ஆகிய பணிகளையும் இவர்கள் மேற்கொள்கிறார்கள்.

1991ஆம் ஆண்டு மற்றும் 1992ஆம் ஆண்டு சனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனைகள், மற்றும் வழக்கு தொடரப்பட்டவர்கள் குறித்த விவரங்கள் பட்டியல்-4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களிடமிருந்து, நெல் மற்றும் அரிசி கள்ளத்தனமாக கடத்தப்படுவது குறித்து தமது பெயர் தெரிவிக்க விரும்பாமல் பல தகவல்கள் மேல்நிலை அலுவலர்களுக்கு கிடைக்கப்பெற்றதை தொடர்ந்து, சென்னை ஜார்ஜ் டவுன் மண்டலத்தில் உள்ள உணவுப் பொருள் வழங்கல் உதவி ஆணையர் அலுவலகத்தில் ஒரு கட்டுப்பாட்டு அறை திறக்கப்பட்டுள்ளது. இந்த கட்டுப் பாட்டு அறையில் உணவுப் பொருள் வழங்கல் மற்றும் உணவுப் பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை அலுவலர்கள் பணி யாற்றுகிறார்கள்.

இந்தக் கட்டுப்பாட்டு அறை முழு நேரமும் பணியாற்றுகிறது. 13–12–1991 முதல் 29–2–1992 வரை 114 குற்றச்சாட்டு கள் பெறப்பட்டன. அவற்றின் மீது நடவடிக்கை எடுத்ததில் இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின் கீழ் கீழ்க்கண்ட பொருட்கள் பறிமுதல் செய்யப்பட்டன :

| | | | | |
|---|---|---|---|---|
| நெல் | .. | .. | 7.50 | குவிண்டால். |
| அரிசி | .. | .. | 79.78 | குவிண்டால். |
| கோதுமை | | .. | 76.00 | குவிண்டால். |
| மண்ணெண்ணெய் | | | 662 | லிட்டர். |

1991–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 1992–ஆம் ஆண்டு சனவரி மாதம் வரை மதுரை, திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மற்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் 15 நபர்களை 1980–ஆம் ஆண்டு கள்ளச்சந்தை தடுப்பு மற்றும் இன்றியமையாப் பொருட்கள் வழங்கலை பராமரித்தல் சட்டத்தின் கீழ் காவலில் வைத்தனர்.

**1. உணவுக் கலப்படத்தைத் தடுத்தல் :**

1954–ஆம் ஆண்டு உணவுக் கலப்பட தடைச்சட்டத்தை மக்கள் நல்வாழ்வு–குடும்பநலத்துறை செயல்படுத்தி வருகிறது. இம்மாநிலத்தில், 7 உணவு பகுப்பாய்வு சோதனை கூடங்கள் இயங்கி வருகின்றன. 1991–92 ஆம் ஆண்டு 17,828 சட்டப் பூர்வ மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட்டன. அவற்றில் 1,179 மாதிரிகளில் கலப்படம் செய்யப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப் பட்டது. இதே காலத்தில் 1,015 இனங்களில் குற்ற வழக்கு கள் தொடர்வதற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 162 நபர்கள் குற்றவாளிகளென தீர்ப்பளிக்கப்பட்டது. இச்சட்டத் தின் கீழ் இந்த காலத்தில் ரூபாய் 1.96 இலட்சம் அபராதத் தொகை விதிக்கப்பட்டது. உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளர் அலுவலகத்தில் ஒரு பகுப்பாய்வு சோதனைக்கூடம் 1982-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. இது, அனைத்து உணவுத் தானியங்கள், கோதுமை பொருட்கள் மற்றும் சமையல் எண்ணெய்களை சோதனை செய்யக்கூடிய வகையில் அனைத்து வசதிகளையும் பெற்றுள்ளது.



நுகர்வோருக்கு நல்ல தரமான உணவு தானியங்களை வழங்கு வதை உறுதி செய்வதற்காக கிடங்குகள், கொள்முதல் மற்றும் சேமிப்பு முனைகளில சோதனைக்காக மாதிரிகள் எடுக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யபட்டுகிறது. உணவுப பொருள் வழஙகல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு ஆணையாளர் அலுவலகத்தில் இயங்கி வரும் இந்த சோதனைக் கூடத்தில் சர்க்கரையையும் பகுப்பாய்வு செய்வதற்காக 27,000 ரூபாய் மதிப்பீட்டில் சோதனைக் கருவிகள் வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. 1991–ஆம் ஆண்டு 1,513 மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்பட் டுள்ளன. இதில் 271 மாதிரிகள் தரம் குறைந்தவை என கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

**2. எடைகள் மற்றும் அளவைகள்:**

1976–ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் தரங்கள் நிர்ணய சட்டத்தையும், 1985–ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டத்தையும் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை அமுல்படுத்தி வருகிறது. சட்டப்பூர்வ அளவைகள் கட்டுப்பாட்டாளர் தலைமையில் 21 தொழிலாளர் நல ஆய்வாளர்களும் இதர களப்பணியாளர் களும் உள்ளனர், 1991–ஆம் ஆண்டில், 1977-ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் (பொட்டலப் பொருட்கள்) விதி களின்கீழ் 6,638 குற்ற வழக்குகளும் 1985–ஆம் ஆண்டு எடைகள் மற்றும் அளவைகள் (செயல்படுத்துதல்) சட்டத்தின் கீழ் 1,015 குற்ற வழக்குகளும் அனுமதிக்கப்பட்டன. இதே காலத்தில் மேற்சொன்ன சட்டங்களின்கீழ், முறையே 6.69 இலட்சம் ரூபாய் மற்றும் 22.86 இலட்சம் ரூபாய் அபராதத் தொகை விதிக்கப் பட்டது. இத்தகைய சட்டங்கள் செயல்படுத்துதல் தொடர் பாக கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை தொடர்ந்து கண்காணித்து வருகிறது.

## V. நுகர்வோர் பாதுகாப்பு.

1986-ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், நுகர் வோர்களின் பாதுகாப்பிற்காக உருவாக்கப்பட்ட விரிவான முன்னேற்றமான சட்டங்களுள் ஒன்றாகும். நுகர்வோர்களது நலனை பாதுகாப்பதே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இச்சட்டம், நுகர்வோர்களது குறைகளை எளிய, விரைவான, செலவற்ற முறையில் களைவதற்கு வகைசெய்ய இயற்றப்பட்ட தாகும். 1986–ஆம் ஆண்டு நுகர்வோர் பாதுகாப்புச் சட்டப் படி, கீழ்க்கண்ட அமைப்புகளை இம்மாநில அரசு உருவாக்கி யுள்ளது:—

1. மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழு ;
2. மாநில நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையம் ;
3. மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் அமைப்புகள்.

மாநில நுகர்வோர் பாதுகாப்புக் குழுவில் அலுவல் சார்ந்த மற்றும்
வணிகம், தொழில், நுகர்வோர் தொண்டு நிறுவனங்கள், சமூக
சேவையில் ஈடுபட்டுள்ள மகளிர், சட்டமன்ற உறுப்பினர்கள்
போன்ற வாழ்வின் பல்வேறு துறைகளில் உள்ளவர்களும் அலுவல்
சாரா உறுப்பினர்களாக உள்ளனர். இது ஒரு ஆலோசனைக் குழு
வாகும். மாநில உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர்
இக்குழுவின் தலைவராவார். 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள்
முதல் இக்குழு ஏழு கூட்டங்களை நடத்தியுள்ளது. இக்குழு
வின் கூட்டங்களின் போது உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகள்
மற்றும் பரிந்துரைகளின் மீது மேல் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு
வருகின்றன.

மாநில நுகர்வோர் குறைதீர்க்கும் ஆணையம் மற்றும்
மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்புக்கள் ஆகியவை
ஓரளவு நீதித் துறை சார்ந்த அமைப்புகள் ஆகும். நுகர்வோர்,
நுகர்வோர் தொண்டு நிறுவனம், மைய மற்றும் மாநில அரசுகள்
இந்த அமைப்புகளில் தங்களது புகார்களை தாக்கல் செய்யலாம்.
பொருட்களது மதிப்பு அல்லது சேவைகளின் மதிப்பு, அல்லது
நஷ்டஈடு கோரும் தொகை ஆகியவை ரூபாய் ஒரு இலட்சத்திற்
குள் இருந்தால் அப்புகார்களை மாவட்ட அமைப்புகளில் தாக்கல்
செய்யலாம். பொருட்களது மதிப்பு அல்லது சேவைகளின் மதிப்பு
அல்லது நஷ்டஈடு கோரும் தொகை ஆகியவை ரூபாய் ஒரு இலட்
சத்திற்கு மேலும், ரூபாய் பத்து இலட்சத்திற்குள்ளும் இருந்தால்,
மாநில ஆணையத்தில் இப்புகார்களைத் தாக்கல் செய்யலாம்.
இப்புகார்களைப் பதிவு செய்ய எந்தக் கட்டணமும் இல்லை.
நுகர்வோர் தங்களது குறைகளுக்காக வேண்டும் நிவர்த்தியை
பொறுத்து, பொருட்களின் குறைபாடுகளை நீக்கவும், அவை
களை மாற்றம் செய்து புதிய பொருட்கள் வழங்கவும்; செலுத்திய
தொகையைத் திரும்பப் பெறவும் அல்லது நஷ்ட ஈடு வழங்க
வும் இந்த நுகர்வோர் நீதிமன்றங்கள் ஆணை பிறப்பிக்கும்.

மாநில நுகர்வோர் குறை தீர்க்கும் ஆணையம், ஓய்வுபெற்ற
உயர்நீதி மன்ற நீதிபதி ஒருவரைத் தலைவராகக் கொண்டுள்ளது.
இம்மாநில ஆணையத்திற்கு ஒருபெண் உறுப்பினர் உள்பட இரண்டு
உறுப்பினர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இம்மாநில
ஆணையம் முழுநேர அமைப்பாகச் செயல்படுகிறது. மதுரை,
கோயம்புத்தூர், புதுக்கோட்டை, சேலம், தஞ்சாவூர் ஆகிய
மாவட்டங்களில் 1955 ஆம் ஆண்டு இன்றியமையாப் பண்டங்
களின் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள சிறப்பு நீதி
மன்றங்களின் தலைவர்கள், அந்தந்த மாவட்டத்தின் நுகர்
வோர் குறைதீர்க்கும் அமைப்புகளுக்கும் தலைவராவர்.
சென்னை தவிர, எஞ்சிய 15 மாவட்டங்களில் அந்தந்த
மாவட்ட நீதிபதிகளே அந்தந்த மாவட்ட நுகர்வோர் குறை
தீர்க்கும் அமைப்புகளுக்கும் தலைவராவர். ஒரு பெண் உறுப்
பினர் உட்பட, இரண்டு உறுப்பினர்கள் இம்மாவட்ட அமைப்
புக்களுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இம்மாவட்ட
அமைப்புக்கள் யாவும் பகுதிநேர அடிப்படையில், செயலாற்று
கின்றன. சென்னை மாவட்டத்தை பொறுத்தவரை, தொடர்ச்



சியாக ஆறு மாதங்களுக்கு இந்த அமைப்பில் பதிவு செய்யப்
பட்ட புகார்கள் 150 என்ற எண்ணிக்கையை தாண்டியதால்
உச்ச நீதிமன்றத்தின் ஆணையின்படி 'முழு நேர' அடிப்படையில்
நுகர்வோர்களது புகார்களை மட்டும் பரிசீலனை செய்யும்
பொருட்டு ஒரு மாவட்ட நுகர்வோர் குறைதீர்க்கும் அமைப்பு
அமைக்கப்பட்டது. தற்போது இம்மாநிலத்தின் 22 மாவட்டங்
களிலும் மாவட்ட நுகர்வோர் குறை தீர்க்கும் அமைப்புகள்
உருவாக்கப்பட்டுள்ளன.

17—10—1990 அன்று நடந்த மத்திய நுகர்வோர் பாது
காப்புக்குழு கூட்டத்தின் பரிந்துரைக்கிணங்க 1986 ஆம் ஆண்டு
நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம் மற்றும் 1969 ஆம் ஆண்டின்
ஏகபோக மற்றும் கட்டுப்படுத்தப்பட்ட வர்த்தக நடைமுறைச்
சட்டம் ஆகியவற்றை மாற்றியமைப்பதற்காக மத்திய அரசு
தனது ஆணை 9/4/1990 சி.பி.யு. நாள் 2—1—1991-ல்
ஒரு பணிக்குழுவினை அமைத்தது. இந்த பணிக்குழுவில் தமிழக
உணவுத்துறை அமைச்சரும் ஒரு உறுப்பினர் ஆவார். இந்தப்
பணிக்குழு நான்கு கூட்டங்களை நடத்தி, தனது பரிந்துரையை
மாண்புமிகு பாரதப்பிரதமருக்கு 22—1—1992 அன்று அளித்
துள்ளது.

**1. நுகர்வோர் கல்வி :**

பெரும்பாலான நுகர்வோர்கள் தங்களது உரிமைகளை
அறியாதவர்களாக உள்ளனர். மாநில அரசு அவர்களை பயிற்று
விக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இம்மாநிலத்
தின் 13,000 முதியோர் கல்வி மையங்களில் பயன்படும்வகையில்
நுகர்வோர் பாதுகாப்பு குறித்த ஒரு பாடம் ஒரு துணை நூலாக
சேர்க்கப்பட்டுள்ளது. 5 மற்றும் 9 ஆம் வகுப்பு பாடத்திட்டத்
தில் நுகர்வோர் பாதுகாப்பு குறித்த ஒரு பாடம் சேர்க்கப்பட்
டுள்ளது. உணவுக் கலப்படம் மற்றும் அவற்றைக் கண்டு பிடித்தல்
குறித்த ஒரு பாடத்தை வேதியல் போதிக்கும் கல்லூரிகளில்
பாடத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ள அரசு கேட்டுக்கொண்
டுள்ளது. நுகர்வோர் பாதுகாப்பை எம்.பில் மற்றும் பி.எச்டி.,
போன்ற துறைகளில் ஆய்வு செய்யும் மாணவர்களுக்கு ஒரு
தலைப்பாக வைக்கும்படி இம்மாநிலத்திலுள்ள அனைத்துப்
பல்கலைக் கழகங்களும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன. தமிழ் நாடு
நுகர்பொருள் வாணிபக் கழகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்
களால் நடத்தப்பெறும் சிறப்பு அங்காடிகள் மற்றும் பல்
பொருள் அங்காடிகள், மாவட்ட மற்றும் வட்ட அளவிலான
உணவுப் பொருள் வழங்குதுறை அலுவலகங்கள், கல்வித்
துறையின் கீழ் இயங்கும் நடமாடும் அறிவியல் வண்டிகள் அகிய
வற்றிற்கு கலப்படத்தை கண்டு பிடிக்க சிறிய கலப்பட ஆய்வுப்
பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. நுகர்வோர் நலன்குறித்து
மைய அரசின் திரைப்படத்துறை வெளியிட்டுள்ள ''தி குருசேட்''
என்ற திரைப்படம் வாங்கப்பட்டு, இம்மாநிலத்தின் அனைத்து
மாவட்டங்களிலும் உள்ள திரையரங்குகளில் திரையிட அனுப்
பப்பட்டுள்ளது. நுகர்வோர் நலன்குறித்த வீடியோ கேசட்டு
களும் வெளியிடப்பட்டுள்ளன.

**2. நுகர்வே... பாதுகாப்பில் எடுக்கப்பட்டுள்ள மற்ற நடவடிக்கைகள் :**

மைய அரசின் நிதிஉதவியோடு, இந்த அரசு, ஒவ்வொரு ஆண்
டும் மார்ச் 15 ஆம் தேதி நடைபெறும் உலக நுகர்வோர் நாளில்,
மாநில அளவிலான ஒரு நுகர்வோர் கருத்தரங்கினை நடத்தி
வருகிறது. இந்த ஆண்டு நுகர்வோர் நாள் தர்மபுரி மாவட்டம்,
லக்கியம்பட்டியில் மார்ச்சு 22 ஆம் தேதியன்று நடத்தப்பட்டது.
இம்மாநிலத்தில் 115 நுகர்வோர் தொண்டு நிறுவனங்கள்
உள்ளன. இதில் சில நிறுவனங்கள் சீரிய முறையில் செயலாற்று
கின்றன. நுகர்வோர் பாதுகாப்பில் அரசின் முயற்சிகளுக்கு இந்
நிறுவனங்கள் உதவிக்கரம் நீட்டுகின்றன. இதில் தகுதிவாய்ந்த
நுகர்வோர் தொண்டு நிறுவனங்களுக்கு நுகர்வோர் பாதுகாப்பு
பற்றிய கருத்தரங்குகள் மற்றும் கண்காட்சிகள் நடத்துவதற்கு
அரசு நிதி உதவி அளிக்கிறது. நுகர்வோர் நலனுக்கு சீரிய
முறையில் பணியாற்றுபவர்களுக்கென மாநில அளவிலான ஒரு
விருதினை உருவாக்கி, மாநில அரசு ஆண்டுதோறும் பரிசுகள்
வழங்கி வருகிறது.

நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான செயல்களை முன்
னிறுத்தி தன்னியலாகச் செயல்படும் முதன்மை நுகர்வோர்
தொண்டு நிறுவனங்களுடன் கூட்டங்கள் நடத்தி, அவர்களது
றைகள், ஆலோசனைகள், பரிந்துரைகள் ஆகியவற்றின் மீது
மல் நடவடிக்கைகள் எடுக்கும்படி அரசு செயலாளர்கள்,
துறைத்தலைவர்கள், அரசு நிறுவனங்களின் தலைவர்கள்
ஆகியோர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அனைத்துத்துறைத்
தலைவர்களும், அரசு நிறுவனங்க்ளின் தல்வர்களும்,
நுகர்வோர் குறைகளைக் கேட்டறிந்து களையும் பொருட்டு;
அவர்களது அலுவலகத்தில் ஒரு "நுகர்வோர் குறைதீர்க்கும்
பிரிவினை" அமைக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

## VI. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்.

அரசு நிறுவனமான தமிழ்நாடு நுசர்பொருள் வாணிபக்
கழகம் 1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதன் நோக்கம்
கொள்முதல், சேமிப்பு, பதப்படுத்தல், தேவையான இடங்களுக்கு
உணவு தானியம் மற்றும் இன்றியமையாப் பொருட்களை
கொண்டு செல்லுதல், விநியோகித்தல், விற்பனை செய்தல்,
அரசின் நலன் பயக்கும் திட்டங்களை செயல்படுத்துதல் மற்றும்
அதற்கு தேவையான மூலதனம், நிதி ஆதாரங்கள் தேடுதல்,
தொழில்நுட்பம் மற்றும் மேலாண்மை சேவைகள், ஆலோசனை
உதவிபோன்ற பணிகளை செய்தல் ஆகியவை ஆகும். 1972-ம்
ஆண்டில் சுமார் 12 கோடி ரூபாய் அளவிற்கு இருந்த விற்பனை
1990–91-ம் ஆண்டில் சுமார் 995 கோடி ரூபாய் அளவிற்கு
உயர்ந்துள்ளது. இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட
பங்கு மூலதனம் 30 கோடி ரூபாயாகும். செலுத்தப்பட்ட பங்கு
மூலதனம் 22.54 கோடி ரூபாயாகும்.



இக்கழகம், தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் தலைமை
யில் அவருக்கு கீழ் உதவியாக பல அலுவலர்களுடன் செயலாற்றி
வருகின்றது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு மண்டலமாக
21 மண்டலங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு மண்டல
மும் மாவட்ட வருவாய் அதிகாரி அல்லது துணை ஆட்சியாளர்கள்
நிலையில் உள்ள 21 மண்டல அதிகாரிகளால் நிர்வகிக்கப்பட்டு
வருகிறது. கழகத்தின் மொத்த பணியாளர்கள் எண்ணிக்கை
10,000-த்துக்கும் மேலாகும்.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் அரசின் நேரடி
முகவராக இருந்து மாநிலத்திற்குள் நெல் கொள்முதல் மற்றும்
அரிசி கொள்முதல் மற்றும் மத்திய தொகுப்பிலிருந்து ஒதுக்கீடு
செய்யப்பட்ட அரிசி நெல், கோதுமை, சர்க்கரை மற்றும் வெளிச்
சந்தையில் அரிசி கொள்முதல் ஆகிய பணியினை அரசின் ஆணைக்
கேற்ப செயல்படுத்துகிறது.

**1. நலன் பயக்கும் திட்டங்கள் :**

மாபெரும் சமூக நலத்திட்டமான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.
மதிய சத்துணவு திட்டத்திற்கு தேவையான அரிசி, பருப்பு
மற்றும் சமையல் எண்ணெய் போன்றவற்றை சத்துணவு மையங்
களுக்கு நேரிடையாக வழங்கும் பொறுப்பான பணியினை செய்து
வருகிறது. ஒவ்வொரு மாதமும் மேற்படி மதிய உணவு மையங்
களுக்கு சுமார் 20,000 டன் அரிசியினையும், 3,000 டன் பருப்பு
வகைகளையும் மற்றும் 250 டன் சமையல் எண்ணெயையும்
வழங்கி வருகிறது.

தமிழ்நாடு உப்பு கழகத்தால் உற்பத்தி செய்யப்படும் இரும்பு
சத்துக்கொண்ட உப்பினை கழகம் பெற்று மதிய உணவு மையங்
களுக்கு 1—1—1991 முதல் வழங்கி வருகிறது.

பணியாளர் நலத் திட்டத்தின் கீழ் காவல்துறை, தீயணைப்புத்
துறை, சிறைத் துறை பணியாளர்களுக்கும் அரசு ஆணைகளின்
படி இன்றியமையாப் பொருட்களை மானிய விலையில் கழகம்
வழங்கி வருகிறது.

மேலும் இக்கழகம் இன்றியமையாப் பொருட்களை இலங்கை
அகதிகளுக்கும் வழங்கி வருகின்றது. மானிய விலையில் ஒரு
கிலோ அரிசி 57 பைசாக்கள் வீதமும், மற்றபொருட்கள் பொது
விநியோக முறையில் வழங்கும் விலைக்கும் வழங்கப்பட்டு
வருகிறது.

இதுபோன்று சமீபத்தில் கர்நாடக மாநிலத்தில் காவிரி நதி
நீர்பங்கீடு காரணமாக ஏற்பட்ட கிளர்ச்சியால் தமிழகத்திற்கு
வந்த தமிழர்களுக்கும் 57 பைசாவிற்கு அரிசி வழங்கப்பட்டது.

**2. வணிக செயல்பாடுகள் :**

சென்னை மாநகரம் மற்றும் மாவட்டங்களில் 67 அமுதம்
பல்பொருள் அங்காடிகள் கழகத்தால் நடத்தப்பட்டு வருகின்றன.
இவ்வங்காடிகளில் சராசரி மாத விற்பனை சுமார் 100 லட்சம்
ரூபாயாகும். இதுவரை இல்லாத அளவிற்கு 1991-ம் ஆண்டு
டிசம்பர் மாதத்தில் விற்பனை 110 லட்சம் ரூபாயை எட்டி
யுள்ளது.

விவசாயிகளின் நலனை கருதி தஞ்சாவூர் மற்றும் நாகப்
பட்டினம் காயிதேமில்லத் மாவட்டங்களிலும் மற்றும் ஏக
போக கொள்முதல் பகுதிகளிலும் கொள்முதல் பணிக்கென 978
நேரடி கொள்முதல் நிலையங்களை கழகம் இவ்வாண்டு திறந்
துள்ளது. நேரடி கொள்முதல் நிலையங்கள் வருடாவருடம்
செயல்பட்டு வருவதால், பாதுகாக்கப்பட்ட சேமிப்பு வசதிகள்,
உலர்த்தும் தளம், அணுகு சாலை வசதி போன்ற எல்லா அடிப்
படை வசதிகளுடனும் கூடிய நிரந்தர கட்டிடங்களை நேரடி
கொள்முதல் நிலையங்களுக்கு கட்டும் பணியை கழகம் மேற்கொண்
டுள்ளது. அதன்படி அரசால் அனுமதிக்கப்பட்ட 100 நேரடி
கொள்முதல் நிலையங்களில் இதுவரையிலும் 85 நேரடி கொள்
முதல் நிலையங்கள் கட்டிமுடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 15
நேரடி கொள்முதல் நிலையங்களைக் கட்டும்பணி தீவிரமாக
நடைபெற்று வருகிறது. 1992–93 ஆம் நிதியாண்டில், மேலும்
25 நேரடி கொள்முதல் நிலையங்கள் கட்ட திட்டமிடப்பட்
டுள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், 5.49 லட்சம்
மெட்ரிக் டன்கள் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்குகளை
தமிழ் நாட்டில், 103 வட்டங்களில் 127 இடங்களில் இதுவரை
கட்டியுள்ளது. தற்போது 120 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில்
13,500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்புக் கிடங்கு
கள் 8 இடங்களில் கட்டப்பட்டு வருகின்றன. இக்கிடங்குகளில்
9,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் 1992
மார்ச் மாதத்திற்குள்ளும் எஞ்சிய 4,500 மெட்ரிக் டன் கொள்
ளளவு கொண்ட கிடங்குகள் 1992ஆம் ஆண்டு மே மாதத்திற்
குள்ளும் கட்டிமுடிக்கப்படும். மீதமுள்ள வட்ட அளவில் உள்ள
வழங்கல் கிடங்குகள் கட்டுமானப்பணிக்கு முன்னுரிமை அளிக்கப்
படும். 1992–93 ஆம் ஆண்டில் இராமநாதபுரம் மாவட்டத்தில்
இராமநாதபுரம், பரமக்குடி, முதுகுளத்தூர், பெரியார் மாவட்டத்
தில் காங்கேயம், தாராபுரம் ஆகிய இடங்களில் அரசிடமிருந்து
கிடங்கு ஒன்றுக்கு 5 லட்சம் ரூபாய் என்ற வீதத்தில் பங்குத்
தொகையை பெற்று திட்டப்பணிகளின் கீழ் 5 கிடங்குகள் கட்டப்
படும். இந்த 5 கிடங்குகளையும் கட்ட 95 லட்சம் ரூபாய்
தேவைப்படுமென மதிப்பிடப்பட்டுள்ளது.

ஆண்டொன்றுக்கு 4,21,000 மெட்ரிக் டன் அரவை திறன்
கொண்ட 19 நவீன அரிசி ஆலைகள் கழகத்திற்கு சொந்தமாக



உள்ளன. தஞ்சாவூர் மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 100
மெட்ரிக் டன் அரவை திறன் கொண்ட எருக்கூர் பகுதி-2 நவீன
அரிசி ஆலை கட்டும்பணி முடியும் தறுவாயில் உள்ளது.

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், எருக்கூர் மற்றும்
போனக்குளம் ஆகிய இரண்டு இடங்களில் தவிட்டிலிருந்து எண்
ணெய் பிழிந்தெடுக்கும் ஆலையை நிறுவியுள்ளது. இவ்வாலை
களில் உற்பத்தி செய்யும் சமையல் எண்ணெய் ஏற்கெனவே
''அமுதம் நெல் எண்ணெய்'' என்ற பெயரில் தமிழ்நாடு நுகர்
பொருள் வாணிபக் கடைகளில் விற்பனை செய்யப்படுகிறது.

## VII. தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம்.

தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனம் 1957ஆம் ஆண்டு
நிறுவப்பட்டு 1958-59ம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது.
தமிழ்நாடு முழுவதும் விவசாய விளைப்பொருட்கள், விதைகள்,
உரங்கள், விவசாய சாதனங்கள் மற்றும் அறிவிப்பு செய்யப்பட்ட
பொருட்களுக்கு அறிவியல் ரீதியிலான சேமிப்பு வசதியுடன்
கூடிய சேமிப்பு கிடங்கு வசதியை இந்நிறுவனம் அளிக்கிறது.

இந்நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பங்கு மூலதனத்
தொகை 800 லட்சம் ரூபாய் ஆகும். 31–12–1991 நிலவரப்படி
இந்நிறுவனத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் 730 லட்சம்
ரூபாயாகும். இதில் 380.50 லட்சம் ரூபாய் மாநில அரசாலும்,
மீதமுள்ள 349.50 லட்சம் ரூபாய் மைய சேமிப்பு கிடங்கு
நிறுவனத்தாலும் செலுத்தப்பட்டுள்ளது.

இக்கழகம் தற்போது மாநிலம் முழுவதும் 64 மையங்களில்
5,99,652 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட சேமிப்பு கிடங்கு
களை அமைத்துள்ளது. இதில் 38,842 மெட்ரிக் டன் கொள்
ளளவு கொண்ட வாடகை கிடங்குகளும் அடங்கும்.

ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தின் திட்ட இலக்
கான 2 லட்சம் டன் கூடுதல் சேமிப்புக் கொள்ளளவு திறனை
சுமார் 1,063 லட்சம் ரூபாய் செலவில் இக்கழகம் எட்டியுள்ளது.

தனியார் சேமிப்பு கிடங்குகளின் கடுமையான போட்டியின்
காரணமாகவும், வேளாண்மை பொருட்களின் உற்பத்திக்
குறைவாலும், உரங்களுக்கான மூலப்பொருட்களை இறக்குமதி
செய்ய ஏற்பட்ட தடையினாலும், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு
நிறுவனத்தின் வருவாயில் சென்ற சில ஆண்டுகளில் தொய்வு
ஏற்பட்டுள்ளது. எனினும் இந்நிறுவனம் மேற்கொண்ட தக்க
நடவடிக்கைகள் காரணமாக இதன் வருவாய் மேம்பட்டு,
1991–92-ம் ஆண்டு இந்நிறுவனம் சுமார் 60 லட்சம் ரூபாய்
லாபம் ஈட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிறுவனம் அறிவியல் ரீதியில் சரக்குகளை பாதுகாக்கும் முறைகளை பயிற்றுவிப்பதற்காக பயிற்சி மையம் ஒன்றை நடத்தி வருகிறது. இப்பயிற்சி மையத்தில் இந்நிறுவனத்தின் பணியாளர் மட்டுமின்றி, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக பணியாளர்கள், அண்டை மாநிலங்களை சேர்ந்த சேமிப்புக் கிடங்கு பணியாளர்கள் ஆகியோரும் பல்வகையான பயிற்சிகளைப் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

சென்னை-600 008.
164977

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrofts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No 11, Sunkurama Chetty Street, Madras 1.
12 New Century Book House (Private) Limited, Madras 2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District)
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9/31, Cross Cut Road, Coimbatore-2.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore 1.
11 S. M. Jegannatham Book House, 55, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem
16 Meenakshi Pathipagam, Pudukkottai
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3/1, Old Post Office Road, Coimbatore-14
21 Kumaran Book Depot, Booksellers, Erode-1
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode-1.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghalevam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B.B. Gandhi Street, Calcutta-12.

© Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.